# இஸ்லாமிய நாகரிகம்

## க.பொ.த உயர் தரம்

## தரம் - 12

## ஆசிரியர் வழிகாட்டி

**(2017 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது)**

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீலங்கா

www.nie.lk

இஸ்லாம்

தரம் 12
ஆசிரியர் வழிகாட்டி

முதலாம் பதிப்பு **2017**

© தேசிய கல்வி நிறுவகம்

ISBN :

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

**ஸ்ரீலங்கா**

இணையத் தளம் : www.nie.lk
மின்னஞ்சல் info@nie.lk

பதிப்பு :
தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலைக் கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்டப் பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது.

பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக் களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவு வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாகப் பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம்பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடை நிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கிய நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களிற்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடு களையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி. நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது. இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக் கப்பட்ட பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன் பாட்டினை பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள்,

புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக் கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய கல்வி முறைமையினால், பூகோள தொழில் சந்தைகளுக்குத் தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர் களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலாநிதி. திருமதி. ஜெயந்தி குணசேகர
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

## பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையைத் தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

சங்கைக்குரிய கலாநிதி மாபுல்கொட சுமனரத்ன தேரர்

பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

**வளப்பங்களிப்பு / கலைத்திட்டக் குழு**

**வழிகாட்டலும் அனுமதியும்**

**கல்வி சார் அலுவல்கள் சபை**
**தேசிய கல்வி நிறுவகம்**

**இணைப்பாக்கம்**

**அஷ்ஷெய்க் ஜே.எம்.ஜெஸார்**
விரிவுரையாளர்
சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

**விடய ஆலோசனை**

| | |
|---|---|
| **கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி** | பணிப்பாளர், நளீமிய்யா இஸ்லாமிய கலாபீடம், பேருவளை |
| **அஷ்ஷெய்க் எம்.எஸ்.ஏ.பாரி** | சிரேஷ்ட விரிவுரையாளர், அறபு மற்றும் இஸ்லாமிய கற்கைகள் துறை கலைப் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம் |
| **அஷ்ஷெய்க் எம்.எம்.மஸாஹிர்** | சிரேஷ்ட விரிவுரையாளர் பீடாதிபதி அறபு மற்றும் இஸ்லாமிய கற்கைகள் பீடம் தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில் |
| **அஷ்ஷெய்க் எம்.ரி.ரிஸ்வி** | துறைத் தலைவர், இஸ்லாமிய நாகரிக கற்கைகள் துறை இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் |
| **மௌலவி எம்.ரி. இக்பால்** | ஆசிரிய ஆலோசகர் - இஸ்லாம் கொழும்பு கல்வி வலயம் |

**எழுத்தாளர் குழு**

**உள்ளக**

**அஷ்ஷெய்க் ஜே.எம்.ஜெஸார்,** தேசிய கல்வி நிறுவகம்

**வெளியக**

**அஷ்ஷெய்க் எம்.எச்.எம்.புஹாரி**
ஆசிரிய ஆலோசகர்,மினுவாங்கொடை கல்வி வலயம்

**எம்.எச்.எம். நாளிர்**
ஓய்வுபெற்ற ஆசிரியர்.

**எம்.எஸ்.எம். அனஸ்**
ஆசிரியர், அலுத்கம்வீதிய தேசிய பாடசாலை, தர்கா நகர்

**அஷ்ஷெய்க் எம்.எம்.பஸ்லுர் ரஹ்மான்**
ஆசிரியர், பாபுஸ்ஸலாம் மு. வி,நாம்புளுவ.

**அஷ்ஷெய்க் நவாஸ் ஸனூர்தீன்**
அதிபர், அல் மனார் தேசிய பாடசாலை,

**அஷ்ஷெய்க் எம்.எப்.எம்.பாஹிம்**
ஆசிரிய ஆலோசகர்,மினுவாங்கொடை கல்வி வலயம்

**மௌலவி எம்.எம். ஆப்தீன்**
ஆசிரியர், பன்னவ மு. வி, பன்னவ.

**எம்.எஸ்.எம். பூஸரி**
ஆசிரியர், அல் பத்ரியா ம.வி, கஹடோவிட

**ஏ.ஸீ.எம் முஸம்மில்**
தெல்தொட மு.ம.வி, தெல்தொட்டை

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள்

ஆசிரியர் வழிகாட்டி, பாடத்திட்டத்தை உரிய முறையில் அமுல்படுத்தும் செயன்முறையை உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. மறு சீரமைக்கப்பட்ட பாடத்திட்டம் மாணவர்களிடம் எதிர்பார்க்கும் அடைவு மட்டங்களையும் அதனை அடைந்து கொள்ளுவதற்குப் பயன்படுத்தக்கூடிய செயன்முறையையும் விளக்குகிறது. மேலும் எதிர்பார்க்கப்பட்ட அடைவுகள் குறித்து மதிப்பிடுவதற்கும் ஆசிரியருக்கு இது உதவுகிறது.

இந்த ஆசிரியர் வழிகாட்டி கற்றல் கற்பித்தல் செயற்பாட்டைத் திட்டமிடும் பொறுப்பை முழுமையாக ஆசிரியரிடம் ஒப்படைக்கிறது. எனவே, குறிக்கப்பட்ட கற்றல் பேறுகளை அடைந்து கொள்வதற்காக ஆசிரியர் பொருத்தமான கற்பித்தல் முறையொன்றைப் பயன்படுத்திக் கொள்ளுவதற்கான சுதந்திரத்தை இது வழங்குகின்றது.

கற்றல் கற்பித்தல் செயன்முறையைத் திட்டமிடும்போது அறிவு, திறன் மாத்திரமன்றி மனவெழுச்சி சார் கூறுகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதை இலக்காகக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படும் அதேவேளை இவ்வாசிரியர் வழிகாட்டி அதற்குத் தேவையான அடிப்படை அம்சங்கள் குறித்து வழிகாட்டுகின்றது.

அத்தோடு உரிய தேர்ச்சி மட்டத்தை அடைந்து கொள்ளுவதற்காக விடய உள்ளடக்கத்தை வழங்குவதற்குத் தேவையான காலப்பகுதியைச் சுயாதீனமாக தீர்மானித்துக்கொள்ளும் சுதந்திரம் ஆசிரியருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தேர்ச்சி மட்டம் மற்றும் கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பாடத்தின் எல்லையை வரையறுத்துக்கொள்வது பாடத்தைத் திட்டமிட இலகுவாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கற்றல் - கற்பித்தலின்போது மாணவர்களின் தேடலை மேம்படுத்துவதற்காகக் குழு ரீதியான செயற்பாடுகள் உதவுகின்றன. குறிப்பாக உயர் தர வகுப்புக்களுக்கு குழுச் செயற்பாடுகள் மிகவும் பயனுள்ளதாக அமைகின்றன. குழுச் செயற்பாடுகளுக்குத் தேவையான நூல்கள் மற்றும் ஏனைய வளங்களைப் பாடசாலைச் சூழலில் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலையினை ஏற்படுத்துவதனூடாகத் திட்டமிடப்பட்ட இலக்கை அடைவதை உறுதிப்படுத்த முடியும்.

இவ்வழிகாட்டி ஆசிரியருக்கான வழிகாட்டல் குறிப்புக்களை கொண்டுள்ளதே தவிர மாணவர்களுக்கான மேலதிக வாசிப்புக்கானதல்ல என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இக்குறிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு மேலதிக தேடலினூடாக விடயங்கள் முன்வைக்கப்படல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாணவர்களுக்கு சுயமான தேடலுக்கு வழிகாட்டுவது ஆசிரியரின் பொறுப்பாகும்.

கல்வி மறுசீரமைப்பின் ஊடாக எதிர்பார்க்கப்படும் மற்றங்களை அடைந்து கொள்ளும் வகையில் மாணவரின் சிந்திக்கும் ஆற்றல், சமூகத் திறன்கள், தனியாள் திறன்கள் என்பவற்றை விருத்தி செய்து கொள்ளும் வகையில் பயன்மிக்க கற்பித்தலின் ஊடாக சிறந்ததொரு எதிர்காலச் சந்ததியை உருவாக்குவதே எமது எதிர்பார்ப்பாகும்.

செயற்றிட்டத் தலைவர்

## உள்ளடக்கம்


பக்கம்

- பணிப்பாளர் நாயகத்தின் செய்தி iii
- பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி v
- கலைத்திட்டக் குழு vi
- ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள் vii
- கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்கான வழிகாட்டல்கள் 1

# கற்றல் கற்பித்தல் தொடர்பான வழிகாட்டல்

**தேர்ச்சி 1.0 : இஸ்லாமிய நாகரிகத்தின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்குமான காரணிகளை ஏனைய நாகரிகங்களுடன் ஒப்புநோக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 1.1 : நாகரிகம், பண்பாடு ஆகிய சொற்பிரயோகங்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை இனம் கண்டு கூறுவார்.**

**பாடவேளைகள் : 10**

**கற்றல் பேறுகள் :**

- சமயம், நாகரிகம், பண்பாடு எனும் பதங்களை விளக்கி அவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை இனங்காண்பார்.
- மனித வரலாற்றில் பல நாகரிகங்கள் தோற்றம் பெற்றுள்ளமையையும் அதற்கான பின்னணியையும் வரலாற்றாதாரங்களுடன் முன்வைப்பார்.
- பிரபஞ்சம், மனிதன், வாழ்வு பற்றிய இஸ்லாமிய கோட்பாடுகளை ஏனைய கோட்பாடுகளுடன் ஒப்பிட்டு விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

- சமயம் என்ற சொல் விரிந்த பொருளைக் கொண்டது. அதனோடு அனேக விடயங்கள் தொடர்புறுகின்றன.
- சமயம் என்ற சொல், வெவ்வேறு காலகட்டத்தில் வெவ்வேறு பகுதியினரால் வெவ்வேறு சொற்பிரயோகங்களால் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- உரோம அரசியல் வழங்கிய லத்தீன் மொழி மூலம் விருத்தியடைந்த ஆங்கிலம், பிரஞ்சு, ஸ்பானிய, போர்த்துக்கேய, இத்தாலிய மொழிகளில் Religion என்ற சொல் பயன்படுத்தப்பட்டது.
- உரோமானிய பேச்சாளரான சிஸ்ரோ, இந்தச் சொல் re-legere ஆகிய இரண்டு சொற்களால் ஆனது எனவும் அச்சொற்கள் இரண்டும் இணைந்து மீண்டும் மீண்டும் வாசித்தல் என்ற கருத்தைத் தருவதாகவும் குறிப்பிட்டார். சிந்தித்தல் என்பது இதன் கருத்தாகும். பக்தியோடு இறைவனை வழிபடுதல் என்பதே அந்தச் சொல்லின் பொருள் என்பது மற்றொரு கருத்தாகும். மேலும் அது லத்தீன் சொல்லிலிருந்து பிறந்ததென்றும் அதன் பொருள் ஒன்றாகப் பிணைதல் என்றும் குறிப்பிடுகிறார்.
- சமயம் என்பது உயிர் வாழ்வின் முழுமையை உள்ளடக்கியுள்ள ஒரு துறை என கொம்டே என்பார் குறிப்பிடுகிறார்.
- மனித இனத்தின் எல்லாச் செயற்பாடுகளுக்குமுரிய அறம் சார்ந்த அடிப்படையே சமயம் என காந்திமகான் குறிப்பிடுகிறார்.
- சமயம் என்பது மக்களைப் பக்குவப்படுத்தக்கூடியது. எவ்வாறு இறைவனிடம் நம்பிக்கை வைப்பது என்பது சமயமாகும். இந்த நம்பிக்கையில் உலக சமயங்களுக்கிடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஒரே இறைவனை நம்புவோரும் பல இறைவர்களை நம்புவோரும் உள்ளனர். இஸ்லாத்தைப் பொறுத்தவரை ஓரிறைக் கொள்கை (தௌஹீத்) வலுவாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது.

- மற்றொறு வகையில் சொல்வதானால், கண்ணுக்குப் புலப்படாத சக்தி மீதும், விடயங்கள் மீதும் நம்பிக்கை கொள்வது சமயம் எனலாம். இதில் இறைவன் பற்றிய நம்பிக்கை மிகப் பிரதானமானது. எல்லாச் சமயத்தவர்களும் இறைவனுக்குரிய ஆன்மீக உறவுடன் சமயத்தைப் பின்பற்றி வருகின்றனர். அந்த நம்பிக்கையின் அடிப்படையில் வழிபாடுகளையும் செய்து வருகின்றனர். அதேவேளை, இறைவனை நம்பாத - மறுக்கின்ற நாத்திகர்களும் உலகில் வாழ்ந்து வருகின்றனர். இவ்விரு பகுதியாரின் வாழ்க்கை பற்றிய கோட்பாட்டிலும் நடைமுறையில் வேறுபாடுகள் உண்டு.
- பண்பாடு, நாகரிகம் ஆகிய இரண்டு சொற்களும் சிலபோது ஒத்தகருத்திலும் சிலபோது வேறுபட்ட கருத்திலும் பிரயோகிக்கப்படுகின்றன. இந்த மயக்கமான சொற்பிரயோகம், பண்பாடு, நாகரிகம் பற்றிய வித்தியாசமான வரைவிலக்கணங்களும் விளக்கங்களும் தோன்றக் காரணமாக அமைகின்றன.
- பண்பு என்ற சொல்லிலிருந்து பண்பாடு என்ற சொல் பிறந்திருக்கிறது என்பது ஒரு கருத்தாகும். பண்பாட்டைக் குறிக்கும் Culture என்ற சொல் Cultivation of mind உள்ளத்தைப் பண்படுத்தல் என்ற பண்பிலிருந்து பிறந்ததாக எம். பிக்தோல் குறிப்பிடுகிறார்.
- முஸ்லிம் பண்பாடு என்பது இஸ்லாத்தினால் பண்படுத்தப்பட்ட உளமாற்றத்தின் விளைவாகும்.
- பண்பாடு என்ற பதம் உள்ளம், சிந்தனை, உணர்வுகளோடு தொடர்புடைய அம்சங்களையும், நாகரிகம் என்ற பதம் உளப்பண்பு, சிந்தனை, உணர்வுகளின் பிரத்தியட்ச புறத்தோற்ற வெளிப்பாடான நடை, உடை, பாவனைகள், அறிவியல் முயற்சிகள், அழகியல் கலைகள், சட்டம், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைக் குறிப்பதாகவும் கருதுகின்றனர்.
- நாகரிகம் என்பது பண்பாட்டின் வெளிப்பாடாகும். காலமும், சூழலும் மாற்றமடையும் போது நாகரிகத்தில் மாற்றங்கள் நிகழலாம். ஆனால் பண்பாட்டில் எத்தகைய மாற்றமும் நிகழாது. ஏனெனில், மனிதனின் இயல்பில் வரலாற்று மாற்றங்களாலும், சமுதாய மாற்றங்களாலும் எத்தகைய மாற்றமும் நிகழ முடியாது.
- நகர வாழ்வின் நிகழ்வுகள் அல்லது பெறுபேறுகளே நாகரிகம் என இப்னு கல்தூன் குறிப்பிடுகிறார். சமூக வளர்ச்சியில் முன்னேற்றமடைந்த கட்டத்தை நாகரிகம் எனும் பதம் சுட்டிக்காட்டுகிறது. நடை, உடை, பாவனை அறிவியல் முயற்சிகள், அழகியற் கலைகள், சட்டம், சமூக பழக்க வழக்கங்கள் முதலியவற்றை உள்ளடக்கிய மனித இனத்தை நாகரிகம் எனும் பதம் குறிப்பதாக சமூகவியலாளர்கள் குறிப்பிடுவர்.
- நாகரிகம் என்பது ஓர் இனத்தின் அல்லது வகுப்பினரின் பண்புகளைக் குறிக்கும் ஒரு பொதுச் சொல்லாகும். அது கண்களுக்குப் புலப்படக்கூடிய சடப்பொருள்களின் அபிவிருத்தியையும் பொது வாழ்வின் முன்னேற்றத்தையும் எடுத்துக்காட்டுகின்றது என கலாநிதி அமீர்ஹஸன் சித்தீக்கி குறிப்பிடுகிறார்.
- மனிதன், பௌதிக வளங்கள் (துராப்), காலம் (வக்த்), ஆகிய மூன்றினதும் கூட்டிணைப்பே நாகரிகம் தோற்றம் பெறக் காரணமாக அமைகின்றன. மனிதன் தன் ஆற்றல்களையும் பௌதிக வளங்களையும், காலத்தையும் ஒன்றிணைத்து உரிய முறையில் பயன்படுத்தும் போது நாகரிகம் உருவாகின்றது. நாகரிகம் உருவாவதற்கு தனிமனித முயற்சி போதுமானதல்ல. மக்களின் ஒட்டுமொத்த

முயற்சியும் பரஸ்பர கூட்டுறவும், இன்ஸான், துராப், வக்த் ஆகிய மூன்றும் இணைக்கப்பட்டு நாகரிகம் உருவாவதை சாத்தியமாக்குகிறது என்கிறார் மாலிக் பின் நபி அவர்கள்.

- வரலாற்றின் வளர்ச்சிப் போக்கில் நாகரிகங்கள் தோன்றுகின்றன. காலங்கடந்து செல்ல, அவற்றுள் சில அழிந்துவிடுகின்றன. ஆனால் அந்த நாகரிகத்தின் கலாசாரம் வேறொரு நாகரிகத்தின் அமைப்பில் தோற்றமெடுக்கின்றன. எனவே, நாகரிகம் அழிந்தாலும் கலாசாரம் அழியாது. இஸ்லாமிய வரலாற்றில், பல்வேறு அரசியல், பொருளாதாரக் காரணங்களால் அதன் நாகரிகச் சின்னங்கள் அழிவுற்றிருக்கலாம். ஆனால், இஸ்லாமிய பண்பாட்டின் ஆன்மா, ஒவ்வொரு முஸ்லிமின் உள்ளத்திலும் உயிர் வாழ்கின்றது. அது ஒன்றல்ல, ஓராயிரம் நாகரிகங்களை தோற்றுவிக்கும் பேராற்றல் கொண்டது. எனவே, இஸ்லாமிய பண்பாடு என்பது வரலாற்றின் பக்கங்களில் தூசி படிந்து மறக்கப்பட்ட அத்தியாயமன்று. அது முஸ்லிம்களின் சிந்தனையை - உணர்வுகளை கண்ணோட்டத்தை - இலட்சியத்தை நெறிப்படுத்தும் மாபெரும் ஆத்ம சக்தியாகும். மனித வரலாற்றில் பல நாகரிகங்கள் தோன்றியும் அழிந்தும் இருக்கின்றன. அவை பிரதேசம் சார்ந்ததாக, இனம் சார்ந்ததாக, குறுகிய கண்ணோட்டம் சார்ந்ததாக இருந்தமையால் நீடிக்கவில்லை. ஒன்று மாறி மற்றொன்று தோன்றும் நிலையில் அமைந்திருந்தன. அவை பற்றியும் சுருக்கமாகக் காண்போம்.

### மெசபதோமிய நாகரிகம்

- இது கி.மு. 3500 தொடக்கம் 1500 வரையிலான காலத்தில் இடம்பெற்றது. இதனை யூப்பிரிடீஸ், டைகிரீஸ் நதிக்கரை நாகரிகம் எனவும் வழங்குவர். இராக்கில் அமைந்த இந்நாகரிகம் பபிலோனியாவைத் தலைநகராகக் கொண்டிருந்தது. இங்கு வாழ்ந்தோர் சுமேரியர் எனப்பட்டனர். இங்கு மக்கள் வகுப்புவாரியாக பிரிக்கப்பட்டிருந்தனர். இவர்களின் பிரதான தொழில் விவசாயமாகும். நீர்வளமுள்ள பிரதேசமாக இருந்தமையால் நீர்ப்பாசன வசதிகள் செய்யப்பட்டிருந்தன. நீர் வழிப்பாதைகளும் கால்வாய்களும் காணப்பட்டன. செங்கல், சவர்க்காரம் போன்றவையும் உற்பத்தி செய்யப்பட்டன. செம்பு, தகரம், தாமிர உலோகப் பயன்பாடும் காணப்பட்டது. அவர்களால் அமைக்கப்பட்ட தொங்குதோட்டம் உலக அதிசயங்களில் ஒன்றாகக் கொள்ளப்படுகிறது.
- இவர்கள் எண்களையும் எழுத்துக்களையும் பிரயோகித்தனர். இவர்களது எழுத்துக்கள் ஆப்பெழுத்துக்கள் எனப்பட்டன. நாணற்புல்லை எழுது கருவியாகப் பயன்படுத்தினர். இவர்களது ஹமுரபியின் சட்டத்தொகுப்பு பிரபலமானது. சூரியன், மழை, மரணித்தோர் எனப் பலரையும் வணங்கும் பல்தெய்வ வழிபாடு உடையவர்களாக இருந்தனர்.

### எகிப்திய நாகரிம்

- இது கி.மு.3100 முதல் 1070 வரை காணப்பட்டது. இதனை நைல்நதி நாகரிகம் எனவும் குறிப்பிடுவர். இங்கு சாதிப்பாகுபாடு காணப்படவில்லை. மக்கள், கோதுமை, பார்ளி, காய்கறி, பழங்கள், தானியங்கள் முதலியவற்றைப் பயிரிட்டனர். வணிக ஏற்றிறக்குமதிகளிலும் ஈடுபட்டனர். உலோகத் தொழில், கப்பல் கட்டுதல், கண்ணாடி செய்தல், பருத்தி உற்பத்தி, நெசவு, மட்பாண்டம் செய்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டனர்.
- சூரிய, விலங்கு வழிபாட்டில் ஈடுபட்டனர். அஸஸில், ஓரங் தெய்வங்களை வழிபட்டனர். ஆவி பற்றிய நம்பிக்கை காணப்பட்டது. இறந்தோர் மீளுவர் என்ற நம்பிக்கையில் பிரமுகர்கள் மம்மிகளில் வைக்கப்பட்டனர். எண்ணறிவு காணப்பட்டது. கேத்திர

கணிதத்தில் சிறந்து விளங்கினர். நாட்காட்டிகளையும் தயாரித்தனர். சித்திர எழுத்துக்களையும் 24 குறியீடுகளையும் பயன்படுத்தினர். எழுதுகோல்களும், காகிதமும் காணப்பட்டன. கட்டட சிற்பக் கலைகளில் தேர்ந்திருந்தனர். கல்லறை ஓவியங்களையும் செதுக்கினர். பாரோ (பிர்அவ்ன்) களின் ஆட்சி இடம் பெற்றது. அரசனைத் தெய்வ வழித்தோன்றலென நம்பினர், அரசனே சட்டமியற்றுபவராகவும் நீதிபதியாகவும் இருந்தான்.

**சிந்துவெளி நாகரிகம்**

- இது கி.மு. 2700-1750 வரை காணப்பட்டது. வடமேல் இந்தியாவில் அமைந்தது. இங்கு வாழ்ந்தோர் திராவிடர் எனவும் நாகரிகம், திராவிட நாகரிகமெனவும் சொல்லப்படுகின்றது. விவசாயம், வணிகம், ஏற்றிறக்குமதி முதலிய தொழில்கள் இடம்பெற்றன. நாணயத்துக்குப் பதிலாக எடை கற்கள் பயன்படுத்தப்பட்டன. பருத்தி உற்பத்தியும் காணப்பட்டது. களிமண், செம்பு, வெள்ளி உபகரணங்கள் காணப்பட்டன. ஆடை அணிகலன்களும் பயன்படுத்தப்பட்டன. கனமான சுவரும் உயர்ந்த கூரைகளும் கொண்ட வீடுகள் காணப்பட்டன.
- வானவியலில் தேர்ச்சி பெற்றிருந்தனர். நாட்காட்டிகளும் தயாரிக்கப்பட்டன. அவர்கள் இயற்கையை வணங்கினர். பெண்தெய்வ வழிபாடு காணப்பட்டது. பலியிடலும் பலிபீடங்களும் காணப்பட்டன. சவங்கள் அடக்கப்பட்டன. நகைகளுடன் அடக்கும் வழக்கம் இருந்தது.

**கிரேக்க நாகரிகம்**

- இது கி.மு. 3000 முதல் 2000 வரை காணப்பட்டது; எதென்ஸ், ஸ்பாட்டா, டொரின் தீப்ஸ் முதலிய நகரங்களை உள்ளடக்கியிருந்தது. இங்கு வாழ்ந்தோர் கிரேக்கர் எனப்பட்டனர். இது அறிவியலை அடிப்படையாகக் கொண்டது. இது ஒலிம்பிக் விளையாட்டின் தாயகமாகத் திகழ்ந்தது. சிற்பியரும், ஓவியரும் காணப்பட்டனர். நாடக, இலக்கிய அரங்குகளும் நூலகங்களும் காணப்பட்டன. கலை இலக்கிய பங்களிப்புகள் அதிகமாக இடம்பெற்றன. சோக்கிரடீஸ், அரிஸ்டோடல், பிளேட்டோ முதலான தத்துவ ஞானிகள் காணப்பட்டனர். மனித உரிமைகளை உள்ளடக்கிய சட்டத்தொகுப்பு நூலொன்றும் காணப்பட்டது. இலியட், ஒடிசி காவியங்களும் பாடப்பட்டன.
- ஜீயஸ் என்ற கடவுள் விழா இடம்பெற்றது. இதன் நினைவாகவே ஒலிம்பிக் போட்டிகளும் இடம்பெற்றன. பலதெய்வ வழிபாடும் இடம்பெற்றது. மக்களாட்சி அறிமுகமானது.

**உரோம நாகரிகம்**

- கிரேக்க நாகரிக வீழ்ச்சிக்குப் பின் உரோம நாகரிகம் எழுச்சி பெற்றது. இத்தாலியை மையமாகக் கொண்டு இது எழுச்சி பெற்றது. ஜூலியசீசர், அகஸ்டஸுசீசர் ஆகியோரின் காலங்களில் இது செழிப்புற்றிருந்தது. முதலாவது மன்னனின் பெயரால் ஜுலை மாதமும் இரண்டாவது மன்னனின் பெயரில் ஆகஸ்ட் மாதமும் அழைக்கப்படுகின்றன. ஏழு குன்றுகளைக் கொண்ட ரோம் தலைநகராக இருந்தது. சமூகத்தில் ஏற்றத்தாழ்வு காணப்பட்டது. உயர் குலத்தோர் ஆடம்பரமாக வாழ்ந்தனர். அடிமைகள் கொடுமைப்படுத்தப்பட்டனர்.
- விவசாயம், வணிகம், கால்நடை வளர்ப்பு முதலிய தொழில்கள் இடம்பெற்றன. கப்பல் கட்டும் தொழில் இடம்பெற்றது. கட்டடக்கலை சிறந்து விளங்கியது.

குவிமாடங்கள் கட்டப்பட்டன. சிற்ப ஓவிய துறைகளிலும் சிறந்து விளங்கினர். இலக்கியவாதிகளும் கவிஞர்களும், தத்துவஞானிகளும் காணப்பட்டனர். நாடக ஆசிரியர்களும், வரலாற்றாசிரியர்களும் காணப்பட்டனர். அறிவியல் வளர்ச்சி ஏற்பட்டது.

இயற்கைச் சக்திகளைக் கடவுளாகக் கொண்டனர். ஜுபிடர், மார்க்ஸ் முதலிய தெய்வங்களையும் வழிபட்டனர்.

- கி.மு 500 இல் மன்னராட்சி நீக்கப்பட்டு மக்களாட்சி ஆரம்பமானது. மன்னர்களுக்குப் பதிலாக சான்சலர் எனப்பட்டோர் பணியாற்றினார்கள். மேற்கு உரோம பேரரசு வீழ்ந்த போது கொன்ஸ்தாந்து நோபிளை தலைநகராகக் கொண்ட கிழக்கு உரோமப் பேரரசு தோன்றியது. இதனை பைசாந்திய பேரரசு என்பர். உரோம நாகரிகத்தில் இவர்களின் பங்களிப்பும் உண்டு. கலை இலக்கிய முயற்சிகள் வளர்ச்சியுற்றன. சென். போல், சோபியா ஆலயங்கள் பிரசித்தமானவை. ஜஸ்டீனியன் தொகுப்பு இவர்களின் காலத்தில் இடம்பெற்றது. சிற்பம், ஓவியம், தந்த நாற்காலி, நூலட்டைகளில் ஓவிய அலங்காரம் மருத்துவம், இரசாயனம், பட்டுத் தொழில் என்பன சிறந்து விளங்கின.

- மேலே குறிப்பிட்டுள்ள நாகரிகங்களோடு இஸ்லாமிய நகாரிகத்தை ஒப்பிட்டு நோக்கும் போது நாகரிங்கள் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் தோன்றியவைகளாகவும் மனித முயற்சியின் நீண்டகால உழைப்பில் உருவாகி வளர்ந்தவைகளாகவும் காணப்படுகின்றன. ஆனால் இஸ்லாமிய நாகரிகம் தெய்வீக வெளிப்பாட்டுக்கூடாகவும் (வஹி) வழிகாட்டலுக்கூடாகவும் தோன்றி வளர்ந்துள்ளதை அவதானிக்கலாம். ஏனைய நாகரிகங்கள் நதிப்படுக்கைகளை மையமாகக் கொண்டு உருவாக இஸ்லாமிய நாகரிகம் பலைவனத்தில் உருவாகி குறுகிய காலத்தில் வளர்ந்திருக்கின்றது. ஏனைய நாகரிகங்கள் உலோகாயத நோக்கங்களை மட்டும் கருத்திற் கொண்டு தோன்றி வளர்ந்ததாக அமைய, இஸ்லாமிய நாகரிகம் இம்மை, மறுமை இரண்டையும் இலக்காகக் கொண்டு தோன்றி வளர்வதை அவதானிக்கலாம். ஏனைய நாகரிகங்கள் கால வெள்ளத்தால் அள்ளுண்டு செல்ல இஸ்லாமிய நாகரிகம் இன்னும் நடைமுறையில் இருப்பதை அவதானிக்கலாம். இதற்கு இஸ்லாமிய நாகரிகத்தின் அடிப்படைகளும், நெறிமுறைகளும், கோட்பாடுகளும் காரணமாக அமைகின்றன.

- எல்லா நாகரிகங்களும் உலகில்தான் தோன்றியிருக்கின்றன. அவை மனித தேவைக்காகவும், மனித வாழ்வை செம்மைப்படுத்துவதற்காகவுமே தோன்றியிருக்கின்றன. ஆதலால் உலகம் பற்றியும் மனிதன் பற்றியும், வாழ்வு பற்றியும் தெளிவான சிந்தனையும், போக்கும் தேவைப்படுகின்றன. எனவே, இஸ்லாமிய நாகரிகம் பிரபஞ்சம், மனிதன், வாழ்வு பற்றித் தெளிவான விளக்கத்தைத் தருகின்றது.

- **பிரபஞ்சம்** என்ற சொற்பிரயோகம் அண்டசராசரம் அனைத்தையும் குறித்து நிற்கும். மற்றொரு வகையில் சொல்வதானால் அல்லாஹ்வைத் தவிரவுள்ள ஏனைய படைப்புக்கள் அனைத்தையும் இச்சொற்பிரயோகம் உள்ளடக்கும்.

- பிரபஞ்சத்தைப் படைத்த அல்லாஹ், அதன் ஓர் அங்கமான பூமியில் மனிதனை அவனது பிரிதிநிதியாகப் படைத்தான். அந்தப்பிரதிநிதி தனது பணியை நிறைவேற்றக்கூடிய அனைத்து வளங்களையும் (பௌதிக வளம், ஆன்மீக வளம், அறிவு வளம்) அவனுக்கு வழங்கியுள்ளான். அதன் மூலம் மனிதன்வாழ வேண்டிய முறையினையும் கற்பித்தான். அவற்றுள் பிரபஞ்சம், மனிதன், வாழ்வு பற்றிய இஸ்லாத்தின் கோட்பாடுகள் சிறப்பிடம் பெறுகின்றன.

- பிரபஞ்சம் தானாக உருவானது என்றோ ஒன்றிலிருந்து மற்றொன்று உருவானது என்றோ இஸ்லாம் கூறவில்லை. அல்லாஹ் தன்னை அல்பாரிஉ (இல்லாமையிலிருந்து உருவாக்குபவன்) அல் காலிக் (படைப்பவன்) என்று அறிமுகப்படுத்துகிறான். எனவே, பிரபஞ்சத்தை அல்லாஹ்வே இல்லாமையிலிருந்து உருவாக்கினான். 'ஆகுக' என்ற அவனது கட்டளை, ஒன்றை உருவாக்கிவிடும் '' அவன் எதைப் படைக்க முடிவு செய்தாலும் அதனை 'ஆகுக' என்று கூறியமாத்திரத்தில் அது உடனே ஆகிவிடும் (2:117) என்று அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

- அல்லாஹ் பிரபஞ்சத்தை வீணாகப்படைக்கவில்லை. பலநோக்கங்களோடு படைத்துள்ளான். ''வானங்களையும், பூமியையும் இவைகளுக்கு மத்தியில் உள்ளவைகளையும் வீணுக்காகப் படைக்கவில்லை. இது (வீணென்பது) நிராகரிப்பவர்களின் எண்ணமேயாகும். (38:27)

- இவை, பிரபஞ்சத்தின் படைப்பாளன் அல்லாஹ்வே என்பதை எடுத்துக் காட்டுகின்றன. மேலும் அல்லாஹ்வின் விருப்பத்திற்கேற்பவே பிரபஞ்சம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

- தன்னுடைய வட்டவரைக்குள் (தவறாமல்) செல்லும் சூரியனும் (ஓர் அத்தாட்சியாகும். இது அனைவரையும் நன்கறிந்தவனும் மிகைத்தவனுமாக அல்லாஹ்வால் அமைக்கப்பட்டது. (36:38)

- பிரபஞ்சத்தின் தோற்றமும் இயக்கமும் தற்செயல் நிகழ்வல்ல. மாறாக அல்லாஹ்வினால் திட்டமிடப்பட்ட சீரிய ஒழுங்கமைப்பைக் கொண்டவை. (மனிதர்களே) நீங்கள் பலமான படைப்பா அல்லது வானமா? அவன்தான் அவ்வானத்தைப் படைத்தான். அவனே அதன் முகட்டை உயர்த்தி அதனை ஒழுங்குபடுத்தினான். அவனே அதன் இரவை இருளாக்கி சூரியனைக் கொண்டு பகலை வெளியாக்கி (வெளிச்சமாக்கி)னான். (79: 27-30)

- பிரபஞ்சப் பொருள்கள் யாவும் மனிதனுக்காகவே படைக்கப்பட்டுள்ளன. உலகப் பொருள்கள் யாவும் அவனுக்கு வசப்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஏனெனில் அவன் உலகில் அல்லாஹ்வின் பிரதிநிதி அந்தப் பிரதிநிதித்துவப் பணியை நிறைவேற்றக்கூடிய எல்லா ஆற்றல்களும் அவனுக்கு வழங்கப்பட்டுள்ளன.

- அவன்தான் பூமியை நீங்கள் வசிக்குமிடமாகவும், வானத்தை ஒரு முகடாகவும் அமைத்து மேகத்திலிருந்து மழையைப் பொழிவித்து அதனைக் கொண்டு (நீங்கள்) புசிக்கக்கூடிய கனிவர்க்கங்களையும் உங்களுக்கு வெளியாக்குகிறான்... (2:22)

  அவன்தான் (பூமியையும்) பூமியிலுள்ள அனைத்தையும் உங்களுக்காகப் படைத்தான் (2:29)

- ஏனைய நாகரிகங்கள் நினைப்பது போன்று மனிதன் பரிணாமவளர்ச்சி மூலம் தோன்றியவனல்லன். அமீபா முதல் மனிதக்குரங்குகள் வரையிலான பரிணாமத்தின் அடுத்த கட்டமாக மனிதன் அமரவில்லை. அவன் அல்லாஹ்வினால் படைக்கப்பட்டான். நிச்சயமாக (முதல்) மனிதரை, களிமண்ணின் மூலச்சத்திலிருந்து படைத்தோம். (23:12) (ஆதமைப்படைத்து) ஆதமுக்கு எல்லாப் (பொருள்களின்) பெயர்களையும் (அவற்றின் தன்மைகளையும்) கற்றுக் கொடுத்தான் (2:31) அவனைக் கண்ணியப்படுத்தினான் (17:70) பின்னர் ஆதமுக்குத் துணையாக அவர் மனைவியைப் படைத்தான் (2:35) (மனிதர்களே) உங்கள் அனைவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து உற்பத்தி செய்து பின்னர் (உங்கள் தந்தையிடம்) தரித்திருக்கச் செய்து (உங்கள்

தாயின் கர்ப்பத்தில்) ஒப்படைத்தவனும் அவனே .. (6:98) என்றெல்லாம் அல்லாஹ் மனிதனை உருவாக்கி, மனித இனத்தை விருத்தியடையச் செய்த முறையினை அல்குர்ஆன் தெளிவுபடுத்துகிறது. மட்டுமன்றி அவனைப் பொறுப்புடையவனாகவும் ஆக்கியுள்ளான். 'நிச்சயமாக நம்முடைய பொறுப்பை சுமந்து கொள்வீர்களா' என்று நாம் வானங்கள், பூமி, மலைகள் ஆகியவைகளிடத்தில் வினவினோம். அதற்கு அவை பயந்து அதனைச் சுமந்து கொள்ளாது விலகிவிட்டன. அத்தகைய பொறுப்பைத்தான் மனிதன் சுமந்து கொண்டான். (ஆகவே) நிச்சயமாக அவன் அறியாமையால் தனக்குத்தானே தீங்கிழைத்துக் கொண்டான். (33:72)

- நீங்கள் ஒவ்வொருவரும் மேய்ப்பாளர்கள். ஒவ்வொருவரும் அவரவர் மேய்ப்பு (பொறுப்பு)ப் பற்றி விசாரிக்கப்படுவர் (முஸ்லிம்) என்ற நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ் மனிதனின் பொறுப்புணர்வை எடுத்துக்காட்டுகின்றது.

**இமாரத்**

- மனிதனுக்கு கிலாபத், இபாதத், இமாரத் என்ற மூன்று பணிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆதாரமாக மூன்று அல்குர்ஆன் வசனங்களை மட்டும் எடுத்துக் காட்டுகிறோம்.

  (மனிதர்களே) உங்களில் எவரேனும் மெய்யாகவே விசுவாசங்கொண்டு நற்கருமங்கள் செய்தால் அவர்களுக்கு முன்னர் சென்றவர்களைப் பூமிக்கு அதிபதிகளாக்கிய பிரகாரமே இவர்களையும் நிச்சயமாகப் பூமிக்கு அதிபதிகளாக்கி வைப்பதாகவும் அவன் விரும்பிய மார்க்கத்தில் இவர்களை ஸ்திரப்படுத்தி வைப்பதாகவும் இவர்களுடைய பயத்தை அமைதியும், பாதுகாப்புமாக மாற்றிவிடுவதாகவும் நிச்சயமாக அல்லாஹ் வாக்களித்திருக்கிறான். (24:55)

- மனித வர்க்கத்தையும், ஜின்வர்க்கத்தையும் என்னை வணங்குவதற்காகவேயன்றி படைக்கவில்லை. (57:56)

  என்னுடைய மக்களே, நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள். அவனைத்தவிர வேறு கடவுள் இல்லை. அவன் உங்களைப் பூமியிலிருந்து படைத்தான். அந்தப் பூமியை நிருவகிக்கும்படி உங்களைப் பணித்தான் (11:61)

- இவ்வாறான பொறுப்புக்களை நிறைவேற்றும் களமாகவே மனித வாழ்வு அமைகின்றது. 'இவ்வுலகம் மறுமைக்குரிய விளைநிலம்' என்பது நபி (ஸல்) அவர்களின் ஹதீஸாகும். இதன்படி, மனித வாழ்வு - பிறப்புக்கும் இறப்புக்குமிடைப்பட்ட வாழ்வு - அல்லாஹ்வின் பொருத்தத்தைப் பெற்றதாக அமைய வேண்டும். ஏற்கனவே குறிப்பிட்டவாறு அல்லாஹ் மனிதனுக்கு அவனுடைய பிரதிநிதியாக வாழ்வதற்கான எல்லா வளங்களையும் அருளியுள்ளான். புலனறிவு, பகுத்தறிவு என்பவற்றுக்கப்பால் வஹி மூலமான அறிவையும் இறைதூதர்கள் மூலம் வழங்கியுள்ளான். இவற்றின் மூலம் வாழ்வை வளப்படுத்திக் கொள்ள வேண்டும். மறுமைக்காக இம்மையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எனவேதான் மறுமையில் விசாரிக்கப்படும் நான்கு விடயங்களும் - வாணாள், வாலிபம், கல்வி, செல்வம் என்பவை வாழ்வோடு நேரடியாகப் பங்கு கொள்பவனாக அமைந்துள்ளன. ஆதலால் தனிப்பட்ட, குடும்ப, சமூக, தேசிய வாழ்வில் ஒவ்வொருவரினதும் பங்களிப்பு நல்லதாக, பயனுள்ளதாக, மற்றவர்கள் திருப்தியடைவதாக மறுமையில் நற்பேறளிப்பதாக அமைய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

''உங்களில் மிகத்தூய்மையாகச் செயல்படுபவர்கள் யார் என்று சோதிப்பதற்காகவே அவன் மரணத்தையும் வாழ்வையும் படைத்திருக்கின்றான்'' (67:02) என்று அல்குர்ஆன் இதனைத் தெளிவுபடுத்துகின்றது.

- மேலும், மனிதன் உலகில் வாழப் படைத்திருக்கிறானே தவிர, வாழ்வைத் துறப்பதற்காகப் படைக்கப்படவில்லை. எனவேதான், அல்லாஹ் தன் அடியார்களுக்குத் தோற்றுவித்துள்ள அலங்காரத்தையும், அவன் வழங்கியுள்ள தூய்மையான உணவுப் பொருள்களையும் தடை செய்தது யார்? நீர் கூறும்: விசுவாசிகளுக்கு இவையனைத்தும் இவ்வுலக வாழ்க்கையில் உரியனவாகும். மறுமை நாளில் இவை அவர்களுக்கு மாத்திரமே உரியவை. இவ்வாறு நாம் நம்முடைய வசனங்களை அறிவுடைய சமூகத்தாருக்கு தெளிவாக விபரிக்கின்றோம். (7:32)

  உலக வாழ்வை மறுமைக்காகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்கு பின்வரும் அல்குர்ஆன் வசனம் சிறந்த ஆதாரமாக உள்ளது.

  (உன்னிடமிருக்கும் பொருள்களை எல்லாம் அல்லாஹ்வே உனக்குக் கொடுத்தான். ஆகவே, அல்லாஹ் உனக்களித்திருப்பதில் (தானம் செய்து) மறுமை வீட்டைத் தேடிக்கொள். இம்மையில் நீ தேடிக் கொண்டது தான் உன்னுடைய பாகம் (என்பதை) மறந்துவிடாதே. அல்லாஹ் உனக்குக் கொடுத்து, உதவி செய்தவாறு அதனை (க்கொண்டு பிறருக்கு) நீயும் (தானம் செய்து) உதவி செய். பூமியில் நீ விஷமம் செய்ய விரும்பாதே. ஏனென்றால் விஷமிகளை அல்லாஹ் விரும்புவதில்லை. (28: 77)

மேலதிக வாசிப்புக்கு


- ஹிந்து மதம், பௌத்தம், இஸ்லாம் ஓர் ஒப்பீட்டாய்வு - C.M.A. அமீன் - ரேஷ்மா பதிப்பகம் - திஹாரி
- இஸ்லாமிய நாகரிகம் - மறுமலர்ச்சியில் முஸ்லிம்களின் வகிபாகம் - அஹ்மட் எஸ்ஸா - உஸ்மான் அலி - Fuzin Texts - Dharga Town. (2013)
- இஸ்லாமிய நாகரிகம் - கலாநிதி முஸ்தபா ஸிபாஈ (தமிழ் மொழிபெயர்ப்பு 1997- இலக்கியச் சோலை - சென்னை
- இஸ்லாமிய நாகரிகம் (1996) - எம்.ஐ.எம். அமீன் - இஸ்லாமிக் புக் ஹவுஸ் - கொழும்பு 09
- இஸ்லாமிய நாகரிகமும் பிற நாகரிகங்களும் - எம்.எஸ்.இஸ்மியா பேகம் - இஸ்லாஹிய்யா வெளியீட்டு மையம் 2013
- இஸ்லாமிய நாகரிகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் (1982) - எம்.எச்.எம். நாளிர் - அஷ்ஷபாப் வெளியீடு - கொழும்பு 10
- இஸ்லாமிய கலைப் பண்பு - முஹம்மத் மார்மடியூக் பிக்தால் - சன்மார்க்க தொண்டர் சபை - கூத்தாநல்லூர் 1988
- நாளைய நாகரிகம் - I,II - எம்.எம்.எம். அக்ரம் - இஸ்லாமிக் புக்ஹவுஸ் 2013

**தேர்ச்சி 1.0 : இஸ்லாமிய நாகரிகத்தின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்குமான காரணிகளை ஏனைய நாகரிகங்களுடன் ஒப்புநோக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 1.2 : இஸ்லாமிய நாகரிகத்தின் அடிப்படை என்ற வகையில் தௌஹீத், ரிஸாலத், மஆத் பற்றி விளக்குவார்.**

**பாடவேளை : 15**

**கற்றல் பேறுகள் :**

- இஸ்லாமிய நாகரிகத்தின் அடிப்படைகளான தவஹீத், ரிஸாலத், மஆத் என்பவற்றை விளக்குவார்.
- இஸ்லாமிய நாகரிகத்தின் பெறுமானங்களை வளர்ப்பதிலும் காப்பதிலும் இவ்வடிப்படைகளின் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- மனித நாகரித்தை நெறிப்படுத்துவதில் இவ்வம்சங்களின் அவசியத்தை அறிந்து மற்றவர்களுக்குத் தெளிவாக விளக்கமளிப்பார்.
- இஸ்லாமிய நாகரிகத்தின் தனித்துவப் பண்புகளை இனங்கண்டு விளக்குவார்.
- இஸ்லாமிய நாகரிகத்தின் சிறப்பம்சங்களை ஏனைய நாகரிகங்களிலிருந்து பிரித்தறிந்து மதிப்பிடுவார்.
- பிற நாகரிகங்கள் இஸ்லாமிய நாகரித்தில் ஏற்படுத்திய தாக்கங்களை இனங்கண்டு விளக்கிக் கூறுவார்.
- நாகரிகங்களின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்குமான காரணங்களை இனங்கண்டு கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

- இஸ்லாமிய நாகரிகத்தின் அடிப்படை என்ற வகையில் தவ்ஹீத் மிகப்பிரதானமான அம்சமாகும். அது வஹிமூலம் அருளப்பட்ட அல்குர்ஆனையும் ஸுன்னாவையும் வழிகாட்டியாகக் கொண்டது. இஸ்லாமிய நாகரிகத்தின் கோட்பாடுகளையும் செயல் முறையையும் அல்குர்ஆனும் ஸுன்னாவுமே வழிநடத்துகின்றன.
- இஸ்லாம் தவ்ஹீதை மையமாகக் கொண்டது. இதன் கருத்து, அனைத்துப் படைப்புக்களதும் மூலகர்த்தா அல்லாஹ் ஒருவன் மட்டுமே என்பதை முழுமையாக ஏற்றுக்கொள்வதாகும். அல்லாஹ்வை மூலகர்த்தாவாக மட்டுமன்றி தனித்தவனாகவும் இரட்சகனாகவும் வணக்கத்துக்கும் வழிபாட்டுக்கும் உரியவனாகவும் சட்ட கர்த்தாவாகவும் ஏற்றுக் கொள்வதை தௌஹீத் என்ற பதம் சுட்டி நிற்கின்றது. அல்லாஹ்வின் இரக்கத் தன்மையை தௌஹீத் ருபூபிய்யத் மூலமாகவும் வணங்கி வழிபடக்கூடிய தகைமையை தௌஹீத் உலூஹிய்யத் மூலமாகவும் விளக்குவர். தௌஹீத், அஸ்மா வஸ்ஸிபாத் மூலம் அல்லாஹ்வின் பெயர்களையும் பண்புகளையும் உவமைப்படுத்தாமலும் மறுக்காமலும் செயலிழக்கச் செய்யாமலும் உதாரணம் கூறாமலும் வலிந்து பொருள் கொடுக்காமலும் உள்ளதை உள்ளவாறு ஏற்று அல்லாஹ்வை ஓர்மைப்படுத்துவர்.
- அனைத்தையும் பரிணாம வளர்ச்சிக் கண்ணோட்டத்தில் நோக்குகின்ற நவீன ஆய்வுலகம் இறைவன் பற்றிய கொள்கையையும் மனிதனின் பரிணாமமடைந்த

ஒருவளர்ச்சியாக முன்வைக்க முயல்கின்றது. இது தவறான கண்ணோட்டமாகும். இறைவன் பற்றிய கொள்கையில் முதல் நிலை தௌஹீத் ஆகும். கால ஓட்டத்தில் மக்கள் அக்கொள்கையிலிருந்து விடுபட்டு நடக்கும் போது அல்லாஹ் (இடைக்கிடை) இறைத்தூதர்களை அனுப்பி புத்துயிர் ஊட்டியிருப்பதை அல்குர்ஆன் (2: 213, 20: 123-124) நபிமார்களின் வரலாறு மூலம் எடுத்துக் காட்டுகின்றது. மனிதனுடைய முதற்பாதை ''ஒன்றே தெய்வம்'' (தௌஹீத்) எனும் நேர்ப்பாதையே. பின்னரே அவன் வழிதவறிவிட்டான். எனவே இருபதாம் நூற்றாண்டின் ஆராய்ச்சிகள் எல்லாம், மிகப் பழங்கால மக்கள் முதன்முதலில் ஒரே தெய்வம் என்பதை நம்பியதாகவும் ஷிர்க் செய்யவில்லை என்பதையும் அறிவிக்கின்றன.

- மனித குலத்தின் குழந்தைப் பருவத்திலேயே மனிதன் தன் கண்களைத் திறந்து தன்னைச் சுற்றியுள்ள பொருள்களையும் உலகத்தையும் பார்க்கும் பொழுது இயல்பாகவே ஒரே பரம பொருள் உண்டு எனும் கொள்கையில் நம்பிக்கை வைக்கிறான். ஆனால் பிற்காலத்தில்தான் பல வகையான கற்பனைகள் மனிதனுடைய உள்ளத்தில் தோன்றி அற்பப் பொருள்களை வழிபடவேண்டும் என்னும் எண்ணம் உண்டாகியது. மனித வரலாற்றின் பிற்போக்கான நிலையில், பல கடவுளர்களை வணங்கும் பழக்கம் ஏற்பட்டதாகத் தெரிகிறது. ஆதம் (அலை) தமக்குள்ளே ஒளியுடன் படைக்கப்பட்டார். ஆனால் அவரது சந்ததிகள் அவ்வொளியை அணைத்து இருளை ஏற்றுக்கொண்டார்கள். இக்கொள்கை எகிப்து, கிரேக்கம், சால்டியா, இந்தியா, சீனா, ஈராக் நாடுகளின் பழங்குடி மக்களிடம் காணப்படும் பழக்க வழக்கங்களிலிருந்து அறியப்படுகின்றது. எனவே இயற்கையால் வழிகாட்டப்பட்ட இயற்கை வாழ்வினையே மனிதன் நடத்துகின்றான் என்ற உண்மையை அவை உணர்த்துகின்றன என்று மௌலானா அபுல்கலாம் ஆசாத் (திருமறையின் தோற்றுவாய் பக்கம் 182) எடுத்துக்காட்டுகிறார்.

  இதனை சூரா யூனுஸின் 19 வது வசனமும், சூரா 2:13ஆவது வசனமும் சுட்டிக்காட்டுகின்றன.

**ரிஸாலத் :**

- பொதுவாக மனிதனுக்குப் புலனறிவும், பகுத்தறிவும் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் அவ்விரண்டாலும் புரிந்துகொள்ள முடியாத விடயங்கள் பலவும் உள்ளன. மனிதனின் சுய அறிவு படைப்புகளின் நோக்கம் பற்றி எத்தகைய அறிவையும் அவனுக்கு வழங்குவதில்லை. உதாரணமாக மனிதன் யார்? எங்கிருந்து வந்தான்? எங்கு போய் சேரப்போகிறான்? அவனது பணி என்ன? பிரபஞ்சப் படைப்புக்களின் இரகசியம் என்ன? என்பன போன்ற வினாக்களுக்கு மனிதன் தன் சுய அறிவின் மூலம் விடை காண முடியாது. இதனை அல்குர்ஆன் தெளிவாகவே குறிப்பிடுகிறது. ''இவைபற்றி அவர்களுக்கு யாதொரு ஞானமும் கிடையாது'' (ஆதாரமற்ற) வீண் சந்தேகத்தைத் தவிர (வேறு எதையும்) அவர்கள் பின்பற்றுவதில்லை. (வீண்) சந்தேகம் யாதொன்றையும் உறுதிப்படுத்தாது''(53:28)

- எனவே ரிஸாலத்தின் மூலமாகவே மனிதனின் உள்ளத்தில் எழும் அடிப்படையான வினாக்களுக்கு விடை பகர முடியும். ரிஸாலத்தின் மூலமாக வாழ்வின் இலக்கு நன்மை தீமை பற்றிய அறிவு, மனிதனின் ஆன்மீகத் தேவை, மறுமை வாழ்வு பற்றிய விளக்கம் முதலியவற்றை விளங்கிக்கொள்ள முடிகிறது.

  நிச்சயமாக உங்களிடம் என்னுடைய நேர்வழி வரும். எவன் என்னுடைய நேர்வழியைப் பின்பற்றுகின்றானோ அவன் வழிதவறவும்மாட்டான் நட்டமடையவும் மாட்டான். எவன் என்னுடைய நல்லுபதேசங்களைப் புறக்கணிக்கின்றானோ

அவனுடைய வாழ்க்கை நிச்சயமாக நெருக்கடியானதாகவே இருக்கும். மறுமை நாளிலே நாம் அவனைக் குருடனாகவே எழுப்புவோம் ( 20 : 123-124)

(ஆரம்பத்தில்) மனிதர்கள் (அனைவரும்) ஒரே இனத்தவராகவே இருந்தனர். நற்செய்தி கூறும்படியும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்யும்படியும் அல்லாஹ் நபிமார்களை அனுப்பி வைத்தான். மேலும் அம்மனிதர்களுக்குள் ஏற்படும் கருத்துவேறுபாடுகளைத் தீர்த்து வைப்பதற்காக (சத்திய) வேதத்தையும் அருளினான்.... (2: 213)

அல்லாஹ் மக்களை நேர்வழியில் நடத்துவதற்காக இறைதூதர்களை அனுப்பி வைத்தான். இவ்விறைத்தூதர்களின் வரிசையில் முஹம்மத் (ஸல்) அவர்கள் இறுதித் தூதராகக் காணப்படுகிறார். அவர்கள் மூலம் ரிஸாலத்தும் நுபுவ்வத்தும் பூரணப்படுத்தப்பட்டுவிட்டன. அவர்களோ அல்லாஹ்வுடைய தூதராகவும், நபிமார்களுக்கு முத்திரையாகவும் இறுதிநபியாகவும் இருக்கிறார்கள். (33:40)

- மனித சமுதாயம் புவியியல் ரீதியாகப் பிரிந்திருந்த காலத்தில் வெவ்வேறு பிரதேசங்களுக்கு வெவ்வேறு நபிமார்கள் அனுப்பப்பட்டிருந்ததை அல்குர்ஆன் சுட்டிக்காட்டுகின்றது. ஆனால் அரசியல் ரீதியாகவும் புவியியல் ரீதியாகவும் பிளவுபட்டிருந்த மனித சமுதாயம் பேரரசுகளின் தோற்றத்தாலும் வர்த்தக முயற்சிகளாலும் ஒன்றுபடக்கூடிய வாய்ப்புக்கள் அதிகரித்தன. இதனால் மனித சமுதாயம் முழுவதற்குமான ரிஸாலத் கொடுப்பதற்கான சூழ்நிலை உருவாகியது. எனவே கி.பி. ஏழாம் நூற்றாண்டில் அனைவருக்குமான ஒரே ரிஸாலத் வழங்கப்பட்டது.

  நபி (ஸல்) அவர்கள் இறுதி வேதமான அல்குர்ஆனைப் போதித்தார்கள் அவர்களுக்குப் பின் வேறு நபி தோன்றவேண்டிய அவசியம் இருக்கவில்லை. ஏனெனில் அவர்களின் ரிஸாலத் முழுமையானதாக இருந்தது. முன்னைய ரிஸாலத்களுக்கு ஏற்பட்ட மொழியறியாமை, தொடர்பின்மை, இடைச்செறுகல், திரிபுபடுத்தல் போன்ற பாதிப்புகள் நபி (ஸல்) அவர்களின் ரிஸாலத்திற்கு ஏற்படவில்லை. அல்குர்ஆன் மக்களின் உள்ளங்களில் மனனமாகப் பதிந்திருந்தது. ஏடுகளில் எழுதிப்பாதுகாக்கப்பட்டிருந்தது மட்டுமன்றி அதன் போதனைகள் எக்காலத்திற்கும் எல்லா இடங்களுக்கும் பொருத்தமாக அமைந்திருந்தன. மேலதிக போதனைகள் தேவைப்படவில்லை. நடைமுறைப் பிரச்சினைகளுக்காகத் தீர்வுகளை இஜ்திஹாத் மூலம் பெறப்படுவதற்கான வழிகாட்டல் கொடுக்கப்பட்டிருந்தது.

**மஆத் :**

- அல்லாஹ் மனிதனைப் படைக்குமுன் பூமியில் எனது பிரிதிநிதியைப் படைக்கப் போகிறேன் (2: 30) எனக் குறிப்பிட்டதும் அஹ்து மீஸாக்கில் மனித உயிர்களிடம் உறுதிமொழி வாங்கியமையும் (7:172) அல்லாஹ் எதையும் வீணாகப் படைக்கவில்லை (45:22) என்பதுவும் வினைக்குரிய கூலி பின்னர் வழங்கப்படும் என்ற வாக்குறுதியும் (45:22) வாழ்வு ஒரு சோதனை (67:2) என்பதுவும் மனித வாழ்வு பற்றிய ஒரு விசாரணை உண்டு என்பதை எடுத்துக் காட்டுகின்றன. இவை மட்டுமன்றி மனிதன் பொறுப்புடன் செயற்படவும், அல்லாஹ்வின் கட்டளைப்படி செயல்படுவதை நிலை நிறுத்தவும், மனிதர்களதும், அல்லாஹ்வின் ஏனைய படைப்புக்களதும் உரிமைகளைப் பேணி வரவும் மறுமை விசாரணையின் தேவை அவசியப்படுகின்றது. மரணத்தோடு வாழ்வு முற்றுப் பெறுவதில்லை என்பதையும் அது சொல்லிவைக்கிறது. எனவே, படிமுறையான ஒரு நிலையில் - மரணம், ஆலமுல் பர்ஸக், மீள எழுப்புதல், விசாரணை, சுவர்க்க நரக வாழ்வு என்றவாறு அது ஏற்படப் போகின்றது என்ற நம்பிக்கை இஸ்லாமிய நாகரிகத்தைக் களங்கப்படுத்தாமல் காக்கின்ற ஓர் அம்சமாகவும் உள்ளது.

**தேர்ச்சி 1.0 : இஸ்லாமிய நாகரிகத்தின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்குமான காரணிகளை ஏனைய நாகரிகங்களுடன் ஒப்புநோக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 1.3 : ஏனைய நாகரிகங்களோடு ஒப்பு நோக்கி இஸ்லாமிய நாகரிகத்தின் சிறப்பம்சங்களை எடுத்துக் காட்டுவார்**

**பாடவேளைகள் : 20**

**கற்றல் பேறுகள் :**

- இஸ்லாமிய நாகரிகம் தெய்வீகத் தன்மையும் (ரப்பானிய்யா) பூரணத்துமும் (ஷுமூலிய்யா) கொண்டது என்பதை அறிந்து விபரிப்பார்.
- இஸ்லாமிய நாகரிகம் நடுநிலைத்தன்மை, சர்வதேசத் தன்மை போன்ற சிறப்புக்களைக் கொண்டது என்பதை விளக்குவார்.
- மனித நலன் காத்தலும் மேம்படுத்தலும் இஸ்லாமிய நாகரிகத்தின் உயர்ந்த பண்புகள் என்பதை உணர்ந்து செயற்படுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

- இஸ்லாமிய நாகரிகம் என்பது ஏனைய நாகரிகங்கள் அனைத்திலிருந்தும் வேறுபட்டது. ஏனைய நாகரிகங்களைப் பொறுத்தவரை அவை, காலம், இடம், இனம் போன்றவற்றால் சுருக்கப்பட்டவை. மனித சிந்தனையின் வெளிப்பாடாக அமைந்தவை. கால, சூழ்நிலைக்கேற்ப மாறியவை அல்லது பொருத்தமற்றதெனக் கண்ட போது மறைந்து போனவை. சாதனங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பவை.
- இஸ்லாமிய நாகரிகம் சர்வதேசமயமானது, விரிவானது, வஹியின் வழிநடத்தலால் உருவாக்கப்பட்டு பக்குவப்படுத்தப்பட்டு வளர்வது, மற்றொரு வகையில் சொல்வதானால், மனிதனை மையப்படுத்தி, அவனது வாழ்வை நெறிப்படுத்த வழிகாட்டுவது. இம்மை நலனை மட்டுமன்றி மறுமை நலனையும் இலக்காகக் கொண்டது. கால சூழ்நிலைக்கு அப்பாற்பட்டது. உலக மக்கள் யாவருக்கும் அருளாகக் கிடைக்கப்பெற்றது. நற்பண்புகளையும், மனித நலன்களையும் பாதுகாப்பது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போன்ற உயர் பண்புகளைக் கொண்டது. அதன் கலை, இலக்கிய முயற்சிகள் கூட அறநெறியில் அமைந்தவை. மனிதனை மனிதன் அடிமையாக்கும் நிலையிலிருந்து, மனிதனை அவனைப் படைத்துப் பரிபாலிக்கும் இறைவனின் அடியானாக வாழ வழிவகுப்பது.
- இஸ்லாமிய நாகரிகத்தின் மூல ஊற்றாக அல்குர்ஆன், அல்லாஹ்வை ரப்புல் ஆலமீன் எனவும் நபி (ஸல்) அவர்களை ரஹ்மதன் லில் ஆலமீன் எனவும் அறிமுகப்படுத்துகின்றது.
- உலகுக்கு மட்டுமல்ல, பிரபஞ்சத்திலுள்ள ஏனைய அனைத்துக்கும் அல்லாஹ் ரப்பாக உள்ளான். அதே போன்று நபி (ஸல்) அவர்களும் முழுப் பிரபஞ்சத்துக்கும் அருளாக உள்ளார்கள். மனித சமூகத்துக்கு வழிகாட்டியாக நின்று அவர்கள் காட்டிக் கொடுத்த வாழ்வு முறை ஓர் அருளாக இருப்பதோடு, பிரபஞ்சப் படைப்புக்களுக்கும் அது அருளாக உள்ளது. உதாரணமாக, மனிதன் மீது விதியாக்கப்பட்டுள்ள ஹுகூகுல் இபாத் என்பது எல்லாப் படைப்புக்களது உரிமைகளையும் வழங்க வேண்டுமென்பதைச் சுட்டிக் காட்டுகிறது.‘தஜ்லா நதிக் கரையில் ஓர் ஆட்டுக் குட்டி சறுக்கி விழுந்தாலும் அதற்கு நான் பதில் கூற

வேண்டுமென்ற கலீபா உமர் (ரழி) அவர்களின் கூற்றையும், நைல் நதி வற்றிய போது, மனிதப் பலி மூலமே அதனைப் பெருக்கெடுக்கச் செய்ய முடியுமென எகிப்திய மக்கள் கவர்னர் அம்ர் இப்னுல் ஆஸ் (ரழி) அவர்களிடம் சொன்ன போது, கலீபா நைல் நதிக்குக்கடிதம் எழுதிப் பெருக்கெடுக்கச் செய்த செயற்பாட்டையும் இதற்கு ஆதாரமாகக் கூறலாம்.

- இஸ்லாமிய நாகரிகம் வழங்கியுள்ள கடமைகளும் உரிமைகளும் எல்லோருக்கும் பொதுவானவை. சூதாடுவதும், மது அருந்துவதும் இஸ்லாமிய நாகரிகத்தில் வாழுகின்றவர்களுக்கு மட்டும் தடை செய்யப்படவில்லை. அவை எல்லா நாகரிக சமூகங்களுக்கும் பொருத்தமானவை. சமயத்துக்கு வெளியே சமூக நோக்கில் அவதானிப்பவர்கள் இதனை ஏற்றுக்கொள்ளாமலில்லை. இவ்வாறே ஷரீஅத்தில் அமைந்துள்ள நெகிழும், நெகிழாப் பண்புகளையும் நோக்கலாம். மனித வாழ்வு இடத்தாலோ, காலத்தாலோ மாற்றமடைய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உட்படும் சூழ்நிலையில் நெகிழ்வதற்கு அனுமதிக்கப்பட்ட முறைகளைக் கையாள்வதன் மூலம் வேறுபாட்டைத் தவிர்க்கலாம். ஷரீஅத்தில் இஜ்திஹாதின் பணியாக இது நடைமுறைப்படுத்தப்படுகிறது. தலைமைத்துவத்தை ஏற்படுத்தல், அதற்குக் கட்டுப்படுதல், ஆலோசனை கூறுதல் போன்றவற்றையும் இஸ்லாமிய நாகரிகத்தின் சர்வதேச நிலையை உறுதிப்படுத்துவதற்குச் சான்றாகக் குறிப்பிடப்படும். எப்போது அடிப்படை வழிகாட்டல்கள் அல்லது நெகிழா அம்சங்கள் நெகிழ வைக்கப்படுகின்றனவோ அப்போது இஸ்லாமிய நாகரிகம் தளர்வுற்றதை மறுக்க முடியாது. இந்தியாவில் இடம் பெற்ற முஸ்லிம் ஆட்சியை இதற்கு உதாரணமாக குறிப்பிடலாம்.
- தவ்ஹீத், பிளவுபட்ட இறைமைத்துவத்திலிருந்து மனித சமூகத்தைப் பாதுகாக்கின்றது. ரிஸாலத், பிளவுண்ட தலைமைத்துவத்திலிருந்து பாதுகாக்கின்றது. மஆத், எச்சரிக்கையுடனான ஒழுங்கமைக்கப்பட்ட வாழ்க்கை முறைக்கு வழிகாட்டுகின்றது.
- இஸ்லாமிய நாகரிகம் பற்றி விமர்சிக்கின்ற கீழைத்தேய ஆய்வாளர்கள், அது முதலில் சமயமாகவும் பின்னர் அரசாகவும் அடுத்து நாகரிகமாகவும் குறிப்பிடுகின்றனர். இது பிழையானதொரு விளக்கமாகும். மனிதன் முதலில் குழந்தையாகவும் பின்னர் வாலிபனாகவும் அடுத்து முதியவனாகவும் வாழ்ந்தான் என்பது உண்மை. ஆனால் அந்தக் குழந்தை மனிதனாகவே பிறந்தது. மனிதனாகவே வளர்ந்தது. மனிதனாகவே முதிர்ச்சி பெற்றது என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள். ஏற்கனவே குறிப்பிட்டது போன்று வஹியின் வழிகாட்டலில் அது தோற்றம் பெற்றதால் அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கையின் அடிப்படையில் அது சமயமாகத் தெரிந்தது. ஹிஜ்ரத்தின் பின்னர் அரசியல் எழுச்சி பெற்றபோது அது அவர்களுக்கு அரசியலாகத் தெரிகின்றது. எனவே அவர்கள் அணிந்திருந்த கண்ணாடியால் இஸ்லாமிய நாகரிகத்தை நோக்கினார்கள். இஸ்லாம் சமயமாகவும் இருந்தது, அரசியலாகவும் இருந்தது, நாகரிகமாகவும் இருந்தது.
- இஸ்லாமிய நாகரிகம் சர்வதேசமயமானது என்பதை உண்மைப்படுத்துவதற்காக அந்நாகரிகத்தின் தனிமனித, குடும்ப, சமூக, தேசிய, சர்வதேச வழிகாட்டல்கள் அனைத்தும் ஆதாரமாக நிற்கின்றன. ஏனைய நாகரிகங்களை அவதானிக்கும் போது அவை குறிப்பிட்ட ஒரு பகுதிக்கு அழுத்தம் கொடுக்கப்படுவதை அவதானிக்கலாம். உதாரணமாக, இந்து நாகரிகத்தில் ஆன்மீகமும், உரோம நாகரிகத்தில் இராணுவமும், கிரேக்க நாகரிகத்தில் அறிவியலும் முதன்மை பெறுகின்றன. ஆனால் இஸ்லாமிய நாகரிகத்தில் இவையனைத்தும் இணைந்து

பொது வாழ்வுக்கான வழிகாட்டல் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் ஆன்மீகம் உண்டு. அறிவியலும் உண்டு. கல்வியும் உண்டு. கலாசாரமும் உண்டு. அரசியலும் உண்டு. எனவே தான் அரசியலை இழந்த போதும், இராணுவ பலவீனப்பட்டபோதும், அறிவியலில் தேக்கமடைந்தபோதும் இஸ்லாமிய நாகரிகம் நின்றுபிடித்தது. ஹிஜ்ரி 40 இல் கிலாபத் வீழ்ந்தாலும், 655 இல் அப்பாஸிய ஆட்சி ஒழிக்கப்பட்டாலும் ஹி. 1343இல் உஸ்மானிய ஆட்சி வீழ்ச்சியுற்றாலும் இஸ்லாமிய நாகரிகம் வீழ்ச்சியுறவில்லை. அது நோயுறலாம், தளர்வுறலாம் ஆனால் மறைந்துவிடாது.

- இஸ்லாமிய நாகரிகம் மனிதனின் சுய அறிவினால் மட்டும் உருவான நாகரிகமன்று. அது வஹியின் வழிகாட்டலில் உருவாகி வளர்கின்ற ஒரு நாகரிகமாகும். ஆதலால், இஸ்லாமிய நாகரிகத்தில், மனிதனுக்கும் இறைவனுக்குமிடையிலான தொடர்பு இறுக்கமானது.

- மனிதனைப் படைத்தவன் என்றவகையில் மட்டுமன்றி, பூமியில் அவனை அல்லாஹ்வின் பிரதிநிதியாக அமர்த்தப்பட்டுள்ளமையும் அவனுக்கும் மனிதனுக்குமிடையிலான தொடர்பை வலுப்படுத்துகின்றது. அல்லாஹ்வை ஏகனாகவும், வணக்கத்திற்குரியவனாகவும், சட்டமியற்றுபவனாகவும், வழிகாட்டுபவனாகவும் ஏற்கின்ற இஸ்லாமிய நாகரிகம் அவனுடன் எப்போதும் தொடர்பு கொண்டதாகவும் இருக்கின்றது. அல்லாஹ்வை நம்புதல், அவனது வழிகாட்டுதலை ஏற்றுக் கொள்ளல், பிரார்த்தித்தல் போன்ற பல்வேறு வழிகளில் இறைவனுக்கும் மனிதனுக்குமிடையிலான உறவும், தொடர்பும் பலமானதாக உள்ளன. இதற்காக பல்வேறு இபாதத்துக்களையும் இஸ்லாம் வகுத்தளித்துள்ளது. அல்லாஹ் மனிதனின் பிடரி நரம்பைவிட மிக நெருக்கமாக இருக்கிறான் என்று அல்குர்ஆன் சுட்டிக்காட்டுகின்றது. இந்த நெருக்கமான பண்பே ரப்பானியா என்பதை வெளிக்காட்டுகின்றது.

- நீங்கள் அல்குர்ஆனைக் கற்றுக் கொடுப்பதன் மூலமும் அதனைக் கற்பதன் மூலமும் இரட்சகனைச் சார்ந்திருங்கள் (3:79) என்று அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. இதன் கருத்து, வழிகாட்டலிலும், அடிப்படையிலும், நோக்கத்திலும், இலட்சியத்திலும் றப்பாகிய அல்லாஹ்வைச் சார்ந்திருக்க வேண்டும் என்பதாகும். அவனையே றப்பாக ஏற்கிறோம்.

- யார் இஸ்லாம் அல்லாததை பின்பற்றுகிறாரோ அது மறுமையில் ஏற்கப்படமாட்டாது. நிச்சயமாக இத்தகையோர் நஷ்டவாளிகளாகவே இருப்பர்(3:85) என்ற அல்குர்ஆனின் கருத்து, ரப்பானியாக இருக்காதவன், இம்மையில் வெளிப்பார்வைக்கு எப்படித்தெரிந்தாலும் மறுமையில் வெற்றியடைய மாட்டான் என்பதாகும். எனவே ரப்பானி எனப்படும் முஸ்லிம், வஹியின் அறிவுறுத்தலுக்கேற்ப தனது வாழ்வைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.. அவ்வறிவுறுத்தல் குர்ஆனாகவோ, ஸுன்னாவாகவோ இருக்கலாம்.

- அந்த வகையில்தான், அல்குர்ஆனும் ஸுன்னாவும் இன்றுவரையும், இதற்கு அப்பாலும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. நாமே இவ்வேதத்தை இறக்கினோம். நாமே அதனைப் பாதுகாப்போம் (15:09) என்று அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. வஹி இறங்க ஆரம்பித்ததிலிருந்து ஸஹாபாக்கள் அதனை மனனமிட்டார்கள், எழுதியும் வந்தார்கள். அவ்வாறே ஸுன்னாவின் வெளிப்பாடான ஹதீஸ்களையும் மனனமிட்டும் எழுதியும் வந்தார்கள். தொடர்ந்து வந்த ஒவ்வொரு பரம்பரையும் இன்றுவரை அல்குர்ஆனையும், ஸுன்னாவையும், ஸஹாபாக்களின் வழிமுறையையும் கற்றும், கற்பித்தும், பாதுகாத்தும் வந்துள்ளமை மறுக்க முடியாத உண்மையாகும். ஆதலால், அதற்கு

முன்னர் இறக்கப்பட்ட வேதகருத்துகளுக்கு ஏற்பட்டது போன்ற திரிபுகள், இடைச் செருகல்கள் போன்றன ஏற்படவில்லை. ஏனெனில் அல்லாஹ்வினதும், ரஸுலினதும் வழிமுறையை முஸ்லிமின் சிந்தனை, செயல் ஆகிய இரண்டிலும் பின்பற்றினாலன்றி ரப்பானியாக வாழ முடியாதென்பது அறிந்து வைக்கப்பட்டிருந்தது.

- ரப்பானியின் சிந்தனையும் செயற்பாடும், ஈமானும் அமலும் ஒன்றித்ததாக இருக்க வேண்டுமேயன்றி பிரிந்திருக்க முடியாது. அவன் ஏற்றுக்கொண்ட சிந்தனை இஸ்லாமாகவும், செயற்பாடு வேறொன்றாகவும் இருக்க முடியாது.
- மறுதலையாக, சிந்தனை வேறொன்றாகவும், செயற்பாடு இஸ்லாமாகவும் இருக்க முடியாது. ஒருவர் முஸ்லிமாக இருந்து கொண்டு கம்யூனிஸ்டாக இயங்க முடியாது. இந்த நிலைப்பாடுதான், இஸ்லாம் அறிமுகமான காலத்தில் நிலவி வந்த, அரசியல், சமூக, பொருளாதார, கல்வி, கலாசார நோக்குகளிலிருந்தும் போக்கிலிருந்தும் வேறுபட்ட இஸ்லாமிய நாகரிகம் வளர்ச்சியுறக்காரணமாக அமைந்திருந்தது.
- எனவேதான், நீங்கள் வேதத்தின் ஒரு பகுதியை ஏற்று, மறுபகுதியை நிராகரிக்கின்றீர்களா? உலகில் இழிவும் மறுமையில் நோவினை தரும் தண்டனையுமே இதற்கான கூலி (2:85) என அல்குர்ஆன் எச்சரிக்கின்றது. ஆதலால் ரப்பானி என்பவன், எல்லா விடயங்களிலும் இஸ்லாமிய கண்ணோட்டமுடையவனாக இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றான். இறைவனுக்கொன்று, மனிதனுக்கொன்று என்ற இரட்டை நிலைப்பாட்டில் - முகஸ்துதியாய் வாழ்வதற்கு இஸ்லாமிய நாகரிகத்தில் இடமில்லை. அனைத்துச் செயற்பாடுகளும் எண்ணங்களை (நிய்யத்தை)க் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றன (புகாரி)
- இஸ்லாமிய நாகரிகம் ரப்பானியத்தை வலியுறுத்தும் அதே நேரத்தில் ஷுமூலிய்ய என்ற முழுமைத்துவத்தையும் கொண்டுள்ளது. இதன் கருத்து தனிநபர் வாழ்வு, குடும்ப வாழ்வு, சமூக வாழ்வு, தேசிய வாழ்வு ஆகிய அனைத்திலும் முழுமைத்தன்மையை எதிர்பார்க்கின்றது என்பதாகும். ஓர் இனத்துக்கோ, மொழியினருக்கோ, பிரதேசத்தினருக்கோ, காலத்தினருக்கோ அன்றி அனைவராலும் பின்பற்றத்தக்க நாகரிகமாக உள்ளது.
- தனிமனிதனைப் பொறுத்தவரை, குழந்தையாக, பிள்ளையாக, வாலிபனாக, குடும்ப உறுப்பினராக, குடும்பத்தலைவனாக - ஆணாயினும், பெண்ணாயினும் தனது வாழ்க்கைப் பாத்திரத்தை முழுமையாக செய்துமுடிக்க வேண்டிய முழுமையான வழிகாட்டுதலை இஸ்லாமிய நாகரிகம் கொண்டுள்ளது. விசுவாசிகளே, இஸ்லாத்தில் நீங்கள் முழுமையக நுழைந்து கொள்ளுங்கள். (2:208) என்றே அல்குர்ஆன் வேண்டுகோள் விடுக்கின்றது.
- எனவே, மனிதனின் ஆன்மீக தேவைகள் போன்றே உலகியல் தேவைகளையும் அனுபவிக்கக்கூடிய (வரையறுக்கபட்ட) சுதந்திரம் அங்கே வழங்கப்பட்டுள்ளது. அது மனித சமுதாயம் என்ற கண்ணோட்டத்திலேயே அதன் முழுச் செயற்பாடுகளையும் முன்வைக்கின்றது. ஏவல்களை முன்வைக்கும் போதும் சரி, விலக்கல்களை தவிர்ந்து கொள்ளுமாறு எச்சரிக்கும் போதும்சரி மனிதர்களே, விசுவாசிகளே என்று தான் விளிக்கின்றது.
- மனிதர்களே, உங்கள் அனைவரையும் நிச்சயமாக நாம் ஒரே ஆண் ஒரே பெண்ணிலிருந்துதான் படைத்தோம் (49:13) (மற்றும்-4:170,7:158)

விசுவாசிகளே, அனேகமான சந்தேகங்களிலிருந்து விலகிக் கொள்ளுங்கள் (49:12) என்ற இரு வசனங்களையும் இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

- இஸ்லாமிய நாகரிகம் பூரணத்துவமுடையது என்பதை, நபி (ஸல்) அவர்களின் இறுதி ஹஜ்ஜின் போது அருளப்பட்ட அல்குர்ஆன் வசனங்கள் தெளிவாகவே சுட்டிக்காட்டுகின்றன. இன்றைய தினம் நாம் உங்களுக்கு மார்க்கத்தை முழுமையாக்கி வைத்து என்னுடைய அருளையும் உங்கள் மீது முழுமையாக்கி வைத்துவிட்டேன். (5:3) இவ்வாறே நபி (ஸல்) அவர்களின் ஹதீஸும் அந்தப் பூரணத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது. ‘முன்னைய நபிமார்களுக்கும் எனக்குமிடையிலான உதாரணம் ஒரு கட்டடத்தின் ஒரே கல் பூரணப்படுத்தப்படாத நிலையில் இருந்தமை போன்றதாகும். அக்கட்டடத்தைப் பூரணப்படுத்த வேண்டிய கல்லாக நான் உள்ளேன். எல்லா நபிமார்களதும் தொடராக வந்த இறுதித் தூதராக நான் உள்ளேன் (புகாரி)
- மனிதன், உடல், அறிவு, ஆன்மா ஆகிய மூன்றினாலுமானவன். இந்நிலையில் உடலுக்கு மாத்திரமோ அல்லது உள்ளத்திற்கு மாத்திரமோ அல்லது ஆன்மாவுக்கு மாத்திரமோ முக்கியத்துவம் கொடுத்து, ஏனைய இரண்டையுமோ, ஒன்றையோ புறக்கணிப்போமாயின் அது பூரணமாகாது. மூன்றும் சமநிலையில் வளர்க்கப்பட வேண்டும் என்றே இஸ்லாமிய நாகரிகம் எதிர்பார்க்கின்றது.
- பொதுவாக எல்லா நாகரிகங்களிலும் இறை நம்பிக்கை அல்லது வழிபாடு காணப்பட்டாலும் அவற்றில் இறைவன் பற்றிய பூரணமான முடிவைக் காணமுடியாது. சிலர் இறைவன் உண்டு என்பர். சிலர் அப்படி ஒன்று இல்லை அது கற்பனை என்பர். சிலர் ஒன்றுக்கு மேற்பட்ட கடவுள்களை வணங்குவர், வழிபடுவர். வெவ்வேறு செயற்பாடுகளுக்காக வெவ்வேறு கடவுளரை எதிர்பார்ப்பர். இவையனைத்தும் கடவுள் பற்றிய முழுமையான கருத்தை முன்வைக்கவில்லை. இஸ்லாம் மட்டுமே தௌஹீத் என்ற முழுமையான கடவுள் கொள்கையை முன்வைத்துள்ளது.
- ஒழுக்கத்தைப் பொறுத்தவரையிலும் பொதுவானதொரு ஒழுக்கநியதியை ஏனைய நாகரிகங்கள் முன்வைப்பதில்லை. எது ஒழுக்கம் என்பதில் கருத்து வேறுபாடு காணப்படுகின்றது. சிலர் ஒழுக்கமாகக் கொள்வதை மற்றும் சிலர் ஏற்றுக் கொள்வதில்லை. இதனால் ஒழுக்கத்தை இனம்காண்பதே சிரமமாக இருக்கும். ஆனால் இஸ்லாமிய நாகரிகம் ஒழுக்கத்தை வரையறுத்தும் எல்லோருக்கும் பொதுவானதாகவும் எடுத்தும் காட்டுகின்றது.
- அறிவைப் பொறுத்தவரையில் எது அறிவு என்பதில் கருத்து வேறுபாடு காணப்படுகின்றது. பொதுவாக ஏனைய நாகரிகங்கள் புலனறிவையும் பகுத்தறிவையும் ஏற்றுக் கொள்கின்றன. எனினும் புலனறிவின் அல்லது பகுத்தறிவின் எந்த அம்சங்களை ஏற்றுக் கொள்வது? எந்த அம்சங்களை நிராகரிப்பது என்பதில் கருத்து வேறுபாடு உண்டு. இஸ்லாமிய நாகரிகமே இவ்விரு அறிவையும் ஏற்றுக் கொள்கின்ற அதே நேரத்தில் இவற்றுக்கிடையில் சந்தேகமோ முரண்பாடோ காணப்படும் போது அதனை உரசிப்பார்ப்பதற்காக வஹி அறிவு என்ற மற்றோர் அறிவையும் வழங்கியிருக்கின்றது. இதனால் சந்தேகமின்றி அறிவைப் பயன்படுத்தக் கூடிய வாய்ப்புக் கிடைக்கின்றது. அறிவில் முழுமைத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.
- வஹியை ஏற்கின்ற அதே சந்தர்ப்பத்தில் வஹியறிவை விரிவுபடுத்த பகுத்தறிவைப் பயன்படுத்துவதற்கான வழியும் இஸ்லாமிய நாகரிகத்தில் உண்டு. இதற்கு இஜ்திஹாத் சிறந்த நடைமுறை உதாரணமாகும்.

- மற்றொரு வகையில் சொல்வதானால் சில நாகரிகங்கள் நெகிழாத் தன்மையுடனிருக்க, மற்றும் சில நெகிழும் தன்மையுடன் காணப்படுகின்றன. நெகிழும் தன்மைக்கு முன்னுரிமை வழங்கும் நாகரிகங்களில் நிரந்தரத்தன்மையைக் காணமுடியாது. நெகிழாத் தன்மைக்கு முன்னுரிமை கொடுக்கும் நாகரிகங்கள் சூழ்நிலைக்கேற்ப தன்னை வளர்த்துக் கொள்ள முடியாமல் திண்டாடலாம். எனவே நெகிழும், நெகிழாத் தன்மைகளை ஒன்றிணைத்து முழுமையான நாகரிகமாக இஸ்லாமிய நாகரிகம் அமைந்துள்ளது.

- மனிதன் எப்போதும் நடுநிலைத் தன்மையையே விரும்புகிறான். வெப்பமான சூழலையோ, குளிரான சூழலையோ விரும்பாத மனிதன், இரண்டிற்குமிடைப்பட்ட மிதமான சூழலையே விரும்புகின்றான். எனவே, இஸ்லாமிய நாகரிகமும் நடுநிலையான போக்கையே மனிதனுக்கு வழங்கியிருக்கின்றது. ஆதலால், இஸ்லாமிய நாகரிகத்துக்கு உட்பட்ட சமூகத்தை உம்மதன் வஸதன் - நடுநிலையான சமுதாயம் (2:143) என்று அல்குர்ஆன் குறித்துக் காட்டுகின்றது.

- மார்க்கத்தில் மிதமிஞ்சிய தன்மை குறித்து எச்சரிக்கையாக இருங்கள். உங்களுக்கு முன்சென்ற மக்கள் மிதமிஞ்சிய தன்மை காரணமாக அழிவுக்குள்ளானார்கள். (அஹ்மத்) என்ற ஹதீஸ் உம்மதன் வஸதன் என்பதற்கு விளக்கமாக அமைகின்றது.

- அல்குர்ஆன் ரஹ்மானுடைய நல்லடியார்கள் பற்றிக் குறிப்பிடுகையில், ‘அன்றி அவர்கள் தானம் கொடுத்தால் அளவு கடந்தும் கொடுத்துவிட மாட்டார்கள். கஞ்சத்தனமும் செய்ய மாட்டார்கள். இதற்கு மத்திய தரத்தில் இருப்பார்கள். (25:67) என்று நடுநிலைத் தன்மையைப் பேணுவது நல்லடியார்களின் பண்பு எனக் குறித்துக்காட்டுகின்றது. இதன் விளக்கத்தை மற்றொரு கோணத்தில் எடுத்துக் காட்டும் போது, (உங்களுடைய பொருள்களில் எதையுமே செலவு செய்யாது) அன்றி (உங்களிடம் இருப்பதை எல்லாம் கொடுத்து உங்களுடைய கையை முற்றிலும் விரித்துவிடாதீர்கள். ஆதலால் நீங்கள் நிந்திக்கப்பட்டவர்களாகவும், முடைப்பட்டவர்களாகவும் தங்கி விடுவீர்கள். (17: 29) எனக் குறிப்பிடுகின்றது.

- இங்கே அளவு கடந்து செலவிடுவதையும் அளவில் குறைத்து செலவிடுவதையும் தவறெனச் சுட்டிக்காட்டும் அல்குர்ஆன், இரண்டிற்குமிடைப்பட்ட மத்திம நிலையில் செலவிடுமாறு அறிவுறுத்துகிறது.

- இவ்வாறே உண்பதிலும் பருகுவதிலும் கூட நடுநிலையைப் பேணுவது இஸ்லாமிய நாகரிகத்தின் சிறப்பம்சமாகும். வயிறு நிறைய உண்பதிலும், குடிப்பதிலும் எச்சரிக்கையாக இருங்கள். அது ஆரோக்கியத்தைப் பாதித்து நோய்களை உருவாக்கும், தொழுகையில் சோம்பலை ஏற்படுத்தும். அந்த இரண்டிலும் நடுநிலை பேணுங்கள். அது உடலைச் சீர்படுத்தி வீண் விரயத்தைத் தடுக்கும். (அல் கன்ஸ்) உண்ணுங்கள், பருகுங்கள், வீண்விரயம் செய்யாதீர்கள் (7:31) என்று மற்றொரு குர்ஆன் வசனம் வலியுறுத்துகின்றது. உங்கள் மீது பெருஞ்சுமைகளை ஏற்றிக் கொள்ளாதீர்கள். நீங்கள் அழிந்து போவீர்கள். உங்களுக்கு முன் சென்ற மக்கள் தம்மீது அதிக சுமைகளை ஏற்றிக் கொண்டார்கள். இதனால் அழிந்து போனார்கள். அவர்களது எச்சங்கள் மடாலயங்களிலும், ஆச்சிரமங்களிலும் காணப்படுகின்றன. (அஹ்மத்) என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

- நபியவர்கள் கூறினார்கள், இலகுபடுத்துங்கள். கஷ்டப்படுத்தாதீர்கள். ஆர்வமூட்டுங்கள், வெறுப்படையச் செய்யாதீர்கள். (முஸ்லிம்)

- அறிஞர் லுக்மான், தனது மகனுக்கு உபதேசிக்கும் போது, ''உமது நடையில் மத்திய தரத்தைக் கடைப்பிடி. உனது சத்தத்தைத் தாழ்த்திக்கொள். சத்தங்களில் வெறுக்கத்தக்கது கழுதையின் சத்தமாகும். (31:19) என்று கூறுகிறார். இங்கு அல்குர்ஆன் ஒலி எழுப்புவதிலும் நடுநிலை பேணவேண்டுமென அறிவுறுத்துகிறது.

- இதுமட்டுமன்றி, இம்மையும் மறுமையும் சமநிலையில் நோக்கப்பட வேண்டுமென்ற கருத்தையும் அல்குர்ஆன் முன்வைக்கின்றது. ஹாஜிகளின் பிரார்த்தனை எவ்வாறு அமைய வேண்டுமெனக் கற்றுத்தரும் அல்குர்ஆன், ''எங்கள் இறைவனே, எங்களுக்கு வேண்டியவைகளையெல்லாம் இம்மையிலேயே அளித்திவிடுவாயாக. என்று கேட்பவர்களும் உண்டு. ஆனால், இத்தகையோருக்கு மறுமையில் யாதொரு பாக்கியமுமில்லை. (2:200) அன்றி எங்கள் இறைவனே, எங்களுக்கு நீ இம்மையிலும் நன்மையைளிப்பாயாக. மறுமையிலும் நன்மையளிப்பாயாக நரக நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களை நீ பாதுகாப்பாயாக எனக் கோருபவர்களும் உண்டு. (2: 201)

  இத்தகைய உலக விவகாரங்களாக இருந்தாலும் சரி, ஆன்மிக விவகாரங்களாக இருந்தாலும் சரி நடுநிலையான போக்கையே இஸ்லாமிய நாகரிகத்திற்குட்பட்டவர்கள் கைக் கொள்ள வேண்டுமென்பதை அல்குர்ஆனும், ஸுன்னாவும் வலியுறுத்துவதைக் காண்கின்றோம்.

- நடுநிலைத் தன்மையை மீறி அளவுக்கதிகம் தமக்குத்தானே சுமைகளை ஏற்படுத்துவது நாகரிகமான பண்பல்ல. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். பெருஞ்சுமைகளை உங்கள் மீது சுமத்திக் கொள்ளாதீர்கள். இதனால் நீங்கள் அழிந்துவிடுவீர்கள். உங்களுக்கு முந்திய சமூகத்தவர்கள் அதிக சுமையை ஏற்றுக் கொண்டமையால் அழிந்து போனார்கள். (அபூ ய.ஃலா)

- எனவே, அளவுக்கதிகமாகவோ, அளவில் மிக்க குறைத்தோ எந்தச் செயலிலும் ஈடுபடக்கூடாது. அது இபாதா போன்ற ஆன்மீகச் செயல்பாடுகளாகவும் இருக்கலாம். தொழில் முயற்சிபோன்ற உலகியற் செயல்பாடுகளாகவும் இருக்கலாம். ஒரு முறை முஆத் இப்னு ஜபல் (ரழி) அவர்கள், ஆர்வமிகுதியால் தொழுகையை நீட்டித் தொழவைத்தார்கள். பொறுமையிழந்த ஸஹாபாக்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்து முறைப்பாடு செய்தார்கள். அப்போது ''முஆதே, நீ அவர்களைச் சிரமப்படுத்துகிறீரா என்று மூன்று முறை வினவினார்கள். பின்னர், 'சிலர் நல்ல விடயங்களில் மக்களை வெறுப்பூட்டுகிறார்கள்.' என கடிந்து கொண்டார்கள். (புகாரி) மற்றொரு பொழுது, 'உங்களால் இலகுவாகச் செய்யக்கூயவற்றையே செய்யுங்கள். களைப்பும் சலிப்பும் ஏற்படும் வகையில் அல்லாஹ் கூலி கொடுப்பதில் களைப்படைய மாட்டான் (புகாரி) என்று அறிவுறுத்தினார்கள்.

- அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி) அவர்கள் இபாதத்துகளில் மூழ்கி, மனைவி மீதான கடமைகளைக்கூட மறந்துவிடுவார்கள் என முறையிட்ட போது, 'அப்துல்லாஹ்வே, இவ்வாறு செய்யாதீர், சில நாட்கள் நோன்பு நோற்பீராக, சில நாட்களில் விட்டுவிடுவீர். இரவு வேளையில் இபாதத் செய்யும். அதேவேளை உறக்கத்தையும் நிறைவேற்றும். உமது உடம்புக்கும், உமது மனைவிக்கும், உமது விருந்தினருக்கும் உரிமைகள் உண்டு (புகாரி) எனக் குறிப்பிட்டார்கள்.

- ஒவ்வொரு சமுதாயமும் அது வாழ்ந்த பிரதேசம், அதன் வளம், அது எற்றுக் கொண்ட கொள்கை, அதில் உருவான புத்திஜீவிகள், செயற்பாட்டாளர்கள், அவர்கள் மேற்கொண்ட தொடரான முயற்சிகள், தியாகங்கள், அவர்களது அரசியல், அறிவியல்,

பொருளியல், இராணுவ பலங்கள் போன்ற காரணங்களால் சமூக வாழ்க்கையிலேற்படும் பரிணாம வளர்ச்சி ஒரு தனியான நாகரிகமாக செயற்பட ஆரம்பிக்கின்றது. அவற்றின் நலன்கள் மற்றவர்களைக் கவரும் போது அவர்களும் அந்நாகரிகத்தின்பால் ஈர்க்கப்படுகின்றார்கள். எனவே சுற்றுவட்டாரத்தில் நெருங்கி வாழும் சமூகங்களும் அதில் இணைந்து கொள்கின்றன. உலகில் தோன்றிய எல்லா நாகரிகங்களிலும் இந்தப் பண்புகளைக் காணலாம்.

- இவ்வாறே காலப்போக்கில் அதற்கண்மையில் மற்றொரு நாகரிகம் தோன்றும் போது, முன்னைய நாகரிகத்தை வெற்றி கொள்வதற்காக அரசியல், அறிவியல், இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இதனால் முன்னைய நாகரிகம் அழிவுறலாம். இன்றேல் முன்னைய நாகரிகத்தின் சிறந்த அம்சங்கள் அல்லது முயற்சிகள் கைவிடப்படும் போது, அது தளர்வடைய, அடுத்து வந்த நாகரிகம் அதனை மிகைக்கலாம். இதனால் முதலிருந்த நாகரிகம் படிப்படியாக வீழ்ச்சியை நோக்கிச் செல்ல பிந்திய நாகரிகம் எழுச்சி பெறும். கிரேக்க நாகரிக வீழ்ச்சியும் உரோம நாகரிக எழுச்சியும் இதற்கு எடுத்துக்காட்டாகும். எனவே, எந்த நாகரிகமும் தொடராக நிலைத்து நிற்பதைக் காணமுடியாது. பிறநாகரிக அம்சங்கள் அனைத்தையும் துறந்து தனக்கே உரிய தனிப்பண்புடன் மாத்திரம் வாழவும் முடியாது. மனித அறிவின் வழியாக மட்டும் அவை தோன்றியும், வளர்ந்தும், கலந்துறவாடியும் நிலைநிற்கின்றமையே இதற்குக் காரணமாகும்.
- இஸ்லாமிய நாகரிகம் எழுச்சி பெற்ற காலப்பகுதியில் வடமேற்கே உரோம நாகரிகமும், வடகிழக்கே பாரசீக நாகரிகமும் காணப்பட்டன. ஆட்சியாளர்களும், அவர்களது அடிவருடிகளும் அந்நாகரிகங்களின் நலன்களை சுரண்டிக் கொண்டிருந்தனர். பொதுமக்கள் உரிமையிழந்து காணப்பட்டனர். உயர் மட்டத்தில் காணப்பட்ட இவ்வுரிமை மீறல்களோடு ஒழுக்க வீழ்ச்சியும் பொதுமக்களில் வெறுப்பை ஏற்படுத்தின. இந்நிலையில்தான் இஸ்லாமிய நாகரிகத்தால் அவர்கள் கவரப்பட்டார்கள். இஸ்லாமிய வரலாற்றின் ஆரம்பக்கட்டத்தில் (கி.பி. 630 இல்) ஒரு போர் நிகழ்ந்தது. முஸ்லிம்களுக்கெதிராகப் போராடுவதற்கு, வீரர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டு அழைத்து வரப்பட்டனர். அவர்கள் தப்பியோடிவிடக்கூடாது என்பதற்காகச் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டிருந்தார்கள். அவை சேகரிக்கப்பட்டபோது அவை ஓர் ஒட்டகைச் சுமையளவு காணப்பட்டதாகக் கண்டனர்.
- இந்நிலையில் தான் கலீபா உமர் (ரழி) அவர்களின் காலத்தில் அறபு நாட்டுக்கு வெளியே இஸ்லாமிய நாகரிகம் பரவ ஆரம்பித்தது. பின்னர் தோன்றிய உமையா, அப்பாஸிய ஆட்சிக் காலங்களில் பிற கலாசார தாக்கங்கள் இணைய ஆரம்பித்தன. அவ்வேளை இஸ்லாத்துக்கு முரணான அம்சங்கள் நிராகரிக்கப்பட்டன. முரணில்லாத அம்சங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. மற்றும் சில இஸ்லாமியமயப்படுத்தப்பட்டன. இதனால் இஸ்லாமிய நாகரிகம் மேலும் சிறப்புற்றது. குறிப்பாக கிரேக்க, பாரசீக, இந்திய மொழிமூல நூல்கள் பெயர்க்கப்பட்டன. தனிப்பட்ட முறையிலும் அரச ஆதரவுடனும் முஸ்லிம்கள் அறிவியல் முயற்சிகளில் ஈடுபட ஆரம்பித்தனர். அறபு மொழி நூல்கள், ஸ்பானியாவிலிருந்து பிரான்ஸுக்குச் சென்ற போது பிரான்ஸில் லூயி மன்னனுக்கெதிராக மக்கள் புரட்சியும், ஜேர்மனியில் சமயப்புரட்சியும் இங்கிலாந்தில் கைத்தொழில் புரட்சியும் தோன்றி நவீன காலத்தை உருவாக்கியது.
- இது தொடர்பாக கலாநிதி முஸ்தபா ஸிபாயி (ரஹ்) பின்வருமாறு கூறுகிறார். வரலாற்றின் ஒரு காலகட்டத்தில் முஸ்லிம்கள் கிரேக்க நாகரிகத்தோடு தொடர்பு கொண்டார்கள். அதிலுள்ள இலக்கியங்களை மொழி பெயர்க்கவும் செய்தார்கள்.

ஆனால், அவர்கள் எந்த நிலையிலும் இறைவனுக்கு இணைவைத்து எழுதப்பட்ட இலக்கியங்களை மொழியாக்கம் செய்யவில்லை. முஸ்லிம்கள் ஓவியம் தீட்டுவதில் ஒப்பற்று விளங்கினார்கள். ஒரு போதும் இறைவன் ஒருவனே என்ற கொள்கை கற்றுத் தந்த நியதிகளுக்கு அப்பால் ஓவியம் தீட்டவில்லை. வர்ணம் பூசுவதில் முஸ்லிம்கள் கைதேர்ந்த கலைஞர்களாக வாழ்ந்தார்கள். ஆனால், அவர்கள் ஆபாசங்களை வர்ணங்களாக பூசித்தந்ததில்லை. முஸ்லிம்கள் சிற்பக்கலையில் சிறந்திருக்கிறார்கள். அதற்காக அவர்கள் சிலைகளை சிற்பங்கள் என செதுக்கியதில்லை. கலையழகும் கவின்மிகு உடையழகும் கொண்டு வாழ்ந்தார்கள் ஆனால், அனைத்திலும் அல்லாஹ்வின் வரன்முறைகளின் வழியே வாழ்ந்தார்கள். ஸ்பானியாவில் தயாரிக்கப்பட்ட அணிமணிகள், மட்பாண்டங்கள், உலோக வேலைப்பாடுகள், எகிப்தில் நெய்யப்பட்ட ஆடைகள், சிரியாவில் தயாரிக்கப்பட்ட பாத்திரங்கள், ஈரானில் வடிவமைக்கப்பட்ட ஆபரணங்கள் எல்லாம் வேலைப்பாடுகளால் வேறுபட்டாலும் கொள்கையால் ஒன்றுபட்டு நின்றதை அவதானிக்கலாம்.

- எனவேதான், வரலாற்றின் இடைக்காலத்தில் முஸ்லிம்கள் மட்டுமே நாகரிகத்தின் நாயகராகத் திகழ்ந்தார்கள் என்று (Sideo) சைடியோ என்ற எழுத்தாளர் குறிப்பிடுகிறார்.

**தேர்ச்சி 2.0 : இஸ்லாமிய நாகரிகத்தின் மூலாதாரம் வஹி என்பதை அறிந்து அதன் வகைகளையும் அவை தொகுக்கப்பட்ட வரலாற்றையும் விபரிப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 2.1 : வஹியின் முக்கியத்துவத்தையும் அதன் சிறப்பம்சங்களையும் விபரிப்பார்.**

**பாடவேளை : 20**

**கற்றல் பேறுகள் :**

- வஹியின் சிறப்பம்சங்களை முன்வைப்பார்.
- வஹியின் அவசியத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் உணர்ந்து அதன் அடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்வதே வெற்றிக்கான வழி என்பதை நியாயிப்பார்.
- இஸ்லாமிய நாகரிகத்தை உருவாக்குவதிலும் வளர்ப்பதிலும் வஹியின் பங்களிப்பை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

- மனிதன் தனது அறிவைப் பயன்படுத்தி வாழ்விற்கான அடிப்படைகளையும் கோட்பாடுகளையும் வகுத்துக் கொள்கிறான்: அதற்காக புலனுணர்வு, பகுத்தறிவு, தத்துவம் முதலியவற்றை அடிப்படையாகக் கொள்கிறான்.
- ஆனால் வஹியின் அடிப்படையில் நபிமார்களால் முன்வைக்கப்பட்ட வாழ்வு பற்றிய கோட்பாடு மனிதனது புலனுணர்வு, பகுத்தறிவு, தத்துவஞானம் என்பவற்றால் அறியமுடியாத விடயங்களையும் தெளிவுபடுத்துகிறது.
- புலன்களின் துணைகொண்டு பெறப்படும் அனுபவமே அறிவு என்ற தத்துவக் கோட்பாடு புராதன கிரேக்க நாகரிக வரலாற்றுக் காலத்திலிருந்தே இருந்து வந்துள்ளது. அவ்வாறே இதன் பரிணாமங்கள் பல்வேறு காலப்பகுதியிலும் பல வடிவங்களில் வெளிவந்துள்ளதனை வரலாறு பதிந்துள்ளது. இக்கோட்பாட்டை உடையோர் வஹியை மறுக்கின்றனர்.
- புலனுணர்வுதான் அறிவின் அடிப்படை என்று கூறுவோரின் வாதம் பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது. ''மறுமையில் நம்மைச் சந்திப்பதை எவர்கள் நம்பவில்லையோ அவர்கள், 'எங்கள் மீது மலக்குகள் இறக்கப்பட வேண்டாமா, அல்லது எங்களுடைய கண்களால் நாங்கள் எங்கள் இறைவனைப் பார்க்க வேண்டாமா' என்று கூறுகின்றனர். இவர்கள் தங்களை மிகமிகப் பெரிதாக எண்ணிக்கொண்டு அளவு கடந்து சென்றுவிட்டனர்'' (அல்புர்கான் : 21)
- வஹியின் இலக்கும் அதன் வழிகாட்டலும் என்றும் ஒரே அடிப்படையிலே அமைந்திருந்தன. அனைத்து இறைதூதர்களும் போதித்த தீன் ஒன்றாகவே இருந்தது. அது என்றும் மாறாதது. அவர்கள் போதித்த ஷரீஆ - சட்டங்கள் காலத்தின் தேவைக்கேற்ப வஹியின் வழிகாட்டலில் அமைந்திருந்தன.
- புலனறிவு, ஐம்புலன்களின் கட்டுப்பாட்டுக்குட்பட்டவை. அது குறைபாடுடையது என்று காணப்பட்டபோது அனுபவங்களினூடாகப் பெறப்பட்ட பகுத்தறிவைப் பிரயோகிக்க

முற்பட்டனர். பகுத்தறிவும் குறைபாடுடையதே. ஏனெனில் இவ்வறிவுகள் படைப்புக்களை நோக்கியதே தவிர படைப்பினங்கள் உருவாக்கப்பட்டதன் நோக்கத்தை அறியாதவை. வஹி என்பது படைப்பினங்களின் இயற்கைத் தன்மையுடன் அவை படைக்கப்பட்டதன் நோக்கத்தையும் அறிந்த படைப்பாளனிடமிருந்து வழங்கப்படுவதால் அது புலனறிவையும், பகுத்தறிவையும் விட மேலோங்கி நிற்கின்றது.

- நாம் எங்கிருந்து வந்தோம், ஏன் வந்தோம், எங்கு செல்லப் போகிறோம், எமது முடிவு என்ன போன்ற அடிப்படை வினாக்களுக்குப் புலனறிவாலோ, பகுத்தறிவாலோ விடை கூற முடியாது. இதனை அல்குர்ஆன் பின்வருமாறு தெளிவுபடுத்துகின்றது. ''இதைப்பற்றி அவர்களுக்கு யாதொரு ஞானமும் கிடையாது. வீண் கற்பனையைத் தவிர (வேறு எதையும்) அவர்கள் பின்பற்றுவதில்லை. (வீண்) கற்பனை உண்மைக்கு முரணான எதனையும் உறுதிப் படுத்தாது'' (அந் நஜ்ம் : 28)

  மனித வாழ்வுக்கான இலட்சியத்தையும் குறிக்கோளையும் வகுத்துக் கொடுக்கும் தகைமை மனித அறிவுக்கு இல்லை. அது வஹிக்கு மாத்திரமே உண்டு என்பது அல்குர்ஆனின் கருத்தாகும்.

- வஹி, அறிவின் மூலாதாரங்களுள் மிக உயர்ந்த படித்தரத்தில் உள்ளதாகும். அதனூடாக மனிதன் தனது புலனறிவு, பகுத்தறிவு என்பவற்றைப் பயன்படுத்தி பிரபஞ்சத்தையும் அதன் படைப்பினங்களையும் ஆராய்ந்து இறைவனின் பேராற்றலை உணர்ந்து அதற்கமைய தனது வாழ்விற்கான இலக்குகளை அமைத்துக் கொள்ள வேண்டுமென அல்குர்ஆன் கூறுகிறது. ''வானங்களையும் பூமியையும், இவைகளுக்கு மத்தியிலுள்ளவைகளையும் விளையாட்டாக நாம் படைக்கவில்லை. தக்க காரணத்திற்காகவே அன்றி இவைகளை நாம் படைக்கவில்லை. எனினும் அவர்கள் பெரும் பாலானோர்(இதனை) அறிந்து கொள்வதில்லை.'' (துகான் : 38-39) மேலும் - (இப்றாஹீம் : 32,33, ஆல இம்ரான் : 191)

- இவ்வுலகில் மனிதன் பிறக்கும் போதே அவனது உலகியல் தேவைகள் அனைத்தும் சிறந்த முறையில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன என்பதை அல்குர்ஆன் குறிப்பிடுகிறது.

  ''அவனே உங்களுக்குப் பூமியை வசிக்குமிடமாகவும், வானத்தை ஒரு விதானமாகவும் அமைத்து, மேகத்திலிருந்து மழையைப் பொழிவித்து அதனைக் கொண்டு உங்களுக்கு உணவாகக்கூடிய கனி வர்க்கங்களையும் வெளிப்படுத்துகின்றான்.'' (அல் பகரா : 22) மேலும் (அல் அன்ஆம் : 95, அல் வாகிஆ : 63-72, அந்நஹ்ல் : 66)

- மனிதனுக்கான ஆன்மிக, ஒழுக்க அறநெறிக் கோட்பாட்டை மனித அறிவால் வகுத்துக்கொள்ள முடியாது. வஹியின் மூலமே அது சாத்தியமாகும். மனித வாழ்வினதும், பிரபஞ்சத்தினதும் இலட்சியத்தையும், இரகசியங்களையும் அறியாத மனிதனால் மனித வாழ்வுக்கான வழிகாட்டலை எப்படி வழங்க முடியும்.?

- வஹியின் அவசியத்தை உணர்ந்து அதனை ஏற்று நடந்த சமூகங்கள் உயர்ந்த நாகரிகத்தைப் பெற்று வெற்றியடைந்ததற்கும், அதனை நிராகரித்த சமூகங்கள் இழிவடைந்து, தோல்வி அடைந்ததற்கும் அல்குர்ஆனும், வரலாறும் ஆதாரமாக அமைகின்றன.

- இஸ்லாமிய நாகரிகம் முழுமையாக வஹியின் அடிப்படையில் எழுந்ததாகும். அதனால்தான் அது நீண்டகாலம் நிலைத்து நிற்பதுடன் ஏனைய நாகரிங்களினால் நிலைநாட்ட முடியாமல் போன நீதியையும், சமத்துவத்தையும் உயர்ந்த ஒழுக்கப் பண்பாட்டினையும், அறிவியல் சாதனைகளையும் மனித சமூகத்திற்கு வழங்கிக் கொண்டு இருக்கின்றது.

**தேர்ச்சி 2.0 : இஸ்லாமிய நாகரிகத்தின் மூலாதாரம் வஹி என்பதை அறிந்து அதன் வகைகளையும் அவை தொகுக்கப்பட்ட வரலாற்றையும் விபரிப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 2.2 : அல்குர்ஆன் அருளப்பட்ட முறையையும் தொகுக்கப்பட்ட வரலாற்றையும் விளக்குவார்.**

**பாடவேளைகள் : 20**

**கற்றல் பேறுகள்:**

- அல்குர்ஆன் இஸ்லாமிய நாகரிகத்தின் அடிப்படை மூலாதாரம் என்பதை விளங்கிக் கூறுவார்.
- அல்குர்ஆன் அருளப்பட்டு தொகுக்கப்பட்ட முறையைக் கட்டம் கட்டமாக விபரிப்பார்.
- ரஸ்முல் உஸ்மானியின் முக்கியத்துவத்தை அறிவதோடு இன்று வரை அல்குர்ஆன் பாதுகாக்கப்பட்டு வரும் ஒழுங்கை எடுத்துக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**அல்குர்ஆன் அறிமுகம்.**

- மனித வாழ்வுக்கான பரிபூரண வழிகாட்டலான அல்குர்ஆன் அல்லாஹ்வின் **கலாமாகும்**. இது மனித வாழ்வை வளப்படுத்தி இஸ்லாமிய நாகரிகத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்குமான அடிப்படையை வழங்கியது. நபி (ஸல்) அவர்களின் மக்கா மதீனா வாழ்க்கைப் பகுதியில் (23 வருடங்கள்) படிப்படியாக நாகரிகத்தை கட்டியெழுப்புவதற்கான வழிகாட்டல்களை வழங்கிக் கொண்டிருந்தது. அந்த வழிகாட்டலின் அடிப்படையிலேயே இஸ்லாமிய நாகரிகம் முழுமை பெறுவதற்கான சாதனங்கள் வகுக்கப்பட்டன.
- இஸ்லாமிய நாகரிகத்திற்கான அடிப்படைகளை வழங்கிய அல்குர்ஆன் அது அருளப்பட்டது முதல் இன்றுவரை தூய வடிவில் முழுமையாகப் பாதுகாக்கப்பட்டுவருகிறது.

  ‘‘அவர்கள் இந்தக் குர்ஆனை சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? இது அல்லாஹ் அல்லாதவர்களிடமிருந்து வந்திருந்தால் இதில் அதிகமான முரண்பாடுகளைக் கண்டிருப்பார்கள்’’ (4: 82)
- அல்குர்ஆன் தூய அரபு மொழியில் மிக உயர்ந்த இலக்கிய தரமுடைய நூல். இந்த இலக்கிய தரத்திற்கு மிகையாகவோ, நிகராகவோ எந்த நூலும் இல்லை.
- அல்குர்ஆன் உயர் இலக்கிய தரம் வாய்ந்ததாக இருந்தாலும் அது படித்தவர்களை மட்டும் மையமாகக் கொண்டமையவில்லை. சாதாரண மக்களாலும் விளங்கக் கூடிய எளிய நடையையும், இனிய ஓசை நயத்தையும் கொண்டமைந்துள்ளது.
- அல்குர்ஆன் பதின்னான்கு நூற்றாண்டுகளுக்கு முற்பட்டதொரு காலத்தில் இறங்கிய போதும் அது முன்வைத்த கருத்துக்கள் காலத்தை வென்றதாகக் காணப்படுகிறது. இது முக்காலமும் அறிந்த ஒருவனால் மாத்திரமே சாத்தியப்பட முடியும். அது உலகம் உள்ளளவும் மனிதனுக்கு வழிகாட்டும் நூலாகவும் இருக்கிறது.

- இது மனித வாழ்வை மையமாகக் கொண்டது. மனித வாழ்வை நெறிப்படுத்துவதற்கான தெய்வீகப் பார்வை கொண்டது. அது மனித வாழ்வில் நிம்மதியை, முன்னேற்றத்தை, சிறந்த நாகரிகத்தை ஏற்படுத்துவதுடன் மறுமையில் சுவன வாழ்வுக்கு வழிகாட்டுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இதனால் இது மனித வாழ்வில் மகத்தான புரட்சிகளையும் ஏற்படுத்தக்கூடியது.
- அல்குர்ஆனை ஓதுவதும், அதனை விளங்குவதும், அதன்படி எமது வாழ்வை அமைத்துக் கொள்வதும், அதன் வழிகாட்டலை நோக்கி மக்களை அழைப்பதும் அல்குர்ஆன் மீதான முஸ்லிம்களின் கடமையாகும்.

**02. அல்குர்ஆன் அருளப்படல் :**

- அல்குர்ஆன் அல்லாஹ்வின் கலாமாகும். அது மனித ஆக்கமன்று. லவ்ஹுல் மஹ்பூளில் பாதுகாக்கப்பட்டு வந்த அது, ஒரு ரமழான் மாதத்தில் பைதுல் இஸ்ஸாவுக்கு முழுமையாக இறக்கப்பட்டது. பின்னர் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு அவரது நாற்பதாவது வயதில் ஹிராக் குகையில் வைத்து சூரா அலக்கின் முதல் ஐந்து வசனங்களும் முதன் முதலாக அருளப்பட்டன. அதன்பின்னர் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப இறக்கி அருளப்பட்டன. முஹம்மத் (ஸல்) அவர்களின் வபாத்துக்கு சிறிது காலத்திற்கு முன்னர் அல்குர்ஆன் அருளப்படல் முற்றுப் பெற்றது.

**அருளப்பட்ட முறை :**

- அல்குர்ஆன் ஒரே தடவையில் அருளப்படவில்லை. அது தேவைக்கும், சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கும் ஏற்ப தனி வசனமாகவும், சொற்றொடராகவும், பல வசனங்களாகவும் அருளப்பட்டது. சில சந்தரப்பங்களில் சில ஸூறாக்கள் முழுமையாகவும் அருளப்பட்டுள்ளன. மற்றும் சில சந்தர்ப்பங்களில் சில ஸூறாக்களின் ஆரம்பப் பகுதி ஒரு சந்தர்ப்பத்திலும் ஏனைய பகுதிகள் பிறிதொரு சந்தர்ப்பத்திலும் அருளப்பட்டுள்ளன.
- தனி வசனம் அருளப்பட்டமைக்கு எடுத்துக் காட்டாக ஸூறா அந்நிஸாவின் 95ஆம் வசனத்தைக் குறிப்பிடலாம். ஒரு சொற்றொடர் மாத்திரம் தனியாக அருளப்பட்டதற்கு உதாரணமும் இதே வசனத்தில் காணப்படுகிறது. ''இறை நம்பிக்கையாளர்களில் எவர்கள் ஜிஹாதில் கலந்து கொள்ளாமல் தங்கிவிடுகிறார்களோ அவர்களும், எவர்கள் தங்கள் உயிராலும் பொருளாலும் அல்லாஹ்வின் வழியில் ஜிஹாத் செய்கிறார்களோ அவர்களும் சம அந்தஸ்துடையவர்களாக மாட்டார்கள்'' (அந்நிஸா : 95) என்ற வசனம் அருளப்பட்ட போது, அப்துல்லாஹ் இப்னு உம்மி மக்தூம் (ரழி) தனது இயலாமையை நபியவர்களிடம் எடுத்துச் சொன்ன போது, அதற்குப் பதிலாக மேற்கூறிய ஆயத்தில் இடம் பெற்றுள்ள ''கைரு உலில்ழறர்'' (நியாயமான காரணம் எதுவுமின்றி) என்ற சொற்றொடர் அருளப்பட்டமையைக் குறிப்பிடலாம்.
- தொடர்ச்சியாக பல வசனங்கள் அருளப்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. அதற்கு உதாரணமாக, அன்னை ஆயிஷா(ரழி) அவர்கள் மீது புனைந்துரைக்கப்பட்ட பழிச்சொல்லை மறுத்துரைக்கும் ஸூறா அந்நூரின் பத்து வசனங்களைக் குறிப்பிடலாம்.
- சில ஸூறாக்களின் ஆரம்பப் பகுதி ஒரு சந்தரப்பத்திலும் அதன் ஏனைய பகுதிகள் வேறொரு சந்தர்ப்பத்திலும் அருளப்பட்டுள்ளன. ஸூறா அலகின் முதல் ஐந்து

வசனங்கள் ஒரு தடவையும் அதனைத் தொடர்ந்து வரும் பகுதிகள் வேறு ஒரு சந்தர்ப்பத்திலும் அருளப்பட்டன.

- ஒரே சந்தரப்பத்தில் முழுமையாக அருளப்பட்ட ஸூறாக்களுக்கு உதாரணமாக சூரதுல் அஸ்ர், சூரதுல் கௌஸர், சூரதுந் நஸ்ர், ஸூறா அன்ஆம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**அல்குர்ஆன் ஒரே தடவையில் முழுமையாக அருளப்படாமைக்கான காரணங்கள்:**

- அல்குர்ஆன் ஒரே தடவையில் முழுமையாக அருளப்படாமல் சிறிது சிறிதாக பல்வேறு சந்தர்ப்பங்களில் அருளப்பட்டதன் நோக்கத்தை அன்றைய காபிர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. முன்னைய வேதங்கள் போலன்றி அல்குர்ஆன் பகுதிபகுதியாக அருளப்பட்டு வந்ததால் அதனை அவர்கள் இறைவாக்காக ஏற்க முடியாதென மறுத்துரைத்தனர். நபி (ஸல்) அவர்கள் புனைந்துரைத்த கட்டுக்கதை என வாதித்தனர். ''அன்றி, இது முன்னோர்களின் கட்டுக்கதை, (இவ்வாறு) இது காலையிலும் மாலையிலும் இவருக்கு ஓதிக் காண்பிக்கப்படுகிறது. இதனை இவர் (மற்றொருவரின் உதவியைக் கொண்டு) எழுதிக் கொள்கிறார்.'' (அல்புர்கான்: 05)
- அல்குர்ஆன் பகுதிபகுதியாக அருளப்பட்டமைக்கான காரணங்களை அல்லாஹ் பல்வேறு சந்தர்ப்பங்களில் தெளிவுபடுத்துகின்றான். ''நபியே, உம்மை நிராகரிக்கும் இவர்கள், இந்தக் குர்ஆன் முழுவதும் அவர்மீது ஒரே தடவையில் இறக்கப்பட்டிருக்க வேண்டாமா என்று கேட்கின்றனர். இவ்வாறு நாம் கொஞ்சம் கொஞ்சமாக இறக்கியதெல்லாம் உம் இதயத்தைத் திடப்படுத்துவதற்காகவே'' (அல்புர்கான்: 32)
- நபி (ஸல்) அவர்களின் த.ஃவாப்பணி இலகுவானதாக அமையவில்லை. மாறாக வெகு கடினமானதாகவும் பல்வேறு துன்பங்களை எதிர் கொள்வதாகவும் இருந்தது. இவ்வாறு கஷ்டங்களை எதிர் நோக்கும் போது நபியவர்கள் மனம் தளர்ந்து விடாது, தனது பணியிலே உறுதியாக இருந்து செயற்படவேண்டியிருந்தது. அல்குர்ஆன் முழுமையாக இறக்கப்பட்டு இறைவனுக்கும் இறைதூதருக்கும் இடையிலான தொடர்பு துண்டிக்கப்படாமல், அல்லாஹ்வுடனான வஹி மூலமான தொடர்பு நபியவர்களுக்கு மன உறுதியை வழங்கக் கூடியதாக இருந்தது. தனக்கு ஆறுதல் தேவைப்படும் போதெல்லாம் நபியவர்கள் இறைவாக்கின் வருகையை எதிர்பார்ப்பவராக இருந்தார்கள்.
- அல்குர்ஆனின் புதுப்புதுக் கருத்துக்கள், உள்ளத்தை ஆட்கொள்ளும் அதிசய மொழிநடை, வானவத் தலைவரான ஜிப்ரீல் (அலை) அவர்களின் நேரடிச் சந்திப்பு முதலியன, நபியவர்களுக்கு தான் தனித்து விடப்பட்டவர் அல்லர், தான் இறைவனின் கண்காணிப்பிலும், ஆதரவிலும், அரவணைப்பிலும், பாதுகாப்பிலும் இருக்கின்றவர் என்ற மன உணர்வை புதுப்பிக்கவும் தனது பணியில் உறுதியான உள்ளத்தோடு ஈடுபடவும் காரணமாய் அமைந்தன.
- நபி (ஸல்) அவர்கள், த.ஃவாப் பணியின் போது எதிர் நோக்கிய இன்னல்களால் விரக்தியடையாதிருப்பதற்காக, முன்னைய நபிமார்களின் வரலாறுகள் கூறப்பட்டு த.ஃவாப் பாதையின் இயல்பான தன்மை விளக்கப்பட்டது. இதன் மூலம் எத்தனை சோதனை நேர்ந்தாலும், இறுதியில் உண்மையே வெற்றி பெறும் பொய் அழிவையே எதிர் நோக்கும் என்பது உணர்த்தப்பட்டது. இதனால் நபிகளாரின் உள்ளம் உறுதி பெற்றது.

- அவ்வப்போது குறைஷிக் காபிர்களை எச்சரித்துக் கொண்டிருக்கும் வகையில் அல்குர்ஆன் வசனங்கள் இறங்கின. இறைவனின் அத்தாட்சிகளைப் பொய்ப்பித்தோர் அடைந்த பயங்கர விளைவுகளை எடுத்துக்காட்டி அவை எச்சரிக்கை செய்தன.
- ''நபியே, இவ்வூரார் தங்கள் (வீடுகளில்) இரவில் நித்திரை செய்து கொண்டிருக்கும் போதே நம்முடைய வேதனைகள் அவர்களை வந்தடையாதென்று அச்சமற்றிருக்கின்றனரா? அல்லாஹ்வின் பிடியிலிருந்து அவர்கள் அச்சமற்று விட்டனரா? முற்றிலும் நஷ்டமடையக்கூடிய மக்களை தவிர எவரும் அல்லாஹ்வின் பிடிக்கு அச்சமற்றிரார்?'' (அல் அ.்.ராப் : 97-99) மேலும் (அல் கமர் : 43- 47) (அல் அன்ஆம் : 33-34)
- அல்குர்ஆன் சிறிது சிறிதாக இறங்கியமைக்கான இன்னொரு காரணம், அவற்றை மனனமிட்டுப் பாதுகாப்பதும், அதன் அடிப்படையில் செயலாற்றி அதன் கோட்பாடுகளுக்குச் செயல் வடிவம் கொடுப்பதுமாகும். பிரச்சினைகள் சோதனைகள் மிகுந்த கால கட்டத்தில் அல்குர்ஆன் முழுமையாக அருள்பட்டிருந்தால் அதனை மனனமிட்டுச் செயல்படுத்துவதும் கூட பிரச்சினையாக அமைந்திருக்கக் கூடும். மேலும், அல்குர்ஆனை மனனமிடுவது என்பது வெறுமனே அதனை உதட்டளவில் உச்சரிப்பதல்ல. அதனை விளங்கி, ஆராய்ந்து அதன் வழியில் செயல்படுவதாகும். கொஞ்சம் கொஞ்சமாக அல்குர்ஆன் இறங்கியமையினாலேயே இது சாத்தியமானது. அல்குர்ஆன் ஒரு வாழ்க்கை நெறி என்பதும் இதன் மூலம் உறுதிப்பட்டது.
- ''எங்களில் ஒவ்வொருவரும் அல்குர்ஆனின் பத்து வசனங்களைப் படித்து, அவற்றின் கருத்தை விளங்கி, அதன் வழியில் நின்று செயலாற்றிய பின்னரே அடுத்த வசனங்களைப் படிக்க முற்படுவர்'' என்று அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.
- அல்குர்ஆனின் தேவை ஒரு புதிய சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதாகவே இருந்தது. அந்தச் சமுதாயத்தின் நம்பிக்கைக் கோட்பாடுகள், சமுதாய மாண்புகள், சமூக உறவுகள் போன்ற பல்வேறு விடயங்களைக் கால வளர்ச்சி, சந்தர்ப்ப சூழ்நிலை, சமூகத்தின் தேவை என்பவற்றிற்கேற்ப அருளப்படுவதே பொருத்தமானதாகும். அல்குர்ஆன் ஒரே தடவையில் அதன் மொத்த உருவில் அருளப்படாமல் படிப்படியாக அருளப்பட இதனையும் ஒரு காரணமாகக் கொள்ளலாம்.
- இதனால் நபியவர்கள் அல்குர்ஆனின் போதனைகளை மக்களுக்கு ஓதிக் காண்பித்து, அவர்களது உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்தி, விடயங்களைத தெளிவுபடுத்தினார்கள்.

  ''நாம் இந்த அல்குர்ஆனை எதற்காக கொஞ்சம் கொஞ்சமாக இறக்கினோமெனில் நீர் இதை மக்களுக்கு நிறுத்தி நிறுத்தி ஓதிக் காட்ட வேண்டும் என்பதற்காகத்தான்''(பனூ இஸ்ராயீல் : 107)
- இதன் போது நபியவர்களிடம் பல்வேறு வினாக்களைச் சஹாபாக்களும், காபிர்களும் வினவினார்கள். அவற்றுக்குப் பொருத்தமானவாறு, உரிய சந்தர்ப்பத்தில் விடையளித்து மார்க்கத்தின் உயிரோட்டத்தைக் காத்துச் செல்வதற்கும் அவ்வப்போது அல்குர்ஆனின் வசனங்கள் அருளப்பட வேண்டியிருந்தன. உதாரணமாக, மர்தத் அல் கனவி (ரழி) இணைவைக்கும் பெண்ணை மணப்பது சம்பந்தமாக நபிகளாரிடம் தெளிவை வேண்டிய போது, அது தடுக்கப்பட்டது என்பதை விளக்கும் சூரதுல் பகராவின் 221 ஆம் வசனம் இறக்கப்பட்டது.

- அல்குர்ஆனின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு அது படிப்படியாக இறக்கப்படுவதே அல்லாஹ்வின் திட்டமாகவும் இருந்தது.
- அல்குர்ஆனை யாரும் மிகைக்க முடியாது என்பதையும் அது அல்லாஹ்விடமிருந்து அருளப்படுகின்ற அற்புத வேதம் என்பதையும் அதை நிராகரிப்போருக்கு உடனுக்குடன் நிரூபிப்பதற்காகவும் அல்குர்ஆன் பகுதிபகுதியாக இறங்கியது. ''உம்மிடம் அவர்கள் எந்த உதாரணத்தைக் கொண்டு வந்தாலும் (அதைவிட) உண்மையானதையும் மிக அழகிய விளக்கத்தையுடையதை நாம் உம்மிடம் கொண்டு வந்து விடுவோம்.'' (25:33)

  ''இணை வைப்பவர்கள் புதிய பாணியில் ஏதாவதொன்றைக் கேட்டுவிட்டால் அல்லாஹ்வும் புதிய பாணியில் அதற்கு பதிலை வழங்கிவிடுவான்'' (அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ், நூல் : இப்னு அபீஹாதிம்)

**அல்குர்ஆனின் தொகுப்பும் பாதுகாப்பும்**

- பகுதி பகுதியாக, கால சூழலுக்கு ஏற்ற விதத்தில் இறக்கப்பட்ட அல்குர்ஆனின் தொகுப்புப் பணி பல்வேறு காலகட்டங்களில் இடம் பெற்றது.
- நபி (ஸல்) அவர்களது காலத்தில் அல்குர்ஆன் வசனங்கள் இறக்கப்பட்டால் அதனை நபியவர்கள் மனனம் சொய்துகொள்வார்கள். அவ்வகையில் அல்லாஹ்விடமிருந்து நேரடியாக அல்குர்ஆனைப் பெற்றவர்கள் என்ற வகையில் அல்குர்ஆனை முழுமையாக மனனமிட்டவர்களாக நபிகளார் (ஸல்) அவர்கள் திகழ்ந்தார்கள்.
- அவர்களது மனனம், இறங்கிய முறையிலன்றி திலாவதுல் குர்ஆன் என்னும் ஓதப்படும் முறையில் அமைந்திருந்தது. இறக்கப்படுகின்ற எந்தவொரு வசனமும் சூராவில் எந்த வசனத்திற்கு முன்னால் அல்லது பின்னால் இடம் பெற வேண்டும் என்ற வகையில் நபிகளார் அறிவூட்டப்பட்டிருந்தார்கள்.
- அந்த அமைப்பிலேயே நபிகளாரைப் பின்பற்றி சஹாபாக்களும் மனனமிட்டனர். அவர்தம் பிள்ளைகளையும் மனனமிடத் தூண்டினார்கள். அவ்வகையில் நபிகளார் காலத்திலேயே அதிகமான சஹாபாக்கள் ஹாபிழ்களாகத் திகழ்ந்தார்கள். இவ்வாறான எழுவரை சஹீஹுல் புகாரி பெயர் குறித்துள்ளது.
- அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத், முஆத் இப்னு ஜபல், செய்த் பின் சாபித், உபை இப்னு க.்.ப், ஸாலிம் பின் ம.்.கல், அபூசைத், அபூதர்தா (ரழி) ஆகியோரே பெயர் குறிப்பிடப்பட்டவர்கள் ஆவர்.
- ஆனால், இவர்கள் தவிர இன்னும் அதிகமான சஹாபாக்கள் அல்குர்ஆனை மனனமிட்டிருந்தார்கள். யமாமா யுத்தத்தில் எழுபது சஹாபாக்கள் ஷஹீதாக்கப்பட்டார்கள் என்ற அறிவிப்பு இதனை உறுதிப்படுத்துகிறது. இவ்வாறு மனனம் செய்வதன் மூலம் அல்குர்ஆன் பாதுகாக்கப்பட்டுவந்தது.
- அல்குர்ஆனை தர்தீபுத் திலாவத் முறையில் ஓதுவதன் மூலம் அல்குர்ஆன் பாதுகாக்கப்பட்டது. தொழும் போது நபிகளாரும் சஹாபாக்களும் இவ்வாறு ஓதக் கூடியவர்களாக இருந்தனர். மேலும் இரவு நேரங்களில் அல்குர்ஆனை நீண்ட நேரம் ஓதும் வழக்கம் ஸஹாபாக்களிடம் காணப்பட்டது. நபி (ஸல்) அவர்கள் இதனை அடிக்கடி கூறியுள்ளார்கள். அபூ மூஸா அல் அஷ்அரி (ரழி) அவர்கள் இவ்வாறு புகழப்பட்டவரில் ஒருவர் ஆவார்.

- மேலும், நபிகளார் ஒவ்வொரு ரமழானிலும் அதுவரை அருளப்பட்டிருந்த அல்குர்ஆன் முழுவதையும் ஓதிக்காட்டுவார்கள். இறுதி ரமழானில் இரண்டு முறை இடம்பெற்ற இத்தகைய நிகழ்வில் சைத் பின் ஸாபித் (ரழி) அவர்களும் உடன் இருந்தமை விசேட அம்சமாகும்.

- இவ்வாறு ஓதல், மனனமிடல் என்பவற்றுக்கும் மேலாக, அல்குர்ஆன் வசனங்கள் எழுதப்பட்டும் வந்தன. அன்று எழுத்து முறை பெருவளர்ச்சி அடையாதிருந்தாலும் எழுதக் கூடிய சஹாபாக்கள் சுமார் இருபத்தாறு பேரளவில் இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. அவர்களுள் ஒரு குழுவினர் வஹியை எழுதும் குழுவினராக நியமிக்கப்பட்டு பணியாற்றி வந்தனர். சைத் பின் ஸாபித், அலி, முஆவியா, உபை இப்னு க.்.ப் போன்றோர் அதில் இடம் பெற்றிருந்தனர். அக்காலத்தில் புடவை, எலும்பு, தோல், பலகை,ஈச்சம் பட்டை, வெண்கற்கள் என்பவற்றில் அவை எழுதப்பட்டன. ''நூன், எழுதுகோலின் மீதும், அதனைக் கொண்டு எழுதியவைகள் மீதும் சத்தியமாக'' (கலம் : 01) ''அவன்தான் எழுதுகோலைக் கொண்டு கற்றுக் கொடுத்தான்'' (அலக் :04) முதலிய அல்குர்ஆன் ஆயத்துக்கள் அக்காலத்தில் எழுத்து முறை வழக்கத்திலிருந்ததை உறுதிப்படுத்தும் ஆதாரமாகக் காணப்படுகின்றன.

- நபி (ஸல்) அவரக்ளது இறுதிக் காலம் வரை இறங்கிக் கொண்டிருந்தமை, இறங்கும் முறையும் ஓதும் ஒழுங்குமுறையும் வேறுபட்டிருந்தமை, ஒரு வசனம் மற்றொரு வசனத்தை மாற்றும் நிலை காணப்பட்டமை போன்ற காரணங்களால் அல்குர்ஆன் முழுமையான ஒரே தொகுப்பு நூலாக எழுதப்பட்டிருக்கவில்லை. என்றாலும் முழுக் குர்ஆனும் ஓதும் முறையில் ஓர் ஒழுங்கமைப்பு முறையைப் பெற்றிருந்தது. இதனையே ஜிப்ரீல் (அலை) அவர்கள் ஓதிக் காண்பித்தார்கள்.

**அல்குர்ஆன் தொகுப்பின் இரண்டாம் கட்டம்.**

- நபி (ஸல்) அவர்களது வபாத்துக்குப் பின்னர் அபூபக்ர் (ரழி) அவர்களின் காலத்தில் அல்குர்ஆனை ஒரு நூலாகத் தொகுக்க வேண்டியதன் அவசியம் உணரப்பட்டது. இதனை உய்த்துணர்ந்தவர் உமர் (ரழி) அவர்களாவர். யமாமாப் போரில் எழுபதுக்கும் அதிகமான ஹாபிழ்கள் ஷஹீதானார்கள் என்ற விடயத்தை உமர் (ரழி) அல்குர்ஆனின் எதிர்கால பாதுகாப்பு என்ற அம்சத்தோடு தொடர்புபடுத்தி சிந்தித்தார்கள். அதனால், அல்குர்ஆன் பாதுகாக்கப்பட வேண்டுமானால் அது எழுத்துருவில் ஒரு கிதாபாக எழுதப்பட வேண்டும் என்று யோசித்து அபூபக்ர் (ரழி) அவர்களிடம் தனது கருத்தை முன்வைத்தார்கள்.

  கலீபா அபூபக்ர் (ரழி) அவர்கள் நபிகளார் செய்ய முனையாத பணி என்ற வகையில் ஆரம்பத்தில் மறுத்தாலும் பின்னர் சமூக நலன் என்ற வகையில் அதன் முக்கியத்துவத்தை ஏற்றுக் கொண்டு அல்குர்ஆனை ஒன்றுதிரட்டும் பணியில் இறங்கினார்கள்.

- அல்குர்ஆனை நூலுருவாக்கும் இப்பணிக்கு இளைஞரும், குத்தாபுல் வஹியின் தலைவரும், ஜிப்ரீல் (அலை) நபிகளாருக்கு அல்குர்ஆனை ஓதிக்காட்டும் போது அருகில் இருந்து தனது மனனத்தைச் சரிபார்த்துக் கொண்டவருமான ஸைத் பின் ஸாபித் (ரழி) நியமிக்கப்பட்டார்கள். அவர் ஒரு ஹாபிழாக இருந்ததுடன் கிராஅத், நாஸிக் - மன்சூக், ஸபபுன் நுஸுூல் முதலிய கலைகளில் தேர்ச்சி பெற்றவராகவும்

இருந்தார்கள். என்றாலும் இப்பணியின் கடினம் குறித்து அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்.

- ''என்னிடம் ஒரு மலையை ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு பெயர்க்கும் பணி ஒப்படைக்கப்பட்டிருந்தால் இப்பொறுப்பைவிட அதனை இலகுவாக ஏற்றுக் கொண்டிருப்பேன்''
- ஸைத் பின் ஸாபித் (ரழி) தமது தொகுப்புப் பணியை மிக ஆதாரபூர்வமானதாகச் செய்வதில் உறுதியாக இருந்தார்கள். எந்தவொரு குர்ஆன் வசனத்தையும் அதற்கான இரண்டு சாட்சிகள் இல்லாமல் ஏற்றுக் கொள்ளவில்லை. மனனமிடப்பட்டவை எழுதிவைக்கப்பட்டவற்றுடனும், எழுதி வைக்கப்பட்டவை மனனத்தோடும் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்ட பின்னரே ஏற்றுக் கொள்ளப்பட்டன. இதற்காக எழுத்துப் பிரதிகளை ஒன்று திரட்டும் பெரும் பணியில் இரவுபகலாக ஈடுபட்டார்கள். மேலும் மனனத்தை மட்டும் அடிப்படையாக வைத்து அல்குர்ஆனை தொகுக்கவில்லை. மனனத்தை எழுத்துருவில் கண்ட பின்பே ஏற்றுக் கொண்டார்கள். எடுத்துக்காட்டாக, சூரதுத் தவ்பாவின் கடைசி வசனங்கள் அபூ குசைமா (ரழி) இடமிருந்து பெறும் வரை அதனை மனனமிட்டவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளத் தயங்கி நின்றார்கள்.
- இவ்வாறு அவதானமாகவும், ஆதாரபூர்வமாகவும் தொகுக்கப்பட்ட முஸ்ஹப் அபூபக்ர் (ரழி) இடம் கையளிக்கப்பட்டது. பின்னர் அப்பிரதி உமர் (ரழி) இடமும் அவர்களுக்குப் பின் ஹப்ஸா(ரழி) இடமும் கையளிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டது.

### அல்குர்ஆன் தொகுப்பின் மூன்றாம் கட்டம்

- அல்குர்ஆன் தொகுப்பின் மூன்றாம் கட்டமாக, உஸ்மான் (ரழி) அவர்களுடைய காலத்தில் ஓதும் முறையில் ஒருமைப்பாட்டைப் பேணும் வகையில் அல்குர்ஆன் பிரதிகள் தயாரிக்கப்பட்டமை கொள்ளப்படுகிறது. இச் செயற்பாட்டிற்குக் காரணமாக அமைந்தவர் ஹுதைபதுல் யமானி(ரழி) அவர்களாவர்.
- உஸ்மான்(ரழி) காலத்தில் இஸ்லாம் எகிப்து, பாரசீகம், வட ஆபிரிக்கா, மத்திய ஆசியா வரை பரவியிருந்தது. இந்நிலையில் ஆங்காங்கே வாழ்ந்த முஸ்லிம்கள் அல்குர்ஆனை ஓதும் முறையில் ஒரே முறையைப் பின்பற்றவில்லை. பல பகுதிகளிலும் பல முறைகள் பின்பற்றப்பட்டன. உதாரணமாக : கூபாவாசிகள், இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்களின் முறையைப் பின்பற்றியும், பஸராவாசிகள் அபூமூஸா அஷ்அரி(ரழி) அவர்களைப் பின்பற்றியும், சிரியாவில் மிக்தாத் பின் அஸ்வத் (ரழி) அவர்களின் முறையைப் பின்பற்றியும் ஓதி வந்தனர்.
- இவ்வாறு அல்குர்ஆனை ஓதும் முறையில் சிரியாவாசிகளும், ஈராக் வாசிகளும் தாம் ஓதும் முறையே சரியானது என்று வாதிடும் அளவுக்கு வந்துவிட்ட நிலையை ஆர்மீனிய யுத்தத்தின் போது அவதானித்த ஹுதைபதுல் யமானி (ரழி) இவ்விடயத்தை உஸ்மான் (ரழி) அவர்களிடம் முன்வைத்தார்கள். இந்நிலை தொடர்ந்தால் யூதர்கள் போல முஸ்லிம்களும் கருத்துவேறுபாட்டால் பிளவுபட நேரிடும் என்று சுட்டிக்காட்டிய போது உஸ்மான் (ரழி) அவர்கள் அதற்கான நடவடிக்கையில் இறங்கினார்கள்.
- உச்சரிப்பில் ஒருமைப்பாட்டை தோற்றுவிக்கும் செயற்திட்டத்திற்காக ஒரு குழுவை நியமித்தார்கள். ஸைத் பின் ஸாபித், அப்துல்லாஹ் இப்னு சுபைர், ஸஈத் இப்னு ஆஸ், அப்துர் ரஹ்மான் அல் ஹாரிஸ் (ரழி) ஆகிய நால்வர் அக்குழுவில் இடம் பெற்றனர்.

- இவர்கள் ஹப்ஸா (ரழி) அவர்களிடம் பாதுகாக்கப்பட்டு வந்த முஸ்ஹபைத் தழுவி குறைஷிகளின் மொழிநடையில் ஏழு பிரதிகளைத் தயாரித்தார்கள். அவை கூபா, பஸரா, மக்கா, மதீனா, டமஸ்கஸ், எமன், பஹ்ரைன் ஆகிய பகுதிகளுக்கு அதனை ஓதிக்காட்டும் காரிகளுடன் அனுப்பி வைக்கப்பட்டன.
- உஸ்மான் (ரழி) மேற்கொண்ட இப் பணியை ஸஹாபாக்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டமை சிறப்பான அம்சமாகும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட பிரதி அபூபக்ர் (ரழி) காலத்தில் தொகுக்கப்பட்ட பிரதியிலிருந்து வேறுபடாது காணப்பட்டது. இதன் மூலம் அல்குர்ஆனை ஓதும் முறையில் சமூகத்தை ஒன்றிணைக்கும் முக்கியமான பணியை நிறைவேற்றியமையால் உஸ்மான் (ரழி) அவர்கள் ''ஜாமிஉல் குர்ஆன்'' என அழைக்கப்படலானார். ஹிஜ்ரி 25 இல் இடம்பெற்ற இப்பணியுடன் அல்குர்ஆனின் தொகுப்புப் பணி நிறைவடைகிறது.

**அல்குர்ஆனின் பாதுகாப்பு :**

- அல் குர்ஆன் அது அருளப்பட்ட அதே அமைப்பில் அணுவளவேனும் மாற்றமின்றி பதிநான்கு நூற்றாண்டுகளாக பாதுகாக்கப்பட்டு வருவது அதன் அற்புதத் தன்மைக்கு மகத்தான எடுத்துக்காட்டாகும். அல்குர்ஆனுக்குப் பிறகு எழுதப்பட்ட எத்தனையோ பெறுமதி வாய்ந்த நூல்கள் முற்றாக அழிந்து விட்டன. ஆனால், எந்த அனர்த்தங்களாலும் சூழ்ச்சிகளாலும் அல்குர்ஆனை அழிக்க முடியவில்லை. ஏன் ஓர் எழுத்தைக் கூட மாற்ற முடியவில்லை. உஸ்மான் (ரழி) அவர்களின் காலத்தில் எழுதப்பட்ட அல்குர்ஆனின் இரண்டு பிரதிகள் இன்றும் கூட பாதுகாக்கப்பட்டு வருகின்றமை சிறந்த எடுத்துக்காட்டாகும்.
- அல்குர்ஆன் இறங்கிய காலத்தில் அதைப் பெற்றுக் கொண்ட சமூகம் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்பட்டது. அவர்களுடைய எதிரிகளால் பல வகையான இன்னல்களுக்கும் இலக்காக்கப்பட்டுக் கொண்டே இருந்தது. மேலும், எழுத்தறிவு இல்லாத சமூகமாகவும், எழுதுவதற்கான உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு அரிதான காலமாகவும் காணப்பட்ட அன்று, அல் குர்ஆனைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டமை ஒரு வரலாற்றுச் சாதனையாகும்.
- ஆனால், அல் குர்ஆனாகிய இறுதி வேதத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை அல்லாஹ் மனிதர்களுக்கு விடாமல் தானே ஏற்றுக் கொண்டான். "நிச்சயமாக நாம் தான் இவ்வேதத்தை உம்மீது இறக்கி வைத்தோம். நிச்சயமாக நாமே அதன் பாதுகாவலர்களாவோம்" (அல் ஹிஜ்ர் : 09)
- அவ்வகையில் அல்குர்ஆனைப் பாதுகாப்பதில் அல்லாஹ்வின் பல திட்டங்களை நாம் அவதானிக்கலாம். அல்குர்ஆனைப் பெற்றுக் கொண்ட அரேபிய சமூகம் எழுத்தறிவில்லாத சமூகம்தான். ஆனால், மிகுந்த நினைவாற்றலுடைய சமூகமாக இருந்தது. இதன் காரணமாக, அல்குர்ஆனை அவர்களால் மனனம் செய்து பாதுகாக்க முடியுமாக இருந்தது. அல்குர்ஆன் சிறிது சிறிதாக இறக்கப்பட்டமையும், தொழுகையில் அதனை ஓத வேண்டும் என்ற ஏற்பாடும் அல்குர்ஆன் பாதுகாக்கப்பட மேற்கொள்ளப்பட்ட ஒரு முறையாக அமைந்ததெனலாம்.
- அவ்வகையில், அல்குர்ஆனை நேரடியாகப் பெற்றுக் கொண்ட நபிகளார் உள்ளத்தில் அதனைப் பதித்துப் பாதுகாக்கும் பொறுப்பை அல்லாஹ் ஏற்றான். ஆரம்பத்தில் அல்குர்ஆன் இறங்கிய போது அதனை மறந்துவிடுவேனோ என்ற அச்சத்தில் நபியவர்கள் வேகமாக நாவை அசைத்து ஓதி மனனமிடுவதற்கு முற்பட்டார்கள். நபிகளார் அவ்வாறு சிரமமெடுக்கத் தேவை இல்லை என அல்லாஹ் நபிகளாருக்கு

அறிவித்தான். ‘‘நபியே இதற்காக (குர்ஆனை மனனம் செயவதற்காக) அவசரப்பட்டு உமது நாவை அசைக்காதீர்கள். அதைத் திரட்டுவதும், ஓதச் செய்வதும் நம்மைச் சார்ந்தது.’’ (அல் கியாமா : 16-19) (மேலும் தாஹா : 114) அதன் பிறகு ஜிப்ரீல் (அலை) ஓதிக்காட்டும் வசனங்கள் எவ்வளவு அதிகமாக இருந்த போதும் அவை அண்ணலாரின் உள்ளத்திலே அப்படியே பதிவாகிவிடும்.

- அடுத்து, கல்விஞானமுடையவர்களின் உள்ளங்களிலும் அதனைப் பதித்துப் பாதுகாக்கும் ஏற்பாட்டைச் செய்தான். ‘‘மாறாக இவை தெளிவான வசனங்கள். கல்வி வழங்கப்பட்டோரின் உள்ளங்களில் இருக்கின்றன. அநீதி இழைத்தோரைத் தவிர வேறு எவரும் நமது வசனங்களை மறுக்கமாட்டார்கள்.’’ (அல் அன்கபூத் : 49) இன்று வரை பெருந்தொகையான மனித உள்ளங்களில் இந்த குர்ஆன் மனனம் செய்யப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.
- மேலும், அல்லாஹ் அல் குர்ஆனை மனனமிடுவதற்கு இலகுவான நூலாக ஆக்கி வைத்திருக்கிறான். இதனால் சிறியோர், பெரியோர், ஆண்கள், பெண்கள் என அனைவராலும் பகுதி அளவிலோ முழுமையாகவோ மனனமிடப்பட்டுப் பாதுகாக்கப்படுகிறது.
- அல்குர்ஆன் ஓதப்படுவதன் மூலமும் பாதுகாக்கப்படுகிறது. ஓதும் போது அது மனதுக்கு இனிமையானதாகவும், ஆறுதலாகவும் அமைந்துள்ளது. எத்தனை தடவை ஓதினாலும் தெவிட்டாத தன்மையும், பழமையடையாத புதுமையும் அல்குர்ஆனுக்கு உண்டு.
- அல்குர்ஆன் இன்றுவரை பாதுகாக்கப்பட்டு வருவதற்கு இன்னொரு காரணம், அது வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளமையாகும். மனித வாழ்க்கையின் எந்தவித பிரச்சினைக்கும் எக்காலத்திலும் தீர்வு சொல்லும் அதன் தனித்துவம் அது மனிதர்களிடமிருந்து தூரமாகவில்லை என்பதையும் நாளுக்கு நாள் அதன் தேவை அதிகரித்து வருகின்றது என்பதையும் உறுதிப்படுத்துகிறது.
- மேலும், அல்குர்ஆனின் அறிவியல் உண்மைகள் இன்றுவரை மாறாமல் இருப்பதுடன், அறிவியல் வளர்ச்சிக்கேற்ப அதன் கருத்துக்களும் புதுமை பெறுகின்ற தன்மை அல்குர்ஆன் பாதுகாக்கப்படுவதில் இன்னொரு அம்சமாகும்.
- அத்துடன் அல்குர்ஆன் கூறுகின்ற எதிர்வு கூறல்கள் இன்றுவரை நிறைவேறி வருகின்றமை அதன் ஜீவத்துடிப்புக்குக் காரணமாக விளங்குகிறது.
- அல்குர்ஆன் விடுக்கின்ற சவால்கள் இன்னும் முறியடிக்கப்படாமை அது காலம் கடந்த ஒன்றல்ல என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கிறது. இனியும் அது தொடரும்.
- இவ்வாறு அல்குர்ஆன் இன்று வரை பாதுகாக்கப்பட்டு வருவதற்கு முக்கிய காரணமாய் அமைவது அதன் தூய்மைத் தன்மையாகும். அதில் எந்தவித இடைச்செருகல்களோ, மனித கருத்துக்களோ இடம் பெறவில்லை. அதனால் இறைவாக்கிற்கே உரிய உயரிய அந்தஸ்துடன் உலகில் தலை நிமிர்ந்து நிற்கிறது.
- மேலும், அல்குர்ஆன் உலகில் குறித்த ஒரு இனத்திற்கானதாக அமையாமல் முழு மனித சமூகத்திற்குமான அழைப்பாக அமைந்துள்ளது. அதனால், மனிதர் வாழும் காலமெல்லாம் அல்குர்ஆனும் வாழும்.

**தேர்ச்சி 2.0 : இஸ்லாமிய நாகரிகத்தின் மூலாதாரம் வஹி என்பதை அறிந்து அதன் வகைகளையும் அவை தொகுக்கப்பட்ட வரலாற்றையும் விபரிப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 2.3 : இஸ்லாமிய நாகரிகத்தைக் கட்டியெழுப்பவதில் குர்ஆன் செல்வாக்குச் செலுத்திய விதத்தைத் தெளிவுபடுத்துவார்**

**பாடவேளைகள் : 40**

**கற்றல் பேறுகள் :**

- சட்டவாக்கத்தில் அல்குர்ஆனின் வழிகாட்டலைக் கற்று விளக்குவார்.
- சட்டவாக்கத்தில் அல்குர்ஆனின் அணுகுமுறைகளை விளங்கி எடுத்துரைப்பார்.
- சட்டவாக்கத்தில் அல்குர்ஆனின் பங்கினை உதாரணங்கள் மூலம் எடுத்துக் காட்டுவார்.
- அல்குர்ஆன் முன்வைக்கும் சட்டங்கள் எல்லாக் காலத்திற்கும் பொருத்தமானவை என்பதை ஆதாரங்களுடன் நிரூபித்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

- அல்குர்ஆன் ஒரு புதிய ஷரீஆவை முன்வைத்தது. அதன் மூலம் அதற்கு முன் காணப்பட்ட அனைத்து ஷரீஆக்களும் மாற்றப் பட்டுவிட்டன. அல்குர்ஆனின் சட்டங்கள் இறுதியான தன்மை பெற்றது. உலகம் உள்ளளவும் நிலைத்து நிற்கும் ஷரீஆவை அது முன்வைத்தது. அவ்வகையில், அல்குர்ஆன் இஸ்லாமிய ஷரீஆ சட்டத்தின் பிரதான மூலாதாரமாகவும், பிரதான சட்ட ஊற்றாகவும் திகழ்கிறது. இதன் மூலம் அதற்கு மாறான சகல மனித சட்டங்களும் நிராகரிக்கப்படுகின்றன. உண்மையில் மனிதர்களின் சட்டங்கள் குறையறிவுடைய மூளையில் உதித்தவையாகும். ஆனால், மனிதனைப் படைத்தவனும், அவனுக்குள்ளே பல இயல்புகளை உருவாக்கியவனும், அவ்வியல்புகளை புரிந்து வைத்திருப்பவனுமாகிய அல்லாஹ் தான் சட்டமியற்ற தகுதிபடைத்தவனாகின்றான். மேலும், உலகமும் உலகத்தில் உள்ளவையும் அவனுக்கே சொந்தமானவை. எனவே, அவற்றை எவ்வாறு பிரயோகிக்க வேண்டும் என்று கூறும் விடயத்திற்குத் தகுதிபடைத்தவனும் உரிமையாளனும் அவனேயாவான்.
- அல்லாஹ் அல்குர்ஆன் மூலம் உலகுக்கு அளித்துள்ள சட்டங்கள் உலகத்தின் வளவாழ்வை மாத்திரம் நோக்கமாகக் கொண்டதன்று. மாறாக, மறுமையையும் நோக்கமாகக் கொண்டது. மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்வு பற்றியும் இஸ்லாமிய ஷரீஆ கவனத்தில் கொண்டுள்ளது. ஏனைய சட்டங்களிலிருந்து இச்சட்டம் சிறப்புப் பெறுவது இதனாலேயாகும்.
- அல்குர்ஆனில் இடம் பெற்றுள்ள வசனங்களில் சுமார் ஐந்நூறு வசனங்கள் சட்ட வசனங்கள் என்றும் அவை ஷரீஆ துறையின் பல்வேறு விடயங்கள் பற்றிப் பேசுகின்றன என்றும் சட்டத்துறை வல்லுனர்கள் கூறுகின்றனர்.
- அல்குர்ஆனில் இடம் பெற்றுள்ள சில சட்டங்களை 'இபாரதுந்நஸ்' என்றும் 'இஷாரதுந்நஸ்' என்றும் 'இக்திலாவுன்நஸ்' என்றும் பிரித்து விளக்குவர். ''இபாரதுந்நஸ்'' என்பது தெளிவான சட்டம் எனப்படும். ''தாய் தந்தையரை நோக்கி 'சீ' என்றும் கூறாதே என்ற வசனம் தெளிவான சட்ட வசனமாகும். பெற்றோர்களுக்கு

எவ்வித அநியாயமும் செய்யக் கூடாது என்பது அதிலிருந்து பெறப்படும் முடிவாகும். இது இஷாரதுந்நஸ் என்றும் கூறப்படும். அதாவது இஷாரதுந்நஸ் என்பது தெளிவான சட்ட வசனத்திலிருந்து பெறப்படும் ஏனைய முடிவுகளைக் குறிக்கும்.

- அவ்வாறே இபாரதுந்நஸ்ஸிலிருந்து பெறப்படும் மறைமுக கோரிக்கைகள் இக்திலாஉந்நஸ் எனப்படும். உதாரணமாக தொழுகையை நிலைநிறுத்துமாறு அல்குர்ஆன் கூறுகிறது. தொழுகைக்குத் தேவையான சுத்தம் முதலிய அம்சங்கள் அதன் மறைமுக கோரிக்கைகளாகும். இது ''இக்திலாஉந்நஸ்'' எனப்படும்.
- சட்டவாக்கத்தின் போது அல்குர்ஆன் சில படிமுறைகள் கூடிய அணுகுமுறைகளையும் கையாண்டுள்ளது. நோயொன்றினை அகற்றுவதற்கு படிப்படியாகவே சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். அவ்வமைப்பில் அறியாமை எனும் நோயில் உழன்று கொண்டிருந்த மக்களைப் படிப்படியாக தனது அணுகுமுறையினூடாக ஒளிக்குக் கொண்டு வரும் விதமாக அல்குர்ஆன் தனது சட்டங்களை முன்வைத்தது.
- மக்கா காலப்பகுதியில் ஏகத்துவம், சுவர்க்கம், நரகம், மறுமை பற்றிய விடயங்களுக்கு முன்னுரிமையளித்தது. அவற்றுடன் சுருக்கமானதும், எளிமையானதுமான சட்டங்களை அக்காலப் பகுதியுள் இறக்கியது. சூரா அல்புர்கான், அல் அன்ஆம், அல் இஸ்ரா, அல் முஃமினூன் முதலிய மக்கி சூராக்களில் இதனை அவதானிக்கலாம். மேலும் மக்கா காலப்பகுதியில் வட்டி தடை செய்யப்பட்டமை, அளவை நிறுவைகளில் மோசடி செய்தல் கூடாது போன்ற சமூகவியல் சட்டங்களுடன் தொழுகை, ஸகாத், ஹஜ் தொடர்பான சில சட்டங்களும் காணப்படுகின்றன.
- அடுத்து அல்குர்ஆன் தனிமனித, குடும்ப, சமூக உறவுகள், அரசியல், பொருளியல், வாரிசுரிமை, யுத்தங்கள், தண்டனை என தனது சட்டங்களை மதனி வசனங்களில் விரிவாகக் கூறியுள்ளதை அவதானிக்கலாம். இந்தப்படிமுறை வளர்ச்சியின் சிறப்பம்சம் குறித்து அன்னை ஆயிஷா (ரழி) கூறிய விடயம் புகாரியில் இடம்பெற்றுள்ளது. "அல்குர்ஆனிலே முதலாவது அருளப்பட்டது சுவர்க்கம் - நரகம் பற்றிய விளக்கம். மக்கள் இஸ்லாத்தின் பக்கம் திரும்பிய போது ஹலால்-ஹராம் போதனைகள் இறங்கின. மாறாக, முதல் வசனம், "நீங்கள் மது அருந்த வேண்டாம்" என்று கூறியிருந்தால், "நாங்கள் ஒரு போதும் மதுவை விடவே மாட்டோம்" என்றே மக்கள் கூறியிருப்பர். அவ்வாறே முதன் முதலாக "நீங்கள் விபசாரம் செய்ய வேண்டாம்" எனக் கூறியிருப்பின், "நாங்கள் ஒருபோதும் விபசாரத்தை விடமாட்டோம்" என்றே கூறியிருப்பார்கள்.
- அல்குர்ஆன் முன்வைக்கின்ற சட்ட ஒழுங்கினை உற்று நோக்கினால் சில விடயங்களை சுருக்கமாகவும் வேறு விடயங்கள் விரிவாகவும் கூறப்பட்டுள்ளதைக் காணலாம். நம்பிக்கைக் கோட்பாடுகள், திருமணம், வாரிசுரிமை போன்றன பற்றிய சட்டங்கள் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. ஆனால் தொழுகை, ஸகாத், நோன்பு, ஹஜ் போன்ற வணக்க முறைகள் பற்றி சுருக்கமாகவே பேசப்பட்டுள்ளன.
- சட்டமியற்றலில் மாறா சட்டங்களையும் காலத்திற்கேற்ப மாறும் சட்டங்களையும் கவனத்திற் கொண்டுள்ளமை அல்குர்ஆனின் சிறப்பம்சமாகும். நம்பிக்கைக் கோட்பாடுகள், வணக்க வழிபாடுகள், சில தண்டனைகள் போன்றவற்றில் இறுதியான முடிவினைக் கூறுகிறது. வியாபார விடயங்கள், அரசியல் வழிமுறைகள், நீதி வழங்கும் முறை, போன்றவற்றில் அடிப்படை விதிகளை மாத்திரமே முன்வைத்துள்ளது. உதாரணமாக : "நீங்கள் நீதமாகவே தீர்ப்பளியுங்கள்" ( )

- அல்குர்ஆன் பல இடங்களில் இஜ்திஹாதிற்கு இடமளிக்கும் வகையில் சில அடிப்படை விதிகளை முன்வைத்துள்ளது. எடுத்துக் காட்டாக : எந்தவொரு ஆன்மாவும் அதன் சக்திக்குட்பட்டே பொறுப்புக் கொடுக்கப்படும் (அல் பகரா : 286), அல்லாஹ் மார்க்கத்தில் சிரமத்தை ஏற்படுத்தவில்லை (அல் ஹஜ் : 78), அல்லாஹ் இலகுவையே விரும்புகிறான் கஷ்டத்தை விரும்பவில்லை (அல் பகரா : 185), நிர்ப்பந்தத்திற்கு மன்னிப்புண்டு (அல் பகரா : 173) முதலியன சட்டங்களை இயற்றும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய அடிப்படை அம்சமாகும்.
- அல்குர்ஆனின் சட்டவாக்கத்தில் இன்னொரு சிறப்பம்சம்; அது இயற்றிய சட்டத்திற்கான காரணங்களைத் தெளிவுபடுத்தும் முறையாகும். ''த.்.லீலுல் அஹ்காம்'' என்ற இந்த முறையை அல்குர்ஆனில் சில இடங்களில் அவதானிக்கலாம். அரசியல், பொருளாதாரம், குற்றவியல் சட்டங்கள் போன்றன பெரும்பாலும் இப்பிரிவிற்குட்பட்டனவாகும். சில வணக்க வழிபாடுகளுக்கும் அல்குர்ஆன் காரணம் முன்வைக்கிறது. தொழுகை அல்லாஹ்வை நினைவு கூர்வதற்காகும். நோன்பு நோற்றல் தக்வாவுடையவர்களாக ஆகுவதற்காகும்.
- மேலும் கால மாற்றத்தால் தோன்றக் கூடிய புதிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் சில விடயங்களில் சட்டமியற்றும் அதிகாரத்தை அறிஞர்களுக்கு விட்டுவைத்துள்ளது. ''நீங்கள் அல்லாஹ்வுக்கும், தூதருக்கும் உங்களில் அதிகாரமுடையவர்களுக்கும் கட்டுப்படுங்கள்'' இவ்வாறு அறிஞர்கள் சட்டமியற்றும் போது இஜ்மா, கியாஸ் முதலிய துணை மூலாதாரங்கள் தோற்றம் பெற்றன. இவை அல்லாஹ் மனிதர்கள் மீது கொண்ட கருணையின் விளைவேயாகும்.
- இவ்வாறு அல்குர்ஆன் தெளிவான முறையில் தனது சட்டங்களை மனிதர்களுக்கு வழங்கியுள்ளது. அதனடிப்படையிலே சட்டம் வகுக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறது. அல்குர்ஆனின் சட்டங்களைப் புறக்கணிப்பது வழிகேடும், அக்கிரமமுமாகும் என்று எச்சரிக்கின்றது. "தன் இறைவனின் வசனங்கள் நினைவூட்டப்பட்ட பின்னரும் அவற்றைப் புறக்கணிப்பவனைவிட வழிகெட்டவன் யார்? நிச்சயமாக நாம் அக்கிரமக்காரர்களிடம் பழிவாங்குவோம்'' (அஸ்ஸஜதா : 22)

**தேர்ச்சி 2.0 : இஸ்லாமிய நாகரிகத்தின் மூலாதாரம் வஹி என்பதை அறிந்து அதன் வகைகளையும் அவை தொகுக்கப்பட்ட வரலாற்றையும் விபரிப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 2.4 : இஸ்லாமிய நாகரிகத்தைக் கட்டியெழுப்பவதில் ஸுன்னாவின் செல்வாக்கை தெளிவுபடுத்துவார்**

**பாடவேளைகள் : 25**

**கற்றல் பேறுகள் :**

- ஸுன்னா என்ற பதத்தை விளக்கிக் கூறுவார்.
- அதன் முக்கியத்துவத்தை ஆதாரங்களுடன் முன்வைப்பார்.
- இஸ்லாமிய நாகரிகத்தைக் கட்டியெழுப்பவதில் ஸுன்னாவின் வழிகாட்டல்களை விளங்கி எடுத்துரைப்பார்.
- சட்டவாக்கத்தில் ஸுன்னாவின் அணுகுமுறைகளை விளங்கி எடுத்துரைப்பார்.
- சட்டவாக்கத்தில் ஸுன்னாவின் பங்கினை உதாரணங்கள் மூலம் எடுத்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

- அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள், தன்னைப் பின்பற்றிய மக்களுக்கு சமயக் கோட்பாடுகளைக் கற்றுக் கொடுத்தார்கள். இம்மை மறுமை குறித்த விளக்கங்களை எடுத்துக் காட்டினார்கள். வாழ்வின் எல்லா நடவடிக்கை குறித்தும் கருத்துப் பரிமாறினார்கள். தனிப்பட்ட, குடும்ப, சமூக வாழ்வில் தோன்றுகின்ற பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்வைத்தார்கள். வெறுமையிலிருந்து ஓர் அரசை உருவாக்கி நிருவகித்தார்கள். தேவையின் போது படைகளைத் திரட்டி தாமே தலைமை தாங்கினார்கள். வெளிநாட்டு உறவுகளையும் தூதுத்துவத் தொடர்புகளையும் ஒழுங்குபடுத்தினார்கள். வழக்குகளை விசாரித்து அவற்றுக்கான தீர்வுகளை வழங்கினார்கள். எனவே, இஸ்லாமிய நாகரிகத்தை அறிய முற்படுபவர்கள் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையைக் கற்கவும், விளங்கவும் வேண்டிய தேவை உண்டு. அதனைப் புறக்கணித்து விட்டு வேறெங்கும் இஸ்லாமிய நாகரிகத்தைத் தேட முடியாது.
- கலாநிதி எம். ஹமீதுல்லா அவர்களின் இந்த அறிமுகம் இஸ்லாமிய நாகரிகத்தைக் கட்டியெழுப்புவதில் ஸுன்னாவின் வழிகாட்டலும் நடைமுறைகளும் பங்கு கொள்கின்றன என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

  நாகரிகம் என்பது சூனியத்திலிருந்து தோன்றுவதில்லை. இஸ்லாமிய கண்ணோட்டத்தில் நோக்கினால், ஜாஹிலியத்தை ஒழிப்பதிலிருந்துதான் நாகரிகம் தோன்றுகின்றது. நாகரிகம் என்பதற்குப் பல்வேறு வரைவிலக்கணங்கள் கூறப்பட்டாலும், அவையனைத்தும் நாகரிகம் நகரவாழ்வோடு தெடர்புடையது' என்பதில் ஒன்றுபடுகின்றன. சமூக அமைப்பில் மக்கள் பெருகும் போது நாகரிகம் தோன்றுகின்றது என இப்னு கல்தூன் குறிப்பிடுகிறார். விரிவானதும், உயர்வானதுமான கலாசாரத்தைக் கொண்ட ஒரு சமூகத்தின் மேனிலையைச் சுட்டிக்காட்டுவதே நாகரிகம் என சாமுவேல் ஹன்டிங்டன் குறிப்பிடுகிறார்.

- இஸ்லாம் அறிமுகமான மக்கா ஜாஹிலிய்யத்தின் மையமாகத் திகழ்ந்தது. அங்கு, நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தை அறிமுகப்படுத்திய போது-ஜாஹிலிய்யத்தின் பயங்கர எதிர்ப்புடனேயே செயல்பட வேண்டியேற்பட்டது. யஸ்ரிப், மதீனதுந்நபி என பெயர் மாற்றம் பெற்றது. நாகரிகத்தைக் குறிக்கும் தமத்துத் என்ற சொல்லோடு மதீனா என்ற பெயர் தொடர்புறுகின்றது. ஆகவே மதீனதுந்நபி என்பது நபி (ஸல்) அவர்கள் உருவாக்கிய நாகரிகத்தின் மையம் என்ற கருத்தில் கையாளப்பட்டிருக்கலாம்.
- மக்காவில், தனி மனிதன் தொடர்பான போதனைகளை வழங்கிய அல்குர்ஆனும், ஸுன்னாவும் ஹிஜ்ரத்தின் பின்னரான மதீனவாழ்க்கைப் பகுதியில், பெரும்பாலும் குடும்ப, சமூக, அரசியல், பொருளாதார, கலாசார, சர்வதேசிய விவகாரங்கள் தொடர்பான போதனைகளை முன்வைத்தன. மற்றொரு வகையில் சொல்வதானால் ஒரு நாகரிகத்தைக் கட்டியெழுப்புவதற்கான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன எனலாம்.
- ஸுன்னா என்பது, நபி (ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் என்பவற்றைக் குறிக்கும். அவை, இஸ்லாமிய நாகரிகத்தைக் கட்டியெழுப்புவதில் மிகுந்த பங்களிப்பைச் செய்துள்ளன. ''றஸுல் என்பது உயிரோடிருக்கும்வரை நபி (ஸல்) அவர்களையும், வபாத்துக்குப் பின்னர் அவர்களது ஸுன்னாவையும் குறிப்பதாக'' இப்னு அப்துல் பர் குர்துபி குறிப்பிடுகிறார். நபி (ஸல்) அவர்கள் உயிர் வாழும் போது இயங்கிய அனைத்துமே ஸுன்னாவாக அமைகின்றன. ஆகவே, அவர்களது ஒவ்வொரு சொல்லும் செயற்பாடும் நாகரிகத்தைக் கட்டியெழுப்ப அன்று மட்டுமல்ல, இன்றும் பங்களிப்புச் செய்கின்றன.
- ஒரு நாகரிகம் நிரந்தரமாக அமைவதற்கு அடிப்படைகளும், அவற்றை நடைமுறைப்படுத்தும் ஒரு சமூகமும் அச்சமூகம் வாழ்வதற்கான பிரதேசமும், சமூகத்தை வழிநடாத்த ஒரு தலைமையும் அவசியமாகின்றன. எனவேதான், ஹபஷா, தாயிப் பிரதேசங்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு இறுதியாக, யஸ்ரிப் பொருத்தமான இடமாக தேர்ந்தெடுக்கப்பட்டது. மக்காவிலிருந்து வெளியேறிய முஹாஜிர்களும், யஸ்ரிபிலிருந்த அன்ஸாரிகளும் அதன் தாபக சமூகமாக மாறுகின்றனர். அந்தக்காலத்தில் நபி (ஸல்) அவர்கள் மக்களுக்கு வழங்கிய சமய, சமூக, அரசியல், பொருளாதார, கலை, கலாசார அம்சங்கள் இஸ்லாமிய நாகரிகமாக வெளியாகின.

**தனிமனிதன் :**

- ஒரு நாகரிகத்தின் செயற்பாட்டாளன் என்றவகையில், தனிமனிதன் முக்கியமான ஒரு புள்ளியாவான். எனவே, நபி (ஸல்) அவர்கள், தனிமனித உருவாக்கத்தில், மக்கா வாழ்க்கைப் பகுதியைப் போன்றே மதீனா வாழ்க்கைப் பகுதியிலும் அதிக கவனம் செலுத்தினார்கள். எல்லோரையும் ஆதமின் (அலை) மக்களாகப் பிரகடனப்படுத்தினார்கள். இன, மத, மொழி, நிற, பிரதேச வேறுபாடுகளை வைத்து மனிதனைக் கூறுபோட அவர்கள் இடமளிக்கவில்லை. மனிதன், மற்றொரு மனிதனின் அடிமையாக இயங்குவதை அவர்கள் விரும்பவில்லை. மனிதனை அல்லாஹ்வுடைய அடியானாக இருக்கவே வழிகாட்டினார்கள். இஸ்லாம் தோன்றுவதற்கு முன்பே, தனது பணியாளனாக அமர்த்தப்பட்ட ஸைதிப்னு ஹாரிதாவை விடுதலை செய்தார்கள். பிற்காலத்தில் தனது அத்தை மகளை மணமுடிக்கச் செய்தார்கள். அவர்களது மணவாழ்வில் கசப்பு ஏற்பட்ட போது, ஸைத் (ரழி) விடுவித்த மனைவியைத் தானே மறுமணம் செய்து சமநிலையை எடுத்துக்காட்டினார்கள்.

- ஒருமுறை, ஆபூதர் (ரழி) அவர்கள் ஹபஷியான பிலால் (ரழி) அவர்களை கறுப்பியின் மகனே என விளித்த போது, கோபமுற்ற நபி (ஸல்) அவர்கள், 'உமது ஜாஹிலிய்யத் இன்னும் நீங்கவில்லை' எனக் கூறிக் அபூதர் (ரழி) அவர்களைக் கடிந்து கொண்டார்கள். நீங்கள் நாகரிகமற்ற நிலையில் பேசி விட்டீர்கள்' என்று கூறுவதாகவே அந்த வசனத் தொடர் அமைகின்றது. அந்த பிலால் (ரழி) அவர்களை, நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் முதல் 'முஅஸ்ஸினாக' அமர்த்தினார்கள். தனது இறுதிக்காலத்தில் ஸைத் இப்னு ஹாரிதா (ரழி) அவர்களின் மகன் உஸாமா (ரழி) அவர்களை உயர் குல குறைஷிகள் அடங்கிய படைக்குத் தளபதியாக அமர்த்தினார்கள். பாரசீக நாட்டைச் சேர்ந்த ஸல்மான் (ரழி) அவர்களை அறபியரான அபூதர் (ரழி) அவர்களுடன் சகோதரனாகப் பிணைத்தார்கள்.
- நபி (ஸல்) அவர்கள் ஒவ்வொரு தனிமனிதனையும் கண்ணியப்படுத்தினார்கள். அவர்களின் தகைமைக்கேற்ப்ப பொறுப்புக்களை வழங்கினார்கள். அத்தகைமைகளைப் பாராட்டினார்கள். உஸ்மான் (ரழி) அவர்களின் வெட்க உணர்வையும், அபூ உபைதா (ரழி) அவர்களின் நம்பகத் தன்மையையும் பாராட்டினார்கள். அபூ உபைதா (ரழி) அவர்களை அமானுல் உம்மத் எனவும், காலித் இப்னு வலீத் (ரழி) அவர்களை ஸைபுல்லாஹ் எனவும் ஹுதைபா (ரழி) அவர்களை ஸாஹிபுஸ் ஸிர் எனவும் அழைத்துக் காட்டினார்கள். அந்தத் தனி நபர்களின் செயற்பாடுகளை நாகரிகத்தைக் கட்டியெழுப்பப் பயன்படுத்தினார்கள். இதனை 'நபி (ஸல்) அவர்கள், மனிதர்களை அவர்களுக்குரிய அந்தஸ்தில் வைக்குமாறு எங்களுக்கு ஏவினார்கள்' என ஆயிஷா (ரழி) அவர்களின் கூற்றும் நிரூபிக்கின்றது. (முஸ்லிம்)

**குடும்பம் :**

- நல்ல மனிதர்களையும், சிறந்த சமூகத்தையும் உருவாக்குவதில் குடும்ப நிறுவனத்துக்கு பாரிய பொறுப்பு உண்டு. அதனைச் சரிவர நிறைவேற்ற வேண்டுமென்பதற்காகவே, நீங்கள் ஒவ்வொருவரும் மேய்ப்பாளர்கள். உங்கள் மேய்ப்பைப் பற்றி விசாரிக்கப்படுவீர்கள். (புகாரி) எனக் குறிப்பிட்ட நபி (ஸல்) அவர்கள் கணவன் - மனைவி (தாய் - தந்தையர்) இருவரதும் பொறுப்பை வலியுறுத்தினார்கள். உங்களில் சிறந்தவர் உங்கள் மனைவிக்கு நல்லவர், எனக்கூறினார்கள். பெண்களில் சிறந்தவர் யார் எனக் கேட்கப்பட்டபோது கணவன் அவனைப் பார்க்கும் போது மகிழ்விப்பாள். ஏவினால் கட்டுப்படுவாள். கணவனின் சொத்தையும் தனது கற்பையும் காத்துக் கொள்வாள். அவனுக்கு மாறு செய்யமாட்டாள். (முஸ்னத் அஹ்மத்) எனப் பதிலளித்தார்கள். பெண்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள் (புகாரி) என ஆண்களுக்கு அறிவுறுத்தினார்கள்.
- சிறுவர் மீது அன்பு செலுத்தாதவரும் பெரியவர்களுக்குரிய கடமைகளை அறியாதவரும் எம்மைச் சார்ந்தவர்களல்லர் என உபதேசித்த நபி (ஸல்) அவர்கள், தமது சொந்த வாழ்வில் முன்மாதிரியாக நடந்து கொண்டார்கள். நபி (ஸல்) அவர்கள், தமது மகள் பாத்திமா (ரழி) அவர்கள் வீட்டுக்கு வந்தால் எழுந்து நின்று முத்தமிட்டு தங்களது இருக்கையில் அமரச் செய்வார்கள். நபி (ஸல்) அவர்கள் பாத்திமா (ரழி) அவர்களின் வீட்டுக்குச் சென்றால் அவர்கள் எழுந்து நபி (ஸல்) அவர்களை வரவேற்று கையைப் பிடித்து முத்தமிடுவார்கள். (புகாரி) தமது ஈரல் கொழுந்து என மகள் மீதான பாசத்தை வெளிப்படுத்தினார்கள். அவர்களின் பேரர்கள் ஹஸன் (ரழி) ஹுஸைன் (ரழி) ஆகிய இருவரையும் நபி (ஸல்) அவர்கள் நடத்திய முறை பிள்ளை வளர்ப்புக்கு சிறந்த முன்மாதிரியாக அமைந்தன.

அவர்களைத் தோளில் சுமந்தார்கள். செல்லமான விளையாட்டுகளிலும் உரையாடல்களிலும் ஈடுபட்டார்கள்.

**உறவினர், அயலவர் :**

- எவர் தமது இரணம் (ரிஸ்க்) விசாலிக்கப்பட வேண்டுமென்றும், ஆயுள் நீடிக்கப்பட வேண்டுமென்றும் விரும்புகிறாரோ, அவர் தனது இரத்த பந்தங்களுடன் இணைந்து வாழட்டும். (புகாரி) என்று உறவினர்களை நேசித்து வாழத் தூண்டினார்கள். ஒரு கூட்டத்தில் உறவுகளைத் துண்டித்து வாழ்பவன் இருந்தால் அந்தச் சமுதாயத்தில் அல்லாஹ்வின் அருள் இறங்காது (பைஹகி) என எச்சரித்தார்கள். அண்டை வீட்டார் பசித்திருக்கத் தான் மாத்திரம் வயிறு நிறைய உண்பவன் மு.ஃமினாக மாட்டான். (முஸ்னத் அபூ ல.ஃலா) என்றும், அல்லாஹ்வின் பார்வையில் தோழமையால் சிறந்தவர், தனது தோழர்களிடம் சிறந்தவரே. அல்லாஹ்வின் பார்வையில் சிறந்த அயலவர், தனது அண்டை அயலாருடன் சிறந்தவராக இருப்பவரே (திர்மிதி) மு.ஃமின் தனது சகோதரனுக்குக் கண்ணாடியாவான். மற்றொரு மு.ஃமினுக்கு சகோதரராவார். அவரைச் சுற்றி நின்று பாதுகாத்து அவரது அழிவைத் தடுப்பார். (அதபுல் முப்ரத்)
- ஒருவர் சிறந்தவராக வாழும் போது, அவரது நாகரிகம் மறைமுகமாகப் பிரசாரம் செய்யப்படும். இதற்கு வரலாற்றில் நிறைய ஆதாரங்கள் உள்ளன. உதாரணத்துக்காக ஒன்றைச் சுட்டிக் காட்டுகிறோம். பெய்ரூத்திலுள்ள பிரித்தானிய தூதரகத்தின் மேல்மாடியில் ஒரு கிறிஸ்தவ இளைஞர் நிற்கிறார். அவர் கீழ்நோக்கிப் பாதையை நோட்டமிடுகிறார். அங்கு, ஓர் இளைஞருக்கும், முதியவருக்குமிடையில் வாக்குவாதம் இடம்பெற்றுக் கொண்டிருந்தது. வாக்குவாதம் முற்றி, முதியவர் இளைஞனின் கன்னத்தில் ஓங்கியறைகிறார். இளைஞனோ பதிலடி கொடுக்காது நகர்கிறார். இதை அவதானித்த அந்த கிறிஸ்தவ இளைஞனுக்கு ஆச்சரியமாக இருந்தது. ‘முஸ்லிம்கள் அதிகமாக வாழும் அந்நாட்டில் முஸ்லிம்களைக் கூவியழைக்காமல் அடிவாங்கிய இளைஞன் அமைதியாகச் செல்கிறானே’ என சிந்தித்தவாறு கீழே இறங்கி இளைஞனைச் சந்திக்கிறார்.
- ‘நான் அந்த யூதனிடம் கடன் வாங்கியிருந்தேன். உரிய நேரத்தில் அதனைக் கொடுக்க முடியவில்லை. ஆத்திரமடைந்த அவர், என்னை அடித்துவிட்டார். வாங்கிய கடனை உரிய நேரத்தில் கொடுத்துவிடுமாறு நபி (ஸல்) அவர்கள் எமக்கு அறிவுறுத்தியிருக்கிறார்கள். அப்படியிருக்கக் கடனைத் திருப்பிக் கொடுக்காதது எனது குற்றமே, என்று விளக்கமளித்தார்.
- அதற்காக அடிக்க வேண்டுமா? நீ ஏன் திருப்பியடிக்கவில்லை. வேறு ஒருவராக இருந்தால் திருப்பியடித்திருப்பார் அல்லவா? என்று வினவினார். திருப்பித் தாக்க வேண்டுமென்ற எண்ணம் மனதில் எழுந்தது. அதற்கான சக்தியும் என்னிடமிருந்தது. ஆனால் நபி (ஸல்) அவர்களின் வார்த்தை என்னைத் தடுத்துவிட்டது.
- ஆ! அது என்ன வார்த்தை என அந்தக் கிறிஸ்தவ சகோதரர் கேட்டார். ‘சிறியோர் மீது அன்பு காட்டாதவனும், பெரியோர்களுக்கு மரியாதை செய்யாதவனும் என்னைச் சார்ந்தவனல்லன் என நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.
- இதைக் கேட்ட அவருக்கு ஆச்சரியம் மேலெழுந்தது. 1400 ஆண்டுகளுக்கு முன்னர் நேரில் அறிந்திராத ஒருவர் சொன்னதை இன்னும் நடைமுறையில் காட்டுகிறாரே. அந்த மனிதனின் சிறந்த வாழ்வும் வாக்கும் எத்தகையதாக இருக்குமென

வியப்படைகிறார். இறுதியில் தனது அலுவலகப் பணியைத் துறந்து, அறபு மொழியைக் கற்று, இஸ்லாமிய நாகரிகத்துள் நுழைந்து அல்குர்ஆனை ஆங்கில மொழியில் மொழி பெயர்த்து வெளியிடுகிறார். அவரே முஹம்மத் மர்மடியூக் பிக்தால் என்பவராவார்.

- நபி (ஸல்) அவர்களின் ஒரு ஹதீஸ் செயற்படுத்தப்பட்ட போது ஓர் அறிஞரை இஸ்லாத்தின் பக்கம் திசை திருப்பியது என்பது இஸ்லாமிய நாகரிகத்தைக் கட்டியெழுப்புவதில் ஸுன்னாவின் பங்கு எத்தகையது என்பதைத் தெளிவாகவே எடுத்துக் காட்டுகின்றது.

**சமூகம்** :

- குடும்பங்களின் தொகுதியே சமூகமாகும். குடும்பங்கள் நல்லதானால் சமூகமும் நல்லதாகும். எனவே, தனி நபர்களையும் குடும்பங்களையும் இஸ்லாமியப்படுத்தி சமூகத்தை இஸ்லாமியமயப்படுத்த வழிகாட்டினார்கள். தனி நபர்களையும், சமூகத்தையும் உடலின் உறுப்புக்களுக்கும், கட்டடத்தில் கற்களுக்கும் உவமைப்படுத்திக் காட்டினார்கள்.
- தனிநபர்களைச் சமூகத்துடன் பிணைப்பதற்கு நபி (ஸல்) அவர்கள் ஐந்து விடயங்களைச் செயற்படுத்துமாறு ஏவினார்கள். ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமைச் சந்தித்தால் ஸலாம் கூற வேண்டும். அதற்கு மற்றவர் பதில் ஸலாம் கூற வேண்டும். அவர் தும்மி அல்ஹம்துலில்லாஹ் என்று சொன்னால் மற்றவர் யர்ஹமுகுமுல்லாஹ் என்று பிரார்த்தனை செய்ய வேண்டும். அவர் விருந்துக்கு அழைத்தால் சமூகமளிக்க வேண்டும். நல்லுபதேசத்தை - ஆலோசனையை எதிர்பார்த்தால் அறிவுரை கூற வேண்டும். நோயுற்றால் நலம் விசாரிக்கச் செல்ல வேண்டும். மரணித்தால் அவரது ஜனாஸாவில் பங்கு கொள்ள வேண்டும். இவை மிக இலகுவானதாகவும் , சமூக ஒற்றுமைக்கான சாதனமாகவும் அமைந்துள்ளன. கூடவே, ஜமாஅத், ஜும்ஆ தொழுகைகள், ஸகாத், நோன்பு, ஹஜ் கடமைகள் என்பனவும் தனிநபர்களைச் சமூகத்துடன் பிணைக்கின்றன. பர்ளுகிபாயாவான விடயங்களும் இப்பணியை நிறைவேற்றுகின்றன. நற்குணங்களைப் பூரணப்படுத்தவே தான் அனுப்பப்பட்டுள்ளதாகக் கூறிய நபி (ஸல்) அவர்கள் அப்பண்புகளுக்கூடாகவும் இஸ்லாமிய நாகரிகத்தைக் கட்டி எழுப்பினார்கள்.
- சுதந்திரமும் சமத்துவமுமுடைய ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்குக் கல்வி இன்றியமையாதது என்பதால், நபி (ஸல்) அவர்கள் கற்பதை முஸ்லிம்கள் மீது கடமையாக்கினார்கள். (இப்னு மாஜா) இஸ்லாத்துக்கு முந்திய சமுதாயம் எழுத வாசிக்கத் தெரியாத உம்மிச் சமுதாயமாக இருந்தது. அதனைக் கல்வி பெற்ற சமூகமாக மாற்றுவதற்கு நபி (ஸல்) அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். மஸ்ஜிதுந் நபவியை ஒரு கல்விக் கூடமாக இயங்கச் செய்தார்கள். அஸ்ஹாபுஸ் ஸுஃப்பா எனப்பட்ட தனியான ஒரு குழுவினர் மஸ்ஜிதில் தங்கி நின்று சமூகத்துக்குக் கல்வி வழங்குவதில் தீவிரமாக ஈடுபட்டார்கள். பிற்காலத்தில் மஸ்ஜித் கல்வி நிறுவனமாகப் பணியாற்றவும், மஸ்ஜித் நூலகங்கள் தோன்றவும் இது முன்னோடி நடடிவடிக்கையாக அமைந்தது.
- எழுத வாசிக்கத் தெரியாத மக்களுக்கு, எழுதக் கற்பிப்பதற்காக நபி(ஸல்) அவர்கள் புதிய உத்தியொன்றைக் கையாண்டார்கள். பத்றுப் போரில் (ஹி :2) கைதுசெய்யப்பட்ட, எழுத வாசிக்கத் தெரிந்த கைதிகள் மதீனாவில் வாழும் பத்துச் சிறுவர்களுக்கு எழுத வாசிக்கக் கற்றுக் கொடுத்துவிட்டு விடுதலை பெறலாம்

எனப் பிரகடனப்படுத்தினார்கள். இதனால் பிற்காலத்தில் இளம் ஸஹாபாக்கள் அனைவரும் எழுத வாசிக்கத் தெரிந்தவர்களாக மாறினார்கள். இவ்வாறு கற்றுக் கொண்ட சிறுவனான ஸைத் இப்னு ஸாபித் (ரழி) அவர்கள் குத்தாபுல் வஹியாகவும், அல்குர்ஆனை நூலுருவில் தொகுக்கும் பணிக்கு முதல்வராகவும் பணியாற்றினார்கள். மட்டுமன்றி குறுகிய காலத்தில் அபரானி மொழியைக் கற்று நபி (ஸல்) அவர்கள் யூதர்களுடன் கடிதத் தொடர்பு கொள்வதற்கும் உதவியாக நின்றார்கள்.

- முஸ்லிம் சமூகத்தின் மத்திய நிலையமாக மஸ்ஜிதுந் நபவியை நிறுவகித்த நபி (ஸல்) அவர்கள், அரசியல், சமூக, பொருளாதார, கல்வி, கலாசார மத்திய நிலையமாக அதனை இயக்கிக் காட்டினார்கள். இதனால்தான் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்த எல்லாப் பிரதேசங்களிலும் மஸ்ஜித்கள் நிர்மாணிக்கப்பட்டு முஸ்லிம்களின் மத்திய செயலகமாக செயல்பட்டன. அவை சமூக சீரமைப்புக்கும், சிறப்பான சமூக சூழலுக்கும் வழிகாட்டின. நாகரிகத்தைக் கட்டியெழுப்புவதற்கு சமூக சூழல் முக்கியமானதாகும். எனவேதான், நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்வதற்கு முன்பே அதற்கான அடித்தளத்தை இட்டார்கள். மதீனா வாசிகளோடு செய்து கொள்ளப்பட்ட முதலாவது பைஅதுல் அகபாவில் (நுபுவ்வத் 11)

  1) ஒரே இறைவனைத் தவிர வேறொருவரையும் வணங்க மாட்டோம்
     அவனைத் தவிர வேறெவருக்கும் கீழ்ப்படிய மாட்டோம்.
  2) திருட மாட்டோம்.
  3) விபசாரம் செய்ய மாட்டோம்.
  4) எங்கள் குழந்தைகளைக் கொலை செய்ய மாட்டோம்.
  5) எவர் மீதும் அவதூறு சொல்ல மாட்டோம்.
  6) நபி (ஸல்) அவர்கள் எந்த நற்செயல்களைப் புரியும்படி கட்டளை இடுகின்றார்களோ அவற்றைப் புறக்கணிக்க மாட்டோம்.

  என உறுதி மொழி வழங்க வைத்தார்கள்.

- இவ்வம்சத்தை விளக்குவதற்கு மற்றொரு நிகழ்வை எடுத்துக்காட்டலாம். நூறுகொலைகளைச் செய்த ஒருவர், தான் பாவமன்னிப்புப் பெற வாய்ப்புண்டா எனத் தேடியலைந்தார். ஒரு பெரியாரிடம் சென்று தன்னைப் பற்றிய விபரங்களைக் கூறினார். அப்போது அவர்,

  நீ மிகப் பெரிய தவறைச் செய்திருக்கிறாய். எனினும் ஒன்று சொல்கிறேன். இரண்டு கிராமங்கள் இருக்கின்றன. ஒன்றன் பெயர் நஸ்ராஹ். அங்கு வாழ்பவர்கள் சுவர்க்க வாசிகள் செய்யும் நற்காரியங்களைச் செய்து கொண்டிருப்பார்கள். வேறு செயல்களில் ஈடுபடுவோர் அங்கு தங்க முடியாது. அடுத்ததன் பெயர் குப்ராஹ். அது அல்லாஹ்வை நிராகரித்தவர்கள் வாழுமிடம். ஆகவே, நீ நஸ்ராஹ் என்ற இடத்துக்குச் செல். அங்கேயே தங்கியிருந்து அந்த மக்களைப் போல் செயல்படுவாயாக. அதன் மூலம் உமது பாவமன்னிப்பு ஏற்றுக் கொள்ளப்படும் என்று உபதேசித்தார் (திப்ரானி)

- இங்கு, இஸ்லாமிய நாகரிகத்தைக் கட்டியெழுப்புவதற்கு சிறந்த சமூக சூழல் உருவாக்கப்பட வேண்டும் என்பதை நபி (ஸல்) அவர்கள் காட்டிச் சென்றுள்ளார்கள்.

**அரசியல் :**

- சமூகத்தையும், நாகரிகத்தையும் கட்டியெழுப்புவதில் பலம் பொருந்திய ஒரு நிறுவனம் அரசாங்கமாகும். ஆதலால் வளர்ச்சியடைந்த சமூகத்தின் அரசாங்கம் ஸ்திரமானதாக இருக்க வேண்டும் என்பதில் நபி (ஸல்) அவர்கள் மிகக் கவனமாக இருந்தார்கள். அதற்காக அரசியல் நடவடிக்கைகள் பலவற்றை மேற்கொண்டார்கள்.
- நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்த பின் மேற்கொண்ட பணிகளில் அங்கு வாழ்ந்த யூதர்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கை மிக முக்கியமானதாகும். அதன் முக்கியத்துவம் கருதியே பிற்காலத்தில் அது மதீனா சாசனம் எனப் பெயரிடப்பட்டது. மகா சாசனத்தை ஒத்த தன்மை அதில் காணப்பட்டது. அதன் மூலம் நபி(ஸல்) அவர்களுக்கு தலைமைத்துவம் வழங்கப்பட்டது. அதில் மதீனாவில் வாழ்ந்த ஒவ்வொரு பிரிவினரதும் உரிமைகள் பதியப்பட்டன. அதன் பின்னணியிலேயே நபி (ஸல்) அவர்களின் அரசியல் நடவடிக்கைகள் இடம்பெற்றன.
- தனக்குப் பின்னர், சமூகத்துக்குத் தலைமை தாங்குவதற்குத் தகுதியானவர்களை அவர்கள் அடையாளப்படுத்தினார்கள். குறைஷியரிலிருந்தே கலீபா வருவார் என ஒரு பொது நிபந்தனையை வைத்திருந்தார்கள். தமது செயற்பாடுகளைக் கலந்தாலோசித்து நடைமுறைப்படுத்தி அரசியல், சமூக விவகாரங்களில் ஷூறாவின் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டினார்கள். இதனால் தான் பிற்காலத்தில் கலீபா உமர் (ரழி) அவர்கள், மஜ்லிஸுஷ்ஷூறாவை அரச நிர்வாகத்தின் ஓர் அங்கமாக உறுதிப்படுத்தினார்கள். நபி (ஸல்) அவர்கள் ஆரம்பித்த 'பைஅத் முறை' நவீன வாக்களிப்பு முறையுடன் தொடர்புடையதாகும். ஒவ்வொருவரும் பதவியேற்ற கலீபாவை பைஅத் செய்ய வேண்டிய கட்டாயம் இருந்தது.
- உடன்படிக்கை செய்வதையும், அதனை மதிப்பதையும் நபி (ஸல்) அவர்கள் செய்து கொண்ட உடன்படிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன. உதாரணமாக ஹுதைபியா உடன்படிக்கை நிகழ்வுற்ற சற்று நேரத்தில், மக்காவில் இஸ்லாத்தை ஏற்று, அதன் காரணமாகத் துன்புறுத்தப்பட்டு விலங்கிடப்பட்ட நிலையில் அபூஜந்தல் (ரழி) அவர்கள் ஹுதைபியாவை அடைந்தார்கள். தன்னை விடுவிக்குமாறு நபி (ஸல்) அவர்களிடம் விண்ணப்பித்துக் கொண்டார்கள். எனினும் உடன்படிக்கை எழுதப்பட்டுவிட்டதால் குறைஷியர் அதற்கு ஆட்சேபனை தெரிவித்தனர். எனவே, உடன்படிக்கையைக் கௌரவித்து அவரைத் திருப்பியனுப்பியமையைச் சுட்டிக்காட்டலாம்.
- ஆட்சித் தலைவரும் சரி, அவரது பிரதிநிதியாக மற்றோரிடத்தில் பணியாற்றுபவரும் சரி, தனது செயல்பாடுகளை எவ்வாறு நெறிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை, நபி (ஸல்) அவர்கள் முஆத் இப்னு ஜபல் (ரழி) அவர்களை யமனுக்கு அனுப்பியபோது வினவிய வினாக்களும் அதற்கு அவர்கள் கொடுத்த விடைகளும் அதனை நபி (ஸல்) அவர்கள் அங்கீகரித்ததும் எடுத்துக்காட்டுகின்றன. ஒரு பிரச்சினைக்குரிய தீர்வு அல்குர்ஆனில் இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். இல்லையேல் ஸுன்னாவில் இருக்கிறதா என்று தேட வேண்டும். அதிலும் இல்லையெனில் இஜ்திஹாத் கண்டு வழிகாண வேண்டும் என்பதை அந்த உரையாடல் எடுத்துக்காட்டியது.
- ஒரு தலைவர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதற்கு நபி (ஸல்) அவர்களின் ஆரம்பகால செயற்பாடொன்று துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றது. பிலால் (ரழி) அவர்கள் கூறுகிறார்கள் : ஒருநாள் நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் அபூபக்ர்

(ரழி) அவர்களின் வீட்டில் இருந்தோம். அப்போது கதவு தட்டும் சத்தம் கேட்டது. வெளியே சென்று பார்த்தோம். முஹம்மதிப்னு அப்துல்லா (ஸல்) இங்கே இருக்கிறார்களா என்று ஒரு கிறிஸ்தவர் கேட்டார். ஆம் எனக் கூறி அவரை உள்ளே அழைத்து வந்தேன்.

- முஹம்மதே, நீங்கள் இறைவனின் தூதர் எனக் கூறுகிறார்கள் அல்லவா? அது உண்மையாயின், சில அநியாயக்காரனின் கொடுமையிலிருந்து நான் விடுபட நீங்கள் உதவ வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

  உங்களுக்கு அநியாயம் செய்தவர் யார்?

  ஹிஷாமுடைய மகன் அம்ரு. (அபூஜஹ்ல்) எனது பொருள்களை அபகரித்துக் கொண்டான்.

  உடனே நபி (ஸல்) அவர்கள் எழுந்து விட்டார்கள்.

  ‘அல்லாஹ்வின் தூதரே, அபூஜஹ்ல் மத்தியானத்தில் தூங்குவது வழக்கம், இந்த நேரத்தில் அவனை எழுப்பினால் கடுங்கோபமடைவான். தாங்கள் சொல்வதைச் செவியேற்காமல் தங்களுக்கு தீங்கு செய்யக் கூடும்’ என நாங்கள் கூறினோம்.

- இவ்வாறு கூறியதை கேட்ட நபி (ஸல்) அவர்களின் முகம் சிவந்தது. கோபத்துடன் அபூஜஹ்லின் வீட்டை அடைந்தார்கள். கதவைத் தட்டினார்கள். வாயிலில் நபி (ஸல்) அவர்கள் நிற்பதைக் கண்டு, உள்ளே வாருங்கள். எவரையேனும் அனுப்பியிருந்தால் நான் நேரில் வந்திருப்பேனே’ என்றான்.

- ‘இந்த கிறிஸ்தவனின் உடைமையை நீங்கள் வைத்திருக்கிறீர்களா? அப்படியாயின் அதை அவரிடம் ஒப்படைத்து விடுங்கள்’ என்றார். அதற்கு ‘எவரிடமேனும் சொல்லியனுப்பினால் அதனைக் கொடுத்து அனுப்பியிருப்பேன்’ எனக் கூறிவிட்டு அவற்றை ஒப்படைக்குமாறு தனது அடிமைக்கு கட்டளையிட்டான். அவை கொண்டுவரப்பட்டன. ‘எல்லாப் பொருள்களும் கிடைத்து விட்டனவா’ என நபி (ஸல்) அவர்கள் அவனிடம் கேட்டார். ‘ஒரு கூடை கிடைக்கவில்லை’ என்றான். அதையும் கொண்டு வருமாறு கூற, அது அங்கு காணப்படவில்லை எனக் கூறி அதைவிட நல்லதொரு கூடையைக் கொடுத்துவிட்டான். (ஸஃப்ததுல் வாகியீன்)

**பொருளியல் :**

- அனைத்துச் செல்வங்களுக்கும் உரிமையாளன் அல்லாஹ் ஒருவனே. அவன் அருளாகக் கொடுக்கும் செல்வத்தை எவ்வாறு தேடவும், செலவிடவும் வேண்டுமென்பதை நபி (ஸல்) அவர்கள் காட்டிக் கொடுத்தார்கள். எல்லா மக்களும் சமமான பொருள் வசதியைக் கொண்டிராமையால், ஒருவரில் ஒருவர் தங்கிவாழும் நிலை இயல்பிலேயே காணப்படுகின்றது. இந்த ஏற்றத் தாழ்வு உலக இயக்கத்திற்கு அவசியமானதாகும்.

- இஸ்லாமோ, இஸ்லாமிய நாகரிகமோ செல்வம் ஒரு சிலரின் கையில் தேங்கி நிற்பதை விரும்பவில்லை. எனவே அதனைச் சுழலும் வகையில் பயன்படுத்தி ஸகாத், ஸதகா, ஹிபத், வராஸத், வக்பு, கபாலத் போன்ற பல அமைப்புக்களை ஏற்படுத்தியிருக்கின்றது.

- ஒரு தோழர், தான் ‘செல்வந்தன் என்பதனால் தனது செல்வங்களை ஏழைகளின் நலனுக்காக எழுதிவிட முன்வந்தார். அப்போது, நபி (ஸல்) அவர்கள், இல்லை. உன்னுடைய உறவினர்கள் மற்றவர்களிடம் கையேந்துவதை விட அவர்கள் சுயமாக

வாழ்வதற்காக உமது செல்வங்களை விட்டு வைப்பதே மேல்' என நபி (ஸல்) அவர்கள் அறிவுறுத்தினார்கள். மூன்றில் இரு மடங்கு அல்லது இரண்டில் ஒரு மடங்கு ஏழைகளுக்கென ஒதுக்கலாமா என அவர் கேட்டபோது, அது மிகக் கூடுதலானது என பதிலளித்தார்கள். மூன்றில் ஒரு பகுதியை தானம் செய்யலாமா என கேட்டபோது, நல்லது, அதுவும் அதிகமே எனப் பதிலளித்தார்கள். சமூகத்தில் செல்வந்தர்கள் இருக்க வேண்டுமென்பதை நபி (ஸல்) அவர்கள் இங்கு வலியுறுத்துகிறார்கள்.

- ஒரு மனிதன் செல்வத்தைச் செலவழிப்பதற்குரிய உரிமையையும், சமூக உறுப்பினர் என்ற வகையில் சமூகத்திற்குரிய உரிமையையும் ஏக காலத்தில் பெற்றுக் கொள்ளும் வகையில் இஸ்லாமிய நாகரிகம் பொருள்களை வைத்திருக்க அனுமதியளிக்கின்றது.
- எனவே, மரணித்தவரின் சொத்தை வாரிசுகளுக்குப் பகிர்ந்தளிக்கும் முறையையும் அதே நேரத்தில் அதிக பட்சம் மூன்றிலொரு பகுதியை ஏனையோருக்கு வஸிய்யத் செய்யும் முறையையும் நபி (ஸல்) அவர்கள் காட்டிக் கொடுத்தார்கள். ஒருவரை மற்றொருவர் கொலை செய்தால் கொலை செய்யப்பட்டவரின் சொத்தில் கொலையாளிக்குப் பங்கில்லாமல் செய்யப்பட்டிருக்கிறது. இது சொத்துக்காக கொலை செய்யப்படுவதைத் தடை செய்யும் ஓர் உத்தியாகும். வாரிசுகள் சிறுவர்களாக இருப்பின் அவர்களின் பங்கும் பகிரப்பட்டு அவற்றைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகளும் காண்பிக்கப்பட்டுள்ளன.
- மனிதன் செல்வம் சேர்ப்பதை இஸ்லாமிய நாகரிகம் தடை செய்யவில்லை. ஆனால், தவறான வழிகளுக்கூடாக - பொய், பொய்ச்சத்தியம், ஏமாற்று, பதுக்கல், இலஞ்சம், அளவை நிறுவைகளில் குறைபாடு செய்தல், வட்டி எடுத்தல், சூதாடல், மது போன்ற போதைப் பொருள்களை உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல் போன்ற வழிகளில் செல்வம் திரட்டுவதை நபி (ஸல்) அவர்கள் கண்டித்தார்கள், தடை செய்தார்கள்.
- இவற்றுக்கு உதாரணமாக சில ஹதீஸ்களை நோக்குவோம்.
- ஹலாலும் தெளிவாக உள்ளது, ஹராமும் தெளிவாக உள்ளது. ஆனால், இவ்விரண்டுக்குமிடையே சந்தேகத்திற்குரிய சில விடயங்கள் உள்ளன. சந்தேகத்திற்குரிய பாவங்களிலிருந்து விலகியிருப்பவன் கண்டிப்பாகவே விலகியிருப்பான். சந்தேகத்துக்குரிய பாவங்களில் துணிவுடன் ஈடுபடுபவன் வெளிப்படையான பாவங்களில் வீழ்ந்து விட அதிக வாய்ப்புண்டு. பாவங்கள் அல்லாஹ்வினால் தடைசெய்யப்பட்ட பகுதியாகும். தடை செய்யப்பட்ட பகுதிகளில் அருகில் மேய்கின்ற பிராணி அதனுள் புகுந்துவிட அதிக வாய்ப்புண்டு (புகாரி)
- மக்களிடையே ஒரு காலம் வரும். அப்போது மனிதன் தான் ஈட்டியவை ஹலாலா ஹராமா என்பதையெல்லாம் பொருட்படுத்த மாட்டான் (புகாரி) இது பொருளாதார விடயங்களுக்கு மட்டுமன்றி வாழ்வின் எல்லாத் துறைகளுக்கும் பொருத்தமானதாகும்.
- ஒரு முஸ்லிம் விவசாயம் செய்கிறார். அல்லது செடிகளை நடுகிறார். அதிலிருந்து பிராணிகள் அல்லது பறவைகள் ஏதேனும் சாப்பிட்டால் கூட அது அந்த நபரின் ஸதகாவாக எழுதப்படும் (முஸ்லிம்)
- தேவையான பொருள்களைப் பதுக்கி வைக்காமல் உரிய நேரத்தில் அவற்றை அங்காடிக்குக் கொண்டு செல்பவன் அல்லாஹ்வின் அருளுக்கு உரித்தானவனாவான். அல்லாஹ் அவனுக்கு வாழ்வாதாரத்தை வழங்குவான். அவற்றைப் பதுக்கி வைப்பவன் அல்லாஹ்வின் சாபத்துக்கு உரியவனாவான் (இப்னு மாஜா)

- பணியாளரின் வியர்வை உலருமுன் அவனுடைய கூலியைக் கொடுத்துவிடுங்கள் (இப்னு மாஜா)
- வட்டி வாங்குபவர், வட்டி கொடுப்பவர், அவ்விருவருக்கும் சாட்சியாக இருப்பவர், அதனை எழுதுபவர் ஆகியோர் மீது நபி (ஸல்) அவர்கள் சாபமிட்டார்கள் (புகாரி)
- இலஞ்சம் வாங்குபவருக்கும், இலஞ்சம் கொடுப்பவருக்கும் அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக (புகாரி)
- எந்த மனிதனும் தனது கையால் உழைத்து உண்ணும் உணவைவிட உயர்ந்த உணவை என்றுமே உண்டதில்லை. அல்லாஹ்வின் தூதர் தாஊத் (அலை) தனது கரங்களால் உழைத்த உணவையே உண்டார்கள் (புகாரி)
- இவை அனைத்தும் நாகரிக வாழ்வில் எங்கும், எப்போதும் இடம்பெறுகின்ற விவசாயம், வியாபாரம், கைத்தொழில், கூலி வேலை, அரச பணி தொடர்பான நபி (ஸல்) அவர்களின் அறிவுரைகளாகும்.

**அழகியல் :**

- அரசியல், சமூக, பொருளாதார, கல்வி, கலாசார விடயங்கள் போன்றே நாகரிகத்தில் அழகியலும் இடம்பெறுகின்றன. அறபு நாடு பாலைவனமாகக் காணப்பட்டதாலும், ஏனைய நாகரிகங்களின் தாக்கத்துக்கு அவை உட்படாமையாலும் அங்கு கவிதை இலக்கியம் மட்டுமே அழகியலுணர்வின் வெளிப்பாடாகத் தெரிந்தன. இந்நிலையில் நபி (ஸல்) அவர்கள் இஸ்லாமிய நாகரிகத்தில் அழகியலையும் ஓர் அங்கமாக அறிமுகப்படுத்தினார்கள். அல்லாஹ் அழகானவன், அவன் அழகை விரும்புகிறான் (முஸ்லிம்) என்ற ஹதீஸுக்கூடாக இதனை விளங்குகின்றோம்.
- ஒவ்வொன்றிலும் அழகு விதிக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் எதையேனும் கொல்வதாக இருந்தாலும் கூட அதனை இனிய முறையில் நிறைவேற்றுங்கள் என்றும், முழுதும் சரியாக சமப்படுத்தப்படாத ஒரு சமாதியின் உட்பக்கம் நபி (ஸல்) அவர்களின் பார்வைக்குத் தென்பட்டபோது அக்குறையை நிவர்த்திக்குமாறு கேட்டுக் கொண்டார்கள். இறந்து போனவருக்கு அது நன்மையோ, தீமையோ விளையப் போவதில்லை. ஆனால் அதனைப் பார்ப்பவர்களுக்கு அது இனிதாக இருக்கும் என்ற கருத்துக்களை முன்வைத்திருக்கிறார்கள்.
- நபி (ஸல்) அவர்களுக்கு முதன் முதலாக அமைக்கப்பட்ட மிம்பர், மாதுளங்கனி போன்ற மரத்தாலான இரு உருண்டைகளால் அலங்கரிக்கப் பட்டிருந்தது என்றும், அவற்றை எடுத்து விளையாடுவதில் நபி (ஸல்) அவர்களின் பேரர்கள் இன்பங்கண்டார்கள் என்றும் கலாநிதி ஹமீதுல்லா குறிப்பிடுகிறார். அழகுக்காகவும் விளையாட்டுக்காகவும் அமைகின்ற குழந்தைகளின் பொம்மைகள், மெத்தை விரிப்புக்களை அணிசெய்தல் போன்றவற்றை நபி (ஸல்) அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள். அறிவு செறிந்த கவிதைகளையும், சொற்பொழிவாளரின் வசீகர உரைகளையும் நபி (ஸல்) அவர்கள் விதந்துரைத்திருக்கிறார்கள். அபூ மூஸா அல் அஷ்அரி (ரழி) அவர்கள், அல்குர்ஆனை அழகாக ஓதும் போது 'உமக்கு நபி தாஊத் (அலை) அவர்களுடைய சமூகத்தின் புல்லாங்குழல்களுள் ஒன்று கொடுக்கப்பட்டிருக்கிறது' எனப் பாராட்டினார்கள். அல்குர்ஆனை அழகாக ஓதாதவர் என்னைச் சார்ந்தவரல்லர் (அபூ தாவூத்) எனவும் கூறியுள்ளார்கள்.
- இவை அனைத்தும் ஒரு நாகரிகத்தை கட்டியெழுப்புவதற்காக நபி (ஸல்) அவர்கள் சொல்லிய, செய்து காட்டிய சில வழிமுறைகளாகும். 'இங்கிருப்பவர்கள்

இங்கில்லாதவர்களுக்கு இதனை அறிவியுங்கள்' என்ற நபி (ஸல்) அவர்களின் கூற்று (குத்பதுல் விதா) விரிந்த கருத்துடையது. இதற்கப்பாலும் நாகரிகம் வளர்க்கப்பட வேண்டும் என்ற கருத்தைப் பொதிந்துள்ளது. எனவேதான் தொடர்ந்து குலபாஉர் ராஷிதூன்கள் காலத்திலும், உமையா, அப்பாஸிய காலப்பகுதிகளிலும் மேற்கூறிய அம்சங்களின் அடிப்படையில் இஸ்லாமிய நாகரிகம் வளர்ந்தோங்கியது. அறிஞர்கள், சிந்தனையாளர்கள், இலக்கியவாதிகள், ஆய்வாளர்கள், மொழி பெயர்ப்பாளர்கள், கலைஞர்கள், ஆட்சியாளர்கள் என்ற பலரும் அதில் பங்களிப்புச் செய்தனர். இதனால் ஐரோப்பிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டது. மத்திய காலத்திலிருந்து நவீன காலத்துக்கு வழிகாட்டியது என்ற வகையில் இஸ்லாமிய நாகரிகம் ஸுன்னாவின் வழியில் இன்று வரை நடைபோடுகின்றது.

**சட்டவாக்கத்தில் ஸுன்னாவின் பங்கு**

ஒரு நாகரிகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் சமூகம் திசை திரும்பாமல் இருப்பதற்கு சட்டம் மிக அவசியமானதாகும். அல்குர்ஆனும் ஸுன்னாவும் ஷரீஆஎன்ற ஒரு சட்ட மரபை ஏற்படுத்தியிருக்கின்றது. சமூகத்தின் எல்லா விவகாரங்களும் அதன் அடிப்படையிலேயே நகர்ந்து கொண்டிருக்கின்றன. இதற்கு அடித்தளமிட்டவர்கள் என்றவகையில் நபி(ஸல்) அவர்களின் ஸுன்னா அதிக பங்களிப்பைச் செய்துள்ளது. நாகரிகம் கட்டியெழுப்பப்படும் காலகட்டத்தில் அல்குர்ஆனும் ஸுன்னாவும் தேவையான வழிகாட்டல்களை வழங்கின. அல்குர்ஆன் வழங்கிய சட்டங்களுக்கு மேலதிகமாக நபி (ஸல்) அவர்களும் சட்டங்களை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். அல்குர்ஆன் மனைவியின் தாயை மணமுடிக்க தடைசெய்கின்றது. நபி (ஸல்) அவர்கள் மனைவியின் சிற்றன்னையையும் மணமுடிக்க தடை செய்தார்கள். அல்குர்ஆன் வரையறுத்துக் கூறாதவற்றை வரையறுத்தார்கள். திருட்டுக்கான தண்டனை கரத்தைத் துண்டிப்பது என்ற அல்குர்ஆனின் சட்டத்திற்கு கை என்பது மணிக்கட்டுவரையிலான பகுதி என வரையறை செய்தார்கள்.

மேலும், இஸ்லாத்தின் ஒரு செயற்பாடு அங்கீகரிக்கப்பட வேண்டுமாயின் அதனை அல்குர்ஆன் குறிப்பிட வேண்டும். இன்றேல் நபி (ஸல்) அவர்கள் அங்கீகரிக்க வேண்டும். இதனைத்தான் உங்களுக்கு 'இரண்டை விட்டுச் செல்கிறேன்' என அவர்கள் குறிப்பிட்டார்கள். இஜ்திஹாத் காண்பதற்கு அல்குர்ஆனைப் போன்றே ஸுன்னாவும் பயன்படுத்தப்படுகின்றது.

நபி (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு ஹிஜ்ரத் சென்ற போது முன்வைத்த 'மதீனா சாசனம்' இஸ்லாமிய நாகரிகத்தின் முக்கியமான தொரு சட்ட சாசனமாகும். நபி (ஸல்) அவர்கள் முஆத் (ரழி) அவர்களை யமனுக்கு அனுப்பிய போது அவரிடம் கேட்கப்பட்ட வினாக்களும், அதற்கு அவர்கள் கொடுத்த விடைகளும் சட்டவாக்கத்துக்கான அடிப்படை விதிகளை எடுத்துக்காட்டுவனவாக உள்ளன. இவ்வாறு வெவ்வேறு வடிவங்களில் ஸுன்னா சட்டவாக்கத்துக்குப் பங்களிப்புச் செய்துள்ளது.

**தேர்ச்சி 3.0 : அல்குர்ஆன் ஸுன்னாவை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியடைந்த கலைகளை அறிந்து அவற்றின் தோற்றத்துக்கு ஏதுவாய் அமைந்த காரணிகளை விபரிப்பார்**

**தேர்ச்சி மட்டம் 3.1, 3.2 : தப்ஸீர் கலையின் தோற்றம் வளர்ச்சி பற்றி விளக்குவார்**

**பாடவேளை : 30**

**கற்றல் பேறுகள் :**

- தப்ஸீர் என்ற பதத்தை விளக்கிக் கூறுவார்.
- அதன் முக்கியத்துவத்தை ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டுவார்.
- அது தனிக்கலையாக வளர்ந்தமைக்கான காரணங்களை இனங்கண்டு கூறுவார்.
- அதன் வகைகளையும். வளர்ச்சிக் கட்டங்களையும் எடுத்துக்காட்டி ஒவ்வொரு காலகட்டத்திலும் தோன்றிய தப்ஸீர்களையும், முபஸ்ஸிரீன்களையும் பட்டியற்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

- ஷரீஆவின் பிரதான மூலாதாரமாக அல்குர்ஆன் விளங்குகிறது.
- ஆல்குர்ஆன் வசனங்களுக்கான விளக்கவுரையைக் குறிக்கும் பதமாக 'தப்ஸீர்' விளங்குகிறது.
- 'லிஸானுல் அறப்', 'அல்-காமூஸ்' எனும் அகராதிகள் தப்ஸீர் எனும் பதம் மொழி ரீதியில் தெளிவற்ற ஒரு விடயத்தை விளக்கப்பயன்படும் வார்த்தைப் பிரயோகமாகக் குறிப்பிடுகின்றன.
- ஷரீஆவின் பார்வையில் தப்ஸீர் என்பது அல்குர்ஆனின் சொற்களை மொழியும் விதம், அவை சுட்டும் விடயங்கள், அவை தனியாகவும் தொகுப்பாகவும் குறித்து நிற்கும் சட்டங்கள் ஆகியவற்றை ஆராயும் கலையைக் குறிக்கின்றதென இமாம் அபூஹய்யான் அல்அன்தலூஸி (ரஹ்) குறிப்பிடுகின்றார். அல்குர்ஆன் வசனங்களுக்கு வளங்கப்படும் விளக்கம், அதன் சட்டங்களையும் நுணுக்கங்களையும் தெளிவுப்படுத்தும் நுட்பமுறையைக் குறித்து நிற்கிறது என இமாம் ஸர்கஷீ (ரஹ்) சுட்டிக்காட்டுகின்றார். அல்குர்ஆன் இறங்கிய முறை, அதன் நோக்கம், வரலாற்றுப் பின்னணி, இறங்கியமைக்கான காரணங்கள், மக்கி மதனி ஒழுங்கமைப்பு, முஹ்கம், முதஷாபிஹ், நாஸிக் மன்ஸுக், ஹலால் ஹராம், முத்லக் முகய்யத் ஆகிய விடயங்களை விளக்குவதையே தப்ஸீர் என்ற பதம் குறித்து நிற்கின்றது என இமாம் ஜலாலுத்தீன் அஸ்ஸுயூதி (ரஹ்) குறிப்பிடுகின்றார். இமாம் ஸர்கஸி, இமாம் ஹுஸைன் தஹபி போன்றவர்கள்; 'தப்ஸீர்' என்பது மனித சக்திக்கு ஏற்ப அல்குர்ஆன் வசனங்களின் கருத்துக்கள் அவற்றினூடாக அல்லாஹ்வின் நோக்கங்கள் ஆகியவற்றை விளக்குதல், அவற்றுடன் தொடர்புபட்ட அனைத்தையும் உள்ளடக்கும் எனக் குறிப்பிடுகின்றனர். இமாம் இப்னு ஆஷுர் அவர்களின் கருத்தின் படி, அல்குர்ஆனை ஆய்வு செய்யும் ஒருவர் அல்குர்ஆனின் சொற்பிரயோகங்களுக்கு முன்வைக்கும் விளக்கம் மற்றும் அதனூடாகத் தான் விளங்கிய விடயங்களைச் சுருக்கமாகவோ அல்லது விரிவாகவோ

முன்வைக்கும் முறைமை ஆகிய வற்றை தப்ஸீர் என்ற பதம் குறித்து நிற்கிறது என்கிறார்.

- தப்ஸீர் எனும் சொல்லைப் போன்றே த.்.வீல் எனும் சொல்லும் அல்குர்ஆன் விளக்கவுரையுடன் தொடர்புபடுகிறது.

- இமாம் தபரி (ரஹ்) அவர்கள் 'தப்ஸீர்', 'த.்.வீல்' ஆகிய இரு சொற்பிரயோகங்களும் ஒரே கருத்துடையவை எனக் கருதுகின்றார். இதற்கு இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களுக்காக நபி (ஸல்) அவர்கள் பிரார்த்தித்தபோது "அல்லாஹும்ம பக்கிஹ்ஹு பித்தீன் வ அல்லிம்ஹு த.்.வீல்" (இறைவா! இவருக்கு மார்க்க சட்ட விவகாரத்தில் நிபுணத்துவத்தையும் மறைமுகமான(தெளிவில்லாத) விடயங்களையும் கற்றுக் கொடுப்பாயாக) என்ற ஹதீஸை ஆதாரமாகக் கொள்கிறார்

- இஸ்லாமியச் சிந்தனைகள் தனிக்கலைகளாக முன்னெடுக்கப்பட்டு அகீதா மற்றும் உஸூல்கள் தொடர்பான கருத்துக்கள் தர்க்கரீதியாக முன்மொழியப்பட்டபோது த.்.வீல் என்ற பதமும் பிரயோகத்திற்கு வந்தது. பிற்கால அறிஞர்கள் அல்குர்ஆன் விடயத்தில் ரிவாயத்தக்கள் இன்றி முன்வைக்கப்பட்ட கருத்துக்களை த.்.வீல் என்ற கண்ணோட்டத்தில் நோக்கினர். அந்தவகையில் நவீனகால அறிஞர்கள், ஒரு சொல்லின் பொருளை அதன் நேரடி விளக்கத்தினை விடுத்து அதன் எதிர்மறை பொருளுக்கு வேறொரு வாசகத்தின் துணையுடன் விளக்குவதை த.்.வீல் என்ற பதம் குறித்து நிற்பதாகச் சுட்டிக்காட்டுகின்றனர்.

**தப்ஸீர் கலை தோற்றம்**

- தப்ஸீர்க் கலையின் தோற்றத்தையும் அதன் வளர்ச்சியையும் 5 கட்டங்களாக வகுத்து விளங்க முடியும்.

- **நபி (ஸல்) அவர்களின் காலம்**

- அல்குர்ஆன் வசனங்களுக்கான விளக்கம் (தப்ஸீர்) கூறும் முறை, முதல் முறையாக வஹி இறங்கியதுடன் ஆரம்பமானது. முஹம்மது (ஸல்) அவர்கள் மூலமாகவே அல்குர்ஆன் உலகுக்கு வழங்கப்பட்டது என்ற வகையில், அவர்கள் அதனை முழுமையாக மனனமிடவும், ஓதும் முறையினைத் தெரிந்து கொள்ளவும், அவற்றின் தெளிவுகளைப் பெறவும் அல்லாஹ்வினால் வழிகாட்டப்பட்டார்கள் என அல்குர்ஆன் (அல்கியாமா:17-19) குறிப்பிடுகின்றது.

- அதன் கருத்துக்களையும் சட்ட ஒழுங்குகளையும் தமது தோழர்களுக்கு நபி (ஸல்) அவர்கள் தெளிவுபடுத்தும் முதல் 'முபஸ்ஸிர்' ஆகக் காணப்பட்டார்கள். அவ்வாறு செய்யுமாறு அல்லாஹ் அவர்களுக்குக் கட்டளையிட்டிருந்தான். (அந்நஹ்ல்:44)

- முஹம்மது (ஸல்) அவர்கள் அல்குர்ஆனின் அனைத்து வசனங்களுக்கும் விளக்கமளித்துள்ளார்கள் என இமாம் இப்னு தைமியா (ரஹ்) (கி.பி.1263-1328) குறிப்பிடுகின்றார், எனினும் அல்குர்ஆனின் சில பகுதிகளுக்கு மட்டுமே விளக்கமளித்துள்ளார்கள் என இமாம் ஜலாலுத்தீன் அஸ்ஸுயூதி தெரிவிக்கின்றார்.

- **நபித்தோழர்களின் காலம்**

- முஹம்மத் (ஸல்) அவர்களின் மரணத்தின் பின்னர் அல்குர்ஆன் வசனங்களை புரிந்து கொள்வதில் எதிர்நோக்கும் பிரச்சினைகளின்போது நபித்தோழர்கள் அதற்கான விளக்கங்களை முன்வைத்தனர். எனினும், நபித்தோழர்கள் அனைவரும் அல்குர்ஆனை விளங்குவதில் ஒரே தரத்தில் இருக்கவில்லை. அதனை விளங்கிக்கொள்வதில் அவர்களின் அறிவு மட்டங்களுக்கேற்ப வித்தியாசங்கள் காணப்பட்டன. அல்குர்ஆன் முழுவதற்குமான விளக்கம் தெரியும் என எவரும் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளவில்லை.

  - நபித் தோழர்கள் அல்குர்ஆனை விளங்குவதற்கு பின்வரும் வழிமுறைகளை கையாண்டுள்ளனர்.

1. அல்குர்ஆனை அல்குர்ஆன் மூலம் விளங்குதல் (முஜ்மல்-முபஸ்ஸல், முத்லக் - முகய்யத் தெளிவில்லாத வசனங்களை ஒன்று திரட்டி விளங்குதல், அல்குர்ஆன் ஓதப்படுகின்ற முறையை அவதானித்து விளங்குதல்)
2. முஹம்மது (ஸல்) அவர்களிடம் கேட்டுத் தெரிந்துக்கொள்ளல், சுன்னாவின் துணைகொண்டு அல்குர்ஆனை விளங்குதல்
3. இஜ்திஹாதின் மூலம் அல்குர்ஆனை விளங்குதல்

- நபித்தோழர்களில் தப்ஸீர்த்துறை ஆசிரியர்கள்

- நபித்தோழர்களில் சிறப்பித்துக் கூறும் வகையில் அல்குர்ஆனுக்கு விளக்கம் அளிக்கும் பலர் இருந்தனர். அவர்களுள் அபூபக்ர் (றழி), உமர் (றழி), உஸ்மான் (றழி), அலி (றழி), இப்னு மஸ்ஊத் (றழி), இப்னு அப்பாஸ் (றழி), உபை பின் க.்ப் (றழி), ஸைத் பின் ஸாபித் (றழி), அபூ மூஸா அல் அஷ்அரி (றழி) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். இவர்கள் தவிர வேறு நபித்தோழர்களும் தப்ஸீர்த் துறையில் ஈடுபட்டுள்ளனர். எனினும், அவர்களது பங்களிப்பு மேற்குறிப்பிட்டவர்களின் பங்களிப்பைவிடக் குறைவானதாகும். அவர்களுள் அனஸ் பின் மாலிக் (றழி), ஆயிஷா (றழி), அபூ ஹுரைரா(றழி), அப்துல்லாஹ் பின் சுபைர் (றழி), ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (றழி), அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னு ஆஸ் (றழி) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

- நபித்தோழர்களின் தப்ஸீர்த் துறைப் பணிகள் - ஒரு மதிப்பீடு. நபித்தோழர்களின் தப்ஸீர்க் கருத்துக்கள் அல்குர்ஆனை விளக்குவதில் மிக முக்கிய பங்கினை வகிக்கின்றன.அவர்களின் தப்ஸீர் கருத்துக்கள் தப்ஸீர் பில் ம.்சூர் என் அழைக்கப்படுகின்றன. இமாம் ஹாகிம் (ரஹ்)அவர்கள் நபித் தோழர்களின் தப்ஸீர்த் துறைக் கருத்துக்கள் மர்பூ.் தரத்தை சேர்ந்தவை எனக் குறிப்பிடுகின்றார். மேலும், அல்குர்ஆனின் விளக்கங்களை இரண்டு வகையில் நோக்கமுடியும். முதல் வகை, அல்குர்ஆன் வசனங்களைக் கொண்டே விளங்க முடியுமானவை. இரண்டாம் வகை, நபி (ஸல்) அவர்களினதும் தோழர்களினதும் கருத்துக்களைக் கொண்டு விளங்க முடியுமானவை. இந்தவகையில் நோக்குமிடத்து நபித்தோழர்களின் கருத்துக்கள் அல்குர்ஆனை விளக்குவதில் பாரியளவிலான பங்களிப்பைச் செய்துள்ளன. இக்கருத்தினை இமாம் சர்கஸி (ரஹ்) ''அல் புர்ஹான் பீ உலூமில் குர்ஆன்'' எனும் நூலில் குறிப்பிட்டுள்ளமை கவனிக்கதக்கது. அதன்படி,

1. நபித் தோழர்கள் அல்குர்ஆன் முழுவதற்கும் விளக்கம் கூறவில்லை. விளங்க முடியாத வசனங்களுக்கு மட்டுமே விளக்கம் அளித்துள்ளனர். அதாவது, முஹம்மத் (ஸல்) அவர்களின் மரணத்தின் பின் எழுந்த புதிய சவால்கள், பிரச்சினைகள் ஆகியவற்றைத் தீர்ப்பதற்கு இஜ்திஹாதின் ஊடாகக் கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

2. அல்குர்ஆனில் விளங்கமுடியாதவை எனச் சுட்டிக்காட்டப்பட்டவை மிகவும் அரிதானவையாகும்.

3. நபித் தோழர்களுக்கு அல்குர்ஆனை ஆழமாக விளங்க வேண்டிய தேவையேற்படவில்லை. எனவே, பொதுவாகவும் சுருக்கமாகவும் அதிகமான பகுதிகளை விளங்கியிருந்தனர்.

4. ஷரீஆ சட்ட விதிகள் தொடர்பான கருத்துக்கள் முரண்பாடுகள் இவர்களிடம் மிகவும் அரிதாகவே இருந்துள்ளன. அவர்கள் இஸ்லாமியக் கொள்கையில் கொண்டிருந்த பற்று இதற்குக் காரணமாகும். கருத்து முரண்பாடுகள் நபித்தோழர்களின் காலத்தின் பின்னரே வளர்ச்சி கண்டன.

5. நபித் தோழர்களின் காலப்பகுதியில் தப்ஸீர்த் தொடர்பான கருத்துக்கள் தொகுக்கப்பட்டு இருக்கவில்லை. தப்ஸீர்த் தொகுப்பு முறை ஹிஜ்ரி இரண்டாம் நூற்றாண்டிலேயே தோற்றம் பெற்றது. எனினும், இப்னு அப்பாஸ் (றழி), அலி(றழி) ஆகியோரிடம் தப்ஸீர் கருத்துக்கள் தொகுக்கப்பட்டிருந்தன. பிற்பட்ட காலப்பகுதியில் ஷீஆ பிரிவினர் அதனை அல்குர்ஆனின் ஒரு வழிமுறையாகக் கருதினர். (இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களின் தப்ஸீர்க் கருத்துக்கள், பிற்காலத்தில் அல்-பைரூஸ் ஆபாதி (ரஹ்) அவர்களால் தொகுக்கப்பட்டன.)

6. நபித் தோழர்களின் காலப்பகுதியில் தப்ஸீர் என்பது ஹதீஸ்களின் ஒரு அங்கமாகவே காணப்பட்டது. தப்ஸீருக்கென தனியான நெறிமுறை காணப்படவில்லை. தப்ஸீர்க் கருத்துக்கள் யாவும் ஒரு ஒழுங்கில் இருக்கவுமில்லை. மாறாக அவை சில அல்குர்ஆன் வசனங்களுக்கான கருத்துக்களாகவே காணப்பட்டன. உதாரணமாக, தொழுகை பற்றிய ஹதீஸ்கள் தொகுக்கப்படும் போது அவற்றில் தப்ஸீர் தொடர்பான கருத்துக்களும் இணைக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டலாம்.

**தாபிஈன்களின் காலம்**

- நபித்தோழர்களைத் தொடர்ந்து தாபிஈன்கள் அல்குர்ஆனை விளங்குவதிலும், விளக்குவதிலும் கூடுதல் கவனம் செலுத்தினர். முஹம்மது (ஸல்) அவர்களது மரணத்தின் பின் சுமார் ஒரு நூற்றாண்டுவரை நபித்தோழர்கள் இஸ்லாமிய கொள்கைப் பிரசாரத்தின் மூலம் அதிகமான பிரதேசங்களை இஸ்லாமிய அரசின் கீழ் கொண்டுவந்தனர். இப்பிரதேசங்களில் மக்கள் எதிர்நோக்கும் சமூக, அரசியல், பொருளாதார சவால்கள், பிரச்சினைகள் ஆகியவற்றைத் தீர்ப்பதற்கு அல்குர்ஆன் மற்றும் ஹதீஸை வழியாகக் கொண்டிருந்தனர். அவற்றில் தெளிவு கிடைக்காத போது நபித்தோழர்களின் கருத்துக்களை நாடினர். அதிலும் போதியளவிலான தெளிவினைப் பெறுவதற்கு முடியாதபோது, இஜ்திஹாதை உத்தியாகக் கையாண்டு தப்ஸீர் கருத்துக்களை முன்வைத்தனர்.

- இஸ்லாமிய அரசு விரிவான நிலப்பரப்பைத் தன்னகத்தே கொண்டு வந்த போது நபித் தோழர்கள் தாம் சுமந்துள்ள புனித தீனுல் இஸ்லாத்தின் கொள்கையைப் போதிப்பதற்குச் சொந்த இடங்களில் இருந்து வெளியேறிச்சென்றனர். அந்த இடங்களில் இஸ்லாத்தையும் அல்குர்ஆனையும் போதித்து வந்தனர். அத்தகு சந்தர்ப்பங்களில் தப்ஸீர் வகுப்புக்களை பல நகரங்களில் தோற்றுவித்தனர். அவற்றின் ஆசிரியர்களாக நபித் தோழர்களே காணப்பட்டனர். தாபிஈன்கள் அவர்களின் மாணவர்களாக இருந்தனர். அவ்வகுப்புக்கள் பிரதான நகரங்களை மையப்படுத்தி அமைந்திருந்தன. அவற்றுள் பிரபல்யம் பெற்ற தப்ஸீர் சிந்தனைக் குழுக்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

  1. மக்காவை மையமாகக் கொண்ட தப்ஸீர் வகுப்பு
  2. மதீனாவை மையமாகக் கொண்ட தப்ஸீர் வகுப்பு
  3. ஈராக்கை மையமாகக் கொண்ட தப்ஸீர் வகுப்பு

- மக்காவில் இடம்பெற்று வந்த தப்ஸீர் வகுப்பின் முதல்வராக அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (றழி) அவர்கள் காணப்பட்டார். அவரிடம் ஸஈத் இப்னு ஜுபைர் (றழி), முஜாஹித், இக்ரிமா - (இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களின் சேவகர்), தாவூஸ் இப்னு கைஸானில் யமானி, அதாஃ இப்னு ஆபூ ரபாஹா (ரஹ்) ஆகியோர் கற்றுவந்தனர். இவர்களுக்கு அல்குர்ஆனின் சொற்பிரயோகம், அவை இறங்கியமைக்கான காரணங்கள் போன்றவற்றினை அடிப்படையாகக் கொண்ட எழுதப்படாத பாடத்திட்டம் ஒன்று காணப்பட்டது. அப்பாஸ் (றழி) அவர்களிடம் கற்கும் மாணவர்கள் தாம் அறிந்து கொண்ட கருத்துக்களை அப்பாஸ் (றழி) இடம் கற்றுக்கொண்டதாகக் குறிப்பிட்டு பிறருக்கு அறிவிப்பார்கள். இங்கு தாபிஈன்கள் இஸ்னாத் தொடருடன் தாம் விளங்கிய கருத்துக்களை முன்வைக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர்.

- மதீனாவில் நிறைய நபித்தோழர்கள் இருந்தமையால் ஏனைய நகரங்களைவிட இங்கு தப்ஸீர்த்துறை வளர்வதற்கான சாத்தியப்பாடு அதிகமாகக் காணப்பட்டது. தாபிஈன்கள் பிற நாடுகளுக்குச் சென்று தப்ஸீர் விளக்கங்கள் பெறவேண்டிய அவசியம் ஆரம்ப கட்டத்தில் இருக்கவில்லை. இஸ்லாமிய சமூக அமைப்புக்கான அடித்தளம் மதீனாவில் இடப்பட்டது என்றவகையில் மதீனாவில் இறக்கப்பட்ட வசனங்களின் கருத்துக்களை நபித்தோழர்களிடமிருந்து பெற்றுக் கொள்வது இலகுவாக இருந்தமையும் இங்கு இத்துறை வளர்ச்சியடையக் காரணமாயிற்று. மதீனாவில் இயங்கிய தப்ஸீர் வகுப்பு, உபை பின் கஃப் (றழி) அவர்களின் தலைமையில் நடைபெற்று வந்தது. இதில் மூத்த ஸஹாபாக்களும் இளைய தாபிஈன்களும் பங்கேற்றனர். இவர்களில் ஸைத் இப்னு அஸ்லம், அபுல் ஆலியா, முஹம்மத் இப்னு கஃபி அல் குரழி (ரஹ்) ஆகிய மூவரும் முக்கியமானவர்களாகக் காணப்பட்டனர்.

- ஈராக் ஆரம்பகால இஸ்லாமிய வரலாற்றில் மிக முக்கிய பிரதேசமாக விளங்கியது. இங்கு கூபா, பஸரா ஆகிய நகரங்கள் கல்வி மேம்பாட்டுப் பிரதேசங்களாகக் காணப்பட்டன. இஸ்லாம் அறிமுகமானவேளையில் மக்களின் அறிவு விருத்தியில் இஸ்லாமியச் சிந்தனைகள் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தின். இப்னு மஸ்ஊத் (றழி) அவர்கள் கலிபா உமர் (றழி) அவர்களால் அரசின் பிரதிநிதியாகவும், ஆசிரியராகவும் கூபா பிரதேசத்துக்கு நியமிக்கப்பட்டிருந்தார். இப்னு மஸ்ஊதின்

அறிவும் திறமையும் மக்களின் வாழ்வில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தின. அந்தவகையில் இப்னு மஸ்ஊத் (றழி) இப்பிரதேசத்தில் தப்ஸீர் வகுப்புக்களை ஆரம்பித்த முதல் மனிதராகக் கருதப்படுகிறார். பொதுவாக கூபா மக்கள் சிந்தனா ரீதியாக பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் பிரசித்தி பெற்றிருந்தனர் என்ற வகையில் அவர்களின் சிந்தனைக் கிளரல்களை ஒருமுகப்படுத்துவதில் இப்னு மஸ்ஊத் (றழி) அவர்கள் பாரியளவிலான பங்களிப்பினைச் செய்துள்ளார். அவரது தப்ஸீர்த் துறைப் பாசறையில் வளர்ந்தவர்களாக அல்கமா இப்னு கைஸ், மஸ்ரூக், அல் அஸ்வத் இப்னு, முரத்துல் ஹமதானி, ஆமிர் ஸுஃபி, ஹஸனுல் பஸரி, கத்தாதா இப்னு திஆமா (ரஹ்) ஆகியோர் காணப்பட்டனர்.

- தாபிஈன்களின் தப்ஸீர்ப் பண்புகள்- தாபிஈன்களின் தப்ஸீர் கருத்துக்கள் தப்ஸீர் பில்மஃசூர், தப்ஸீர் பிர்ரஃயி ஆகிய இரு வகையான வடிவங்களையும் கொண்டுள்ளன. இக்காலத் தப்ஸீர் ஆசிரியர்களின் விளக்கங்களிலிருந்து மூன்று வகையான பண்புகளை அவதானிக்க முடிகிறது.

1. புதிதாக இஸ்லாத்தை ஏற்றவர்களில் அநேகர் யூத, கிறிஸ்தவ சமயச் சிந்தனையைக் கொண்டவர்களாக இருந்தமையால் அவர்கள் அல்குர்ஆனை விளங்கும் போதும் பிறருக்கு முன்வைக்கும் போதும் அவர்களின் இயல்பு நிலையிலிருக்கும் சமய, வரலாற்று நிகழ்வுகளைத் துணையாகக்கொண்டு விளக்க முனைந்தனர். இதனால் இஸ்ராஈலிய்யத்துக்கள் தப்ஸீரில் தாக்கம் செலுத்தின.

2. தப்ஸீர் வகுப்புக்களின் தோற்றத்தின் காரணமாக தப்ஸீர் விளக்கங்கள தாபிஈன்களின் சீடர்களினால் பாதுகாக்கப்பட்டு அடுத்தவருக்கு அறிவிப்புச் செய்யப்படும் முறை வளர்ந்தது. இங்கு மூன்று பிரதான ஸஹாபாக்களின் தலைமையில் மூன்று நகரங்களில் தப்ஸீர் சிந்தனைப் பிரிவுகள் தோற்றம் பெற்று வளர்ந்தன. இதனால் மூன்று பிரதேசத் தப்ஸீர்களின் போக்குகளிலும் பாரியளவு வித்தியாசங்கள் காணப்படுகிறன.

3. இக்காலப்பகுதியில் அகீதாவில் முரண்பட்ட சிந்தனைகளின் தோற்றமும் தப்ஸீரை மையபடுத்தி தோன்றியிருந்தமை மற்றுமொரு முக்கிய விடய மாகும். உதாரணமாக, கதாதா (றழி) அவர்களின் தப்ஸீர் விளக்கங்கள் ''கழா கத்ர்'' தொடர்பாக அமைந்ததால் அவர் கதரிய்யாப் பிரிவைச் சேர்ந்தவர் என ஊகிக்கும் நிலை உருவானது.

**தபஉத்தாபிஈன்கள் காலம்**

- தப்ஸீர் நூலாக்கம்: ஹிஜ்ரி முதலாம் நூற்றாண்டின் இறுதி காலப்பிரிவில் தப்ஸீர் கருத்துக்கள் நூல் வடிவம் பெற ஆரம்பித்தன. இமாம் ஸஈத் பின் ஜுபைர் அவர்களின் தப்ஸீர் கருத்துக்கள் முதன் முதலில் நூலாக்கம் பெற்றன. எனினும் ஹிஜ்ரி 90 இல் மரணித்த அபுல் ஆலியா என்பவருக்குரிய தப்ஸீர்தான் முதலில் நூல் உருப்பெற்றது என்ற கருத்தும் காணப்படுகிறது.

- ஹிஜ்ரி இரண்டாம் நூற்றாண்டில் தப்ஸீர் கருத்துக்கள் ஒன்று சேர்க்கும் பணி பாரியளவில் மேற்கொள்ளப்பட்டன. அவைகள் ஹதீஸ் தொகுப்புகளில் சேர்ந்து காணப்பட்டன. இப்னு ஹாரூன் அஸ்ஸலமீ, ஷிஃபத் இப்னு ஹஜ்ஜாஜ், வகீஃ.

இப்னு ஜர்ராஹ், இப்னு உபாதா அல்பஸரி, அப்துர்ரஸ்ஸாக் இப்னு ஹம்மாம் ஆகியோர் இதில் பங்களிப்புச் செய்துள்ளார்கள்.

- ஹிஜ்ரி மூன்றாம் நூற்றாண்டில் தர்தீப் திலாவதில் குர்ஆன் ஒழுங்கில் தப்ஸீர் கருத்துக்கள் தொகுக்கப்பட்டன. இதில் இமாம் இப்னு மாஜா(ஹி: 273), இமாம் தபரி (ஹி:310), இமாம் இப்னு அபீ ஹாதிம் (ஹி:327) போன்றோர் ஈடுபட்டிருந்தனர்.

- இக்கால தப்ஸீர் ஆசிரியர்கள் பல விடயயங்களில் கவனம் செலுத்தினர்.
  - ஸலபுகளின் விளக்கங்களுக்கு முரண்படாத வகையில் விளக்கினர்.
  - வசனங்களுக்கு முஹம்மத் (ஸல்), ஸஹாபாக்கள், தாபிஈன்கள் முன்வைத்த விளக்கங்களை ஆராய்ந்து உறுதிப்படுத்தினர்.
  - தத்தமது அரசியல், சமயக் கொள்கைகளின் அடிப்படையில் பிரிந்து அதற்குரியவாறு நம்பகத்தன்மையற்ற ஹதீஸ்கள், கருத்துக்கள் மூலம் விளக்கங்களை முன்வைப்பதிலிருந்து பாதுகாத்தல்
  - பல மொழி பேசுவோர் இஸ்லாத்தை ஏற்றிருந்த போது தூய அரபு மொழியின் செல்வாக்கு இழந்து காணப்பட்டது. அவற்றை பாதுகாப்பதற்கான செயல் திறன்.
- 3- 14ம் நூற்றாண்டு வரை வெளிவந்த தப்ஸீர்கள்
  இக்கால பிரிவில் வெளிவந்த தப்ஸீர்கள் பெரும்பாலானவை “ தப்ஸீர் பில்ம.்.சூர்” தப்ஸீர் பிர்ர.்.யி வகைகளைச் சார்ந்தவையாகவே காணப்பட்டன. பின்வரும் தப்ஸீர்கள் தப்ஸீர் பில்ம.்.சூர் வகையில் பிரபல்யமானவைகள்:

1. ஜாமிஉல் பயான் பி தப்ஸீரில் குர்ஆன்- இமாம் தபரி (ரஹ்)
2. பஹ்ருல் உலூம் - இமாம் ஸமர்கந்தி (ரஹ்)
3. தப்ஸீருல் குர்ஆனில் அழீம் - இமாம் இப்னு கஸீர் (ரஹ்)
4. அத்துர்ருல் மன்ஸூர் பித்தப்ஸீரில் ம.்.சூர் - இமாம் ஜலாலுத்தீன் அஸ்ஸுயூதி (ரஹ்)
5. அல்ஜவாஹிருல் ஹிஸான் பி தப்ஸீரில் குர்ஆன் - இமாம் அப்துர் ரஹ்மான் அஸ்ஸ.்.லபி (ரஹ்)
6. அல் முஹர்ரருல் வஜீஸ் பி கிதாபில் அஸீஸ் - இமாம் இப்னு அதிய்யா (ரஹ்)

- அத்தபரி (ரஹ்) அவர்களின் தப்ஸீர் நூலே “ஜாமிஉல் பயான் பீ தப்ஸீரில் குர்ஆன்” ஆகும். இவர் வரலாற்றுத்துறையின் தந்தையாக கருதப்படுவது போலவே தப்ஸீர் துறையின் தந்தையாகவும் கருதப்படுகிறார். இப்னு ஹல்லிகான் (ரஹ்) (கி.பி. 1211-1282) அவர்கள் இவர் பற்றிக் குறிப்பிடும் போது” இமாம் தபரி அவர்கள் முஜ்தஹிதுகளில் ஒருவர் மட்டுமன்றி, எந்தவொரு இமாமையும் பின்பற்றாதவர்” என்கிறார். இவருக்கென்று தப்ஸீர் துறையில் தனியான போக்குண்டு. அவரைச் சூழ அறிஞர் குழவொன்று காணப்படுகின்றது.அக்குழுவினர் “ஜரீரிய்யூன்” எனச் சிறப்பித்து அழைக்கப்படுகின்றனர்.

- இமாம் தபரி (ரஹ்) அவர்களின் தப்ஸீர் அனைத்து தப்ஸீர்களுக்கும் முதன்மையானது. தப்ஸீர் தபரியைப் போல வேறு எந்தவொரு நூலும் இத்துறையில் தொகுக்கப்படவில்லை என்பதில் இஸ்லாமிய சமூகம் ஒன்றுபட்டிருக்கிறது என இமாம் நவவி (ரஹ்) (கி.பி 1235) குறிப்பிடுகின்றார்.

- இமாம் தபரி (ரஹ்) அவர்கள் வெறும் சிந்தனா ரீதியாக மட்டும் அல்குர்ஆனை விளக்க முற்படுவதை மறுக்கின்றார். ஏனெனில், அல்குர்ஆன் முன்வைக்கும் யதார்த்த

பூர்வமான கருத்துக்களை விளக்க முன், அது இறங்கிய காலப்பகுதிக்குரிய மக்களின் பின்னணி பற்றிய அறிவு அவசியம் என்றும் அதற்கு முறையான ஸலபுகளின் கருத்துக்கள் அவசியம் என்றும் வலியுறுத்துகின்றார்.

- இமாம் தபரி (ரஹ்) அவர்களின் தப்ஸீர் நூாலை இலக்கண விதிகளை முன்வைக்கும் நூலாகவும் பார்க்க முடியுமென இலக்கண வல்லுனர்கள் குறிப்பிடுகின்றனர். இத்தப்ஸீர் இலக்கண விதிகளுடன் மட்டும் நிறுத்திக்கொள்ளாது இலக்கிய நயங்களையும் மொழிப் பிரயோகங்களையும் துல்லியமாக எடுத்துரைக்கிறது. மேலும், இமாம் தபரி (ரஹ்) அவர்கள் பிக்ஹ் கலை தொடர்பான கருத்துக்களையும் ஆய்வு செய்கின்றார்.

**தப்ஸீர் பில் ம.்.சூர் வலுவிழந்தமைக்கான காரணிகள்**

தப்ஸீர் பில் ம.்.சூர் வகையான விளக்கங்களுக்காக முன்வைக்கப்பட்ட ஹதீஸ்களில், சிலபோது முஹம்மத் (ஸல்), தோழர்கள், தாபிஈன்கள் ஆகியோரின் கருத்துக்களில் பலவீனமான நிலை காணப்படுவது ஆய்வுபூர்வமாக இனங்காணப்பட்டுள்ளது. இப்பலவீனத்துக்கான காரணிகளை பின்வருமாறு குறிப்பிட முடியும்.

அ. அதிகமான புனைந்துரைகள் சேர்க்கப்பட்டமை

ஆ. அரசியல் ரீதியிலான பிளவுகள்

இ. இஸ்லாத்தின் எதிரிகளின் சதி முயற்சி

ஈ. இஸ்ராஈலிய்யத்துக்கள் நுழைந்தமை

உ. இஸ்னாதுகள் துண்டிக்கப்பட்டு மதன் மாத்திரம் சேர்த்துக் கொள்ளப்பட்டமை

**தப்ஸீர் பிர்ர.்.யி அல் மஹ்மூத்**

அல்குர்ஆன் வசனங்களுக்கு''இஜ்திஹாத்'' மூலம் முன்வைக்கப்படும் விளக்கத்தை குறிப்பதற்கு தப்ஸீர் கலையின் பண்பாட்டிலுள்ள வார்த்தைப் பிரரயோகம் தப்ஸீர் பிர்ர.்.யி என்பதாகும். இவ்வகை விளக்கங்கள் முற்றாக தவிர்க்கப்பட வேண்டும் என்றும் ஏற்கப்பட வேண்டும் என்றும் இருவகைக் கருத்துக்கள் காணப்படுகின்றன.

- தப்ஸீர் தொடர்பான அறிவிப்புக்கள் தொகுக்கப்பட்ட காலப்பகுதியிலிருந்தே தப்ஸீர் பிர்ர.்.யி வகையான தப்ஸீர்களும் எழுதப்பட்டன. அவை ஒவ்வொன்றினதும் போக்குகளும் தப்ஸீர் ஆசிரியர்களின் சிந்தனைகளுக்கு ஏற்ப வித்தியாசப்படுகின்றன. அவ்வக்கால சமூகச் சூழலுக்கான வழிகாட்டல்களாகவும், சமூகப் பிரச்சினைகளைத் துல்லியமாக தீர்த்து வைப்பதற்கு உதவும் வகையிலும் அவை காணப்பட்டன. எனினும், அவையாவும் பாதுகாக்கப்பட்டுள்ளனவா என நோக்கும் போது, இஸ்லாமிய உலகம் அவை அனைத்தையும் பாதுகாப்பதில் அக்கறை காட்டவில்லை என்பது புலனாகிறது. அதனால் பல அறிவுப் பொக்கிசமான தப்ஸீர் நூல்கள் அழிந்துவிட்டன. இவ்வகைத் தப்ஸீர் நூல்களில் பின்வரும் தப்ஸீர்கள் மட்டுமே வாசிக்கக் கிடைக்கின்றன. அவையாவன,

1. மபாதிஹுல் கைப் - இமாம் பக்ருத்தீன் அர்ராஸி (ரஹ்)
2. அன்வாருத்தன்ஸீல் வஅஸ்ராருத் த.்.வீல் - இமாம் பைழாவி (ரஹ்)
3. மதாரிகுத்தன்ஸீல் வஹகாஇகத் த.்.வீல் - இமாம் அன்னிஸ்பி (ரஹ்)
4. லுபாபுத் த.்.வீல் பி மஆனித் தன்ஸீல் - இமாம் அல் காஸின் (ரஹ்)
5. அல்பஹ்ருல் முஹீத்- இமாம் அபூ ஹய்யான் (ரஹ்)
6. கராஇபுல் குர்ஆன் வரகாஇபுல் புர்கான் - இமாம் நைஸாபூரி (ரஹ்)

7. தப்ஸீர் ஜலாலைன்-இமாம் ஜலாலுத்தீன் மஹல்லி, ஜலாலுத்தீன் அஸ்ஸுயூதி(ரஹ்)

8. அஸ்ஸராஜுல் முனீர் - இமாம் அஸ்ஸர்பீனி (ரஹ்)
9. இர்ஸாதுல் அக்லிஸ் ஸலீம் இலா மஸாயா அல்கிதாபில் கரீம் - இமாம் அபூ ஸ.்.த் (ரஹ்)

10. ரூஹுல் மஆனி - இமாம் ஆலூஸி (ரஹ்)

- **அத்தப்ஸீர் பிர்ர.்.யில் மத்மூம்:** தப்ஸீர்க் கலை வளர்ச்சியில் பகுத்தறிவை மட்டும் பயன்படுத்தி விளக்கும் முறையும், பகுத்தறிவுடன் முன்னையவர்களின் கருத்துக்களைக் கொண்டு விளக்கும் முறையும் தோற்றம் பெற்றன. பகுத்தறிவு வாதத்திற்கு மட்டும் முன்னுரிமை கொடுத்து மார்க்கத்தை விளக்க முற்பட்ட போது பல கோட்பாட்டு ரீதியிலான புதிய கருத்துக்கள் உருவெடுத்தன. அவற்றை நிறுவுவதற்கு ஊடகமாக அல்குர்ஆனைப் பயன்படுத்தினர். அவற்றில் மு.்.தஸிலா மற்றும் ஷீஆ சிந்தனை தப்ஸீர்கள் முக்கியமானவைகளாகும்.

**தப்ஸீர் சூபி:** தஸவ்வுப் என்பது உலகப் பற்றற்ற வாழ்வையும் பாவங்களிலிருந்து தவிர்ந்து (ஆன்மீக) அல்லாஹ்வை நேசிப்பதையும் குறிக்கும். இச்சிந்தனைப் போக்கு இஸ்லாம் அறிமுகமான காலம் முதல் வழக்கிலிருந்து வந்துள்ளது. ஹிஜ்ரி 2ம் நூற்றாண்டில் அபூ ஹாஷிம் (கி.பி. 771) என்பவர் இதனை ஒரு கோட்பாடாக முன்வைத்தார். இக்கோட்பாட்டை பின்பற்றுவோர் சூபி எனும் பெயர்கொண்டு அழைக்கப்பட்டனர். இதன் பின்னர் இதுபற்றிய கருத்துக்களும் ஆய்வு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டதுடன் தனித்துவமான துறையாக தஸவ்வுப் வளர ஆரம்பித்தது. பிற்பட்ட காலங்களில் தஸவ்வுப் எனும் பெயரில் தவறான துறவறப் போக்கும், பிழையான பின்பற்றல் முறைகளும் உருவெடுத்ததோடு தூய்மையான சூபி சிந்தனையின் போக்கில் பிற மதங்களினதும் சித்தாந்தங்களினதும் கோட்பாடுகள் நுழைய ஆரம்பித்தன. இதனடிப்படையில் தஸவ்வுப் கோட்பாட்டை இரு வகைப்படுத்தி நோக்க முடியும்.

1. தஸவ்வுப் நழ்ரி: அறிவுபூர்வமான தஸவ்வுப் சிந்தனை

2. தஸவ்வுப் அமலி: செயற்றிறன் மிக்க தஸவ்வுப் சிந்தனை

சூபி சிந்தனையின் அடிப்படையில் வந்த தப்ஸீர்களில் பின்வருவன முக்கியமானவைகளாகும்

- கராஇபுல் குர்ஆன் - இமாம் அந்நைஸாபூரி (ரஹ்)
- ரூஹுல் மஆனி - இமாம் ஆலூஸி (ரஹ்)
- தப்ஸீருல் குர்ஆனில் அழீம் - இமாம் துஷ்தரி (ரஹ்)
- அல்-பஸுஸ் - இமாம் இப்னு அரபி (ரஹ்)
- ஹகாஇகுத் தப்ஸீர்- அபூ அப்துர் ரஹ்மான் அஸ்ஸமி (ரஹ்)
- கராஇசுல் பயான் - அபூ முஹம்மது ஸீராஸ் (ரஹ்)
- அத்த.்.வீலாத் நஜ்மிய்யா- நஜ்முத்தீன் தாயத்

**பிக்ஹ் துறைத் தப்ஸீர்கள்**

பிக்ஹ் தொடர்பான வசனங்களை அல்குர்ஆன் உள்ளடக்கியதன் நோக்கம் அவற்றை உரிய முறையில் விளங்கி வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும் என்ற இலட்சியத்திற்காகும். முஹம்மத் (ஸல்) அவர்களது காலப்பகுதியில் ஸஹாபாக்கள் அவற்றை அறபுமொழியின் பின்னணியுடன் விளங்கினார்கள். விளங்குவதற்குச் சிரமமான வசனங்களை முஹம்மத் (ஸல்) அவர்களிடம் நேரடியாகக் கேட்டுத் தெரிந்து கொள்வர். நபியின் மரணத்தைத் தொடர்ந்து புதிய வகையான பிரச்சினைகளைச் சந்தித்த போது அவற்றை "இஸ்தின்பாத்" மூலம் முடிவுகளைப் பெற்றுத் தீர்த்துக் கொண்டனர். அதாவது, குறிப்பிட்ட பிரச்சினையை விளங்கி, அதுபோன்ற விடயங்களைக் குறிப்பிடும் வசனங்களைின் கருத்துக்களைத் தெளிவாக விளங்கி பின்னர் தமது அறிவின் அடிப்படையில் உளச்சீருடன் தீர்வுகளை கண்டுகொண்டனர். அல்குர்ஆன், அஸ்ஸுன்னா மூலம் தீர்வு காணமுடியாத போது "இஜ்திஹாத்" மூலம் தீர்வு பெறுவார்கள். சிலபோது எடுக்கப்படும் முடிவுகளுக்கு எல்லா நபித்தோழர்களும் ஒன்றிணைவதும் வேறுபட்டிருப்பதும் அவர்களிடையே பாரியளவிலான பிரச்சினையை ஏற்படுத்தவில்லை

- தாபிஈன்களது காலப்பிரிவில் பிக்ஹ் என்பது தனித்துறையாக வளரவில்லை. மவாலிகள் தாம் எதிர்நோக்கும் சட்ட ரீதியான பிரச்சினைகளுக்கு ஆட்சியாளர்களைத் தேடிவரும் போது அவர்கள் பின்வாங்கினர். அரசு வேறு, மார்க்கம் வேறு என்ற சிந்தனைத் தோற்றம் பெறலாயின. இதனால் இக்காலப்பிரிவு அறிஞர்கள், முஹத்திஸீன்கள் பொதுமக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் கவனம் செலுத்தினர். மவாலிகள் பல்வேறு நாகரிகங்களின் செல்வாக்கிற்குட்பட்ட அறபு மொழியில் புலமை குன்றியவர்களாகவும் இருந்ததனால் முஜ்தஹிதுகளின் கவனம் மார்க்கம் தொடர்பான விடயங்களில் அதிகரிக்கலாயிற்று. இமாம்களின் சிந்தனைகளின் பின்னணியில் பல மாணவர்கள் வளர்த்தெடுக்கப்பட்டனர். எனினும், அவர்கள் புதிய கருத்துக்களைக் கூறவில்லை. குருவைப் பின்பற்றும் தக்லித் நிலையிலேயே இருந்தனர். மேற்குறிப்பிட்ட முஜ்தஹிதுகள் ஷரீஆ சட்டம் தொடர்பான கருத்துக்களை அல்குர்ஆனை முதன்மை ஆதாரமாகக் கொண்டு முன்வைத்தனர். அதனடியே பிக்ஹ்த் துறைசார் தப்ஸீர்கள் தோற்றம் பெற்றன.

**தேர்ச்சி 3.0 : அல்குர்ஆன் ஸுன்னாவை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியடைந்த கலைகளை அறிந்து அவற்றின் தோற்றத்துக்கு ஏதுவாய் அமைந்த காரணிகளை விபரிப்பார்**

**தேர்ச்சி மட்டம் 3.3 : ஹதீஸ் ஒரு தனிக் கலையாக வளர்ச்சி பெறுவதற்குக் காரணமாய் அமைந்த பின்னணியை விளக்குவார்**

**பாடவேளைகள் : 14**

**கற்றல் பேறுகள் :**

- ஹதீஸ்- ஸுன்னா - கபர் போன்ற பதங்களை விளக்கிக் கூறுவார்.
- ஹதீஸின் முக்கியத்துவத்தை ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டுவார்.
- ஹதீஸ்கலை தோன்றி வளர்ந்த முறையினை விளக்கிக் கூறுவார்.
- ஹதீஸ்கள் பாதுகாக்கப்பட்டு தொகுக்கப்பட்ட ஒழுங்கினை விபரிப்பார்.
- அதன் வளர்ச்சிக் கட்டங்களை எடுத்துக்காட்டி ஒவ்வொரு காலகட்டத்திலும் தோன்றிய விருத்தியையும், பிரதான முஹத்திஸீன்களையும், ஹதீஸ் நூல்களையும் பட்டியற்படுத்துவார்.
- கலாசார ஒருமைப்பாட்டைப் பேணுவதில் ஹதீஸ்களின் பங்கினை உதாரணம் காட்டி விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

- ஹதீஸ் என்ற அரபுப் பதம் செய்தி, புதியவை, உரையாடல் எனும் மொழிக்கருத்துக்களில் பிரயோகிக்கப்படுகிறது.
- இஸ்லாத்தில் இப்பதம் ''நபி(ஸல்) அவர்களுடைய சொல், செயல், அங்கீகாரம், வர்ணனைகள், பண்புநலன்கள்'' என்பவற்றைக் குறிப்பதற்கே பயன்படுத்தப்படுகின்றது.
- ஸுன்னா என்ற அரபுப் பதம் வாழ்க்கை வழி, மார்க்கம், நியதி, முறைமை, ஒழுங்கு, வழக்கம், நடைமுறை எனும் மொழிக்கருத்துக்களில் பிரயோகிக்கப்படுகின்றது. இஸ்லாத்தில் இப்பதம் ''நபி முஹம்மது (ஸல்) அவர்கள் காட்டிச் சென்ற வாழ்க்கை முறைமையைக் குறிக்கின்றது''
- ஹதீஸ், ஸுன்னா ஆகிய இரு பதங்களையும் பொதுவாக முஹத்திஸீன்கள் ஒரே கருத்திலேயே பிரயோகிக்கின்றனர். வேறுபடுத்திக்காட்டுவோர் ஸுன்னா நபி (ஸல்) அவர்களது வாழ்க்கை முறைமை எனவும் ஹதீஸ் அவற்றின் பதிவு எனவும் குறிப்பிடுகின்றார்கள்.
- ஹதீஸ் என்ற பதம் 'கபர்' 'அஸர்' எனும் சொற்களிலும் பிரயோகிக்கப்பட்டுள்ளது. எனினும் குராஸான் பிரதேசத்து அறிஞர்கள் 'கபர்' என்ற சொல்லை ஹதீஸ் என்ற கருத்திலும் 'அஸர்' என்ற சொல்லை நபித்தோழர்களின் வாக்குகளும் முடிவுகளும் என்ற கருத்திலும் குறித்துக்காட்டியுள்ளார்கள்.

**ஹதீஸ் கலையின் தோற்றமும் வளர்ச்சியும்**

- ஹதீஸ் அல்லது ஸுன்னா எனப்படுவது நபியவர்களின் வாக்கையும் வாழ்வையும் குறிப்பதாகும். நபியவர்களின் வாழ்க்கை முறை முழுவதும் ஸுன்னா; அவர்கள் மற்றவர்களுக்குச் சொன்னவை ஹதீஸ் என்பதாகும். நபியவர்கள் செயல் முறைகளை ஸுன்னா குறிக்க அவற்றின் பதிவு ஹதீஸ் எனப்படும். நபி (ஸல்) அவர்களின் நுபுவ்வத் முதல் அவரது வபாத் வரை அவர் மொழிந்தவை, செய்து காட்டியவை, அங்கீகரித்தவை அனைத்தும் ஹதீஸ்களுள் அடங்குகின்றன. அவரின் வபாத்தோடு ஹதீஸ் முற்றுப்பெற்றாலும் அவர்களது வாழ்க்கை முறை எல்லா முஸ்லிம்களாலும் எல்லாக் காலத்திற்கும் பாதுகாக்கப்படவும் பின்பற்றப்படவும் வேண்டிய நிலை இருந்தமையால் இன்றுவரை அதனைப் பாதுகாக்கும் முயற்சியில் ஒவ்வொரு காலப்பகுதியிலும் வாழ்ந்த முஸ்லிம்கள் ஈடுபட்டு வந்துள்ளனர். இப்பாதுகாப்பு முயற்சியே ஹதீஸ்கலை வரலாறாக வளர்ச்சி அடைந்துள்ளது.

- ஹதீஸ் தொகுக்கப்பட்ட வரலாறு நபி முஹம்மது (ஸல்) அவர்களது நுபுவ்வத்திலிருந்து ஆரம்பமாகி இன்றுவரை தொடர்கின்றது.

- இவ்வரலாற்றின் தோற்றம், அதைப் பெற்றுக் கொள்ளுதல், பாதுகாத்தல், ஏனையோருக்கு அறிவித்தல், ஹதீஸ்களைத் திரட்டுதல்,நூலுருப்படுத்தல், போலிகளிலிருந்து அதனைத் தூய்மைப்படுத்தல், தொகுத்து எழுதுதல், விளக்கி விரிவுரை எழுதுதல் போன்ற அம்சங்கள் உள்ளடங்குகின்றன.

**நபி(ஸல்) அவர்களது காலம்**

- நபி(ஸல்) அவர்களது நபித்துவத்திலிருந்து அவரது வபாத் வரையுள்ள காலப்பகுதி ஹதீஸின் வரலாற்றில் நபி(ஸல்) அவர்களது காலமாக கணிக்கப்படுகிறது. இக்காலப் பகுதியில் தான் ஹதீஸ்கள் வெளியாகின. நபி(ஸல்) அவர்களிடமிருந்து வெளியாகிய ஹதீஸ்களை நபித்தோழர்கள் பெற்றுக்கொள்வதில் மிகத் தீவிர ஆர்வமும் ஈடுபாடும் காட்டினார்கள். உதாரணம் திண்ணைத்தோழர்களின் நடவடிக்கைகள்.

- நபி(ஸல்) அவர்களது காலத்தில் ஹதீஸ்களைப் பாதுகாப்பதற்கு மிக முக்கியமான மூன்று வழிமுறைகள் நபித்தோழர்களினால் பின்பற்றப்பட்டமையைக் கண்டுகொள்ள முடிகின்றது.
  1. மனனமிடுதல்
  2. எழுதிப்பாதுகாத்தல்
  3. வாழ்க்கையில் நடைமுறைப்படுத்திப் பாதுகாத்தல்.

- திண்ணைத் தோழர்கள், உம்மஹாதுல் முஃமினீன்கள், நபிகளாரின் பணியாட்கள், தனிப்பட்ட அடிப்படையில் தோழர்கள் மனனத்தின் மூலம் ஹதீஸ்களைப் பாதுகாத்து வழங்கினார்கள்.

  உதாரணம்: நபி (ஸல்) அவர்களது மனைவிமார்களான உம்மஹாதுல் முஃமினீன்கள், பெண்கள் சம்பந்தமான போதனைகளை மனனத்தில் பாதுகாத்து வழங்கியதைக் குறிப்பிடலாம்.

- மனனத்தின் மூலம் ஹதீஸ்களைப் பாதுகாப்பதன் சிறப்பைச் சிலாகித்து நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள்.
  "40 ஹதீஸ்களை மனனஞ் செய்பவன் நாளை மறுமையில் ஞானிகளுடன் எழுப்பப் படுவான்."

- ஜாஹிலிய்யாக் கால அரபு நாட்டில் எழுதும் வழக்கம் உடையவர்கள் எண்ணிக்கையில் குறைந்த அளவிலேனும் இருந்துள்ளனர் என்பதை க.்.பதுல்லாவில் தொங்கவிடப்பட்ட கவிதைத் தொகுப்புக்கள், உடன்படிக்கைகள், கடிதங்கள் நிரூபிக்கின்றன.

- நபி(ஸல்) அவர்களுடைய காலத்தில் ஹதீஸ்களை எழுதிப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை நபித்தோழர்கள் மேற்கொண்டார்கள் என்பதற்கு வரலாற்றாதாரங்கள் காணப்படுகின்றன.

i) அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி) அவர்கள் ஒரு முறை நபி(ஸல் அவர்களிடம் சென்று "நான் ஹதீஸ்களில் சிலவற்றை விளங்கிவைக்க விரும்புகின்றேன். அவற்றை எனது மனனத்தோடு ஒப்பிட்டு எழுதிவைக்கவும் விரும்புகின்றேன். அதுபற்றி தங்களது கருத்தென்ன? என வினவினார்கள். அதற்கு நபி(ஸல்) அவர்கள், எழுதுவதில் தவறில்லை, ஆனால் "என்னைப்பற்றி மனமுரண்டாகப் பொய்யுரைக்கின்றவன் நாளை மறுமையில் நரகைத் தங்குமிடமாக எடுத்துக்கொள்வான்." எனக் கூறினார்கள்.

இதற்குப் பின்னர் அப்துல்லாஹ் இப்னு உமர்(ரழி) அவர்கள் ஹதீஸ்களை எழுதிக் கொண்டதாகவும் அவ்வாறு எழுதிக்கொண்ட ஹதீஸ்களை உள்ளடக்கிய திரட்டுக் களை தாபிஈன்கள் கண்டதாகவும், அவருடைய திரட்டு, "ஸஹீபா ஸாதிகா" என அழைக்கப்பட்டதாகவும் வரலாற்றாதாரங்கள் குறிப்பிடுகின்றன.

ii) அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னுல் ஆஸ் (ரழி) அவர்கள் நபி(ஸல்) அவர்களது ஹதீஸ்கள் அனைத்தையும் எழுதிக் கொள்ளும் வழக்கம் உடையவராக இருந்தார். "நபி (ஸல்) அவர்கள் சுகதுக்க வேளைகளில் கூறுகின்றவற்றையுமா எழுதிக் கொள்கின்றீர்? எனத் தோழர்கள் கேட்டபோது, நபி(ஸல்) அவர்களிடம் சென்று இது பற்றி முறைப்பாடு செய்து, சந்தேகத்தைத் தீர்த்துக் கொண்டார்.
"அல்லாஹ்வின் மீது ஆணையாக இந்த வாயிலிருந்து உண்மையைத் தவிர வேறு எதுவும் வெளிவராது." என நபி(ஸல்) அவர்கள் இவருக்குக் கூறினார்கள். இதன் மூலம் மேற்படி தோழர் எழுதிக் கொள்வதை நபி (ஸல்) அவர்கள் அனுமதித்துள்ளார்கள் என்பது நிரூபிக்கப்படுகிறது. இவ்வாறு நபித் தோழர்களுள் நாற்பதுக்கு அதிகமானவர்கள் ஹதீஸ்களை எழுதிப்பாதுகாத்ததாக வரலாற்றா தாரங்கள் கூறுகின்றன.

- ஹதீஸ்களைப் பாதுகாக்கும் விடயத்தில் நபி (ஸல்) அவர்களது காலத்தில் பின்பற்றப்பட்ட மிகவும் சிறந்த ஒரு வழிமுறை தோழர்கள் தமது வாழ்க்கையில் ஹதீஸ்களை அல்லது நபி (ஸல்) அவர்களின் வழிமுறைகளைப் பின்பற்றிவந்தமையாகும். தோழர்கள் நபி (ஸல்) அவர்களை அணு அணுவாகப் பின்பற்றினார்கள் என்பதனை அஷ்-ஷிபா எனும் நூலில் பதிவாகியுள்ள பின்வரும் வரலாற்றுச் சம்பவம் நிரூபிக்கின்றது.

- ஒருமுறை நபி(ஸல்) அவர்கள் தொழுகையை நடாத்திக் கொண்டிருக்கும் போது தமது பாதணிகளை ஒருபுறமாகக் கழற்றி வைத்தார்கள். இதை அவதானித்த தோழர் களும் தமது பாதணிகளையும் கழற்றி வைத்தார்கள். தொழுகை முடிந்ததும் நபி (ஸல்) அவர்கள் தோழர்களை நோக்கி "நீங்கள் ஏன் உங்களது பாதணிகளை கழற்றி வைத்தீர்கள்? எனக்கேட்டபோது "யா ரசூலல்லாஹ்! நீங்கள் செய்ததனாலேயே நாங்களும் அவ்வாறு செய்தோம் எனக் கூறினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் எனது பாதணியில் நஜீஸ் இருப்பதாக ஜிப்ரீல் (அலை) அவர்கள் அறிவித்ததனாலேயே நான் அவ்வாறு செய்தேன்." எனக் கூறினார்கள். இங்கு தோழர்கள் நபி (ஸல்) அவர்களை அணுவணுவாகப் பின்பற்றி வந்துள்ளார்கள் என்பதை உணர்ந்துகொள்ள முடிகின்றது.

**ஸஹாபாக்கள் காலம்**

- நபி (ஸல்) அவர்களது வபாத்திலிருந்து அதாவது ஹிஜ்ரி 11ஆம் ஆண்டிலிருந்து ஸஹாபாக்கள் காலம் ஆரம்பித்து ஹிஜ்ரி 100 ஆம் ஆண்டுவரை அல்லது கடைசி ஸஹாபி வபாத்தாகும் வரை இக்காலம் தொடர்கிறது. இக்காலம் ஆட்சிப்பரவலின் அடிப்படையிலும், சூழ்நிலை மாற்றங்களின் அடிப்படையிலும் முன்னைய காலத்தைவிட வித்தியாசமான தன்மைகள் கொண்டனவாகக் காணப்பட்டது.

- நபித்தோழர்கள் ஹதீஸின் அல்லது நபிகளாரின் வழிமுறைகளின் பாதுகாப்பிற்கும், ஏனையவர்களுக்கு அதனை சென்றடைய வைப்பதற்கும் தம்மால் ஆற்ற வேண்டிய பங்களிப்புக்களை அரசியல் மட்டத்திலும், தனிப்பட்டவகையிலும் சிறந்த முறையில் மேற்கொண்டு இன்று வரை முஸ்லிம் உம்மத்தினர் ஹதீஸ்களைப் பெற்று இஸ்லாத்தின் வழியிற் செல்ல வழிவகுத்தார்கள்.

**தாபிஈன்கள் காலம்**

- ஸஹாபாக்களை அடுத்து ஹதீஸ்துறைக்குப் பங்களிப்புச் செய்தவர்கள் தாபிஈன்களாவர். தாபிஈன்கள் காலம் ஹிஜ்ரி 100 லிருந்து ஆரம்பமாகி ஹிஜ்ரி 150 அல்லது ஹிஜ்ரி 200 வரை தொடர்கிறது எனக்கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

- தாபிஈன்கள் காலத்தின் ஆரம்பத்தில் ஹதீஸ் துறை எதிர்கொண்ட பிரச்சினைகளுக்கான காரணங்கள்

1. குலபாஉர் ராஷிதூன்களுக்குப் பின்னர் ஆட்சிபீடம் ஏறிய உமையா ஆட்சியாளர்களில் ஒரு சிலரின் மோசமான நிலை.
2. குலபாஉர் ராஷிதூன்கள் ஹதீஸின் பாதுகாப்பு விடயத்தில் கைக்கொண்ட முயற்சி கள் கைவிடப்பட்டமை.
3. ஒரு நூற்றாண்டு காலம் வரை ஹதீஸ்கள் கோர்வை செய்யப்படாமை இதனால் போலியானவை தோன்றின. பகுத்தறிவின் அடிப்படையில் தீர்ப்புகூறும் அளவிற்கு நிலைமை மோசமாகியது.

- உமையாக்கள் வரிசையில் ஹிஜ்ரி 99ஆம் ஆண்டு உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் ஆட்சிபீடமேறியதன் பின்னர் இப்பிரச்சினையைத் தீர்த்து வைத்தார்கள். இதற்கடிப்படைக் காரணம் இவரது பெற்றோரது வழிநடத்தலும், அவரது பரம்பரையும், அவர் கல்விகற்ற சூழலும், கற்ற துறைகளுமாகும். அவர் தனது

ஆட்சியில் அரசியல் பொருளாதார, சமூக, அறிவியல், ஒழுக்கப்பண்பாட்டுத் துறைகளில் எல்லாம் மாபெரும் சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார். இந்த வரிசையில் தாபிஈன்கள் காலத்தின் ஆரம்பத்தில் ஹதீஸ்துறை எதிர்நோக்கிய பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வொன்றையும், பாதுகாப்பொன்றையும் வழங்கினார்.

- உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் ஹதீஸ்களை ஒன்றுதிரட்டி எடுப்பதற்கான முயற்சிகளை ஆரம்பித்து வைத்தார்கள்.

- "ரஸூல் (ஸல்) அவர்களின் ஹதீஸையும் ஸுன்னாவையும் தேடிக்கண்டுபிடியுங்கள், ஏனெனில் நான் அறிவின் மறைவையும் அறிஞர்களின் பிரிவையும் அஞ்சுகிறேன்." என மதீனாவின் கவர்னருக்கு அவர் எழுதியிருந்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது இதனை உறுதிப்படுத்துகின்றது.

- உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் ஹதீஸ்துறையில் ஈடுபாடு கொண்ட அறிஞர்களையும் ஹதீஸை ஒன்றுதிரட்டும் பணியில் ஈடுபடுத்தியமைக்கு "இமாம் ஷிஹாபுத்தீன் சுஹ்ரி" என்பவர் தூண்டப்பட்டதைக் குறிப்பிடலாம்.

- கிலாபத்தின் நாலா பகுதிகளிலும் ஹதீஸ்களை ஒன்றுதிரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடியவர்களை அக்காலப்பகுதியில் காண முடிந்தது.

- ஹதீஸ்களை ஒன்றுதிரட்டும் பணியில் பாரிய பங்களிப்புக்களைச் செய்த தாபிஈன்கள் காலத்து அறிஞர்கள் ஹதீஸின் தூய்மையைப் பேணுவதற்காக சில பாதுகாப்பு முறை களை அல்லது தூய்மை பேணும் முறைகளை அறிமுகஞ் செய்தார்கள். அவற்றுள் மிகப்பிரதானமான இரண்டு வழிமுறைகள் பின்வருமாறு.

1. இஸ்னாதைக் குறிக்கும் வழிமுறையை முதன் முதலில் நடைமுறைக்கு கொண்டு வந்தார்கள்.
2. ஹதீஸ்களை அறிவித்தவர்கள் எவராவது உயிருடன் இருந்தால் அவர்களை நேரடியாகச் சென்று சந்தித்து அதனை உறுதிப்படுத்திக் கொண்டார்கள்.

- தாபிஈன்கள் காலத்தில் ஹதீஸ்கள் ஒன்றுதிரட்டப்பட்டதனால் முஸ்லிம் சமூகத்தினருக்கு பல்வேறு சாதகமான சூழ்நிலைகள் உருவாகின.

1. முஸ்லிம் உம்மத்தினருக்கு முதன் முதலில் ஹதீஸ் கிரந்தங்கள் கிடைத்தன. முதலாவது கிடைத்த கிரந்தமாக அதிகமான இஸ்லாமிய அறிஞர்களினால் குறிக்கப்படுவது இமாம் மாலிக் (ரஹ்) அவர்களின் 'முஅத்தா' என்ற கிரந்தமாகும்.
2. தாபிஈன்கள் காலத்தின் ஆரம்பத்தில் ஹதீஸ்துறை எதிர்நோக்கிய பிரச்சினைகளில் இருந்து விடுதலை பெறக்கூடிய சூழ்நிலை உருவாகியது.
3. பகுத்தறிவின் அடிப்படையில் மார்க்கப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. அல்குர்ஆன் அல்லது ஹதீஸின் அடிப்படையில் அவை தீர்க்கப்படவேண்டும் என்ற கருத்தை உறுதிப்படுத்த முடிந்தது.
4. அடுத்துவரக்கூடிய ஹதீஸ்துறை அறிஞர்களுக்கு ஹதீஸ் துறைக்குப் பங்களிப்புக் களைச் செய்ய இவர்களது பணிகள் முன்மாதிரியாக அமைந்தன.

- தாபிஈன்கள் காலத்து அறிஞர்கள் தாம் திரட்டிக்கொண்ட ஹதீஸ்களை 'முஸ்னத்'

அடிப்படையிலேயே நூலுருப்படுத்தினார்கள். ஒரு முஹத்திஸ் தான் திரட்டிக்கொண்ட ஹதீஸ்களை அறிவிப்பாளரின் பெயரொழுங்கின் அடிப்படையில் நூலுருப்படுத்திக் கொள்வதை ‘‘ ‘முஸ்னத்’ வடிவத்தில் நூலுருப்படுத்துதல்’’ என்பது குறிக்கின்றது.

**தபஉத்தாபிஈன்கள் காலம்**

- ஹதீஸ்கள் பல்வேறு வகைகளாக வகைப்படுத்தி வழங்கப்பட்டமை.

1. முன்னைய காலங்களைவிட ஹதீஸ்களைப் பாதுகாத்தல், ஒன்றுதிரட்டல், நூலுருப் படுத்தல், விளக்கமளித்தல் போன்ற காரியங்களை மேற்கொள்கின்றபோது இக்காலத்து அறிஞர்கள் பரந்த ஒரு நோக்கத்தின் அடிப்படையில் இம்முயற்சிகளில் ஈடுபட்டார்கள். அதாவது நபி (ஸல்) அவர்களது வாழ்க்கை வழிமுறைகள் அனைத்தும் முஸ்லிம் சமூகத்தினருக்குத் தேவை என்ற அடிப்படையில் இப்பணியில் ஈடுபட்டார்கள்.

2. தபஉத்தாபிஈன்களது காலத்திற்கு முன்னைய காலங்களில் ஹதீஸ்களோடு சேர்த்து அதற்குரிய விளக்கங்களை எழுதிக் கொள்கின்ற ஒரு நடைமுறை பின்பற்றப்பட்டது. இது ஹதீஸின் தூய்மைக்குப் பிரச்சினையாக அமைந்ததால் தபஉத்தாபிஈன்கள் காலத்து முஹத்திஸீன்கள் ஹதீஸ்களை மாத்திரம் குறித்துக்கொள்ளும் முறையை அறிமுகஞ் செய்தார்கள். இதனால் ஹதீஸின் தூய்மை பேணப்பட்டது.

3. தாபிஈன்கள் காலத்து முஹத்திஸீன்கள் தாம் திரட்டிக் கொண்ட ஹதீஸ்களை ‘முஸ்னத்’ அடிப்படையில் நூலுருப்படுத்தினார்கள். ஆனால் தபஉத்தாபிஈன்கள் காலத்து அறிஞர்கள் தாம் திரட்டிக் கொண்ட ஹதீஸ்களை ‘ஜாமிஉ’ அல்லது முஸன்னப் அடிப்படையிலேயே நூலுருப்படுத்தினார்கள். ஒரு முஹத்திஸ் தாம் திரட்டி எடுத்துக் கொண்ட ஹதீஸ்களைத் தலைப்புக்களின் அடிப்படையில் நூலுருப் படுத்தி வழங்குவதனை இது குறிக்கின்றது.

   ‘கிதாப்’ என்ற பெரிய தலைப்புக்களின் அடிப்படையிலும் ‘பாபுன்’ என்ற சிறிய தலைப்புக்களின் அடிப்படையிலும் இவர்கள் தொகுத்து எழுதினார்கள். இதனால் முஸ்லிம் சமூகத்தினர் தமக்குத் தேவையான ஹதீஸ்களை இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

4. போலியான ஹதீஸ்களை இனங்கண்டு கொள்ள ஹதீஸோடு தொடர்பான ஏனைய கலைகள் அறிமுகம் செய்யப்பட்டன. உதாரணமாக் அஸ்மாஉர் ரிஜால், இல்முல் ஜரஹ் வத்த.்.தீல், உஸூலுல் ஹதீஸ்

5. அஸ்ஸிஹாஹுஸ் ஸித்தா எனும் பரிசுத்த ஹதீஸ் திரட்டுக்கள் வழங்கப்பட்டமை.

**மௌழூஆத்களின் தோற்றமும் அவை ஏற்படுத்திய தாக்கமும்**

- ‘‘நபி (ஸல்) அவர்கள் சொல்லாத, செய்யாத, அங்கீகரிக்காதவற்றை, அவர்களது பண்புகளில், வர்ணனைகளில் அடங்காதவற்றை சொன்னதாகவும், செய்ததாகவும் அங்கீகரித்ததாகவும் பண்புகள், வர்ணனைகளில் அடங்குவதாக பொய்யாக குறித்துக் காட்டுவதனையே போலியான ஹதீஸ் என்பது குறிக்கின்றது.’’

- போலியான ஹதீஸ்கள் எப்போது தோற்றம் பெற்றன என்பதில் பின்வரும் மூன்று

கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

1. நபி (ஸல்) அவர்களது காலத்தில் பொய்யான ஹதீஸ்கள் தோன்றின.
2. அபூபக்ர், உமர்(ரழி) அவர்களது காலத்தில் பொய்யான ஹதீஸ்கள் தோன்றின.
3. உஸ்மான் (ரழி)அவர்களது ஆறு ஆண்டு ஆட்சியின் பின்னர் பொய்யான ஹதீஸ்கள் தோன்றின. இக்காலப்பகுதியில் தோற்றம் பெற்றதற்கான சான்றுகளே உள்ளன.

- போலியான ஹதீஸ்கள் துரித வேகத்தில் வளர்ச்சியடைந்தமைக்கு இரண்டு முக்கிய காரணங்கள் பின்வருமாறு.

1. குலபாஉர் ராஷிதூன் ஆட்சியாளர்கள் ஹதீஸின் பாதுகாப்பு, ஹதீஸின் தூய்மை விடயத்தில் கடைப்பிடித்த நடவடிக்கைகளை, அதன்பின்னர் வந்த ஆட்சியாளர்களில் ஒருசிலர் கைவிட்டமை.
2. ஒரு நூற்றாண்டு காலம் ஹதீஸ்கள் கோவை செய்யப்படாமையை விஷமிகள் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டமை.

**போலி ஹதீஸ்கள் தோன்றியதற்கான காரணங்கள்**

**அரசியல் ரீதியான காரணங்கள்**

- உஸ்மான் (ரழி) அவர்களின் ஆறு ஆண்டு ஆட்சிக்குப் பின்னர் இஸ்லாமிய அரசியலில் குழப்பங்களும் பிரச்சினைகளும் இஸ்லாத்தின் எதிரிகளால் உருவாக்கப்பட்டன. இதனைச் சாதிப்பதற்குப் பொய்யான ஹதீஸ்களை அரசியல் ரீதியாகத் தோன்றிய ஒவ்வொரு உட்பிரிவினரும் பயன்படுத்தினர். ஷீயாக்கள் என்றும், உமையாக்கள் என்றும் காரிஜ்கள் என்றும் முதல் மூன்று கலீபாக்களையும் ஆதரித்தோர் என்றும் இவர்கள் தம்மை இனங்காட்டிக் கொண்டனர். இவர்கள் உருவாக்கிய போலி ஹதீஸ்களுக்கு உதாரணம்:

1. ‘‘அலி (ரழி) எனது வாரிசுக்காரன், அவர் எனது சகோதரன், எனக்குப் பின்னால் தலைவராக வருபவர், நீங்கள் அவரது கட்டளைகளுக்குச் செவிமடுத்து அவருக்குப் பணிந்து நடந்துகொள்ளுங்கள்.’’ (பொய்யான ஹதீஸ்)
2. ‘‘நெருப்பு விறகை எரிப்பது போல அலியை நேசிப்பது பாவச் செயல்களை அழித்துவிடும்’’ (பொய்யான ஹதீஸ்)
3. ‘‘முஆவியா(ரழி)யை மிம்பரில் கண்டால் வாளால் வெட்டிவிடுங்கள்’’ (பொய்யான ஹதீஸ்)
4. ‘‘அல்லாஹ்விடத்தில் நம்பிக்கைக்குரியவர்கள் மூவர் நான், ஜிப்ரீல், முஆவியா’’ (பொய்யான ஹதீஸ்)

மேற்குறித்த அடிப்படையில் ஒவ்வோர் உட்பிரிவினரும் பொய்யான ஹதீஸ்களை அறிவித்ததனால் ஹதீஸின் தூய்மை பாதிக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல் நபி(ஸல்) அவர்கள் முஸ்லிம்கள் மத்தியில் கட்டிவளர்த்த ஒற்றுமையும், ஐக்கியமும், ஒருமைப்பாடும் சீர்குலைந்து போய்விட்டது. இன்றுவரை சீர்செய்ய முடியாத அளவிற்குத் தாக்கங்களை அது ஏற்படுத்தியுள்ளது. வரலாற்றில் காரிஜ்கள் பொய்யான ஹதீஸ்களை அறிவித்த மைக்குச் சான்றுகள் கிடையாது.

**ஸின்தீக்குகள் அல்லது இஸ்லாத்தின் எதிரிகளின் நடவடிக்கைகள்.**

- இஸ்லாத்தை அறிவியல் ரீதியாகவும், சிந்தனை கலாசார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் எதிர்க்கின்ற நோக்கத்தில் பொய்யான ஹதீஸ்களை அறிவித்த இஸ்லாத்தின் எதிரிகளே ஸின்தீக்கள் ஆவர். ஹலால், ஹராம், அகீதா, இபாதத் போன்ற பல்வேறு துறைகளில் பொய்யான ஹதீஸ்களை இவர்கள் அறிவித்தார்கள்.

இதற்கு உதாரணங்கள் பின்வருமாறு;

1. ''அல்லாஹ் தனது மார்பிலும் கரங்களிலுமுள்ள மயிர்களினால் மலக்குகளைச் சிருஷ்டித்தான்.'' (பொய்யான ஹதீஸ்)
2. ''அழகான முகத்தைப் பார்ப்பது இபாதத் ஆகும். (பொய்யான ஹதீஸ்)
3. ''அல்லாஹ் தன்னைச் சிருஷ்டிக்க நாடிய போது குதிரையைச் சிருஷ்டித்து அதனை ஓடச் செய்தான். பின்னர் குதிரையின் வியர்வையிலிருந்து தன்னைச்சிருஷ்டித்தான்''
   (பொய்யான ஹதீஸ்)

மேற்படி நடவடிக்கைகள் அனைத்தும் இஸ்லாமிய அகீதாவை, இஸ்லாமிய இபாதத்துக் களை, ஹலால், ஹராம் பற்றிய வரம்புகளை பாதிப்படையச் செய்தன. இன்றும் கூட முஸ்லிம்கள் இதன் தாக்கங்களுக்கு உட்பட்டு வருகின்றார்கள்.

**மொழி இனம், பிரதேசம், மத்ஹப்,இமாம் எனும் விடயங்களில் வெறிகொண்டவர்கள் இட்டுக்கட்டியவை.**

- பாரசீக மொழி தனது செல்வாக்கை இழந்து செல்கிறது எனக் கருதி அம்மொழியைப் பேசுகின்றவர்கள் தமது மொழிக்குச் சாதகமாகவும் அரபுமொழிக்கு எதிராகவும் பொய்யான ஹதீஸ்களை அறிவித்தார்கள். இதற்காதராமாக பின்வரும் பொய்யான ஹதீஸை குறிப்பிடலாம்.

  ''அல்லாஹ்வின் அர்ஷைத்தாங்கி இருப்பவர்கள் பாரசீக மொழியைப் பேசுகினறனர். அல்லாஹ் வஹி அருளும் போது மென்மையான விடயங்களை பாரசீக மொழியிலும் கடினமான விடயங்களை அரபு மொழியிலும் அருளுகிறான்''(பொய்யான ஹதீஸ்)

  அரபிகள் இதனை எதிர்த்து பின்வரும் பொய்யான ஹதீஸை அறிவித்தனர். ''அரபு சுவர்க்கத்தின் மொழி, அல்லாஹ்விடம் மிகவும் வெறுப்புக்குரிய மொழி பாரசீக மொழி'' (பொய்யான ஹதீஸ்)

- பிரதேச அடிப்படையில் வெறிபிடித்தவர்கள் இட்டுக்கட்டியவற்றுக்காகப் பின்வரும் பொய்யான ஹதீஸைக் குறிப்பிடலாம்.
  ''மக்கா மதீனா, பைதுல் முகத்தஸ், திமிஷ்க் (டமஸ்கஸ்) ஆகிய நான்கு நகரங்களும் இவ்வுலகத்தின் சுவர்க்க நகரங்களாகும்.'' (பொய்யான ஹதீஸ்)

- இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்களை ஆதரித்த ஒருவர் அவருக்குச் சாதகமாகப் பின்வரும் பொய்யான ஹதீஸை அறிவித்தார்.
  ''எனது உம்மத்தில் அபூஹனீபா இப்னு நுஃமான் என ஒருவர் தோன்றுவார். அவர் சமூகத்தின் ஒளி விளக்காவார்.'' (பொய்யான ஹதீஸ்)

- இமாம் ஷாபிஈ(ரஹ்) அவர்கள் பிரபல்யம் அடைவதைக் கண்டு மனவேதனைப்பட்ட மாற்று இமாமை ஆதரித்த ஒருவர் கூறினார்.
  "முஹம்மத் இப்னு இத்ரீஸ் என்ற ஒருவர் பிற்காலத்தில் எனது சமூகத்தில் தோன்றுவார். அவர் இப்லீஸைவிடவும் கேடுகெட்டவராக இருப்பார்.'' (பொய்யான ஹதீஸ்)

மேற்படி நடவடிக்கைகளினால் முஸ்லிம்களின் மத்தியில் பிளவுகள் உருவாகி அது, நபி(ஸல்) அவர்கள் மிகவும் கடினமாக உழைத்துக் கட்டியெழுப்பிய முஸ்லிம்களது ஐக்கியம், ஒற்றுமை சகோதரத்துவம் என்பன படிப்படியாக மறையக்காரணமாக அமைந்துவிட்டது.

**உபதேசிகளும் கதை கூறுபவர்களும் இட்டுக்கட்டியவை.**

- உபதேசிகள், கதை கூறுபவர்கள் மக்கள் மத்தியில் தாம் செல்வாக்குப் பெற்றுக் கொள்வதற்காகவும், தமது சொந்த நலன்களைப் பேணுவதற்காகவும் பொய்யான ஹதீஸ்களை அறிவித்தார்கள். இதற்காதாரமாக இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல், இமாம் யஹ்யா இப்னு முஈன் ஆகிய இருவரும் தனக்கறிவித்ததாக ஒரு உபதேசி அவ்விருவரதும் முன்னிலையிலேயே தனது உபதேசத்தில் அறிவித்த பின்வரும் பொய்யான ஹதீஸைக் குறிப்பிடலாம்.

‘‘யார் லாஇலாஹ இல்லல்லாஹ் என்று மொழிகின்றாரோ அதன் ஒவ்வொரு சொல்லுக்கும் அல்லாஹ் ஒவ்வொரு பறவையைச் சிருஷ்டிக்கின்றான்.
அப்பறவையின் சொண்டு தங்கத்தினாலும் இறக்கை நவரத்தினங்களினாலும் ஆக்கப்பட்டிருக்கும்.’’ (பொய்யான ஹதீஸ்)

- கதை கூறுபவர்கள் இட்டுக்கட்டியதற்குப் பின்வரும் பொய்யான ஹதீஸை குறிப்பிடலாம்.
‘‘நூஹ் நபியின் கப்பல் தூபான் வெள்ளத்தில் மிதந்து க.்.பதுல்லாஹ்வை ஏழுமுறை வலம்வந்து ஒருமுறை ஸுஜூது செய்தது.’’ (பொய்யான ஹதீஸ்)

மேற்படி பொய்யான ஹதீஸ்களினால் பாமர மக்கள் இஸ்லாத்தைத் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியது. இஸ்லாத்தை தவறாக விளக்கு கின்றவர்களுக்கு இடம் கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலையும் உருவாகியது. இவை இஸ்லாத்தின் வளர்ச்சிக்குத் தடையாக அமைந்தன.

**பிக்ஹிலும் இல்முல் கலாமிலும் கருத்து வேறுபாடு கொண்டவர்கள் இட்டுக்கட்டியவை.**

- பிக்ஹ், இல்முல் கலாம் போன்ற துறைகளில் கருத்து வேறுபாடு கொண்டவர்கள் தமக்குச் சார்பாகவும், எதிர்தரப்புடையவர்களை முறியடிக்கும் வகையிலும் பொய்யான ஹதீஸ்களை அறிவித்தார்கள். இதற்கு உதாரணமாக பின்வரும் பொய்யான ஹதீஸைக் குறிப்பிடலாம்.

‘‘எவர் தொழுகையில் தமது இரு கரங்களையும் உயர்த்துகின்றாரோ அவரது தொழுகை முறிந்துவிட்டது.’’ (பொய்யான ஹதீஸ்) இது ஹனபி மத்ஹபைச் சார்ந்த ஒருவர் அடுத்த மத்ஹபை சார்ந்தவர்களுக்கு எதிராக இட்டுக்கட்டிய பொய்யான ஹதீஸ் ஆகும்.

‘‘எவர் அல்குர்ஆன் படைக்கப்பட்டது என்று கூறுகிறாரோ அவர் காபிராகிவிட்டார்.’’ (பொய்யான ஹதீஸ்)

**மார்க்கத்தில் அறியாமையும் நல்லதைச் செய்யவேண்டும் என்ற ஆசையும் கொண்டவர்கள் இட்டுக்கட்டியவை.**

- வரலாற்றில் அரசியல் ரீதியாகவும், இயக்கரீதியாகவும், கொள்கைகளின் அடிப்படையிலும் பிரிந்தவர்களை நல்லிணக்கப்படுத்தும் நோக்கத்திலும், நாம் சார்ந்திருக்கின்ற விடயங்களில் ஈடுபடுத்தும் நோக்கத்திலும் பொய்யான ஹதீஸ்களை இட்டுக்கட்டினார்கள். இவ்வாறு இட்டுக்கட்டி கண்டுபிடிக்கப்பட்டவர்களிடம் இது பற்றி வினவியபோது ''நாங்கள் றஸூலுக்கு சார்பாக இட்டுக்கட்டினோம்'' என சமாதானம் கூறினார்கள். அதுமாத்திரமன்றி முஸ்லிம்கள் அல்குர்ஆனைப் புறக்கணித்து விட்டு இமாம்களது சட்டவிளக்கங்களிலும் வரலாற்றுத் துறைகளிலும் தமது கவனத்தைச் செலுத்துவதில் இருந்து அவர்களை விடுத்து அல்குர்ஆன் பக்கம் திரும்பி விடுவதற்காக இவ்வாறு புனைந்துரைத்ததாகவும் கருத்துத் தெரிவித்தார்கள். குலாம் கலீல் என்ற ஒருவன் திக்ரின் சிறப்பைப் பற்றிப் பொய்யான ஹதீஸ்களை அறிவித்தான். மக்களின் உள்ளங்களை நெகிழச் செய்து நன்மையின் பால் அவர்களைத் தூண்டுவதற்காக இவ்வாறு செய்ததாகத் தெரிவித்தான்.

**ஆட்சியாளர்களதும் செல்வந்தர்களதும் நலன் தேடுவதற்காக இட்டுக்கட்டப்பட்டவை.**

- ஒருசிலர் தமது வாழ்க்கையை கடத்துவதற்காக பொய்யான ஹதீஸ்களை அறிவித்துள்ளதைக் கண்டு கொள்ள முடிகின்றது. இதற்கு ஆதாராமாக பின்வரும் சம்பவத்தைக் குறிப்பிடலாம்.

  ''அப்பாஸிய கலீபா மஹ்தியிடம் ஏதாவது பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் இயாஸ் இப்னு இப்ராஹிம் என்பவன் அரண்மனைக்கு வந்தான். கலீபா புறாக்களுடன் விளையாடிக் கொண்டு இருப்பதைக் கண்ட அவன் இவரது இவ்விளையாட்டு இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது என உறுதிப்படுத்த உண்மையான ஹதீஸான "அம்பையும், குதிரையையும், ஒட்டகத்தையும் தவிர வேறு எதனையும் போட்டிக்கு விடுவது கூடாது" (அல்ஹதீஸ்) பறவைகளையும் எனும் சொல்லையும் இதனுடன் சேர்த்துக் கூறினான். இவர் உரைத்தது பொய்யானது என கலீபா அறிந்தும் கூட அவருக்குச் சன்மானம் வழங்கி அனுப்பிவைத்தார். அவன் பொய்யுரைக்க புறாக்கள் காரணமாக இருந்தன எனக் கருதி புறாக்களை அறுத்துவிடுமாறு கட்டளையிட்டார்.

**விளம்பரத்திற்காக அறிவிக்கப்பட்டவை.**

- ஒருசில வியாபாரிகள் தமது வியாபாரப் பொருட்களை விளம்பரப்படுத்திக் கொள்வதற்காகப் பொய்யான ஹதீஸ்களை அறிவித்தார்கள். மரக்கறி வியாபாரி ஒருவர் அறிவித்த பின்வரும் பொய்யான ஹதீஸை இதற்கு ஆதாரமாகக் குறிப்பிடலாம்.

  "எவன் கத்தரிக்காய் சாப்பிடுகின்றானோ, அவன் சுவர்க்கம் நுழைவான்"
  (பொய்யான ஹதீஸ்)

**ஸுன்னாவின் தூய்மையைப்பாதுகாக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்.**

- தபஉத்தாபிஈன்கள் காலத்து முஹத்திஸீன்கள் ஹதீஸின் தூய்மையையும், அதன் நம்பகத் தன்மையையும் பேணிக்கொள்வதற்காகவும், உண்மைக்கு முரணான ஹதீஸ்களை இனங்கண்டு கொள்வதற்காகவும் பின்வரும் திறனாய்வுக்கலைகளை

மேற்கொண்டார்கள்.

1. அஸ்மாஉர் ரிஜால்
2. இல்முல் ஜரஹ் வத்த.்.தீல்
3. உஸூலுல் ஹதீஸ்

## 1. அஸ்மாஉர் ரிஜால்

ஒரு ஹதீஸின் இஸ்னாத் பற்றி ஆராய்கின்ற கலையே அஸ்மாஉர்ரிஜால் எனக்குறிப் பிடப்படுகின்றது. " மனிதர்களது பெயர்கள்" என்ற மொழிக்கருத்தினை இப்பதம் கொடுத்தாலும் ஹதீஸ்துறையில் அது பின்வரும் கருத்தினையே கொடுக்கிறது.

"நபி முஹம்மத் (ஸல்) அவர்களிடமிருந்து ஹதீஸ்கள் அனைத்தும் வெளியாகியது முதல் அவை பெறப்பட்டு அறிவிக்கப்பட்டு, ஒன்றுதிரட்டப்பட்டு தொகுப்பாசிரியரினால் தொகுத்தெழுதப்படும் வரை யார் யாரெல்லாம் அதில் சம்பந்தப்பட்டார்களோ அவர்கள் அனைவரது வரலாறுகளையும் குறிக்கின்ற ஒரு கலையாக இது உள்ளது. அஸ்மாஉர் ரிஜால் மூலம் ஹதீஸ்களை அறிவித்தவர்களது முழுமையான தகவல்களை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பதனால் ஒரு ஹதீஸ் தொடர்பாக இறுதியானதொரு தீர்மானத் திற்கு வர அது உதவுகிறது."

*உதாரணம் 1:*

ஒரு ஸனதில் குறிப்பிடப்பட்டு இருக்கின்ற ஓர் அறிவிப்பாளர் அஸ்மாஉர் ரிஜாலில் அடங்காதவராக இருந்தால் இஸ்னாதில் ஒரு முறிவு ஏற்பட்டு இருக்கின்றது என்ற தீர்மானத்திற்கு வந்து குறித்த ஹதீஸை நிராகரிக்கப்பட வேண்டிய ஹதீஸின் பட்டியலில் சேர்த்துவிட முடிகின்றது.

*உதாரணம் 2:*

ஸனதில் அடங்குகின்ற இரு அறிவிப்பாளர்களுக்கிடையில் ஏற்படுகின்ற வரலாற்று ரீதியிலான முரண்பாட்டை இக்கலை வெளிப்படுத்தக்கூடியதாக இருப்பதால் ஹதீஸின் இறுதியான நிலை பற்றித் தீர்மானிக்க அஸ்மாஉர் ரிஜால் உதவுவதையும் குறிப்பிடலாம். இவ்வாறு அறிவிப்பாளர் வரிசையில் ஏற்படுகின்ற குறைகளை முரண்பாடுகளை அஸ்மாஉர் ரிஜால் இனங்காட்டி ஒரு ஹதீஸின் நம்பகத்தன்மையையும் தூய்மையையும் உறுதிசெய்து கொள்ள உதவுகின்றது.

## 2. இல்முல் ஜரஹ் வத்த.்.தீல்

ஒரு ஹதீஸின் மத்ன் பற்றியும், ஸனத் பற்றியும் ஆராய்கின்ற கலைகளுள் இல்முல் ஜரஹ் வத்த.்.தீலும் ஒன்றாகும் இத்துறையில் ஆராய்ச்சிகளை மேற்கொண்ட ஹதீஸ்கலை வல்லுனர்கள் பின்வரும் அடிப்படைகளில் அமையுமானால் அவ்வாறான ஹதீஸ்களை நிராகரிக்கக்கூடிய ஹதீஸின் வகைகளில் சேர்த்துக்கொள்ள முடியுமெனக் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

01. அரபிகளது, அதிலும் விசேடமாக குறைஷிகளது மொழி வழக்கிற்கு மாற்றமாக அல்லது தாழ்ந்த அரபு மொழிநடையில் வருபவை.
02. நபி (ஸல்) அவர்களது மொழிப் பிரயோகத்திற்கு அல்லது மொழிப் போக்கிற்கு மாற்றமாக வருபவை.
03. அறிவியல், ஒழுக்கவியல் கோட்பாடுகளுக்கும் புலன் உணர்வுகளுக்கும் முரணாகவும், இச்சையின்பால் தூண்டும் விதத்திலும் மருத்துவ வரலாற்று உண்மைகளுக்கு முரணாகவும் வருபவை.

04. அல்குர்ஆனின் தெளிவான கருத்துக்களுக்கு எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாதவாறு முரணாக வருபவை.
05. நபி (ஸல்) அவர்களது காலத்தில் நடந்த வரலாற்றுச் சம்பவங்களுக்கு முரணாக வருபவை.
*உதாரணம்*: கதீர்கும் என்ற இடத்தில் நபி (ஸல்) அவர்கள் அலி (ரழி) பற்றி கூறிய மௌழூவான ஹதீஸ்
06. ஹதீஸை அறிவிக்கும் அறிவிப்பாளர்களின் கொள்கைக்குச் சார்பானதாக இருத்தல்.
*உதாரணம்* : ஷீயாக்களில் ராபிழிகள் கூறிய அஹ்லுல் பைத்துக்களைப் பற்றியவை.
07. ஒரு சிறிய செயலுக்குப் பெரிய நன்மையையும், ஓர் அற்ப விடயத்திற்குக் கடுமையான தண்டனையையும் வழங்குவதாக மிகைப்படுத்திக் கூறப்பட்டவை.
08. எல்லோருக்கும் பொதுவான ஒரு விடயம் ஒருவரினால் மாத்திரம் அறிவிக்கப்பட்டு இருப்பவை.

- இவ்வாறு முஹத்திஸீன்கள் மத்னில் இடம்பெறக்கூடிய உண்மைக்கு முரணானவற்றை இனங்கண்டு கொள்ளும் வழிமுறைகளை அறிமுகப்படுத்திச் சென்றார்கள். இதனால் தரமான, தூய்மையான ஹதீஸ்களை முஸ்லிம் சமூகத்தினர் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது.

### 3. உஸூலுல் ஹதீஸ்

- தபஉத்தாபிஈன்கள் காலத்தில் ஹதீஸின் தூய்மையைப் பேணுவதற்காக அக்காலத்து அறிஞர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட மற்றொரு பாதுகாப்புக் கலையாக அமைவது உஸூலுல் ஹதீஸாகும். ஹதீஸின் அடிப்படை பற்றி ஆராய்கின்ற கலையாக இதனைக் குறிப்பிடலாம். இக்கலையில் ராவி- அறிவிப்பாளர், முஹத்திஸ்- ஹதீஸ் கலை அறிஞர், தாலிபுல் ஹதீஸ்- ஹதீஸை கற்போர்கள் போன்றோரது தகைமைகள் அடிப்படைகள் பற்றி எடுத்துக் கூறப்படுகின்றது. உஸூலுல் ஹதீஸ் கூறுகின்ற நிபந்தனைகளுக்கு, வரையறைகளுக்கு முரணாகின்ற வகையில் உள்ள எந்த ஹதீஸும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகைகளினுள் அடங்கமாட்டாது. ஆகவே இக்கலையும் அறிவிப்பாளர்களை யும், முஹத்திஸீன்களையும் ஹதீஸைக் கற்கின்ற மாணவர்களையும் சரியான முறையில் இனங்காட்டி தூய்மையான ஹதீஸ்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களை முஸ்லிம் உம்மத்தினருக்கு தருகின்றது.

- திறனாய்வுக் கலைகள் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக ஹதீஸ்கள் பின்வரும் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டன.
  1. முதவாதிரான ஹதீஸ்
  2. ஆஹாதான ஹதீஸ்

### முத்தவாதிர்

- முத்தவாதிரான ஹதீஸ் என்பது " ஒரு விடயத்தில் அவர்கள் பொய்யுரைத்தல் சாத்திய மாகாது என்று ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒவ்வொரு வகுப்பிலும் அதிகமான எண்ணிக்கையுடைய அறிவிப்பாளர்களால் அறிவிக்கப்படும் ஹதீஸ் ஆகும்". ஸனதின் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை இவ்விதி பேணப்படல் வேண்டும். இவ்வாறான ஹதீஸ் முஸ்லிம் அறிஞர்களால் மிக உறுதியான ஆதாரபூர்வமான ஹதீஸாகக் குறிக்கப்படுகின்றது.

**அல் - ஆஹாத்**

- அல் - ஆஹாத் என்ற அரபுப் பதம் அஹத் அல்லது வாஹித் என்ற அரபுப் பதத்தின் பன்மைச் சொல்லாகும். மொழிக் கருத்தில் ஒருவர் என்ற கருத்தைக் கொள்ளலாம். ஹதீஸின் அடிப்படையில் முத்தவாதிருடைய நிபந்தனைகளை அல்லது முதவாதிரான ஹதீஸின் ஸனதில் அடங்குகின்ற அறிவிப்பாளர்களின் எண்ணிக்கையை எவ்வகையிலும் அடையாத ஹதீஸ்களை இது குறிக்கும். ஒரு ஹதீஸ் ஆஹாதானது என நிரூபிக்கப் பட்டால் உஸூலுல் ஹதீஸின் சட்ட விதிகளின்படி ஆய்வு செய்யப்பட்ட பின்னரே அதனை ஏற்பதா மறுப்பதா என்ற தீர்மானம் பெறப்படும். ஆஹாதான ஹதீஸ்கள் பல உப பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு.

அ) அறிவிப்பாளர் வரிசைகளின் (ஸனத்கள்) எண்ணிக்கையைப் பொறுத்து பின்வரும் மூன்று பிரிவுகளாகப்பிரித்து நோக்குவர்.

1. அல் மஷ்ஹூர்
2. அல் அஸீஸ்
3. அல் கரீப்

- ஆஹாதான ஹதீஸ்களை ஓர் இஸ்னாத் சென்றடையும் முடிவிடத்தை கருத்திற் கொண்டு மூன்றாக வகைப்படுத்தலாம்.

1. மர்பூ.: : இஸ்னாத் முடிவற்றுத் தொடர்ச்சியாக நபி(ஸல்) அவர்கள் வ ை ர சென்று இணையும் ஹதீஸ்
2. மவ்கூப் : ஒரு ஹதீஸின் இஸ்னாத் ஸஹாபி வரை மட்டும் தொடர்ந்து செல்லுதல்
3. மக்தூ.: : ஒரு ஹதீஸ் தாபிஈ வரை சென்று அவரோடு நின்றுவிடுதல்.

- ஆஹாதான ஹதீஸ்கள் இஸ்னாதில் ஏற்படும் முறிவுகளின் அடிப்படையிலும் பல வகைகளுக்கு உட்படும்.

1. முர்ஸல் : ஒரு ஹதீஸின் தொடரில் ஸஹாபியை விட்டுவிட்டு ஒரு தாபிஈ நேரடியாக நபி (ஸல்) அவர்களிடமிருந்து அறிவிக்கும் ஹதீஸ்
2. முஅல்லக் : ஒரு இஸ்னாதின் ஆரம்பத்தில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அறிவிப்பாளர்கள் விடுபடுதல்
3. முன்கதி.: : ஒரு இஸ்னாதின் மத்தியில் ஓர் அறிவிப்பாளர் விடுபட்டிருத்தல்.
4. மு.:தல் : ஒரு இஸ்னாதில் தொடர்ச்சியாக இரண்டு அறிவிப்பாளர்கள் ஒரு இடத்திலோ அதற்கு மேற்பட்ட இடங்களிலோ விடுபட்டு இருத்தல்.

- ஆஹாதான ஹதீஸ்களைத் தரப்படுத்திக் கொள்ளும் விடயத்தில் இரண்டு முக்கிய அம்சங்கள் கருத்தில் கொள்ளப்படும்.

1. அறிவிப்பாளர் ஒழுக்க நெறியுள்ளவராக இருத்தல்
2. அறிவிப்பு சரியானதும், நுணுக்கமானதுமாக இருத்தல்.

இவ்விரண்டு பண்புகளும் இணைந்து காணப்படும் ஒருவர் ஹதீஸ் அறிவிப்பாளர்களில் நம்பிக்கையானவர் என அழைக்கப்படுவார். இவர்களது அறிவிப்புக்கள் பொதுவாக முஹத்திஸீன்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

- ஆஹாதான ஹதீஸ்கள் இவ்வாறான திறனாய்வுக்கும், தரப்படுத்தலுக்கும் உட்படுத்தப்

பட்டதன் விளைவாக அவை இரண்டு தரங்களாக வகைப்படுத்தப்பட்டன.
1. அல் மக்பூல் - ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய ஹதீஸ்
2. அல் மர்தூத் - நிராகரிக்கப்படக்கூடிய ஹதீஸ்

- **மக்பூலான ஹதீஸ்** என்பது சொல்லப்பட்ட ஒருவரின் நம்பகத்தன்மை வளமானதாக அமைகின்ற ஹதீஸ் வகையைக் குறிக்கின்றது. எனவேதான் இவை ஏற்றுக் கொள்ளப் படக்கூடிய வகையைச் சார்ந்ததாக அமைகிறது. இவை நம்பகரமானவையாகவும், ஆதாரபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்படக்கூடியனவாகவும், ஏற்று அமல் செய்யக்கூடியவன வாகவும், மார்க்கத்தின் அல்லது ஷரீஅத்தின் எல்லாத் துறைகளிலும் பிறருக்கும் ஏவக்கூடியனவாகவும் அமைகின்றன.

- **மர்தூதான ஹதீஸ்** மர்தூதான ஹதீஸ் என்பது சொல்லப்பட்ட செய்தியின் நம்பகத் தன்மை வலுக்குன்றியதாக அமைந்த ஹதீஸ் வகையைக் குறிக்கின்றது. இவ்வாறான ஹதீஸைப் பொறுத்தவரை அவற்றை ஆதாரமாக ஏற்கவோ, அதனடிப்படையில் அமல் செய்யவோ அல்லது செயலாற்றவோ, பிறருக்கு அவற்றை ஏவவோ முடியாது. ஆயினும் இவ்வாறான ஹதீஸ்களில் சில வகைகளை நிபந்தனைகளுடன் ஏற்றுக் கொள்ள முடியுமென ஹதீஸ்கலை வல்லுனர்கள் சிலர் குறிப்பிடுகின்றார்கள்.

- மக்பூலான ஹதீஸில், அந்த ஹதீஸின் தராதரங்களைப் பொறுத்து இரு பிரிவுகளாக வகைப்படுத்தப்படும்.
    1. அஸ் - ஸஹீஹ்
    2. அல் - ஹஸன்

**அஸ் - ஸஹீஹ் (சரியானவை, ஆதாரபூர்வமானவை)**

- ஆஹாதான ஹதீஸின் வகையில் தரத்திலும், பலத்திலும், நம்பகத்தன்மையிலும் கூடிய ஹதீஸ் அஸ்-ஸஹீஹான ஹதீஸாகும்.
  "நீதியும், நேர்மையும், உண்மையுமுள்ள, மனனசக்தி அல்லது எழுத்தாற்றல் உள்ள அறிவிப்பாளர்களினால், ஆரம்பமுதல் இறுதிவரை அறிவிப்பாளர் தொடர்புபடாமல் அறிவிக்கப்பட்ட, ஆதாரபூர்வமான ஹதீஸ்களுக்கு முரணில்லாத வகையில் அமைந்த, ஹதீஸின் கருத்து குறைகாணப்படும் விதத்தில் அமையாத ஹதீஸையே இது குறிக்கின்றது."

**அல்-ஹஸன்**

- ஆஹாதான ஹதீஸ் வகையில் ஸஹீஹுக்கு அடுத்ததாக அமைவது ஹஸனான ஹதீஸ்களாகும்.
  "ஒரு ஹதீஸ் ஸஹீஹானதாக இருப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற 'அல்-ழப்த்' எனும் பேணிப்பாதுகாக்கும் திறன் இலகுவானதாக அமைகின்ற அறிவிப்பாளர்களினால் அறிவிக்கப்படும் ஹதீஸ்" ஹஸன் எனப்படுகிறது.

- **நிராகரிக்கப்பட்ட ஹதீஸ்**
  மக்பூலான அல்லது ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஹதீஸ்களின் நியதிகளில் ஏதாவ தொன்றையேனும் இழக்கும் ஹதீஸ்களும், நிராகரிக்கப்படக்கூடிய ஹதீஸ்களிலேயே அடங்கும். இவ்வாறு நிராகரிக்கப்படுவதற்கு அடிப்படையான மூன்று காரணங்களைக்

குறிப்பிடலாம்.

1. அறிவிப்பாளரின் குறைபாடு
2. இஸ்னாதில் ஏற்படும் முறிவு
3. சந்தர்ப்பவசமான காரணங்களினால் ஏற்படும் பலவீனம்

- **அறிவிப்பாளர்களின் குறைபாடு**

  அறிவிப்பாளர்களின் குறைபாடு ராவிகள் தரப்படுத்தலின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படும்.

  நிராகரிக்கப்படக்கூடிய ஹதீஸ் வகையில் ளஈபான அல்லது பலவீனமான ஹதீஸின் பிரயோகம் பற்றி ஹதீஸ்கலை வல்லுனர்கள் பல்வேறு கருத்துக்களை முன்வைத்துள் ளார்கள். அல்லாஹ்வின் பண்புகள், சட்டம், நம்பிக்கை தொடர்பான விடயங்கள் தவிர்ந்த உபதேசங்கள், கதைகள், நன்மை தீமையோடு தொடர்பான விடயங்களில் பயன்படுத்துவது ஆகும் எனக் குறிப்பிடுகின்றார்கள். எனினும் பின்வரும் நிபந்தனைக் கமையவே அவ்வாறான ஹதீஸ்களைப் பிரயோகிக்க வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார்கள்.

1. குறிப்பிட்ட ஹதீஸ் மிகப்பலவீனமானதாக இருக்கக் கூடாது.
2. குறிப்பிட்ட ஹதீஸ் கூறும் விடயம் அடிப்படையில் ஆதாரபூர்வமான ஒரு விடயமாக இருக்க வேண்டும்.
3. குறிப்பிட்ட ஹதீஸைக் கொண்டு செயற்படும் போது ஆதாரபூர்வமான ஹதீஸைக் கொண்டுதான் அமல் செய்கிறோம் என்று நம்பக் கூடாது.

- நன்மை செய்யத் தூண்டியும் தீமையை விட்டு எச்சரித்தும் அறிவிக்கப்படும் ஹதீஸ் களிலும் கூட ஒரு முக்கியமான விடயத்தைக் கவனிக்க வேண்டியுள்ளது. அல்லாஹ் விடத்தில் இவை இரண்டிற்கும் பெறுமானம் உண்டு. அவற்றைக் கூட்டியோ குறைத்தோ கூற முடியாது.

- செயல்களின் சிறப்பை எடுத்துக்கூறலாமே தவிர புதிதாக ஒன்றை உருவாக்க முடியாது. நன்மை செய்யத் தூண்டியும், தீமையை எச்சரித்தும் வருகின்ற ஹதீஸ்களாக இருந்தாலும் அவற்றை அறிவிப்பதாயின் மேற்குறித்த மூன்று நிபந்தனைகளோடு பின்வரும் இரண்டு நிபந்தனைகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

1. குறிப்பிட்ட ஹதீஸ் பகுத்தறிவாலோ, இஸ்லாத்தின் அடிப்படைகளுக்கு உட்பட்ட வகையிலோ, மொழிரீதியாகவோ ஏற்றுக்கொள்ள முடியாத விதத்தில் மிகைப்படுத் தலைக் கொண்டதாக இருக்கக்கூடாது.
2. குறிப்பிட்ட ஹதீஸைவிட தரத்தில் கூடிய பலமான ஆதாரம் ஒன்றிற்கு முரணாக இருக்கக் கூடாது.

**பிரதான ஹதீஸ் தொகுப்பு நூல்களும் ஆசிரியர்களும்**

**i) ஸஹீஹுல் புகாரி -**

இதன் ஆசிரியர் இமாம் முஹம்மத் இப்னு இஸ்மாஈல் அல் புகாரி (ரஹ்) அவர்கள் ஹிஜ்ரி 194 இல் புகாரா என்ற பிரதேசத்தில் பிறந்தார்கள். சிறுவயதிலேயே தந்தையை இழந்த அவர்கள் தாயுடன் ஹஜ்ஜுக்கு சென்று கற்பதற்காக அங்கே தங்கினார்கள்.

- அறிவுத்திறன், நினைவாற்றல் உள்ளவராக இருந்தார்.
- ஆரம்பத்தில் பிக்ஹ் துறையைக் கற்ற இவர் பின்னர் ஹதீஸ்துறையில் ஈடுபாடு கொண்டார்.
- 1080 ஆசிரியர்களிடம் ஹதீஸ்களைக் கற்ற இவரது முக்கியமான ஆசிரியர்களாக இஸ்ஹாக் இப்னு ராஹவைஹ், அலி இப்னு மதீனி, குதைபா இப்னு ஸஈத், அஹ்மத் இப்னு ஹன்பல் ஆகியோர் விளங்குகின்றார்கள்.
- ஹிஜாஸ், கூபா, பஸரா, குராஸான் பிரதேசங்களுக்குச் சென்று ஹதீஸ்களைத் திரட்டினார்கள்.
- அதிக நினைவாற்றல் உள்ள இவர் பல இலட்சம் ஹதீஸ்களைத் திரட்டி அவற்றைத் தரம் பிரித்துப் 16 வருடகால முயற்சியின் பின்னர் ஸஹீஹ் புகாரியைத் தொகுத்து வழங்கினார்கள்.
- அவரிடம் சுமார் 90 000 மாணவர்கள் கற்றிருக்கிறார்கள் அவர்களுள் இமாம் திர்மிதி, இமாம் நஸாஈ, இமாம் முஸ்லிம், இப்னு குஸைமா, முஹம்மத் இப்னு நஸ்ர் போன்றோர் முக்கியமானவர்களாவர்.
- உண்மை, பொறுமை, இரக்கம்,தயாளம், தர்மம், வணக்கம் முதலிய நற்குணங்களைக் கொண்டவராக இருந்தார். ஹிஜ்ரி 256 இல் குர்தங் (khartamk) எனும் இடத்தில் வபாத்தானார்கள்.
- ஸஹீஹுல் புகாரியை எழுதுவதற்கு இமாமவர்கள் சுமார் 6 இலட்சம் ஹதீஸ்களை சேகரித்தார்கள். அவற்றுள் பத்தாயிரம் ஹதீஸ்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். அவற்றில் 7275 ஹதீஸ்களை வடித்தெடுத்து ஸஹீஹுல் புகாரியைத் தொகுத்தார்கள்.
- இவ்வாறான ஸஹீஹான ஹதீஸ் கிரந்தம் ஒன்றைத் தொகுப்பதற்கு அவரது ஆசிரியரான இமாம் இஸ்ஹாக் இப்னு ராஹவைஹ் என்பவரே காரணமாகின்றார்.
- மிகத்தூய்மையான முறையில் குளித்து, வுழு செய்து இரண்டு ரக்அத் தொழுததன் பின்னரே ஒவ்வொரு ஹதீஸையும் அவர் பதிவு செய்துள்ளார்.
- ஸஹீஹுல் புகாரி அல்குர்ஆனுக்கு அடுத்த தரத்தில் வைத்துக் கணிக்கப்படுகின்றது.
- அதில் 97 பெரிய தலைப்புகள் உள்ளன. (கிதாப்) அவை ஒவ்வொன்றும் பல சிறிய தலைப்புகளாகப் (பாபுன்) பிரிக்கப்பட்டுள்ளன.
- தொகுக்கப்பட்ட நூலை தனது ஆசிரியர்களான அஹ்மத் இப்னு ஹன்பல், யஹ்யா இப்னு முஈன் போன்றோரிடம் காட்டி அனுமதியையும் பெற்றுக் கொண்டார்கள்.
- ஸஹீஹுல் புகாரிக்கு பல்வேறு விளக்க நூல்களும் எழுதப்பட்டுள்ளன. இர்ஷாதுஷ்ஷாரி, பத்ஹுல் பாரி என்பன அவற்றுள் முக்கியமானவை.
- இமாம் அவர்களது இதர நூல்களில் அத்தாரிகுல் கபீர் முக்கியமானதாகும்.

**ii) ஸஹீஹ் முஸ்லிம்**

- இதன் ஆசிரியர் இமாம் முஸ்லிம் இப்னு ஹஜ்ஜாஜ். அவர் ஹிஜ்ரி 204இல் நைஸாபூரில் பிறந்தார்.
- ஆரம்பக்கல்வியை நைஸாபூரில் பெற்ற அவர் உயர்கல்விக்காகவும், ஹதீஸ்களைத் திரட்டிக் கொள்வதற்காகவும் பல நாடுகளுக்கும் பிரயாணம் செய்தார்கள்.
- இஸ்ஹாக் இப்னு ராஹவைஹ், முஹம்மத் இப்னு யஹ்யா, அஹ்மத் இப்னு ஹன்பல், இமாம் புகாரி போன்ற தலைசிறந்த ஆசிரியர்களிடம் கற்றார்.
- தாம் திரட்டிய ஹதீஸ்கள் அனைத்தையும் மனனமிட்டிருந்த இமாம் முஸ்லிம் அதிக நினைவாற்றல் மிக்க நால்வரில் ஒருவர் எனப் பாராட்டப்படுகின்றார்.
- பக்தாதிலும், நைஸாபூரிலும் ஹதீஸ்களைக் கற்றுக்கொடுத்த இவருக்கு

ஆயிரக்கணக்கான மாணவர்கள் இருந்தார்கள். அவர்களுள் இமாம் திர்மிதி, அபூபக்ர் இப்னு குஸைபா போன்றோர் முக்கியமானவர்களாவர்.

- தாம் திரட்டிய சுமார் 3 லட்சம் ஹதீஸ்களைப் பகுப்பாய்ந்து, அவற்றுள் நான்காயிரம் ஹதீஸ்களைத் தெரிந்தெடுத்து ஸஹீஹ் முஸ்லிமைத் தொகுத்தார்கள்.
- தனது நூலைத் தொகுத்து, பிரசித்தி பெற்ற முஹத்திஸான அபூ ஸர்ஆ (ரஹ்) அவர்களிடம் காட்டிச் சரியென அனுமதி பெற்றதன் பின்னரே வெளியிட்டார்.
- இவர் வரலாறு, குர்ஆன் விரிவுரை சார்ந்த சுமார் 18 நூல்களை எழுதியுள்ளார்.
- ஸஹீஹுல் முஸ்லிமுக்கு எழுதப்பட்ட விளக்க நூல்களுள் இமாம் நவவி (ரஹ்) அவர்களின் நூலே பிரசித்தி பெற்றதாகும்.
- சாந்தம், தயாளம், பொறுமை, பணிவு முதலான நற்குணங்களைப் பெற்றிருந்த இமாமவர்கள் ஹிஜ்ரி 261 இல் நைஸாபூரில் வபாத்தானார்கள்.

### iii) சுனன் அபூதாவூத்

- இதன் ஆசிரியர் இமாம் அபூதாவூத் ஸுலைமான் இப்னு அஷ்அஸ் ஸிஜிஸ்தானில் ஹிஜ்ரி 201 இல் பிறந்தார்.
- நைஸாப்பூரில் ஆரம்பக் கல்வியைக் கற்ற இவர் குராஸான், எகிப்து, ஸிரியா, ஹிஜாஸ்பிரதேசங்களில் கல்வி கற்றதோடு ஹதீஸ்களையும் திரட்டிக் கொண்டார்.
- இவர் இமாம் அஹ்மத், யஹ்யா இப்னு முஈன், ஸுலைமான் இப்னு ஹ ா ப் போன்ற தலைசிறந்த ஆசிரியர்களிடம் கற்றார்.
- (பிக்ஹ்) சட்டக்கல்வியிலும், ஹதீஸ் துறையிலும் சமமான தேர்ச்சி பெற்றிருந்த இவர் பஸராவில் கற்பித்து வந்தார்.
- மிகுந்த நினைவாற்றல் உள்ளவராக இருந்த அவர் தான் திரட்டிய 5 இலட்சம் ஹதீஸ்களை நினைவில் வைத்திருந்தார்.
- தான் திரட்டிய 5 இலட்சம் ஹதீஸ்களிலிருந்து 4800 ஹதீஸ்களைத் தேர்ந்தெடுத்து ஹதீஸ் நூலைத் தொகுத்தார்.
- 20 வருடகாலம் இந்தமுயற்சியில் ஈடுபட்டார்கள்.
- இமாம் அபூதாவூத் அவர்களின் கிரந்தங்களில் ஸுனன் அபூதாவூத் முக்கியமானதாகும்.
- அதனை அவர் தனது ஆசிரியர் இமாம் அஹ்மத் இப்னு ஹன்பலிடம் காட்டி சரிபார்த்துக் கொண்டார்கள்.
- பிக்ஹ் அடிப்படையில் வைத்து நோக்கினால் இவரது கிரந்தமே ஆறு திரட்டுக்களில் முதலிடத்தைப் பெறும் என்பது அறிஞர்களது கருத்தாகும்.
- இவரது மாணவர்களில் அபூபக்கர், லு.ஃலு.ஃ இப்னு அ.ஃராபி, இமாம் திர்மிதி, இமாம் நஸாஈ போன்றோர் முக்கியமானவர்களாவர்.
- இறையச்சம், தியானம், நன்றியுணர்வு, ஈகை, நற்பண்புகளைக் கொண்ட இமாம் அவர்கள் ஹிஜ்ரி 275 இல் பஸராவில் வபாத்தானார்கள்.

### iv) ஜாமிஉத் திர்மிதி

- இதன் ஆசிரியரான அபூ ஈஸா முஹம்மத் இப்னு ஈஸா அத்திர்மிதி (ரஹ்) அவர்கள் ஹிஜ்ரி 209 இல் குராஸானில் உள்ள திர்மித் எனும் இடத்தில் பிறந்தார்.
- ஆரம்பக் கல்வியை குராஸானில் மேற்கொண்ட இவர் கூபா, பஸரா, வாஸித், ஹிஜாஸ் போன்ற பிரதேசங்களில் கல்வி கற்றதோடு ஹதீஸ்களையும் சேகரித்து வந்தார்.
- இமாம் புகாரி, இமாம் முஸ்லிம், குதைபா இப்னு ஸ.ஃத், அஹ்மத் இப்னு முஸ்னி ஆகியோர் இமாமவர்களது ஆசிரியர்களாவர்.

- நினைவாற்றல் மிக்க இவர் ஹதீஸ் கலையோடு தப்ஸீர், பிக்ஹ் துறைகளிலும் சிறந்து விளங்கினார்.
- பல இலட்சம் ஹதீஸ்களைத் திரட்டியெடுத்த இமாமவர்கள் 3956 ஹதீஸ்களைத் தேர்ந்தெடுத்து ஜாமிஉத்திர்மிதி நூலை எழுதினார்கள்.
- இவரது ஆயிரக்கணக்கான மாணவர்களுள் முஹம்மத் இப்னு அஹ்மத் மரூஸி என்பவர் முக்கியமானவராவர்.
- இந்நூல் பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளது. ஹதீஸ்கள் திரும்பத்திரும்ப வருவதில்லை, புகஹாக்கள் எந்த ஆதாரங்களைக் கொண்டு சட்டங்களை வகுத்தார்கள் என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது, ஹதீஸ்களின் பிரிவுகள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன, அறிவிப்பாளர்கள் பற்றிய விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது, இமாம்களது கருத்து வேறுபாடுகளும் விபரிக்கப்பட்டுள்ளன.
- நூலைத் தொகுத்த இமாமவர்கள் ஹிஜாஸ், ஈரான், குராஸான் ஆகிய மாகாண அறிஞர்களுக்கு அதனை அனுப்பிச் சரிபார்த்துக் கொண்டார்கள்.
- இறையச்சமும், நல்லொழுக்கமும், பண்பு நலன்களும் நிறைந்தவராக இருந்த இமாமவர்கள் ஹிஜ்ரி 279 இல் திர்மிதில் வபாத்தானார்கள்.

### v) ஸுனனுன் நஸாஈ

- இதன் ஆசிரியரான அபூ அப்துர் ரஹ்மான் அஹ்மத் இப்னு சுஐப் அந்நஸாஈ ஹிஜ்ரி 215 இல் குராஸான் மாநில நஸாஈ எனும் ஊரில் பிறந்தார்.
- ஆரம்பத்தில் இமாம் குதைபா இப்னு ஸஈத் அவர்களிடம் கல்விகற்ற இமாமவர்கள் பின்னர் ஈரான், ஈராக், ஹிஜாஸ், ஸிரியா, எகிப்து முதலான நாடுகளுக்குச் சென்று கற்றதோடு ஹதீஸ்களையும் திரட்டிக் கொண்டார். அவ்வேளை இஸ்ஹாக் இப்னு ராஹவைஹ், இமாம் அபூதாவூத், ஈஸா இப்னு நஸ்ர் முதலான அறிஞர்களிடமும் கல்வி கற்றார்.
- நினைவாற்றல் மிக்கவரான இவர் ஹதீஸ் துறையோடு பிக்ஹ் துறையிலும் ஈடுபாடு கொண்டவராக இருந்தார்.
- தாம் திரட்டிய 5 இலட்சம் ஹதீஸ்களிலிருந்து இமாம் நஸாஈ அஸ்ஸுனனுல் கபீர் அந்நாஸாஈ எனும் நூலை முதலில் தொகுத்து எழுதிய போது ஒரு மன்னரின் வேண்டுகோளுக்கு இணங்க ஸஹீஹான ஹதீஸ்களை மாத்திரம் உள்ளடக்கிய ஸுனனுன் நஸாஈயை எழுதினார்.
- தமது ஹதீஸ் கிரந்தத்தைத் தொகுத்த அதே காலப்பகுதியில் கற்றுக் கொடுப்பதிலும் ஈடுபட்டார்.
- இவரது மாணவர்களுள் இமாம் தபராணி, இமாம் தஹாவி ஆகியோர் முக்கியமானவர் களாவர்.
- இவர் பலஸ்தீனில் ரம்ஸா எனும் இடத்தில் ஹிஜ்ரி 303 இல் வபாத்தானார்.

### vi) ஸுனனுன் இப்னு மாஜாஹ்

- இதன் ஆசிரியரான இமாம் அபூ அப்துல்லாஹ் முஹம்மத் இப்னு யஸீத் அல்கஸ்வின் ஹிஜ்ரி 209 இல் ஈரானிலுள்ள கஸ்வின் எனும் இடத்தில் பிறந்தார்.
- ஹதீஸ் திரட்டுதலில் உச்சகட்டத்தை அடைந்த காலப்பகுதியில் பிறந்து வளர்ந்ததால் இவர் இத்துறையில் அதிக ஈடுபாடு கொண்டார்.
- ஈரானிலும் பின்னர் குராஸான், ஈராக், ஹிஜாஸ், ஸிரியா, எகிப்து, பஸரா, கூபா, வாஸித் முதலான பிரதேச நகரங்களுக்கும் சென்று ஹதீஸ் துறையில் ஈடுபட்டு ஹதீஸ்களைத் திரட்டிக் கொண்டார்.

- இவர்களது ஆசிரியர்களுள் அபூபக்ர் இப்னு ஷைபா, இமாம் இப்றாஹீம் இப்னு முன்ஸிர் போன்றோர் குறிப்பிடத்தக்கோராவார்கள்.
- ஸுனன் இப்னு மாஜா நாற்பதாயிரம் ஹதீஸ்களிலிருந்து நான்காயிரம் ஹதீஸ்களை தேர்ந்தெடுத்து 35 கிதாபுகளும் 1500 பாபுகளும் தொகுக்கப்பட்டது.
- வரலாறு, தப்ஸீர் துறையிலும் இவர் நூல்களை எழுதியுள்ளார்.
- இமாமவர்கள் ஹிஜ்ரி 273 இல் வபாத்தானார்கள்.

**தேர்ச்சி 4.0 : இஸ்லாமிய நாகரிகத்தை வளர்ப்பதில் பங்காற்றிய கலைகளையும், ஐரோப்பிய மறுமலர்ச்சியில் இஸ்லாமிய நாகரிகம் ஏற்படுத்திய தாக்கத்தையும் விளக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 4.1 : பிக்ஹுக்கலை வளர்ச்சியில் இஜ்திஹாத் செல்வாக்குச் செலுத்திய பாங்கினை விளக்குவார்.**

**பாடவேளைகள் : 14**

**கற்றல் பேறுகள் :**

- இஜ்திஹாதின் அடியாகத் தோன்றிய மூலாதாரங்களைப் பட்டியற்படுத்துவார்.
- இஜ்திஹாதின் அடியாகத் தோன்றிய மூலாதாரங்கள் பற்றி விளக்கிக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

- அல் இஜ்திஹாத் எனும் பதம் ''அல் ஜுஹ்த்'' (முயற்சி, சிரமம், அர்ப்பணம் எனும் பதத்தில் இருந்து பிறந்தது. மொழிரீதியாக இப்பதம் ஏதேனும் ஒரு கருமத்தில் முழுப்பலத்தையும் பிரயோகித்து உழைப்பதைக் குறிக்கின்றது. அல் ஜிஹாத், அபல் இஜ்திஹாத் எனும் பதங்கள் ஒரே எழுத்துக்களில் இருந்து பிறப்பவை. அல் ஜிஹாத் என்பது ஆயுதத்தால் இஸ்லாமிய வாழ்வியலைப் பாதுகாப்பது போல் அல் இஜ்திஹாத் ஆய்வு, அறிவுப் பலத்தால் இஸ்லாமிய வாழ்வியலைப் பாதுகாக்கின்றது.

- வரைவிலக்கணம்

  அகீதா தவிர்ந்த இஸ்லாமிய ஷரீஆவின் ஏனைய எல்லாத் துறைகளிலும் அல்குர்ஆனிலோ, ஸுன்னாவிலோ நேரடித் தீர்ப்பு கூறப்படாத ஒரு பிரச்சினையில் தகுதிவாய்ந்த ஒரு சட்ட அறிஞர் தமது ஆய்வையும், அறிவையும் பயன்படுத்தி தீர்வு பெறுவதைக் குறிக்கும் வழிமுறையே ''அல் இஜ்திஹாத்'' எனப்படுகிறது.

**இஜ்திஹாதிற்கான ஆதாரங்கள்**

**அல்குர்ஆன்**

''அல்லாஹ் உமக்கு காட்டித்தந்ததன் பிரகாரம் மக்களுக்கு மத்தியில் தீர்ப்பளிப்பதற்காக சத்தியத்தைக் கொண்டுள்ள இவ்வேதத்தை நாமே உம்மீது நிச்சயமாக இறக்கி வைத்தோம். (4:105)

''மேலும் அமைதியோ அல்லது பீதியோ பற்றிய ஏதேனும் ஒரு செய்தி அவர்களுக்கு வந்துவிட்டால் உடனே அவர்கள் அதனை வெளியே பரப்பி விடுகின்றனர். அவ்வாறு செய்யாது அவர்கள் அதனை அல்லாஹ்வின் தூதரிடமோ அவர்களில் மார்க்க அறிவுள்ள அதிகாரமுடையவர்களிடமோ தெரிவித்திருந்தால் அவர்களில் ஆய்ந்து எடுப்பவர்கள் அதனை நன்கு அறிந்து கொள்வார்கள். (4:83)

- மேற்குறித்த வசனத்தில் வரும் ''யஸ்தன்பிதூன'' என்ற பதம் சட்ட மூலாதாரங்களில் இருந்து தீர்ப்புகளை ஆராய்ந்து தேடிப் பெறுபவர்களையே குறிக்கின்றது என்பது பெரும்பாலான அறிஞர்களின் கருத்தாகும்.

- அல்குர்ஆனில் சிந்தனையையும், பகுத்தறிவையும் பயன்படுத்துமாறு வேண்டுகின்ற அநேக வசனங்கள் காணப்படுகின்றன. சிந்தனைக்கும், ஆய்வுக்கும் இடமளிக்கும் பிரதான அம்சமாக இஜ்திஹாத் அமைவதனால் அவற்றையும் இஜ்திஹாதிற்கான ஆதாரங்களாகக் கொள்ளலாம்.

**அஸ்ஸுன்னா**

- ''ஒரு நீதிபதி தனது இஜ்திஹாதைப் பயன்படுத்தி எடுக்கும் தீர்வு சரியாக அமைந்தால் இரு நன்மைகளும் தவறாக அமையுமாயின் ஒரு நன்மையும் கிடைக்கும் (புகாரி, முஸ்லிம்)

- முஆத் இப்னு ஜபல் (ரழி) அவர்களை யெமனுக்கு கவர்னராக அனுப்பும் போது நபி (ஸல்) அவர்கள் ''அங்கு உம்மிடம் ஒரு பிரச்சினை வந்தால் எதனை அடிப்படையாகக் கொண்டு தீர்ப்பளிப்பீர்'' என்றார்கள். அதற்கவர் ''அல்லாஹ்வின் வேதத்தைக் கொண்டு தீர்ப்பளிப்பேன்'' என்றார். ''அதில் இல்லாவிட்டால் என்ன செய்வீர்'' என்றதற்கு ''அல்லாஹ்வின் தூதரின் ஸுன்னா மூலம் தீர்ப்பளிப்பேன்'' என்றார். ''அதிலும் இல்லாவிட்டால் என்ன செய்வீர்'' என்றார்கள். அதற்கு அவர் ''எனது அறிவைப் பயன்படுத்தி இஜ்திஹாத் செய்து தீர்ப்பளிப்பேன்'' என்றார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் ''அல்லாஹ்வின் தூதரின் தூதருக்கு அருள் புரிந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்'' என்றார்கள். (கிதாபுல் உம்மு)

- ஒரு பயணத்தில் ஈடுபட்டிருந்த இரு நபித் தோழர்கள் தண்ணீர் இன்மையின் காரணமாக மண்ணினால் தயம்மும் செய்து தொழுகையை நிறைவேற்றினர். பின்னர் குறித்த தொழுகைக்குரிய நேரம் முடியமுன்னர் நீர் கிடைத்தது. அவர்களில் ஒருவர் நீரைப் பயன்படுத்தி வுழு செய்து குறித்த தொழுகையை மீட்டித் தொழுதார். அடுத்தவர் தொழவில்லை. இவ்விடயம் நபி (ஸல்) அவர்களிடம் தெரிவிக்கப்பட்டபோது திருப்பித் தொழாதவரைப் பார்த்து ''ஸுன்னாவை சரியாக நிறைவேற்றினீர்'' உமது தொழுகை உமக்கு போதுமானது.'' என்றார்கள். திருப்பித் தொழுதவரைப் பார்த்து ''உமக்கு இரண்டு தடவை கூலி கிடைக்கும்'' என்றார்கள். (நஸஈ, அபூதாவுத்)

**இஜ்மா**

- இஜ்திஹாத் நபி (ஸல்) அவர்கள் காலம் முதல் இன்றுவரை வாழ்ந்த சகல சட்ட அறிஞர்களாலும் அங்கீகரிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது.

**இஜ்திஹாதின் தேவை**

- மறுமை வரைக்குமான வாழ்க்கை நெறியாக இஸ்லாம் அமைந்துள்ளது. எனினும் மனித அறிவும், ஆற்றல்களும் வளர்ச்சியடைகின்றன. காலமாற்றத்திற்கேற்ப சமூக, பொருளாதார காரணிகளும் வளர்ச்சியடைகின்றன. இவை புதிய பிரச்சினைகளை உருவாக்குகின்றன. இத்தகைய பிரச்சினைகளுக்கான நேரடித் தீர்ப்புகள் அல்குர்ஆனிலோ, ஸுன்னாவிலோ இல்லாத போது இஜ்திஹாத் அவசியமாகின்றது.

- அல்குர்ஆனிலும், ஸுன்னாவிலும் பல கருத்துக்களுக்கு இடம்பாடான சட்டவசனங்கள் காணப்படுகின்றன. இவற்றை சரியாகப் புரிந்து கொண்டு செயற்படுத்த இஜ்திஹாத் தேவைப்படுகின்றது.

**இஜ்திஹாதின் வகைகள்**

- இஜ்திஹாத் செய்யப்பட்ட முறையை அடிப்படையாகக் கொண்டு இரண்டாக வகுக்கலாம்.

1. அல் இஜ்திஹாத் அத் தாம் :

ஒரு முஜ்தஹித் இதனைவிடச் சிறந்த, சரியான ஒரு தீர்வுக்கு வரமுடியாது என மானசீகமாக உணரும் அளவுக்கு ஆழமாகவும், அகலமாகவும் அறிவையும், ஆய்வையும் பயன்படுத்தி மேற்கொண்ட இஜ்திஹாத்

2. அல் இஜ்திஹாத் அந்நாகிஸ்

குறித்த பிரச்சினைக்கான தீர்வில் அறிவு பூர்வமான ஆய்வின் முழுமைத்துவத்தைக் காணமுடியாத இஜ்திஹாத்.

- குறித்த இஜ்திஹாதை மேற்கொண்ட முஜ்தஹிதை அடிப்படையாகக் கொண்டு இரண்டாக வகுக்கலாம்.

1. அல் இஜ்திஹாத் அல் முத்லக்

இன்னோர் இமாமின் அடிப்படைகளையோ அல்லது அவரது உப பிரிவுகளையோ துணையாகக் கொள்ளாது தனக்கென்று தனியான அடிப்படைகளை வகுத்துக் கொண்ட ஓர் இமாமின் இஜ்திஹாத்.

2. அல் இஜ்திஹாத் அல் முகய்யத்

குறித்த ஒரு இமாமின் அடிப்படைகளை அல்லது உப பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு இன்னொருவர் செய்த இஜ்திஹாத்.

- இஜ்திஹாதின் உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இரண்டாக வகுக்கலாம்.

1. அல் இஜ்திஹாத் அல் குல்லி

தனக்கென்று தனித்துவமான அடிப்படைகளை வகுத்துக்கொண்ட ஓர் இமாம் இஸ்லாமிய ஷரீஆவின் சகல துறைகளையும் உள்ளடக்கி மேற்கொண்ட இஜ்திஹாத்

2. அல் இஜ்திஹாத் அல் ஜுஸ்இ

குறிப்பிட்ட ஒரு துறையில் மாத்திரம் ஆற்றல் பெற்றுள்ள ஒரு முஜ்தஹித் அத்துறையில் மேற்கொண்ட இஜதிஹாத்.

- சமகால சமூகத்தேவைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் வகையில் இஜ்திஹாதை இரண்டாக வகுக்கலாம்.

1. அல் இஜ்திஹாத் அல் இன்திகாஇ

தகுதிவாய்ந்த ஒரு சட்ட அறிஞரால் வழங்கப்பட்ட சட்டத்தீர்ப்புகளில் இருந்து அல்லது அவர்களால் தீர்ப்பளிக்கப்பட்ட விடயங்களில் இருந்து ஆழமான ஆய்வின் அடியாக நல்லதைத் தெரிவு செய்தல் இவ்வகையில் அடங்கும்.

2. அல் இஜ்திஹாத் அல் இன்ஷாஇ

தகுதிவாய்ந்த ஒரு முஜ்தஹித் புதியதொரு பிரச்சினை தொடர்பான சட்டத்தீர்ப்பில் இதற்கு முன் எவரும் வராத ஒரு தீர்ப்புக்கு வருவதை அல்லது இருந்த தீர்ப்புக்கு மாற்றமாக புதிய தீர்வொன்றுக்கு வருவதை இது குறிக்கும்.

## இஜ்திஹாத் செய்யத் தகுதி பெற்றோர்

பின்வரும் பண்புகளைப் பூர்த்தி செய்தவர்கள் மட்டுமே இஜ்திஹாத் செய்ய முடியுமென இஸ்லாமிய அறிஞர்கள் கருதுகின்றனர். இதனை மூன்று பிரிவுகளில் அடக்கலாம்.

### 01. இஜ்திஹாத் செய்யும் தரத்தை அடைவதற்கான நிபந்தனைகள்.

1. அல்குர்ஆன் பற்றிய நிறைவான அறிவைப் பெற்றிருத்தல். சட்டவசனங்கள், அல் குர்ஆன் அருளப்பட்ட சந்தர்ப்பங்கள், மாற்றிய, மாற்றப்பட்ட வசனங்கள், ஒரு கருத்தைத் குறியாக தரும் வசனங்கள், பல பொருள்தரும் நுட்பமான அறிவுடையவர்கள் மட்டுமே பொருள் புரியத்தக்க வசனங்கள், தப்ஸீர் துறைபற்றிய அறிவு என்பன இப்பகுதியில் அடங்கும்.

2. ஸுன்னா பற்றிய ஆழமான அறிவைப் பெற்றிருத்தல். ஹதீஸ்களின் தன்மை, தராதரம், அறிவிப்பாளர் பற்றிய மதிப்பீடுகள், திறனாய்வுப் பெறுபேறுகள்,ஹதீஸ் பதப்பிரயோகங்கள், குறித்த ஹதீஸ்களுடன் தொடர்பான சூழ்நிலைகள் பற்றிய அறிவைப் பெற்றிருத்தல்.

3. அறபு மொழிப் புலமையும், தேர்ச்சியும் உள்ளவராக இருத்தல். மொழிப் போக்கு, இலக்கண, அறிவியல் மரபுகள், பிரதேச, கோத்திர மொழி வழக்கங்கள் என்பன பற்றிய அறிவைப் பெற்றிருத்தல்.

4. இஸ்லாமிய சட்டத்துறையில் இடம்பெற்றுள்ள இஜ்மாவான முடிவுகள் பற்றி அறிதல்.

5. இஸ்லாமிய சட்டமூலாதாரங்களான கியாஸ், இஸ்திஸ்ஹாப் போன்ற சட்டமூலாதாரங்கள் பற்றிய அறிவும், தெளிவும் இருத்தல்.

### 02. ஓர் இஜ்திஹாத் தவறுகள் ஏதுமின்றி பூரணத்துவமடைவதற்கான நிபந்தனைகள்

1. இஸ்லாமிய ஷரீஆவின் நோக்குகள், இலக்குகள் பற்றிய அறிவிருத்தல். இஸ்லாமிய அறிஞர்கள் இதனை ''மகாஸிதுஷ் ஷரீஆ'' பற்றிய அறிவு என்கின்றனர். சமகால இஸ்லாமிய அறிஞர்களுள் ஒருவரான கலாநிதி அஹமத் ரய்சூனி சமகாலப் பிரச்சினைகளுக்கான சட்டத்தீர்ப்புகளை வழங்கும் முஜ்தஹித்கள் இத்துறையில் ஆழமான அறிவைப் பெற்றிருப்பது அவசியமானது என்கிறார்.

2. சமூகத்தையும், சமூக வாழ்வியலையும் அறிந்திருத்தல்.

### 03. குறித்த ஓர் இஜ்திஹாத் அங்கீகரிக்கப்படுவதற்கான நிபந்தனைகள்.

1. தக்வாவும் இ∴லாஸும் உள்ளவராக இருத்தல்.

2. நீதியும், நேர்மையும், நம்பிக்கை நாணயமும் உள்ளவராக இருத்தல்.

**முஜ்தஹித்களின் படித்தரங்கள்.**

1. அல் முஜ்தஹித் முத்லக் அல் முஸ்தகில்

தனக்கென்று தனியான சட்ட அடிப்படைகளை வகுத்துக் கொண்டு அவற்றை அடிப்படையாகக் கொண்டு சட்டப்பிரச்சினைகளுக்குத் தீர்ப்பு வழங்குவார். அல்குர்ஆனிலும், ஸுன்னாவிலும் இடம்பெறும் சட்டவசனங்களை நுட்பமாக ஆய்ந்து அறிந்தவராகவும் அவற்றிலிருந்து காரணகாரிய அடிப்படையில் சட்டங்களைத் தெரிந்து கொள்ளக்கூடியவராகவும் இருப்பார். ஸஹாபாக்கள், தாபிஈன்கள் கால புகஹாக்கள், நான்கு மத்ஹபுகைளயும் உடைய இமாம்கள், இமாம் ஸைத் இப்னு அலி, இமாம் ஸவ்ரி, ஜஃபருஸ் ஸாதிக், அவ்ஸாஈ, லாவஸ் இப்னு ஸஅத், தபரி, தாவூத் அல்லாஹிரி அழ்மாளிரி முதலியோர் இப்பிரிவில் அடங்குவர்.

2. அல் முஜ்தஹித் முத்லக் அல் முன்தஸிப்

குறித்த ஓர் இமாமின் சட்ட மூலாதாரங்களைப் பின்பற்றிச் சட்டத் தீர்ப்புக்களையும், பிரச்சினைகளுக்கான தீர்ப்புகளையும் வழங்குவார். சிலபோது தனக்கென சில விதிகளையும் வகுத்துச் செயற்படுவார். தான் சரியெனக் கண்ட இமாம் தீர்ப்பளிக்காத பிரச்சினைகளுக்குத் தீர்ப்புச் சொல்வார். இவரது சட்டத்தீர்ப்புகள் அவர் ஏற்றுக் கொண்ட இமாமின் கருத்துக்கு மாற்றமாகவும் அமையும்.

இப்பிரிவில் மத்ஹபை உடைய இமாம்களின் மாணவர்கள் அடங்குவர்.

- இமாம் அபூஹனீபாவின் மாணவர்கள் (அபூ யூசுப், ஹஸன், ஸுபர்)

- இமாம் மாலிகின் மாணவர்கள் ( இப்னுல் காஸிம், அஷ்அப், அஸ்மஃ)

- இமாம் ஷாபிஇன் மாணவர்கள் ( முஸ்னி, புவைத.. , ஸஃபரானி)

- இமாம் அஹ்மத் இன் மாணவர்கள் ( ஸாலிஹ் இப்னு அஹ்மத், அபூபக்ர் அல் ஹல்லால்)

3. அல் முஜ்தஹித் அல் முகய்யத் அல்லது முஜ்தஹித் அல் தஹ்ரீஜ்

குறித்த இமாமின் சட்டபிரிவுகளையும், அவர் தனது சிந்தனைகளுக்கு அடிப்படையாகக் கொண்ட மூலாதாரங்களையும் நன்கு அறிந்து வைத்திருப்பார். புதிய பிரச்சினைகள் வரும்போது தனது இமாமின் அடிப்படைகளைப் பின்பற்றி தீர்ப்பளிப்பார். சில சட்ட அறிஞர்கள் இவர்களை ''அல் முஜ்தஹித் பில் மத்ஹப்'' என்றும் குறிப்பிடுகின்றனர். இவ்வகையில் ஹனபி மத்ஹபின் இமாம் கரகி, தஹாவி, ஹஸன் இப்னு ஸியார், மாலிக் மத்ஹபின் அல் அப்ஹரி, இப்னு அபீஸம்னீன், ஷாபிஈ மத்ஹபின் அல் மரூஸி போன்றோரைக் குறிப்பிடலாம்.

4. குறித்த ஓர் இமாமின் மத்ஹபில் ஆழ்ந்த அறிவைப் பெற்றிருப்பார். தனது இமாமின் கருத்துக்களில் இருந்தும் அவரது மாணவர்களின் கருத்துக்களில் இருந்தும் மிகப் பொருத்தமான கருத்துக்களை காலசூழ்நிலைகளுக்கு ஏற்ப தெரிவு செய்து முன்வைக்கும் தகுதி இவருக்கு இருக்கும். ஹி 6 ஆம் 7 ஆம் நூற்றாண்டுகளில்

வாழ்ந்த ஏராளமான இமாம்கள் இப்பிரிவில் அடங்குவர். ஹனபி மத்ஹபின் பிரதான இமாம்களான அல் கதூரி, காஸானி, மாலிகி மத்ஹபின் இமாம்காளான இப்னு ருஷ்த், அல் மாஸிரி, ஷாபிஇ மத்ஹபின் இமாம்களான இமாம் நவவி, இப்னு அபீ அம்ரூன் ஹம்பலி மத்ஹபின் இமாமான இப்னு குதாமா போன்றோர் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவர்கள்.

- ஸஹாபாக்கள் காலத்தில் இஜ்திஹாத் காணும் பணியை நான்கு கலீபாக்களும், இப்னு மஸ்ஊத் (ரழி), ஸைத் இப்னு ஸாபித் (ரழி) முதலான ஸஹாபாக்களும் மேற்கொண்டிருந்தார்கள். தொடர்ந்து வந்த தாபிஈன்கள் அல்லது உமையாக்கள் காலத்திலும் இவ்வாறு குறிப்பிட்ட துறையில் அறிவுள்ளோர் இதனைச் செய்து வந்தனர். ஆனால் இக்காலத்தில் முன்னரிலும் அதிகமான பிரதேசங்கள் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்தமையால் பிரச்சினைகள் முன்னரிலும் அதிகமாகத் தோன்றின. எனவே இக்கால அறிஞர்களின் பணி இன்னும் அதிக முக்கியத்துவத்தைப் பெற்றன.

- ஸஹாபாக்கள் காலத்தில், அவர்கள் ஹதீஸ்களை நன்கறிந்திருந்தமையால் பிரச்சினைக்குரிய தீர்ப்பு அல்குர்ஆனில் நேரடியாகக் காணப்படவில்லையாயின் ஹதீஸ்கள் மூலமாககத் தேடமுடிந்த நிலையிலிருந்தார்கள். ஆனால் பிற்பட்ட காலத்தில் எல்லோரும் ஹதீஸ்களை அறிந்திருக்காமையாலும், அவை தொகுக்கப்பட்டிருக்காமையாலும் பிரச்சினைகளை இலகுவாகத் தீர்த்துக் கொள்ள முடியவில்லை. அவ்வேளை காரிகளும், முஹத்திஸ்களும் இஜ்திஹாத் காணும் முயற்சியிலீடுபட்டனர். இவர்களிடம், முஸ்லிம் பேரரசின் பலபாகங்களிலும் வாழ்ந்த பொதுமக்கள் தமது பிரச்சினைகளை எடுத்துவந்தனர். மக்கா, மதீனா, கூபா, பஸரா, திமிஷ்க்(டமஸ்கஸ்) முதலிய நகர்களில் வாழ்ந்த இவ்வறிஞர்கள் தம்மிடம் வரும் மஸ்அலாக்களுக்குப் பதிலளித்ததுக் கொண்டேயிருந்தார்கள்.

- இக்காலத்தில் பிறமொழிகளிலிருந்த நூல்கள் அறபியில் பெயர்க்கப்பட்டமையால் முஸ்லிம்களிடையே அறிவுத்துறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. கிரேக்க தத்துவச் செல்வாக்கும், பிறகலாசாரத்தாக்கங்களும் முஸ்லிம்களைப் பாதித்துக் கொண்டிருந்தன. அறபு மொழி அறியாதவர்கள் தமது பிரச்சினைகளுக்கு அல்குர்ஆன்-ஸுன்னாவிலிருந்து நேரடியான விளக்கங்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையிருந்தது. இத்தகைய காலகட்டத்தில் ஆத்மீக, அரசியல், சமூக, பொருளாதார துறைகளுக்கான இஸ்லாத்தின் சட்டதிட்டங்களை முஸ்லிம் பொதுமக்களுக்குத் தொகுத்துக் கொடுக்க வேண்டிய பொறுப்பு அறிஞர்களான முஜ்தஹித்களைச் சார்ந்திருந்தது. எனவே, இவர்கள் முதலில் ஹதீஸ்களைத் திரட்டும் முயற்சியீடுபட்டனர். பின்னர், அல்குர்ஆன்- ஹதீஸ்களிலிருந்து சட்டங்களைப் பிரித்தெடுக்கும் முயற்சியில் இறங்கினர். இது பிக்ஹுக்கலை ஓர் அமைப்பைப் பெற வழியாக அமைந்தது.

- இவ்வாறு முஜ்தஹித்கள் சட்டங்களை உருவாக்கும் போது, அல்குர்ஆன்-ஸுன்னாவில் போதிய விளக்கமில்லாதவர்களும் சட்டங்களை வெளிப்படுத்த ஆரம்பித்தனர். இது, முஸ்லிம் சட்டத்தின் தூய்மையைக் கெடுக்குமாதலால் சட்டக்கலையிலீடுபடத் தகுதியுடையோர் பற்றிய இலக்கணம் வகுக்கப்பட்டது. இது உஸுலுல் பிக்ஹ் எனப்படும். இவ்வாறு ஹிஜ்ரி முதலாம் நூற்றாண்டின் கடைசிப்பகுதியில் உருவான முயற்சிகள் ஹிஜ்ரி இரண்டாம் நூற்றாண்டில் பிக்ஹு ஒரு தனிக்கலையாக வளரவும், மத்ஹபுகள் தோன்றவும் காலாக அமைந்தன.

**தேர்ச்சி 4.0 : இஸ்லாமிய நாகரிகத்தை வளர்ப்பதில் பங்காற்றிய கலைகளையும், ஐரோப்பிய மறுமலர்ச்சியில் இஸ்லாமிய நாகரிகம் ஏற்படுத்திய தாக்கத்தையும் விளக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 4.2 : அடிப்படை மூலாதாரங்களுடன் துணை மூலாதாரங்களின் முக்கியத்துவத்தை அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார்**

**பாடவேளைகள் : 20**

**கற்றல் பேறுகள் :**

- இஜ்திஹாதின் அடியாகத் தோன்றிய மூலாதாரங்களைப் பட்டியற்படுத்துவார்.
- இஜ்திஹாதின் அடியாகத் தோன்றிய மூலாதாரங்கள் பற்றி விளக்கிக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**கௌலுஸ்ஸஹாபி**

இது துணை மூலாதாரங்களில் ஒன்றாகும். இது மத்ஹபுஸ் ஸஹாபி என்றும் அழைக்கப்படுகின்றது.

**கௌலுஸ்ஸஹாபி சட்ட மூலாதாரம் என்பதற்கான ஆதாரம்**

- ஸஹாபாக்கள் நபி(ஸல்) அவர்களுக்கு மிக நெருக்கமானவர்கள்; வஹி இறங்குவதை அவதானித்தவர்கள்; நபியவர்கள் சட்ட ஒழுங்குகளை முன்வைத்த போது ஆழ்ந்து அவதானித்தவர்கள்; பின்பற்றியவர்கள் என்றவகையில் நபித்தோழர்களது கருத்துக்களும் வாழ்வும் ஆதாரமாகக் கொள்ளத் தக்கவையாகும்.

- ஸஹாபாக்களது கருத்துக்கள் இறைத்தூதரது ஸுன்னாவாகவும் இருக்க முடியும். ஏனெனில் சிலபோது ஸஹாபாக்கள் இறைத்தூதரது கருத்துக்களை அவரது கருத்துக்கள் என்று குறிப்பிடாமல் முன்வைத்த சந்தர்ப்பங்களும் உண்டு. இந்த வகையில் ஸஹாபாக்களது கருத்துக்களுக்கு உயர்ந்த அந்தஸ்து கொடுக்க வேண்டும்.

- குறிப்பிட்ட ஒரு பிரச்சினை தொடர்பாக ஸஹாபாக்கள் தமது சொந்த ஆய்வின் அடிப்படையில் குறிப்பிட்டிருந்தாலும்கூட அவை சிறந்த கருத்துக்களாகவே கொள்ளப்படும். ஏனெனில் அவர்கள் பரம்பரையினருள் சிறந்த பரம்பரையினர் என நபியவர்களால் போற்றப்பட்டவர்களாவர்.

- ஒரு ஸஹாபி முன்வைத்த கருத்தானது மக்களிடையே பிரபல்யம் அடைந்து அதனை யாரும் மறுக்காவிட்டால் அது இஜ்மா ஸுகூதியின் அந்தஸ்தை அடைகிறது.

- சில குர்ஆன் வசனங்களும் ஹதீஸ்களும் ஸஹாபாக்களது உயர்நிலையை எடுத்துக் காட்டுவது அவர்களது கருத்துக்களையும் ஆதாரமாகக் கொள்ள முடியும் என்பதை உணர்த்தும்.

உதாரணமாக : ''நான் எனது ஸஹாபாக்களுக்கு நம்பிக்கைக்குரியவர். அவ்வாறே எனது ஸஹாபாக்கள் எனது உம்மத்தினருக்கு நம்பிக்கைக்குரியவர்கள்.''

- சில சட்ட அறிஞர்கள் கௌலுஸ் ஸஹாபியை ஆதாரமாகக் கொள்வதில்லை. அதற்கு அவர்கள் முன்வைக்கும் நியாயங்களாவன.

அ). ஸஹாபாக்கள் பிழைவிடுவதிலிருந்து பாதுகாக்கப்பட்ட ம.ஃஸூம்கள் அல்லர். அவர்களும் ஏனைய முஜ்தஹித்களைப் போன்றவர்களே முஜ்தஹித்கள் சிலபோது பிழையான முடிவுகளுக்கு வரக்கூடும்.

ஆ). சில போது தங்களது பத்வாக்களில் தாம் பிழைவிட்டதை ஸஹாபாக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இ). ஸஹாபாக்கள் பிழைவிட்ட போது பிறர் அதனைத் திருத்திவிட்ட சந்தர்ப்பங்களும் உண்டு

ஈ). சில ஸஹாபாக்கள் சில சந்தர்ப்பங்களில் தாபிஈன்களின் கருத்துக்களை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

உ). ஸஹாபாக்கள் பற்றி சிலாகித்துக் கூறப்பட்ட ஹதீஸ்கள் அவர்களது உயர்ந்த அந்தஸ்தை உணர்த்துவதேயொழிய தவறுகளிலிருந்து பாதுகாக்கப்பட்டவர்கள் என்ற கருத்தைத் தர மாட்டா.

- கௌலுஸ் ஸஹாபி குர்ஆன் ஸுன்னா போன்ற ஒரு மூலாதாரமாகக் கொள்ளப்படுவதில்லை. மாறாக குர்ஆன் ஸுன்னாவின் அடிப்படையில் பெறப்பட்ட கருத்துக்களை பலப்படுத்துவதாகவும் சிலபோது சமூக நிர்வாக அம்சங்கள் குறித்த விடயங்களுக்குத் தீர்வு பெறுவதற்காகவும் ஆதாரமாகக் கொள்ளப்படுகின்றன.

**அல்-இஜ்மாஉ**

- இஸ்லாமிய ஷரீஆவின் அடிப்படை மூலாதாரங்களில் குர்ஆனும், ஹதீஸும் மிகப் பிரதான இடத்தை வகிக்கின்றன. இவ்விரண்டும் வஹியின் அடிப்படையில் அமைந்திருப்பதே அதற்குக் காரணமாகும். இவ்விரண்டு மூலாதாரங்களுடன் இஜ்திஹாதின் அடிப்படையில் உருவாகிய துணை மூலாதாரங்களும் இஸ்லாமிய வரலாற்றில் தோன்றி வளர்ச்சி பெற்றன. இவ்வரிசையில் தோன்றிய மிக முக்கியமான ஒரு துணை மூலாதாரமே இஜ்மாஉவாகும்.

- இஜ்மாஉ எனும் அறபுப் பதம் 'அஜ்மஅ' எனும் அறபுச் சொல்லிலிருந்து தோற்றம் பெற்றதாகும். ஒன்று சேர்த்தல், உறுதி கொள்ளுதல், ஒத்த கருத்துக் கொள்ளல், ஏகோபித்த கருத்துக் கொள்ளல் எனும் மொழிக் கருத்துக்களில் இப்பதம் பிரயோகிக்கப்படுகின்றது. இஸ்லாமிய ஷரீஅத்தில் பின்வரும் கருத்திலேயே அது பிரயோகிக்கப்படுகின்றது. நபி (ஸல்) அவர்களின் வபாத்தின் பின் ஏதாவதொரு காலத்தில் தோன்றிய பிரச்சினைக்கான தீர்வு குர்ஆனிலோ, ஸுன்னாவிலோ தெளிவாகக் காணப்படாதபோது அப்பிரச்சினைக்கான தீர்வைப் பெறுவதற்கு அக்காலத்தில் வாழும் முஜ்தஹிதுகள் அனைவரும் இஜ்திஹாத் செய்வதன் மூலம் ஏகோபித்த கருத்துக் கொள்வதே இஜ்மாஉ ஆகும்.

## இஜ்மாஉ சட்ட மூலாதாரம் என்பதற்கான ஆதாரங்கள்

### அல்குர்ஆன் ஆதாரங்கள்

- ''இன்னும் நேரான வழி இன்னதென்று தனக்குத் தெளிவானதன் பின்னர் எவர் (நம்முடைய) இத்தூதருக்கு மாறுசெய்து, விசுவாசிகளின் வழியல்லாத (வேறு வழியான) தைப் பின்பற்றுகிறாரோ அவரை நாம் அவர் திரும்பிய (தவறான) வழியிலேயே திருப்பி விடுவோம். (பின்னர்) அவரை நரகத்தில் புகுத்தி விடுவோம். அது சென்றடையு மிடத்தில் மிகக் கெட்டது.'' (14:115)

- ''நீங்கள் அல்லாஹ்விற்கு வழிப்படுங்கள், அவ்வாறே அவனது தூதருக்கும் வழிப் படுங்கள். இன்னும் உங்களில் (அல்லாஹ்விற்கும். ரஸுலுக்கும் கட்டுப்படுகின்ற) தலைவர்களுக்கும் வழிப்படுங்கள்.'' (4:59)

- மேலும் (யுத்த) அமைதியோ அல்லது பீதியோ பற்றிய யாதொரு செய்தி அவர்களுக்கு வந்துவிட்டால் (உடனே) அவர்கள் அதனை (வெளியில் மக்களிடையே) பரப்பி விடுகின்றனர். (அவ்வாறு செய்யாது) அதனை (அல்லாஹ்வுடைய தூதரிடமும், அவர்களில் (மார்க்க ஞானமுள்ள) அதிகாரமுடையவர்களிடமும் தெரிவித்திருந்தால், அவர்களிலிருந்து அதனை ஆய்ந்து எடுப்பவர்கள் அதனை (நன்கு) அறிந்து கொள்வார்கள். மேலும் (விசுவாசிகளே) அல்லாஹ்வுடைய பேரருளும் அவனுடைய கிருபையும் உங்கள் மீது இல்லாதிருந்தால் (உங்களில்) குறைவானவர்களைத் தவிர நீங்கள் யாவரும் ஷைத்தானையே பின்பற்றியிருப்பீர்கள். (4:83)

- முதலில் குறிப்பிடப்பட்ட இறைவசனத்தில் இறைநம்பிக்கையாளர்களின் கருத்துகளுக்கு வழிப்படுவது மார்க்கக் கடமை என்பதும், அதற்கு முரண்படுவது தண்டனைக்குரியது என்பதும் உணர்த்தப்பட்டுள்ளன. இரண்டாவது வசனத்தில் 'உலுல் அம்ர்' எனும் முஸ்லிம் சமூகத்தின் அறிஞர்களுக்கு அல்லது முஜ்தஹிதுகளுக்கு அல்லது தலைவர்களுக்கு வழிப்படும்படி கட்டளையிடப்பட்டுள்ளது. மூன்றாவது வசனத்தில் பிரச்சினைகளின்போது அறிஞர்கள், பொறுப்பாளர்களை நாடி அதனை ஆய்ந்து தீர்த்துக் கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது. ஆகவே இப்போதனைகள் இஜ்மாஉவின் அடிப்படை யில் அறிஞர்கள் வழங்கும் ஏகோபித்த முடிவுகள் பிழையாக இருக்க முடியாது என்பதை உறுதிப்படுத்துகின்றன.

### ஸுன்னாவின் ஆதாரங்கள்

- ''எனது சமூகத்தினர் தவறான விடயங்களில் ஒன்றுபட மாட்டார்கள்.'' (இப்னு மாஜா)

- ''சத்தியத்தில் நிலைத்திருக்கக் கூடிய ஒரு கூட்டம் எனது சமூகத்தில் என்றென்றும் இருந்து வருவார்கள்.'' (அபூ தாவூத்)

- ''யார் தலைமைத்துவத்திற்கு கட்டுப்படுவதிலிருந்து விலகிச் சென்று ஜமாஅத்தை விட்டும் பிரிந்து மரணிக்கின்றாரோ அவரது மரணம் (ஜாஹிலிய்யத்தை) மடமையைச் சேர்ந்ததாகும்.'' (முஸ்லிம்)

- ''முஸ்லிம்கள் நல்லதாகக் கருதுபவை அல்லாஹ்விடம் நல்லதாகவே இருக்கும். அவ்வாறே அவர்கள் தீயதாக கருதுபவை அல்லாஹ்விடம் தீயதாகவே இருக்கும்.'' (அஹ்மத்)

- ''யார் சுவர்க்கத்தின் இன்பங்களைச் சுவைக்க விரும்புகிறாரோ அவர் சமூகத்தோடு இணைந்திருக்கட்டும்.''

- மேற்படி ஹதீஸ்களில் முஸ்லிம் சமூகம் சத்தியத்தில் ஒன்றுபடுபவார்கள் என்ற கருத்து எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அதேநேரத்தில் உண்மைக்கு முரணானவற்றில் முஸ்லிம் சமூகம் ஒன்றுபட மாட்டாது என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டுள்ளது. மார்க்கத்தில் தெளிவுள்ள இறைநேசர்களின் முடிவும் அல்லாஹ்வின் முடிவாகவே கணிக்கப்படுகின்றது. ஆகவே இஜ்மாஉவின் முடிவுகளுக்கு முஸ்லிம்கள் கட்டுப்படக் கடமைப்படுகின்றார்கள்.

- மனிதனின் சீரிய பகுத்தறிவு இஜ்மாஉவின் அவசியத்தை ஏற்றுக் கொள்கின்றது. சில பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு குர்ஆன் ஸுன்னாவில் தெளிவான ஆதாரங்கள் காணப்படாதபோது ஸஹாபாக்களும் இஜ்மாஉ மூலமே தீர்வு பெற்றனர். எனவே இஸ்லாத்தின் உயிரோட்டத் தன்மை, நடைமுறைச் சாத்தியம் என்பவற்றை விளக்குவதற்கு இஜ்மாஉ இன்றியமையாததாகும். ஏனெனில், குறிப்பிட்டதொரு பிரச்சினையில் முஜ்தஹித்கள் யாவரும் ஏகோபித்து, எவ்வித எதிர்ப்புமின்றி, கருத்து முரண்பாடின்றி ஒரு முடிவிற்கு வருவார்களாயின் அது இஸ்லாமிய எல்லைக்கு வெளியே செல்லாது. ஆகவே பகுத்தறிவு ரீதியாக நோக்குகின்றபோதும் இஜ்மாஉ அவசியமான தாகும். அதனடிப்படையில் பெறப்படுகின்ற தீர்மானங்களுக்கு முஸ்லிம் சமூகத்தினர் கட்டுப்பட வேண்டும் என்பதும் தெளிவாகின்றது.

**இஜ்மாஉவிற்கான நியதிகள்**

- இஜ்மாவின் அடிப்படையில் ஒரு முடிவைப் பெறுவதற்குப் பின்வரும் நியதிகள் பேணப்பட வேண்டும்.

1. இஜ்மாஉ மேற்கொள்ளப்படுவதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட முஜ்தஹிதுகள் இருக்க வேண்டும்.
2. முஜ்தஹிதுகளின் ஏகோபித்த முடிவைப் பெறுதல் வேண்டும்.
3. முஜ்தஹிதுகள் தமது முடிவை வார்த்தைகளால் அல்லது செயலினால் வெளிப்படுத்த வேண்டும்.

- மேற்குறித்த நியதிகளுக்குட்பட்ட வகையில் பெறப்பட்ட இஜ்மாஉவான முடிவுகளைப் பின்பற்றுவது முஸ்லிம் சமூகத்தின் பொறுப்பாகும்.

**இஜ்மாஉவின் வகைகள்**

**அ) இஜ்மாஉ ஸரீஹ்**

- சமகாலத்தில் வாழ்கின்ற முஜ்தஹிதுகள் ஒவ்வொருவரும் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட சட்டப் பிரச்சினை தொடர்பாகத் தமது கருத்தையும் நிலைப்பாட்டையும் தெளிவாக முன்வைப்பதன் மூலம் ஒருமைப்பட்ட முடிவொன்றுக்கு வருவதையே 'இஜ்மாஉ ஸரீஹ்' என்று அறிஞர்கள் அடையாளப்படுத்துவர். 'இஜ்மாஉ ஸரீஹ்' என்பது 'தெளிவான இஜ்மாஉ' என்ற கருத்தைத் தரும். இத்தகைய இஜ்மாஉவே ஆதாரபூர்வமானதாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இதற்கு

உதாரணமாக நபி (ஸல்) அவர்களது வபாத்தின் பின்னர் இஸ்லாமிய அரசின் தலைவராக அபூபக்ர் (ரழி) அவர்கள் தெரிவுசெய்யப்பட்டதைக் குறிப்பிடலாம்.

**ஆ) இஜ்மாஉ ஸுகூதி**

- ஏதேனுமொரு சட்டப் பிரச்சினை தொடர்பாக முஜ்தஹிதுகளில் ஒருவர் ஒரு கருத்தைத் தெரிவித்து அக்கருத்து பிரபல்யமடைந்த நிலையில் ஏனைய முஜ்தஹிதுகள் அது தொடர்பாக சார்பாகவோ, எதிராகவோ எக்கருத்தையும் தெரிவிக்காது மௌனமாக இருந்தால் அதனை 'இஜ்மா ஸுகூதி' மௌன நிலையில் பெறப்பட்ட இஜ்மாஉ என அறிஞர்கள் அடையாளப்படுத்துவர். 'இஜ்மாஉ ஸுகூதியை' இஜ்மாஉவாகக் கொள்ளலாமா என்பது குறித்து அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன.

**இ) இஜ்மாஉ முரக்கப்:**

- குறிப்பிட்டதொரு விடயத்தில் ஒரு காலப் பிரிவின் சட்ட அறிஞர்கள் குறிப்பிட்ட சில கருத்துக்களைக் கொண்டுள்ளனர். இவ்வனைத்துக் கருத்துக்களுக்கும் மாற்றமாக ஒருவர் புதிதாக ஒரு கருத்தை வெளியிடக் கூடாது என்பர். இதற்கு உதாரணமாகப் பின்வரும் இஜ்மாஉ முடிவைக் குறிப்பிடலாம்.

- முஸ்லிம்களில் ஆண்கள் தாடியை வளர விடுவதோடு தொடர்புடைய சட்டத்தில் சட்ட அறிஞர்கள் பின்வரும் கருத்துக்களை கொண்டுள்ளனர்.

1. தாடி வளர்ப்பது ஸுன்னத்தானதாகும்.

2. தாடி வளர்ப்பது வாஜிபானதாகும்.

- தாடி வைப்பதை ஸுன்னத் எனவும், வாஜிபு எனவும், அதன் தரத்தில் கருத்து வேறு பாடு கொண்டாலும் தாடி வைக்க வேண்டும் என்பதில் ஒன்றுபட்டனர். ஆகவே தாடியை நீக்குவது என்ற ஒரு புதிய கருத்தை கொண்டு வர முடியாது என ஒன்றுபட்டுள்ளனர்.

**ஈ) இஜ்மாஉ அக்ஸரிய்யா:**

- ஏதேனுமொரு சட்டப் பிரச்சினை தொடர்பாக முஜ்தஹிதுகளில் பெரும்பான்மையானோர் ஒரு கருத்தில் உடன்பட்டு மற்றும் சில முஜ்தஹிதுகள் முரண்பட்டாலும் அது இஜ்மா முடிவாக ஏற்றுக் கொள்ளப்படும் என்பதே இஜ்மா அக்ஸரிய்யாவாகும். முஜ்தஹிதுகளில் பெரும்பான்மையோரது முடிவு இஜ்மாவாகுமா என்பதில் பல்வேறு விதமான கருத்துக்கள் காணப்படுகின்றன.

1. 'இஜ்மா அக்ஸரிய்யா' இஜ்மா முடிவாக கொள்ளப்பட மாட்டாது என்பதே இஸ்லாமிய அறிஞர்களது பொதுவான கருத்தாகும். இஜ்மா ஒரு சட்ட மூலாதாரம் என்பதை உறுதிப்படுத்தும் ஆதாரங்கள் முழு சமூகத்தையும் தழுவியதாக அமைந்துள்ளதே யன்றி சமூகத்தில் பெரும்பான்மையானோர் தவறிழைக்க மாட்டார்கள் என்பதைக் காட்டமாட்டாது என்பது அவர்களது வாதமாகும். ஸஹாபாக்களது நடைமுறையும் இதனையே உணர்த்துகின்றது. அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் பெரும்பான்மையினரின் கருத்துக்களுக்கு மாற்றமான கருத்தினையே சில பிரச்சினைகளில் கொண்டிருந்தார்கள் என இவர்கள் குறிப்பிடுகின்றனர்.

2. இஜ்மாஉ அக்ஸரிய்யாவை இஜ்மாவாக ஏற்றுக்கொள்ள முடியும் என்பது சில அறிஞர்களின் கருத்தாகும். இவர்களுள் இமாம் முஹம்மத் இப்னு ஜரீர் அத்தபரி, அபூபக்ர் அர்ராஸி, அஹ்மத் இப்னு ஹன்பல் போன்றோர் முக்கியமானவர்களாவர்.

3. இன்னும் சிலர் முத்தவாதிருடைய எண்ணிக்கையை விடக் குறைந்த அளவில் முரண் பட்டோர் இருப்பின் பெரும்பான்மையோரது கருத்து இஜ்மாவாக கொள்ளப்படலாம் எனக் கருதுகின்றனர்.

4. மற்றும் சிலர் பெரும்பான்மையோரது முடிவு ஒரு ஆதாரமேயன்றி இஜ்மாவல்ல என்கின்றனர்.

5. வேறு சிலர் பெரும்பான்மையோரது முடிவைப் பின்பற்றுவது பொருத்தமானது என்கின்றனர்.

**இஜ்மாஉவின் பிரிவுகள்**

• இஜ்மாஉ ஆனது அதனை மேற்கொள்வதற்கு அடிப்படையாக அமைந்த ஆதாரத்தின் அடிப்படையில் நோக்கும்போது இரு வகைப்படும்.

1. இஜ்மா நக்லி:

அல்குர்ஆன், ஸுன்னா என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு உருவாகும் இஜ்மா. உ-ம்: பெண்களுக்குத் தங்கம் ஹலாலானது என்ற ஏகோபித்த முடிவைக் குறிப்பிடலாம்.

2. இஜ்மாஉ இஜ்திஹாதி:

ஏனைய சட்ட மூலாதாரங்களைக் கொண்டு உருவாகும் இஜ்மாஉ.

உதாரணம்:அபூபக்ர்(ரழி) அவர்கள் கலீபாவாகத் தெரிவு செய்யப்பட்டதைக் குறிப்பிடலாம்.

- இஸ்லாம் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வலியுறுத்துகின்ற அல்லது கட்டியெழுப்ப முயற்சிக்கின்ற ஓர் அடிப்படை அம்சம் முஸ்லிம்களது ஐக்கியமும், ஒருமைப்பாடுமாகும். மிகப் பிரதான இறைவணக்கங்களிலும் அன்றாட விவகாரங்களிலும் இதனை ஏற்படுத்த இஸ்லாம் முயற்சிக்கின்றது. இந்த வகையில் இஜ்மாஉ எனும் துணை மூலாதாரத்தின் அடிப்படையிலும் முஸ்லிம்களது கருத்தொற்றுமையைத் தோற்றுவித்து நடைமுறை வாழ்க்கையில் அவற்றைப் பிரதிபலிக்க வைக்க முயற்சிக்கின்றது. எனவே முஸ்லிம்களது கருத்தொருமைப்பாட்டிற்கு உயர்ந்த சான்றாக இஜ்மாஉ காணப்படுகின்றது.

**கியாஸ் (ஒப்புநோக்கல்)**

- கியாஸ் எனும் அரபுச் சொல் அளத்தல், ஒப்புநோக்கல், சமப்படுத்தல் என்ற கருத்துக்களைத் தரும்.
- இஸ்லாமிய பரிபாஷையில் சட்டம் தெளிவாக வராத ஒரு புதிய பிரச்சினைக்குரிய தீர்ப்பை, சட்டம் தெளிவாகக் கூறப்பட்ட அதேபோன்ற ஒரு பிரச்சினையுடன் ஒப்புநோக்கி, அத்தீர்ப்பை புதிய பிரச்சினைக்கு வழங்குதல்.

- இஸ்லாமிய சட்ட மூலாதாரங்களுள் நான்காம் இடத்தைப் பெறும் கியாஸ், முதல் மூன்று சட்டமூலாதாரங்களான அல்குர்ஆன், அஸ்ஸுன்னா, இஜ்மாஉ ஆகியவற்றுள் ஒன்றிலேனும் தீர்வு கிடைக்காத போதே செயற்படுத்தப்படல் வேண்டும்.

- பொதுப் பண்புகளில் ஒத்த தன்மை காணப்படும்போது, இரு விடயங்களுக்கும் ஒரே சட்டம் கொடுக்கப்படல் வேண்டும் என்பது எளிமையான ஒரு விடயமாகும். இந்த சமத்துவக் கோட்பாட்டை அல்குர்ஆனும் பல்வேறு இடங்களில் வலியுறுத்துகின்றது.

  பூமியில் அவர்கள் பயணம் செய்து அவர்களுக்கு முன்னர் இருந்தவர்களின் முடிவு எப்படி ஆயிற்று என்பதை அவர்கள் பார்க்கவில்லையா? (47:10)

- பொதுப்பண்புகள் காணப்படாதபோது அவற்றைப் பிரித்துக் காட்டவும் அல்குர்ஆன் தயங்கவில்லை. ''தீமைகளைச் சம்பாதித்தார்களே அவர்கள், ஈமான் கொண்டு நற்செயல்கள் புரிந்தார்களே அவர்களைப் போன்று (மறுமையில்) அவர்களையும் நாம் ஆக்கிவிடுவோம் என்று எண்ணிக் கொண்டார்களா? அவர்கள் உயிர் வாழ்வதும் அவர்கள் மரணமடைவதும் சமமானதாகும். அவர்கள் தீர்ப்புச் செய்வது மிகக் கெட்ட தாகிவிட்டது.'' (45:21)

  ''அறிந்தவர்களாக இருப்பவர்களும் அறியாமலிருப்பவர்களும் (தம்மில்) சமமாவார்களா?'' (39:9)

- கஸ்அமிய்யா என்ற பெண்மணி நபி (ஸல்) அவர்களிடம், எனது தந்தை ஹஜ்ஜை நிறைவேற்றாது மரணித்துவிட்டார். அதனை நான் நிறைவேற்றலாமா? எனக் கேட்க, உனது தந்தை விட்டுச் சென்ற கடனை நீர் நிறைவேற்றினால் அது நிறைவேறுமா? என நபி (ஸல்) அவர்கள் வினவினார்கள். அதற்கு அப்பெண் 'ஆம்' எனக் கூற, 'அல்லாஹ்வுக்குரிய கடன் நிறைவேற்றுவதற்கு மிகவும் உரித்துடையது' என நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். (புகாரி)

**கியாஸ் இஸ்லாமிய ஷரீஅத்தில் அங்கீகாரம் பெற்றதா?**

- இவ்விடயம் தொடர்பாக மூன்று கருத்துக்களும் அதனை ஒட்டிய செயற்பாடுகளும் இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் மத்தியில் காணப்படுகின்றன.

1. கியாஸை ஒரு சட்டமூலாதாரமாக ஏற்றல் வேண்டும். அல்குர்ஆனிலோ, ஸுன்னாவிலோ, ஸஹாபாக்களின் கருத்துக்களிலோ, இஜ்மாஉவிலோ தீர்ப்பு எதுவும் காணப்படாதபோது தேவைக்கேற்ப இதனைப் பிரயோகித்தல் வேண்டும். இக்கருத்தையே பெரும்பாலான சட்ட அறிஞர்கள் கொண்டுள்ளனர்.

2. இஸ்லாமிய சட்டக் கலையில் கியாஸ், அறவே அங்கீகரிக்கப்படாத ஒன்றாகும். இக்கருத்தை ளாஹிரீ மத்ஹபினரும் ஷீஆ இமாமியாக்களும் கூறுகின்றனர். ளாஹிரீ மத்ஹபினர், சட்ட வசனங்களுக்குக் காரணம் கற்பிப்பதை முழுமையாக எதிர்த்தனர். ஒவ்வொரு வசனத்தையும் வெளிப்படையாகவே நோக்க வேண்டும் என அவர்கள் கருதினர்.

3. மத்ஹபுகளை பின்பற்றும் சிலர், கியாஸை அளவுமீறிப் பயன்படுத்தினர். பொதுத் தன்மையில் ஒன்றுபடாத இரு விடயங்களில் வலிந்து அதனை ஒன்றுபடுத்த

முனைந்தனர். சிலபோது, குறிப்பாக மாலிக் மத்ஹபினர் அல்குர்ஆன், ஸுன்னாவில் பொதுவாக வந்தவற்றை கியாஸ் குறிப்பாக்கும் என்றளவிற்குக் கூட சென்றனர்.

**கியாஸ் ஷரீஅத்தில் அங்கீகாரம் பெற்றது என்பதற்கான ஆதாரங்கள்**

- ''முஃமின்களே! அல்லாஹ்வுக்கு வழிப்படுங்கள். இன்னும் (அவன்) றஸூலுக்கும் உங்களில் அதிகாரம் உடையவருக்கும் வழிப்படுங்கள். ஏதேனும் ஒரு விஷயத்தில் பிணங்கிக் கொண்டால் அல்லாஹ்வையும் இறுதிநாளையும் நீங்கள் ஈமான் கொள்பவர்களாக இருந்தால். அதனை அல்லாஹ்வின் பக்கமும் (அவன்) ரஸூலின் பக்கமும் திருப்பி விடுங்கள். இது உங்களுக்கு மிகச் சிறந்ததாகவும், மிக அழகிய முடிவாகவும் இருக்கும்.'' (4:59). இந்த இறைவசனத்தில், அல்லாஹ்விடமும் அவனது தூதரிடமும் திரும்பிச் செல்வது என்பது புதிய பிரச்சினைக்குச் சட்டம் தேடும்போது சட்ட வசனங்களுக்கான காரணங்களைத் தேடி அதன் மூலம் தீர்ப்புப் பெறுவதைக் குறிக்கும். இதனையே கியாஸ் என்கின்றோம்.

- அல்குர்ஆனே பல்வேறு சட்டங்களுக்குரிய காரணங்களையும் பொதுத் தன்மைகளையும் எடுத்துக் கூறுகின்றது. உதாரணமாக:

  கனீமத் பொருட்கள் பலரிடமும் பிரிந்து செல்ல வேண்டியதற்கான காரணம்: ''(ஏனெனில் பொருள்) உங்களில் செல்வந்தர்களுக்கு மத்தியில் (மட்டும்) சுற்றி வருவதாய் ஆகாமலிருப்பதற்காக...'' (59:7)

- மதுவும் சூதாட்டமும் தடைசெய்யப்பட்டதற்கான காரணம்: ''ஷைத்தான் விரும்புவ தெல்லாம், மதுவினாலும் சூதாட்டத்தினாலும் உங்களுக்கிடையே பகைமையையும் வெறுப்பையும் உண்டாக்குவதற்கும் அல்லாஹ்வுடைய திக்ரை விட்டும் தொழுகையை விட்டும் உங்களை அவன் தடுப்பதற்குமேயாகும்.'' (5:91)

- ஸுன்னாவும் சட்டங்களுக்குரிய காரணங்களை முன்வைக்கின்றது. உதாரணமாக:

  ஒருவர் பிறரது வீட்டில் நுழைவதற்கு முன் அனுமதி கேட்டல் வேண்டும் என்பதற்கான காரணம்: ''பார்வை காரணமாகவே அனுமதி கோரவேண்டும் என உருவாக்கப்பட்டது.''

- ஸஹாபாக்கள் கியாஸை ஏற்றுச் செயற்படுவதாக இஜ்மாவான முடிவெடுத்திருந்தனர். அந்த அடிப்படையில்தான் அபூபக்ர் (ரழி) அவர்கள் தொழுகைக்கு இமாமத் செய்வதை கிலாபத்துக்குத் தகுதி பெறுவதற்கான காரணமாக ஸஹாபாக்கள் கருதினர்.

- சில முஃதஸிலாக்கள், ளாஹிரிய்யாக்கள், இமாமியாக்கள் போன்றோர் கியாஸ் ஷரீஅத்தின் அங்கீகாரம் பெற்றதல்ல எனக் கூறுகின்றனர்.

**அர்கானுல் கியாஸ்**

- கியாஸ் நான்கு அடிப்படைகளைக் கொண்டது.

1. **அஸ்ல்:** இஸ்லாமிய சட்ட மூலாதாரங்களினால் தெளிவாக சட்டம் குறிப்பிடப்பட்டுள்ள விடயம். இந்த அடிப்படை அல்குர்ஆன் அல்லது ஸுன்னா அல்லது இஜ்மாஉவில் வந்ததாக இருக்க வேண்டும் என்பது பெரும்பாலான அறிஞர்களின் கருத்தாகும்.

   இஜ்மாஉவிற்கு உதாரணம்:

- பருவ வயதையடைந்த, சீர்மையான, புத்தியுள்ள பெண்ணுக்கு அவளது சொத்துக்களை வைத்திருக்கும் பூரண உரிமையுண்டு. அவ்விடயத்தில் யாரும் தலையிட முடியாது என்ற இஜ்மாவான முடிவை வைத்து, அவ்வாறான பெண் விரும்பாத ஒருவரை அவளுக்குத் திருமணம் செய்து வைக்க முடியாது. அவளுக்கு தனது கணவனைத் தெரிவு செய்து ஏற்றுக் கொள்ளும் பூரண உரிமை உண்டு என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது.

2. **பர்உ:** தீர்வு காண வேண்டிய புதிய பிரச்சினை இதற்கு இரண்டு நிபந்தனைகள் உண்டு.

இப்புதிய பிரச்சினைக்கு நேரடியாகச் சட்ட வசனங்கள் மூலம் தீர்ப்பு வராததாக இருத்தல் வேண்டும். தெளிவாகத் தீர்ப்பு இருக்கும் பட்சத்தில் கியாஸ் செல்லுபடியாகாது.

பர்உவில் காரணம் ஒன்று இடம்பெறுதல் வேண்டும். அந்தக் காரணம் அஸ்லிலும் பர்உவிலும் வித்தியாசப்படாது இருத்தல் வேண்டும்.

3. **இல்லத்:** காரணம், பொதுத் தன்மை

- கியாஸின் முக்கிய ஒரு கூறாக இல்லத் விளங்குகின்றது. அதற்குக் கீழ்வரும் நிபந்தனைகள் உண்டு.

அ) இல்லத் வெளிப்படைத் தன்மை கொண்டதாக இருத்தல் வேண்டும்.

ஆ) இல்லத் சட்டவிதியின் நிரந்தரப் பண்பாகவும் எச்சந்தர்ப்பத்திலும் மாறாததாகவும் இருத்தல் வேண்டும். காலம், இடம், நேரம், தனிமனிதர்களின் மாற்றத்திற்கேற்ப இல்லத் மாறாததாக இருத்தல் வேண்டும்.

இ) சட்டத்திற்கும் இல்லத்திற்கும் இடையில் மிகச் சரியான பொருத்தப்பாடு இருத்தல் வேண்டும். அதாவது அது உண்மைக் காரணியாக இருத்தல் வேண்டும்.

உதாரணமாக மது தடுக்கப்பட்டதற்கான காரணம், அது போதை தரக் கூடியதாக இருப்பதாகும். அது திரவமென்பதனாலோ குறித்த நிறம் கொண்டதாக இருப்பதனாலோ அன்று.

ஈ) இல்லத் குறித்ததொன்றுக்காக என்றிராது மற்றொன்றுக்கும் அமுலாக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

உ) அந்த இல்லத்தை ஏற்க முடியாது எனச் சட்ட வசனம் எதுவும் வந்திருக்கக்கூடாது. அதாவது சட்ட வசனத்திற்கு முரணான ஓர் இல்லத்தைக் கொண்டு வர முடியாது.

4. **ஹுக்கும்:** சட்டம்

- அல்குர்ஆன், அஸ்ஸுன்னா, இஜ்மா என்னும் சட்ட மூலாதாரங்களின் ஊடாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட சட்டங்கள் ஹுக்கும் எனப்படும். இவ்வாறான சட்டங்களைப் புதிய பிரச்சினைக்குப் பொருத்துவதே கியாஸின் பணியாகும். அதற்குக் கீழ்வரும் நிபந்தனைகள் காணப்படுகின்றன.

அ) அது நடைமுறை வாழ்வு தொடர்பான சட்டங்களாக இருத்தல் வேண்டும்.

ஆ) மாற்றப்பட்ட (மன்சூக் செய்யப்பட்ட) சட்டவிதியாக இருக்கக் கூடாது.

இ) சட்டவிதிகளுக்குரிய காரணத்தைப் பகுத்தறிவைக் கொண்டு அறியக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

ஈ) குறித்த சில நபர்களுக்கென அமைந்த சட்டவிதிகளாக இருக்கக் கூடாது.

**கியாஸின் வகைகள்**

- இல்லத்தின் பெறுமானத்தை மையமாக வைத்து கியாஸ் மூன்று வகையாகப் பிரியும்.

**1. கியாஸுல் அவ்லா:**

பர்உவில் காணப்படும் இல்லத் அஸ்லின் இல்லத்தை விட பெறுமானத்தில் கூடுதலாக இருத்தல்.

*உதாரணம்*: பெற்றோருக்குத் துன்புறுத்தல் செய்வதைத் தடுத்துள்ள, ''அவர்களிருவருக்கு நீ 'சீ' என்றும் கூறிவிடாதே'' (17:23) என்ற வசனத்தில் வார்த்தை ரீதியாகத் துன்புறுத்தல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை விட அவர்களுக்கு சாட்டையால் அடிப்பது கடுமையானது. ஒரு முஃமினைப் பற்றி நல்லதாகவே எண்ணுதல் வேண்டும் என்ற ஹதீஸிலிருந்து அவனைப் பற்றிப் பேசும்போதும் நல்லதையே பேச வேண்டும் என்பது மேலானது என்ற கருத்தைப் பெறலாம்.

**2. கியாஸுல் முஸாவீ:**

அஸ்லிலும் பர்உவிலும் இருக்கும் இல்லத் சமமான பெறுமானம் கொண்டதாக இருத்தல். உதாரணம்: நாய் நக்கிய பாத்திரத்தை ஏழுமுறை கழுவுமாறு ஹதீஸ் கூறுகிறது. பன்றி நக்கினாலும் அவ்வாறு ஏழுமுறை கழுவுதல் வேண்டும் என்பது சமமான கியாஸின் மூலம் பெறப்பட்டதாகும்.

**3. கியாஸுல் அத்னா:**

அஸ்லை விடவும் பர்உவில் உள்ள இல்லத்தின் பெறுமானம் குறைவானதாக இருத்தல்.

*உதாரணம்*: போதை ஏற்படுத்துதல் என்பது மதுசாரம் தடுக்கப்பட்டதற்கான காரணமாகும்.

சில மதுசாரங்களில் போதையின் வீதம் குறைவாக இருப்பினும் அதற்கு ஹராம் என்ற சட்டமே வழங்கப்படுதல் வேண்டும்.

**கியாஸின் பயன்கள்**

- இஸ்லாமிய சட்டக் கலை வளர்ச்சிக்குத் துணை செய்கிறது.
- புதிதாகத் தோன்றும் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற உதவுகிறது.

- எல்லாக் காலத்திலும் தோன்றும் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற முடியும் என்ற கருத்தை உறுதிப்படுத்துகிறது.

- இஸ்லாத்தின் இயக்க சக்தியைப் பேண வழிசெய்கிறது.

**அல் இஸ்திஹ்ஸான்**

- அல் இஸ்திஹ்ஸான் மொழிக்கருத்தில் நல்லதென, சிறந்ததென, அழகானதென காணல்/ கருதுதல் எனப் பொருள்படும்.

- இதற்குப் பல வரைவிலக்கணங்கள் கூறப்படுகின்றன. அவற்றுள்

அ) ‘ஒரு கியாஸை விட்டும் நீங்கி அதனைவிடப் பலமான ஒரு கியாஸை நோக்கிச் செல்வதாகும்.’

அதாவது கியாஸ் சில இடங்களில் பொருத்தமில்லாது அமையும். சில போது அதன் பிரயோகத்தை விட்டுவிட வேண்டி ஏற்படும். அப்போது கியாஸை விட்டுப் பிறிதொரு தீர்வுக்கு வரும் முயற்சியே இஸ்திஹ்ஸான் ஆகும்.

ஆ) ‘குறிப்பிட்ட ஆதாரம் முன்வைக்கின்ற சட்டத்தீர்ப்புக்குப் பகரமாக மனிதர்களது நலன்கருதி அவர்களது வாழ்வில் காணப்படும் மரபு, வழக்கு என்பவற்றை நோக்கிச் செல்வதே இஸ்திஹ்ஸான் ஆகும்.’

- இஸ்திஹ்ஸான் மனித ஆசை, விருப்பு, வெறுப்பு, மனோ இச்சை ஆகியவற்றைக் கொண்டமைந்ததன்று என்பதை வரைவிலக்கணங்கள் தெளிவுபடுத்துகின்றன.

- மாலிகி, ஹனபி மத்ஹபினர் இதை அறிமுகப்படுத்தியுள்ளனர். எனினும் ஷாபிஈ, ஹம்பலி மத்ஹபினர் இதை ஒரு சட்ட மூலாதாரமாகக் கொள்வதில்லை.

**இஸ்திஹ்ஸான் வகைகள்**

அ). வெளிப்படையாக இருக்கும் கியாஸை விட்டுவிட்டு மறைந்திருக்கும் கியாஸிற்குச் சென்று முடிவு கூறல்.

உதாரணம்: கழுகு, காகம், பருந்து போன்ற வேட்டைப்பறவைகள் அருந்தியதன் பின்பு எஞ்சுகின்ற நீர் சுத்தமானது என இஸ்திஹ்ஸான் அடிப்படையில் தீர்வு பெறப்படுகிறது.

- இங்கு வேட்டைப்பறவைகள் அருந்திய பின்னர் எஞ்சிய நீரை, மனிதன் அருந்திய பின் எஞ்சிய நீருடனே ஒப்பிட்டு முடிவு பெறப்பட்டுள்ளது. ஏனெனில் மனிதன் அருந்திய பின் எஞ்சிய நீர் சுத்தமானதாகும். மனிதன் வாயால் அருந்துகின்றான் அவனது வாய் சுத்தமானதாகும். மேலே சொன்ன பறவைகள் தனது அலகுகளினாலேயே அருந்து கின்றன. அவற்றின் அலகுகள் சுத்தமானதேயாகும். அவ்வலகுகளில் படியும் இரத்தமோ எச்சிலோ அவ்வலகுகளை அசுத்தமாக்காது.

- ஆனால் நாம் வெளிப்படையாகப் பார்த்தால் வேட்டைப்பறவைகள் அருந்தியதன் பின் எஞ்சுகின்ற நீரை, வேட்டை மிருகங்கள் அருந்தியதன் பின் எஞ்சுகின்ற நீருடனே ஒப்பிட வேண்டும். அம்மிருகங்களின் வாயில் உள்ள எச்சில் நீருடன்

கலக்கும். அவற்றின் எச்சில் நஜீஸ் என்பதால் நீர் நஜீஸ் என்ற முடிவிற்கே வரவேண்டியது போன்று தோன்றும்.

இங்கு வெளிப்படையான கியாஸை விட்டுவிட்டு மறைவான கியாஸின் (மனிதனுடன் ஒப்பிடல்) மூலமே தீர்வு பெறப்பட்டுள்ளது.

ஆ) பொது விதியாக வந்துள்ள முடிவிற்குப் பகரமாக சிறியதொரு நலனுக்கு முன்னுரிமை வழங்குவதன் மூலம் ஒரு முடிவைப் பெறல்.

'நஜீஸை முழுமையாக அகற்றினாலே சுத்தமாகும் என்பது பொது விதியாகும். எனினும் கிணற்றில் ஏதேனும் நஜீஸ் விழுந்துவிட்டால் ஒரு சில வாளி நீரை மாத்திரமே அள்ளி விடுகின்றோம் இது இஸ்திஹ்ஸான் ழரூரி ஆகும்.

'மடையன் செய்கின்ற வக்ப் ஏற்றுக் கெள்ளப்படமாட்டாது என்பது பொது விதியாகும். எனினும் மஸ்லஹாவைக் கருத்திற் கொண்டு அவனது வாழ்வில் அவன் செய்யும் வக்ப் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இது இஸ்திஹ்ஸான் மஸ்லஹி ஆகும்.

**இஸ்திஹ்ஸான் சட்ட மூலாதாரம் என்பதற்கான ஆதாரங்கள்**.

அ). இஸ்திஹ்ஸான் தனியான சட்ட மூலாதாரமன்று. அது கியாஸை அல்லது உருபை சார்ந்து அமைந்தவொன்றாகும்.

ஆ) ஹனபி, மாலிகி மத்ஹபைச் சார்ந்தோர் இதனை அதிகம் பயன்படுத்தியுள்ளனர்.

இ) 'அறிவைப் பத்துப்பாகங்களாகப் பிரித்து நோக்கினால் இஸ்திஹ்ஸான் ஒன்பது பாகங்களாக அமையும்.' என இமாம் மாலிக்(ரஹ்) கூறியுள்ளார்.

ஈ) 'முழுமையாக கியாஸில் மூழ்கிவிடுபவர் நபி அவர்களின் ஸுன்னாவிற்கு வெளியே சென்றுவிட முடியும். இஸ்திஹ்ஸான் அறிவின் தூணாகும்.'என்பது இமாம் மாலிகின் மாணவனான இஸ்பா என்பவரின் கருத்தாகும்.

உ) 'இமாம் அபூஹனீபாவின் மாணவர்கள் கியாஸில் ஏதேனும் சர்ச்சைகளைக் கிளப்பினால் நான் இஸ்திஹ்ஸானுக்குச் செல்கிறேன். அப்போது எவரும் எதனையும் கூற மாட்டார்கள்.' என முஹம்மத் இப்னு ஹஸன் குறிப்பிட்டார்.

ஊ) இஸ்திஹ்ஸான் மூலம் தீர்வு பெறுகின்ற போது கியாஸ், உர்பு, மஸ்லஹா என்பன கருத்தில் கொள்ளப்படுகின்றன. அவை சட்ட மூலாதாரங்கள் என்ற வகையில் இஸ்திஹ்ஸானும் கூட மூலாதாரமேயாகும்.

**இஸ்திஹ்ஸான் சட்ட மூலாதாரமாக ஏற்க மறுப்போர் முன்வைக்கும் நியாயங்கள்.**

அ). எவர் ஒன்றைச் சிறந்ததெனக்கருதி முடிவெடுக்கின்றாரோ அவர் சட்டமியற்றியவராக மாறுகின்றார். சட்டமியற்றும் அதிகாரம் அடியானுக்கில்லை. அது அல்லாஹ்வுக்கு மாத்திரம் உரியதாகும்.

ஆ) சிறந்ததென ஒருவர் கருதுவதானது அவரது விருப்பு வெறுப்பைச் சார்ந்ததாகும். விருப்பு வெறுப்பானது சட்டத்திலும் வேறுபாட்டைத் தோற்றுவிக்கும். எவரும் ஒரு குறித்த திசையை நோக்கி அதன் பக்கமே கஃபா இருக்கின்றது எனக்கருதித் தொழ முடியாது.

இ) நீங்கள் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் 'உலுல்அம்ர்' களுக்கும் வழிப்பட்டு நடவுங்கள். (விசுவாசிகளே) உங்களுக்குள் யாதொரு விடயத்தில் பிணக்கு ஏற்பட்டால் அதனை அல்லாஹ்விடமும் அவனது தூதரிடமும் ஒப்படைத்து விடுங்கள்.(4:59) எனவே இவ்வசனமானது இஸ்திஹ்ஸான் பக்கம் திரும்பும் படி பணிக்கவில்லை.

ஈ) நபி முஹம்மது (ஸல்) அவர்கள் உயர்ந்த அறிவுத் தரத்தில் இருந்தும் கூட இஸ்திஹ்ஸானைப் பயன்படுத்தவில்லை.

உ) வெறுமனே அறிவுக்கும் இஸ்திஹ்ஸானுக்கும் இடம் கொடுத்தால் தகுதியற்றோரும் இஜ்திஹாத் செய்ய முற்படலாம்.

**முடிவு**

- இமாம் ஷாபிஈ (றஹ்) கூறுவது போன்று இஸ்திஹ்ஸான் என்பது வெறுமனே லனை மாத்திரம் கருத்திற் கொண்டு முடிவெடுப்பதல்ல. மாறாக இஸ்திஹ்ஸான் மூலம் தீர்வு பெறுவது என்பது ஒன்றில் உருபை அல்லது மஸ்லஹாவை அல்லது கியாஸை சார்ந்திருந்து தீர்வு பெறுவதாகும். எனவே வெறுமனே மனோஇச்சையில் தங்காமல் ஆதாரம் ஒன்றைத் துணையாகக் கொண்டே இஸ்திஹ்ஸான் பிரயோகிக்கப்படுகின்றது.

**மஸ்லஹா முர்ஸலா / அல் இஸ்திஸ்லாஹ்**

- ஷரீஅத் மனித நலன்காப்பதை நோக்காகக் கொண்டுள்ளது. இஸ்திஸ்லாஹ் என்பதன் கருத்து சமூக நலனை ஆதாரமாகக் கொள்வதாகும்.
- குர்ஆன் சுன்னாவின் போதனைகள் குறித்த ஒரு விடயம் தொடர்பாக தீர்வு சொல்லாத போது மனித நலனைக் கருத்திற் கொண்டு தீர்வு பெறுவதனையே இது குறிக்கும்.
- மக்களது அத்தியவசியத் தேவைகள், சாதாரணத் தேவைகள், மேலதிகத் தேவைகள் என்பவற்றை நிறைவேற்றிக் கொள்வதன் மூலம் மக்கள் நலன் காத்தலையே இது குறிக்கும்.
- மஸ்லஹா அடிப்படையில் பெறப்பட்ட தீர்வுகளுக்கு உதாரணங்களாக
  - அல்குர்ஆன் ஒன்று திரட்டப்பட்டமை
  - சிறைச்சாலைகள் உருவாக்கப்பட்டமை
  - நாணயங்கள் வெளியிடப்பட்டமை

  போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**மஸ்லஹா ஒரு சட்ட மூலாதாரம் என்பதற்கான ஆதாரங்கள்**

1. ஷரீஅத் மக்களது சிரமங்களை நீக்கி அவர்களுக்கு நன்மை பயப்பதனையே நோக்காகக் கொண்டிருக்கின்றது என்றவகையில் புதிதாகத் தோன்றும் பிரச்சினைகளுக்கு மனித நலன்களை உத்தேசித்து தீர்வு வழங்குவது ஷரீஆவின் நோக்கத்துக்கு இணைந்ததாக அமைந்துள்ளது.

2. ஸஹாபாக்கள் மஸ்லஹா முர்ஸலாவை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டு வந்துள்ளார்கள். அபூபக்ர் (ரழி) தனக்குப் பின் உமர் (ரழி) அவர்களை அடுத்த கலீபாவாக நியமித்தமை, குர்ஆன் திரட்டப்பட்டமை போன்றவற்றை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

**மஸ்லஹா முர்ஸலா அடிப்படையில் தீர்வு பெறுவதற்கு அறிஞர்கள் முன்வைத்துள்ள நிபந்தனைகளாவன**

1. மஸ்லஹா / நலன் யதார்த்தமானதாக இருக்க வேண்டும் அது பிரமையின் அடிப்படையில் அமைந்ததாக இருக்கக் கூடாது
2. மஸ்லஹா / நலன் எல்லோருக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும்
3. மஸ்லஹா / நலன் ஷரீஆவின் நோக்கங்களுக்கு இயைந்ததாக இருக்க வேண்டும்
4. ஒரு கஷ்டத்தை நீக்குவதாக அல்லது ஒரு நலனைக் காப்பதாக மஸ்லஹா அமைதல் வேண்டும்

**இஸ்திஸ்ஹாப்**

- இஸ்திஸ்ஹாப் என்ற பதம் மொழிரீதியாக இணைந்து செல்லல், தோழமை பூணல் என்ற மொழிக்கருத்தைத் தருகின்றது.

  இஸ்லாமிய பரிபாசையில் ஏற்கனவே உறுதியாக நிறுவப்பட்ட ஒரு விடயத்தை அல்லது மறுக்கப்பட்ட ஒரு விடயத்தைத் தொடர்ந்தும் அதே நிலையில் வைத்துக் கொள்வதையே இது குறிக்கும்.

- 'இருக்கின்ற ஒன்றைத் தொடர்ந்து வைத்திருத்தல், உறுதியான ஒன்றைத் தொடர்ந்து வைத்திருத்தல், தடுக்கப்பட்ட ஒன்றைத் தொடர்ந்து தடுத்து வைத்தல் என்பதே இஸ்திஸ்ஹாப் ஆகும்' என இமாம் இப்னுல் கையூம் விளக்கியுள்ளார்.

**இஸ்திஸ்ஹாப் சட்ட மூலாதாரம் என்பதற்கான ஆதாரங்கள்**

- கடந்த காலத்தில் காணப்பட்ட ஓர் அம்சம் தொடர்ந்தும் இருக்கும் என்பது ஓர் எளிய உண்மையாகும். அதனடிப்படையிலேயே மனித நடவடிக்கைகளும் அமைந்து காணப்படுகின்றன. குடும்பத்தை விட்டு தூர இடமொன்றிற்கு ஒருவர் சென்றுவிட்டால் அவர் உயிருடன் இருக்கிறார்; திரும்பி வருவார் என்ற அடிப்படையிலேயே குடும்பத்தவர்கள் நடந்து கொள்கின்றார்கள். அவர் மரணித்துவிட்டார் என்பதற்கு ஆதாரம் கிடைக்கும் வரை அவர் உயிருடன் இருக்கிறார் என்ற கருதுகோளின் அடிப்படையிலே குடும்பத்தவர்கள் தொழிற்படுவர்.
- ஷரீஆ சட்டமொன்று அது மாற்றப்பட்டு விட்டது என்பதற்கான ஆதாரம் தோன்றும் வரையில் அது மாற்றப்படவில்லை என்றே கணிக்கப்படுகிறது. மதுபானம் வினாக்கிரியாக மாறும் வரை அது ஹராமானது என்றும், திருமண ஒப்பந்தம் ஒன்று முறிக்கப்படும் வரையில் கணவன் மனைவி உறவு ஹலாலெனவும் கணிக்கப்படுவதை குறிப்பிட முடியும்.
- மேலும் ரமழான் பிறை தென்படாவிட்டால் ஷ.்பான் மாதம் 30 நாட்கள் எனக் கணிக்கப்படுவது இஸ்திஸ்ஹாப் அடிப்படையிலாகும்.

**இஸ்திஸ்ஹாப் விதிமுறைகள்**

1. ஒரு விடயம் அது மாற்றப்பட்டு விட்டது என்பதற்கான ஆதாரம் கிடைக்கும் வரையில் தொடர்ந்தும் அதே நிலையில் இருக்கும்
2. அடிப்படையில் அனைத்துப் பொருட்களும் அனுமதிக்கப்பட்டதாகும்.
3. அடிப்படையில் மனிதன் குற்றமற்றவனாக கருதப்படுவான்.
4. உறுதியான ஒரு நிலைப்பாட்டை இடையில் ஏற்படும் சந்தேகம் மாற்றிவிட மாட்டாது.

***உதாரணம்:***

வுழு செய்தமை பற்றி உறுதியான நம்பிக்கையுடன் உள்ள ஒருவருக்கு தனது வுழு முறிந்து விட்டதோ என சந்தேகம் ஏற்படின் அவர் வுழுவுடன் உள்ளவராகவே கருதப்படுவார். இது இஸ்திஸ்ஹாப் அடிப்படையில் பெறப்பட்ட முடிவாகும்.

இஸ்திஸ்ஹாப் என்பது ஒரு புதிய ஆதாரம் அல்ல. ஏற்கனவே இருந்த ஒரு சட்டம் தொடர்ந்தும் நிலைத்திருக்கிறது என்ற அடிப்படையில் பெறப்பட்ட ஒன்றாகும்.

**அல் உர்பு**

இதன் மொழிக் கருத்து மரபு என்பதாகும்.

- ஒரு சமூகத்தில் கணிசமானோர் தமது வாழ்வில் சொல் ரீதியாக அல்லது செயல் ரீதியாகப் பின்பற்றிவரும் மரபுகளையே உர்பு - வழக்காறு என்கின்றோம்.
- தனி மனிதனது பழக்க வழக்கங்கள் மரபுகள் என்பன உர்ப் என அழைக்கப்படுவதில்லை. அவை ஆதத் என்றே அழைக்கப்படுகின்றன

**அல் உர்பு இற்கான ஆதாரங்கள்**

1. மக்களிடமிருந்து அவர்களால் செய்ய முடியுமான இலகுவான அம்சங்களை ஏற்றுக் கொள்ளுங்கள் மேலும் மக்கள் எல்லோருக்கும் பரீட்சயமான (வழக்கிலுள்ள) விடயங்களையே ஏவுங்கள் (7:199)
2. முஸ்லிம்கள் நல்லவை எனக் கருதியவைகள் அல்லாஹ்விடத்திலும் நல்லவையே என அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி) குறிப்பிடுகின்றார்.
3. அபூ ஸுப்யானின் மனைவி ஹின்தா நபியவர்களிடம் வந்து தனது கணவன் தனக்கு செலவு செய்யும் விடயத்தில் கஞ்சத்தனம் காட்டுவதாக முறையிட்ட வேளை, நபி (ஸல்) அவர்கள் ஹின்தாவை விழித்து; உமக்கும் உமது குழந்தைகளுக்கும் வழக்கமாக எவ்வளவு பணம் தேவையோ அந்த அளவை அபூ ஸுப்யானின் சொத்திலிருந்து எடுத்துக் கொள்வீராக; எனக் குறிப்பிட்டார்கள்.
4. குறிப்பிட்டதோர் உர்ப் - வழுக்காறு மனித நலனைப் பேணுவதாக அல்லது அவனது சிரமமொன்றை நீக்குவதாக அமையும் போது மனிதன் தொடர்ந்தும் அதனை நடைமுறைப்படுத்துவான். நலன்களைப் பேணி சிரமங்களை நீக்குவதே ஷரீஆவின் இலக்காகும். உர்பும் இத்தகையதொன்றாகும். இஸ்லாம் அறிமுகமான

போது அரபிகளிடம் காணப்பட்ட சில உர்ப் வழக்காறுகளை முழுமையாகவும் சிலதை மாற்றங்களுடனும் அங்கீகரித்தது.

*உதாரணம்*

- திருமணப் பொருத்தம் பார்த்தல்
- கொலைக்கு தியத் வழங்குதல்
- க.்.பாவைத் தவாப் செய்தல்
- இத்தா அனுஷ்டித்தல்

**உர்பின் வகைகள்**

01. சொல் சார்ந்தவை.

02. செயல் சார்ந்தவை.

என வகைப்படுத்தப்படுகின்றன.

**சொல் சார்ந்தவை**

- சில சொற்களைக் குறிப்பிட்டதொரு கருத்தில் மரபு வழியாகப் பயன்படுத்துவதையே இது குறிக்கும். உதாரணம் 'அல்லாஹ் மீது சத்தியமாக உமது வாசல்படி மிதிக்கமாட்டேன்' என ஒருவர் சத்தியம் செய்கிறார். பின்னர் பின்பக்கக் கதவினால் அவ்வீட்டில் நுழைந்தால் அவர் சத்தியத்தை முறித்தவராகவே கருதப்படுவார். அவர் அதற்கான குற்றப்பரிகாரத்தை நிறைவேற்ற வேண்டும். ஏனெனில் வாசல்படி மிதிக்க மாட்டேன் என்ற சொற்றொடரின் கருத்து வரமாட்டேன் என்பதைக் குறிப்பதாகும்.

**செயல் சார்ந்தவை**

- சில செயற்பாடுகளை மரபுரீதியாக கடைப்பிடித்து வந்தால் அதனையே இது குறிக்கும்.

**உர்ப் ஆம்**

- உர்ப் ஆம் என்பதன் கருத்துப் பொதுவான வழக்காறு என்பதாகும். அதாவது எல்லா நாடுகளிலும் எல்லா மக்களிடமும் உள்ள உருபை - வழக்காற்றைக் குறிக்கும்.
- மீன் இறைச்சி வகையைச் சார்ந்தாயினும் உலகில் எப்பிரதேசத்திலும் எம் மொழியிலும் மீன் இறைச்சி என்று அழைப்பதில்லை. மாறாக மீன் என்றே அழைக்கப்படுகின்றது.

**உர்ப் காஸ்**

- உர்ப் காஸ் என்பதன் கருத்து பிரத்தியேகமான உர்ப் என்பதாகும். அதாவது குறிப்பிட்டதொரு இனக் குழுமத்திற்கு அல்லது சமூகத்திற்கு அல்லது பிரதேசத்திற்கு அல்லது நாட்டிற்கு உரிய பிரத்தியேகமான வழக்காறைக் குறிப்பிடலாம்.

*உதாரணம்:*

- தனது வாடிக்கையாளருக்குப் பொருட்களைக் கடனுக்கு வழங்கும் வியாபாரி அக்கடனைத் தனது புத்தகமொன்றில் குறித்துக் கொள்வார். ஆனால் அவ்வாறு எழுதும் போது எந்தச் சாட்சியங்களையும் வைத்துக் கொள்வதில்லை. இது வியாபார சமூகத்திற்குரிய ஓர் உர்ப் ஆகும்.

**உர்பை நடைமுறைப்படுத்துவதற்கான நிபந்தனைகள்**

அ). வழக்காறானது ஷரீஅத்தின் தெளிவான சட்ட வசனமொன்றுக்கு (நஸ் கத்இ) முரணாக அமையக் கூடாது. அவ்வாறு அமையுமாயின் அதனை உர்ப் பாஸித் என்போம். உதாரணமாக, அல்லாஹ் வட்டியை ஹராமாக்கினான் என்பது தெளிவான ஆதாரமாகும். எனவே வட்டியை உர்பாக - வழக்காறாகக் கொள்ள முடியாது.

ஆ). எந்த உர்பை பயன்படுத்தி குறித்த விடயம் அணுகப்படுகின்றதோ அவ்விடயம் தோன்றிய வேளையில் அவ்வுர்பும் காணப்பட வேண்டும். இன்றேல் உர்பில் ஏற்படும் மாற்றம் சட்டத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தும்.

**மேலதிக வாசிப்புக்குரியவை:**

1. அமீன் எம்.ஐ.எம். (2006) ***இஸ்லாமிய சட்டக்கலை மூலாதாரங்கள்,*** ஹெம்மாதகம.

2. அமீன் எம்.ஐ.எம். (1996) ***இஸ்லாமிய சட்டக்கலை (ஒரு வரலாற்று நோக்கு)***, அல் கலம் பதிப்பகம், பேருவலை.

3. அக்ரம் முஹம்மத், ***நடைமுறைக்கேற்ற இஸ்லாம் III*** , (2003), முஸல்மான் பப்லிகேஷன், பஸ்யால.

4. மன்ஸுர் எம்.ஏ.எம். ***இஜ்மா (இஸ்லாமிய சிந்தனை) 19:4 தொடக்கம் 20:04 வரை***, நளீமியா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம்.

5. மன்ஸுர் எம்.ஏ.எம், ***கியாஸ், (இஸ்லாமிய சிந்தனை) 22:03 தொடக்கம் 23:03 வரை***, நளீமியா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம்.

**தேர்ச்சி 04 : இஸ்லாமிய நாகரிகத்தை வளப்படுத்துவதில் பங்காற்றிய கலைகளையும் ஐரோப்பிய மறுமலர்ச்சியில் இஸ்லாமிய நாகரிகம் ஏற்படுத்திய தாக்கத்தையும் விளக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 4.3 : கருத்து வேறுபாடுகளின் போது கடைப்பிடிக்கவேண்டிய ஒழுக்க விதிகளை தம் வாழ்வில் எடுத்து நடப்பார்.**

**பாடவேளை : 10**

**கற்றல் பேறுகள் :**

- கருத்து வேறுபாடுகள் தோன்றுவதற்கான காரணங்களை இனங்கண்டு நியாயிப்பார்.
- கருத்து வேறுபாடுகளின் போது முஜ்தஹித்கள் பின்பற்றிய ஒழுக்கங்களை விபரிப்பார்.
- கருத்து வேறுபாடுகளின் போது ஒழுக வேண்டிய வழிமுறைகளை அறிந்து பின்பற்றுவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டல் :**

- இஸ்லாமிய வரலாற்றில் சட்டத்துறையில் கருத்துவேறுபாடுகள் என்பது இயல்பானது. இஸ்லாமிய சட்டக்கலையில் இஜ்திஹாதை அடிப்படையாக வைத்தே கருத்து வேறுபாடுகள் தோற்றம் பெற்றன. அல்குர்ஆனும் ஸுன்னாவும் மிகத் தெளிவாகக் குறிப்பிடுகின்ற சட்டங்களில் இறுக்கமான போக்கினைக் கொண்டிருந்த போதிலும் அஃதல்லாத சந்தர்ப்பங்களில் இஸ்லாமிய சட்டங்களை தாராள தன்மையோடு நெகிழ்ந்து கொடுக்கும் போக்கினையே கொண்டிருக்கின்றது. சட்டக்கலையின் தோற்றம் முதல் கருத்துவேறுபாடுகளும் வளர்ந்து வந்திருப்பதை அவதானிக்கலாம்.
- நபி (ஸல்) அவர்களது காலத்தில் வஹி அருளப்பட்டுக்கொண்டிருந்தமையால் இஜ்திஹாத் பெரும்பாலும் அவசியப்படவில்லை. இதனால் நபி (ஸல்) அவர்களது காலத்தில் கருத்து வேறுபாடுகள் மிகக் குறைவாகவே இடம்பெற்றன. ஆனால் நபி (ஸல்) அவர்களது மரணத்தைத் தொடர்ந்து வஹியின் வருகை நின்றுவிட்டது. வஹியின் கருத்துக்களை நன்கறிந்த நபித்தோழர்கள் மரணித்தமை, தூர நாடுகளுக்கு சென்று வாழ முற்பட்டமை போன்ற காரணங்களினால் சட்டங்களில் தோன்றிய கருத்து வேறுபாடுகள் மேலும் விரிவடைந்தன.
- கருத்து வேறுபாடுகள் இரண்டு முக்கிய அடிப்படைகளைக் கொண்டனவாகும்.
- அல்குர்ஆன் - ஹதீஸ்களில் வரும் சட்ட வசனங்கள் பல கருத்துக்களைக் கொடுக்கக்கூடியனவாக இருந்தமை.
- மனித அறிவுத்தரமும், விளங்கும் ஆற்றலும் வித்தியாசமாகக் காணப்படுகின்றமை.
- கருத்து வேறுபாடுகள் மனித இனத்தின் தோற்றத்தோடு துவங்கிவிட்டது. மனிதனின் அறிவுத்தரவேறுபாடு பிரச்சினைகளை ஏற்படுத்தின.

- அல்குர்ஆனிலும், ஹதீஸிலும் இடம்பெற்றுள்ள பல வசனங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்களைத் தரக்கூடியவை. அவ்வாறே அறபு மொழியில் ஒரு சொல் பல கருத்துக்களைத் தரக் கூடியனவாகவும் உள்ளன.

- மனிதனது சிந்தனை ஆற்றல், அறிவுத் தரம், விளங்கிக் கொள்ளும் தன்மை, பிரச்சினைகளை அணுகும் முறை, சட்ட வசனங்களை விளங்கிக் கொள்ளும் முறை போன்றன ஆளுக்காள் வேறுபட்டே அமைந்துள்ளன. இது இறைவனின் ஏற்பாடாகும். எனவே மேற்சொன்ன இரண்டு அம்சங்களும் கண்டிப்பாக சட்டங்களில் கருத்து வேறுபாடுகளைத் தோற்றுவிக்கும் என்பதில் ஐயமில்லை.

- இதனைப் பின்வரும் சமன்பாட்டின் மூலம் தெளிவாக விளங்கலாம்.

- பல பொருள் கொடுக்கும் அல்குர்ஆன், ஹதீஸ் வசனங்கள் + அறிவுத்தர ஏற்றத்தாழ்வு = கருத்து வேறுபாடு.

- ஒரே பொருளையே கொடுக்கும் திட்டவட்டமான அல்குர் ஆன், ஹதீஸ் வசனங்கள் + ஏற்றத்தாழ்வற்ற அறிவுத்தரங்கள் = ஒற்றுமையான கருத்துக்கள் (கருத்து வேறுபாடின்மை)

- கருத்து வேறுபாடுகளை ஒழிப்பது என்பது சாத்தியமற்றது. சட்டங்களில் காணப்படும் கருத்து வேறுபாடுகள் இயல்பானவை. தவிர்க்க முடியாதவை.

- மார்க்க சட்டங்களில் கருத்து வேறுபாடுகள் எதுவும் இருக்க கூடாது. முரண்பாடுகள் ஏதமின்றி எல்லோரும் ஒரே சட்டத்தையே பின்பற்ற வேண்டுமென்றிருந்தால் அல்லாஹ் குர்ஆனிலும், ஹதீஸிலும் எல்லாவற்றையும் மிகத் தெளிவாக, துல்லியமாக வரையறுத்து, திட்டவட்டமான ஒரே கருத்தை மாத்திரம் முன்வைத்திருப்பான். அவ்வாறே மனிதர்களது அறிவுத்தர வேறுபாட்டை நீக்கி எல்லோரையும் சம அறிவுத் தரத்தில் படைத்திருப்பான். ஆனால் அவ்வாறு இடம்பெறவில்லை.

- உதாரணமாக : தலாக் சொல்லப்பட்ட பெண்கள் மூன்று குரு.ஃ. ” காலம் வரை எதிர்பார்த்திருக்கவும். (2:228) சில சஹாபாக்கள் ‘‘குருஉ’’ என்ற பதத்தின் கருத்து ‘‘மாதவிடாய்’’ என்று கருதினர். இன்னும் சிலர் மாதாந்த ருதுவிலிருந்து தூய்மையாவதையும் குர்உ என்று கருதினர். உமர் (ரழி) , அலி (ரழி), இப்னு மஸ்ஊத் (ரழி) அபூ மூஸா (ரழி) முஜாஹித், கதாதா, இக்ரிமா போன்றோர் ‘குர்உ’ என்பதை மாதாந்த ருது என்று கருதினர். ஆயிஷா (ரழி) இமாம் ஷாபிஈ (ரஹ்) போன்றோர் ‘குர்உ’ என்பது மாதாந்த ருதுவிலிருந்து நீங்குதல் என்று கருதினர். எனவே உமர் (ரழி) அணியைச் சார்ந்தோர் கருத்துப்படி மூன்றாவது மாதாந்த ருது வெளிப்பட்டதும் இத்தா முடிவடையும். மாறாக ஆயிஷா (ரழி) அணியைச் சார்ந்தோரது கருத்துப்படி மூன்றாவது மாதாந்த ருதுவிலிருந்து தூய்மையடைந்ததும் இத்தா முடிவடையும். இது ஸஹாபாக்கள், மற்றும் ஸலபுகளிடையே கருத்து வேறுபாடுகள் காணப்பட்டமையை உறுதிப்படுத்துகின்றது. ஆயினும் அவர்கள் தமக்கெதிரான கருத்துக் கொண்டோரை எதிர்க்கவில்லை, அவர்களது கருத்துக்கள் அடிப்படையிலேயே பிழையானவை என்று மறுத்துரைக்கவுமில்லை. இவ்வாறு இஜ்திஹாத் செய்வது ஆகுமென்றே இவர்கள் கருதினார்கள்.

• மேலே உதாரணத்திற்கு எடுத்துக் கொண்ட 2:228 வசனத்திற்கு இரண்டு வசனங்களுக்கு முன்னால் ''தங்களது மனைவிமார்களுடன் சேருவதில்லை என்று சத்தியம் செய்து கொண்டவர்களுக்கு நான்கு மாதங்கள் தாமதிக்க அனுமதியுண்டு.. (2:226) இந்த வசனத்தில் அல்லாஹ் 'நான்கு மாதங்கள்' என்று மிகத் தெளிவாக குறிப்பிட்டுள்ளான். இங்கு ஒரே கருத்தைத் தரக்கூடியவிதமாக திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளான். அல்லாஹ் தலாக்கிற்கான இத்தா விடயத்தில் கருத்து ஒற்றுமை காணப்படவேண்டும் என்று விரும்பியிருந்தால் 2: 226 இல் தெளிவாக நான்கு மாதங்கள் என்று குறிப்பிட்டது போல (2:228) இன்று மூன்று 'குருஉ' என்று குறிப்பிட்டமையை மூன்று மாதங்கள் என தெளிவாக சொல்லியிருப்பான்.

- இவ்வாறே அல்குர்ஆனின் வேறுபல இடங்களிலும், ஹதீஸ்களிலும் இத்தகைய பல கருத்துக்களுக்கு இடம்பாடான வசனங்கள் இடம்பெற்றுள்ளதை அவதானிகலாம்.
- சட்டம் பற்றிய வசனங்களில் அதிகமானவை கருத்து வேறுபாடுகளுக்கு இடமளிப்பதாக இருப்பது இதனை மேலும் உறுதிப்படுத்துகிறது. பல கருத்துக்களுக்கு இடம் கொடுத்து மக்களுக்குச் சட்டங்களில் விரிந்த வசதிகளை எற்படுத்த வேண்டும் எனவும், மேலும் மனிதனுக்கு ஆராய்வதற்கு - இஜ்திஹாத் செய்வதற்கு- இடம் கொடுக்க வேண்டும் எனவும் அல்லாஹ் விரும்பியுள்ளான் என்பது தெளிவாகின்றது.
- நபி (ஸல்) அவர்கள் காலத்திலும் அவரது வபாத்திற்குப் பின்னர் ஸஹாபாக்களிடேயும் சட்டங்களில் கருத்து வேறுபாடுகள் காணப்பட்டன. அவற்றுக்கான சில உதாரணங்களை நோக்குவோம்.

1. இமாம் புகாரி, இப்னு உமர் அறிவிப்பதாக பின்வருமாறு ரிவாயத் செய்கிறார். ''நபி (ஸல்) அவர்கள் அகழி யுத்த நாளன்று பின்வருமாறு கூறினார்கள். பனூ குறைழாக்களின் பூமியிலேயே அனைவரும் அஸர் தொழ வேண்டும். பயணத்தின் போது பாதையில் சிலர் நாம் அங்கு போய்த்தான் தொழ வேண்டும் என்றனர். வேறு சிலர் நபி (ஸல்) அவர்கள் அந்தக் கருத்தில் கூறவில்லை, என்று கூறி பாதையிலேயே அஸரைத் தொழுது கொண்டார்கள். இவ்விடயம் நபி (ஸல்) அவர்களிடம் தெரிவிக்கப்பட்டபோது அவர்கள் யாரையும் கண்டிக்கவில்லை''

   இங்கு நபியவர்கள் அஸருக்கு முன்பே எதிரிகளின் இடத்தைச் சென்றடைய வேண்டுமென்றே இவ்வாறு கூறியிருக்கிறார், மாறாக அஸர் தொழுகையை தாமதப்படுத்துவது நபியின் நோக்கமாக இருக்க முடியாது என்று கருதியோர் இடையில் தொழுதனர். ஏனையோர் நபி (ஸல்) அவர்களின் கூற்றின் வெளிப்படையான கருத்தை வைத்துக் கொண்டு குறித்த எல்லை அடைந்த பின்னரே தொழுதனர். இரு சாராரையும் நபி (ஸல்) அவர்கள் சரிகண்டு, அங்கீகரித்தார்கள்.

- உ-ம் : இமாம் அபூதாவூத் (ரஹ்), அபூ ஸஈத் அல்குத்ரி (ரழி) அறிவித்ததாக ரிவாயத் செய்கிறார். '' இரு ஸஹாபாக்கள் பிரயாணம் செய்தனர். பிரயாணத்தின் போது தொழுகையின் நேரமாகியது. ஆனால் வுழு செய்வதற்கான நீர் அவர்களுக்கு கிடைக்கவில்லை. எனவே இருவரும் சுத்தமான மண்ணால் தயம்மும் செய்து தொழுததன் பின்னர் அத்தொழுகைக்குரிய நேரத்தில் இருவருக்கும் நீர் கிடைத்தது. அவர்களின் ஒருவர் மீண்டும் வுழு செய்து தொழுகையையும் மீட்டித் தொழுதார். ஆனால் மற்றவர் மீட்டித் தொழவில்லை. இதனை அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்து கூறினார், அப்போது நபி (ஸல்) அவர்கள் தொழுகையை மீட்டித்

தொழாதவரைப் பார்த்து ‘நீர்’ ஸுன்னாவின்படியே நடந்து கொண்டீர், உமது தொழுகை நிறைவேறிவிட்டது என்றார்கள். தொழுகையை மீட்டித் தொழுத மற்றவரைப் பார்த்து ‘உமக்கு இரண்டு முறை கூலி உண்டு’ என்று கூறினார்கள்.

- உ-ம் இமாம் பைஹகி (ரஹ்) (கூறியதாக) ரிவாயத் செய்கிறார் ‘‘இறைத்தூதர் (ஸல்) அவர்களின் தோழர்களாகிய நாங்கள் (ரமழான் காலத்தில்) பிரயாணத்தில் ஈடுபட்டிருந்தோம் அப்போது எங்களில் நோன்பு நோற்றோரும் இருந்தனர். நோற்காதோரும் இருந்தனர். இன்னும் எங்களில் தொழுகையைச் சுருக்கித் தொழுவோரும் இருந்தனர். சுருக்காது முழுமையாகத் தொழுவோரும் இருந்தனர். ஆனால் நோன்பாளி நோன்பு நோற்காதவரையோ, நோன்பு நோற்றவர் நோன்பு நோற்காதவரையோ, சுருக்கித் தொழுதவர் சுருக்கித் தொழாதவரையோ, சுருக்கித் தொழாதவர் சுருக்கித் தொழுதவரையோ குறைகூறவில்லை.

- நபி (ஸல்) அவர்களின் வபாத்தின் பின்னர் ஸஹாபாக்களிடையே கருத்து வேறுபாடுகள் அதிகம் தோன்றின. முஜ்தஹித்களின் கருத்து வேறுபாடுகளுக்கு ஸஹாபாக்களின் கருத்து வேறுபாடுகள் வழிகோலின.

- நபி (ஸல்) அவர்களின் வபாத்தை தொடர்ந்து, ஸஹாபாக்களிடையே தோன்றிய கருத்து வேறுபாடுகளுக்குப் பின்வருவன சில உதாரணங்களாகும்.

1. நபி (ஸல்) அவர்களது வபாத்தின் யதார்த்தம் குறித்து உமர் (ரழி) அபூபக்ர் (ரழி) இடையே நிலவிய கருத்து வேறுபாடு.

2. நபி (ஸல்) அவர்களை எங்கே நல்லடக்கம் செய்வது என்பது குறித்து தோன்றிய கருத்துவேறுபாடு.

3. நபிக்கு பின் யாரை கலீபாவாக தெரிவு செய்வது என்பதில் தோன்றிய கருத்து வேறுபாடு.

4. ஸகாத் வழங்க மறுத்தோர் குறித்து அபூபக்ர் (ரழி) உமர் (ரழி) இடையே நிலவிய கருத்து வேறுபாடு.

5. கைப்பற்றப்பட்ட நிலங்களை யாது செய்வது என்பது குறித்து உமர் (ரழி) அபூபக்ர் (ரழி) இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு.

- இவ்வாறு நபி (ஸல்) அவர்களது காலத்திலும், ஸஹாபாக்கள் காலத்திலும், தாபிஈன்கள் காலத்திலும் அதனைத் தொடர்ந்து வந்த பல்வேறுபட்ட காலங்களிலும் கருத்துவேறுபாடுகள் என்பது தவிர்க்க முடியாத ஓர் அம்சம் என்பதனை இஸ்லாமிய சட்டக்கலை வளர்ச்சியைக் குறித்து நோக்கும் ஒருவர் தெளிவாகப் புரிந்து கொள்வார். அவை இஸ்லாமிய சட்டத்துறையில் விசாலித்த தன்மைக்கும், தாராள போக்கிற்கும், மனித வாழ்வின் சௌகரியத்திற்கும் வழிவகுத்தன என்பதை நியாயமாக நோக்கும் எவரும் மறுக்க மாட்டார். உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களது கூற்று இதற்கு மேலும் வலுவூட்டுகிறது. ‘‘நபி (ஸல்) அவர்களின் தோழர்கள் தங்களிடையே கருத்துவேறுபாடு கொள்ளாமல் இருந்திருந்தால் அது எனக்குச் சந்தோசத்தைத் தந்திருக்காது. ஏனெனில் அவர்கள் கருத்து வேறுபாடு கொள்ளாமல் இருந்திருந்தால் நமக்குப் பல அனுமதிகள் (சலுகைகள்) கிடைத்திருக்காது’’

- கருத்து வேறுபாடுகள் தோன்றுவதற்கான காரணங்கள். அறிஞர்கள் சட்டங்களில் கருத்து வேறுபாடுகள் தோன்றுவதற்கான காரணங்களைப் பல்வேறு வகையில் விளக்கியுள்ளனர். அவற்றைத் தொகுத்து நோக்கும் போது நான்கு அடிப்படைகளிலேயே அவை எழுந்துள்ளன. ஏனைய துணைக் காரணிகள் அவற்றிலிருந்தே பிரிந்து செல்வதனை அவதானிக்கலாம்.

1. ஒரு குறிப்பிட்ட ஹதீஸை உறுதிப்படுத்துவதில் உண்டாகும் கருத்து வேறுபாடு.

- குறிப்பிட்ட ஹதீஸ் ஓர் இமாமுக்கு கிடைத்திருக்கும். மற்றோர் இமாமுக்கு கிடைத்திருக்காது. சிலபோது கிடைத்திருந்தாலும் அவரைப் பொறுத்தவரை அது ஆதராரபூர்வமாக இருக்காது. மற்றவர் அதனை ஆதாரபூர்வமாகக் கருதியிருப்பார். இதற்குக் காரணம் ஹதீஸ் அறிவிப்பாளர்களின் நிலை, தகைமை பற்றிய ஆய்வில் ஏற்படும் கருத்து வேறுபாடாகும். குறித்த ஹதீஸை ஆதாரபூர்வமானதென்று நிறுவவும் அவர்களிடம் விதிகளும் அடிப்படைகளும் இருக்கும். குறித்த ஹதீஸின் கருத்தை விளக்குவதற்கும் இதே வகையான விதிகளும் அடிப்படைகளும் அவர்களிடமுண்டு. இந்த அடிப்படை விதிகளும் இமாம்களிடம் வேறுபட்டவையாக இருக்கின்றன. இதனால் ஒருவர் இன்னொருவரின் கருத்தை ஏற்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை.

2. சட்ட வசனத்தை (நஸ்ஸின்) விளக்குவதில் ஏற்படும் கருத்து வேறுபாடு.

- சட்ட வசனங்களை விளக்குவதில் அறிஞர்களிடையே கருத் வேறுபாடு இருக்கலாம். இது சட்டதிட்டங்களில் வித்தியாசமான முடிவுகளைத் தோற்றுவிக்கலாம். ஏனெனில் மொழியில் ஒரு திட்டவட்டமான கருத்தைத் தரும் விளக்கங்களுமுண்டு. அவ்வாறே பல கருத்துக்களைத் தரக்கூடிய சொற்களும் உண்டு. உதாரணமாக அறபு மொழியில் 'அல் அய்ன்' என்ற சொல் கண், நீரூற்று, உளவாளி போன்ற பல்வேறு கருத்துக்களில் பிரயோகிக்கப்படுகிறது. இப்படியான வசனங்கள் சட்ட வசனங்களில் இடம்பெறும் போது அதுவே கருத்து வேறுபாட்டுக்குக் காரணமாக அமைந்து விடுகின்றது. அல்குர்ஆனில் இடம்பெற்றுள்ள குருஉ, லாமஸ போன்ற சொற்கள் இவற்றுக்குச் சிறந்த உதாரணங்களாகும்.

- மேலும், குறிப்பிட்ட சில வசனங்கள் சுருக்கமாக கூறப்பட்டிருப்பதால் அதனை விளக்க வேண்டியேற்படலாம். அல்லது மொழியில் ஆகுபெயராக வந்தவற்றை மொழியோடு தொடர்புபடுத்தி விளக்கவேண்டியேற்படலாம். இவ்வாறான நிலைமைகள் சட்டத்தீர்ப்புகளில் கருத்து வேறுபாடுகளைத் தோற்றுவிக்கலாம்.

- மேலும் சில வசன அமைப்புக்களும் பல கருத்துக்களைத் தந்து கருத்து வேறுபாட்டுக்கு இட்டுச் செல்லலாம். உதாரணமாக, அபூ ஸஈத் அல்குத்ரி (ரழி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ் பின்வருமாறு அமைந்துள்ளது. '' தகாதுல் ஜனீனி தகாது உம்மிஹி'' இதன் கருத்து ''ஒரு தாயின் வயிற்றில் இருக்கும் கன்றை அறுப்பது தாயை அறுப்பதேயாகும்''. இந்த வகையில் வயிற்றில் கன்றுள்ள ஒரு மிருகத்தை அறுக்கும் போது அதன் கன்று வயிற்றில் இறந்துவிடினும் அறுத்ததாகவே கருதப்படும். ஏனெனில் தாயை அறுப்பதே அதனை அறுப்பதாகும் என்ற கருத்தை இந்த ஹதீஸ் கொடுக்கிறது. எனவே, மீண்டும் கன்றை அறுக்க வேண்டிய அவசியமில்லை.

- இந்த ஹதீஸ் ''தகாதல் ஜனீனி தகாத உம்மிஹி' என்னும் ரிவாயத் செய்யப்பட்டுள்ளது. இப்போது இதன் பொருள் ஒரு மிருகத்தின் வயிற்றில் இருக்கும் கன்றை அந்த

தாய் மிருகத்தை அறுப்பது போன்று அறுங்கள்' என்பதாகும். அதாவது தாயை அறுப்பது போலவே அதன் வயிற்றிலிருக்கும் கன்றையும் அறுத்தல் வேண்டும் என்ற கருத்தை இது தருகிறது.

3. முரண்பட்ட சட்ட வசனங்களிடையே இணக்கம் காண்பதிலும் அவற்றில் ஒன்றை உறுதிப்படுத்துவதிலும் ஏற்படும் வேறுபாடுகள்.

- மேலே கூறப்பட்ட முதலாம், இரண்டாம் அம்சங்களிலும் அறிஞர்கள் அனைவரும் ஒற்றுமைப்பட்டார்கள் என வைத்துக் கொண்டாலும் இன்னுமோர் அம்சமும் எமது கவனத்திற்கு வருகிறது. சிலபோது வெளிப்படையாக ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்தைக் கொண்ட பல ஹதீஸ்கள் வரலாம். அப்போது அவற்றிடையே இணக்கம் காணவேண்டும். அல்லது ஒன்றை ஏதோ ஒரு வகையில் உறுதிப்படுத்த வேண்டும். இதன்போது ஒரு அறிஞர் முரண்பாடில்லை எனக் கருதி வெளிப்படையாகவே முரண்பட்டதாகத் தோன்றும் வசனங்களிடையே இணக்கம் காண்பர். வேறொருவரோ ஒன்றை ஏதோ ஒரு வகையில் ஆதாரம் கண்டு உறுதிப்படுத்துவார்.

- சட்ட வசனங்களிடையே காணப்படும் முரண்பாடுகளுக்கும், அவற்றிடையே இணக்கம் காண முற்படும் போது ஏற்பட்ட கருத்து வேறுபாட்டுக்கு உதாரணமாக இமாமுக்கு பிறகு ம:.மூம் ஸூரா பாத்திஹா ஓதுதல் பற்றிய கருத்து வேறுபாட்டில் மூன்று நிலைப்பாடுகள் காணப்படுகின்றன.

1. எல்லாத் தொழுகைகளிலும் ம:.மூம் பாத்திஹா ஸூரா ஓத வேண்டும். இது இமாம் ஷாபிஈ, அஹ்மத் ஆகியோரது கருத்தாகும்.

2. எல்லாத் தொழுகைகளிலும் ம:.மூம் பாத்திஹா ஸூராவை ஓதக் கூடாது. இது இமாம் அபூ ஹனீபாவின் கருத்தாகும்.

3. இமாம் மெதுவாக ஓதும் தொழுகைகளில் ம:.மூம் பாதிஹா ஸூராவை ஓத வேண்டும்.

- இக்கருத்து வேறுபாட்டுக்குக் காரணம் சட்டவசனங்கள் வேறுபட்ட முறையில் வந்திருப்பதேயாகும். சிலர் ஹதீஸ்களில் சிலவற்றை உறுதிப்படுத்தி வேறுசிலவற்றை விட்டுவிட்டனர். வேறு சிலர் இந்த ஹதீஸ்களிடையே இணக்கம் கண்டனர். இந்த வகையில் இமாமின் பின்னால் இருக்கும் ம:.மூம் ஓத வேண்டும் என்று வந்த ஹதீஸ்கள் மெதுவாக ஓதும் தொழுகைகளைக் குறிப்பிடுகின்றன என்றும் ம:.மூம் ஓதக்கூடாது என்று வந்த ஹதீஸ்கள் சப்தமிட்டு ஓதும் தொழுகைகளைக் குறிக்கின்றன எனவும் இவர்கள் கூறினர். இதுவே இமாம் மாலிக் போன்றோரின் கருத்தாகும்.

- நபி (ஸல்) அவர்களது தோழர்கள், தாபிஈன்கள், பின்னால் வந்த இமாம்கள் இவர்களில் பெரும் பாலானோர் இமாமின் பின்னால் நிற்கும் ம:.மூம்கள் பாதிஹாவை ஓத வேண்டும் என்ற கருத்தையே கொண்டுள்ளனர். இமாம் ஷாபிஈ, அஹ்மத், இப்னு முபாரக், இஸ்ஹாக் போன்றோரது கருத்தும் இதுவாகும்.

- இமாம் இப்னு முபாரக் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார். ''நான் இமாமுக்குப் பிறகு ஓதுகிறேன். கூபாவாசிகளில் சிலர் தவிர ஏனையோர் இவ்வாறு செய்கின்றனர். இமாமுக்குப் பிறகு ம:.மூம் ஓதாவிட்டாலும் அவரது தெழுகை நிறைவேறும் என்பதுவே எனது கருத்தாகும்.

- இமாம் இப்னு முபாரக்கின் ஆதாரங்கள் இரு பக்கமும் சமமாகக் காணப்படுவதால் இந்த ஹதீஸ்களையே இணக்கம் காண முனைகிறார் போல் தோன்றுகிறது.

- மேற்கூறிய உதாரணங்களிலிருந்து, முரண்பாடாகத் தோன்றும் சட்ட வசனங்களிடையே இணக்கம் காணமுனையும் போது உருவாகின்ற கருத்து வேறுபாடுகள் பற்றி விளங்கிக் கொள்ள முடிகிறது.

4. சட்டவாக்க மூலாதார விதிகளில் காணப்பட்ட கருத்து வேறுபாடு.

- ஹதீஸ்களை ஏற்பதிலும் மறுப்பதிலும் ஒவ்வோர் இமாமுக்கும் வேறுபட்ட நிபந்தனைகளும் அடிப்படை விதிகளும் உள்ளன. அவ்வாறே குறிப்பிட்ட சட்ட வசனத்திலிருந்து சட்டங்களை வகுத்துக் கொள்வதிலும் வேறுபட்ட போக்குகளும் விதிமுறைகளும் பின்பற்றப்படுகின்றன. அதே போன்று சில சட்டவாக்க மூலாதாரங்களும் கருத்துவேறுபாட்டுக்குரியனவாக காணப்டுகின்றன. ஒரு ஸகாபியின் சொல்லை அல்லது மார்க்கத் தீர்ப்பை பலம் வாய்ந்த ஒரு சட்டவாக்க மூலாதாரமாக அதாவது குர்ஆன், ஹதீஸ் என்பவற்றின் தரத்தில் வைத்து நோக்குவோரும் அவற்றைவிடக் குறைந்த தரத்தில் வைத்து நோக்குவோரும் இமாம்களிடையே காணப்படுகின்றனர்.

- ஒரு குறிப்பிட்ட விடயத்தில் மதீனாவாசிகளின் செயல் (அமலு அஹ்லில் மதீனா) சட்ட மூலாதாரமாகக் கொள்ளப்படும். சில போது சில வகையான ஹதீஸ்களை விட அதனை மேலாக மதிப்பவர்களும் இமாம்களிடையே காணப்படுகின்றனர்.

- ஒரு ஹதீஸ் அறிவிப்பாளர் தான் அறிவிக்கும் விஷயத்துக்கு முரணாக செயற்பட்டிருப்பார். இந்த அறிவிப்பாளரின் செயலைக் கணிப்பதிலே இமாம்களிடையே கருத்து வேறுபாடு தோன்றுகிறது. ஒரு குறிப்பிட்ட செயல் கூடாது என்று தடுக்கப்பட்டால் அச் செயல் முற்றாக செல்லுபடியாகாது எனச் சிலர் கணிப்பர். வேறு சிலரோ இதற்கு மாற்றமான கருத்தைக் கொள்வர்.

- இவ்வாறு சட்டவாக்க அடிப்படைவிதிகளிலும் சட்டவாக்க மூலாதாரங்களிலும் மற்றும் வரையறைகளோடு கூடிய சட்டவசனங்கள், வரையறைகளோடு கூடிய சட்டவசனங்கள், வரையறைகளற்ற சட்ட வசனங்கள், எதிர்மறைப் பொருள் கொள்ளல் (மப்ஹூம் அல் முகாலபா) போன்ற சந்தர்ப்பங்கள் கருத்து வேறுபாடுகள் தோன்றுவதற்கான காரணங்களில் ஒன்றாக அமைகிறது.

**கருத்து வேறுபாடுகளின் போது பேண வேண்டிய ஒழுக்கங்கள்.**

- இஸ்லாமிய சட்டத்துறையில் கருத்து வேறுபாடென்பது தவிர்க்க முடியாத ஓர் அம்சமாகும். ஸலபுஸ் ஸாலிஹீன்கள் கருத்து வேறுபாடுகளை உம்மத்துக்கான அருள் எனக் குறிப்பிட்டனர். நவீன கால சட்ட அறிஞர்களுள் ஒருவரான முஸ்தபா அஹ்மத் ஸர்கா (ரஹ்) அவர்கள் ''மனிதனுக்குச் சொகுசாக அமர்வதற்கு இயைந்து கொடுக்கக்கூடிய ஒரு கதிரை கருத்து வேறுபாடுகளை குறிப்பிட்டுச் சொன்னார்கள். அருளாகக் கணிக்கப்படும் கருத்துவேறுபாடுகள் மருளாக அமைந்துவிடக் கூடாது என்பதற்காகப் பேண வேண்டிய சில ஒழுங்குகளை முன்வைக்கின்றோம்.

1. கருத்தொற்றுமையான விவகாரங்களில் பரஸ்பரம் ஒத்துழைத்தல். முஸ்லிம்கள் அனைவரும் உடன்படுகின்ற விடயங்களில் பரஸ்பரம் உதவிக் கொள்ள வேண்டும். அல்குர்ஆன் இறைவனிடமிருந்து வந்தது என்றும், ஐங்கால தொழுகை, ரமழானில் நோன்பு நோற்பது என்பன கடமையென்றும் முஹம்மத் (ஸல்) இறுதித் தூதரென்றும் நாம் அனைவரும் உடன்படுகின்ற விடயங்களில் ஒத்துழைத்துக் கொள்ள வேண்டும். தொழுகையிலும், நோன்பு நோற்பதிலும் என சில விவகாரங்களில் சட்டம் சார் கிளைப்பிரச்சினைகளில் எழும் கருத்து வேறுபாடுகள் பிளவுகளாக அமைய ஒருபோதும் வழிசெய்யக் கூடாது. இமாம் ரஷீத் ரிழா அவர்கள் அழகான ஒரு கருத்தை முன்வைத்தார்கள். ‘‘கருத்தொற்றுமையான விடயங்களில் நாம் பரஸ்பரம் ஒத்துழைத்துக் கொள்வோம். கருத்து வேறுபாடு கொண்ட அம்சங்களில் பரஸ்பரம் நியாயம் காண்போம்.

2. கருத்து வேறுபாடு கொண்ட விடயங்களில் விட்டுக் கொடுத்தல்

- விட்டுக் கொடுத்தல் என்பது எமது தீனை, அகீதாவை விட்டுக் கொடுப்பதோ, அடிப்படையில் ஒரு போதும் மாறாத விடயங்களில் விட்டுக் கொடுப்பதோ அல்ல. மாறாக இஜ்திஹாதிற்குரிய அம்சங்களாக அமைகின்ற பல கருத்துக்களுக்கு இடம்பாடான சட்டம்சார் கிளைப்பிரச்சினைகளில் விட்டுக் கொடுத்து நடத்தல் வேண்டும். ஏனெனில் ஒரே விடயத்தில் பல முடிவுகள் சரியாக அமையலாம். அல்குர்ஆனை ஓதும் முறையில் பலதரப்பட்ட கிராஅத்துக்களை நபி (ஸல்) அவர்கள் அனுமதித்துள்ளார்கள். மேலும் முஜ்தஹித் ஒருவரது முயற்சிக்கு அது சரியானால் இரண்டு கூலி; தவறினால் ஒரு கூலி என அங்கீகரித்திருப்பதும் பல முடிவுகள் வரலாம். அவை முற்றாக நிராகரிக்கப்பட வேண்டியதல்ல என்பதை சுட்டிநிற்கின்றது. இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் ஒரு பிரபலமான கூற்றை முன்வைத்துள்ளார்கள். ‘‘ என்னுடைய கருத்துச் சரியானது; சில சமயம் அது தவறாகவும் இருக்கலாம். பிறர் கருத்துத் தவறானது; சில சமயம் சரியாகவும் இருக்கலாம்’’

3. ஒருவரையெருவர் சாடாதிருத்தல், மதித்து நடத்தல்.

- நபி (ஸல்) அவர்களுக்கு முன்னால் ஸஹாபாக்கள் வித்தியாசமான கருத்துக்களை தெரிவித்த சந்தர்ப்பங்களிலும் வித்தியாசமாகத் தொழிற்பட்ட சந்தர்ப்பங்களிலும் அவர்கள் அனைவரையும் மதித்து அவர்களுக்குக் கணிப்புக் கொடுத்து நடந்து கொண்டுள்ளார்கள். ஒருவர் மற்றவரை சாடுபவராக ஸஹாபாக்கள் இருக்கவில்லை. இதற்குச் சான்றாக பனூகுறைழா சம்பவத்தையும், பயணத்தின் போது இரண்டு ஸஹாபாக்கள் நீர் கிடைக்காத போது தயம்மும் செய்து தொழுவிட்டு, பின்னர் நீர் கிடைத்த போது அவர்கள் இருவரும் நடந்து கொண்ட விதத்தையும் நபி (ஸல்) அவர்கள் எவ்வாறு அணுகினார்கள் என்பதிலிருந்து புரிந்து கொள்ள முடிகிறது.

- மேலும் மதித்து நடந்துகொள்வதற்கு இமாம் புகாரி (ரஹ்) தன்னுடைய ஹதீஸ் நூலில் பித்அத்வாதிகளின் அறிவிப்பைப் பதிவு செய்துள்ளார்கள். ஏனெனில் அவர்கள் உண்மையாளர்களாக இருந்தார்கள். இமாம் புகாரி (ரஹ்) அவர்களின் அறிவிப்பாளர்களில் இம்ரான் இப்னு ஹத்தான் என்ற ஒருவர் உண்டு. இவர் கவாரிஜ்களை சார்ந்த ஒரு பித்அத்வாதி மற்றும் அவர்களது ஆஸ்தான் கவிஞர்; அலி (ரழி) அவர்களைக் கொலை செய்த இப்னு முல்ஜிமை புகழ்ந்து பாடியவரும் கூட.

- பித்அத் செய்கின்ற மக்களுடன், அவர்களை மதித்து நல்ல முறையில் நடப்பதன் மூலம் அவர்கள் தம் தவறுகளை உணர்ந்து நேர்வழியில் வரக்கூடும். ஒரேயடியாக வெறுத்து ஒதுக்கினால் அவர்கள் அந்த பித்அத்திலேயே தொடர்ந்திருக்க வாய்ப்பு உள்ளது. உஸ்மான் (ரழி) அவர்களுடைய கடைசிக் காலத்தில் மதீனா முற்றுகையிடப்படுகிறது. மதீனாவையே தம் கைவசம் கொண்டுவருகிறார்கள், உஸ்மான் (ரழி) அவர்களைக் கலகக்காரர்கள் வீட்டுக்கு வெளியே விடவும் இல்லை. பள்ளியில் இமாமாக நின்று தொழுகை நடாத்த அனுமதிக்கவுமில்லை. தொழுகை நடாத்தும பொறுப்பைக் கூடக் கலகக்காரர்களே எடுத்துக் கொள்கிறார்கள். அந்த நேரத்தில் அலி (ரழி) உட்பட பெரும் நபித் தோழர்கள் உஸ்மான் (ரழி) அவர்களிடம் தனியே தொழுவதற்கு அனுமதி கேட்டபோது அனுமதிக்க மறுத்தார்கள். உஸ்மான் (ரழி) அவர்களைத் தவிர அனைத்து நபித் தோழர்களும் கலகக்காரர்களின் பின்னால் ம.்.மும்களாக நின்று தொழுதார்கள். இங்கு நபித்தோழர்கள் தனிப்பள்ளி அமைக்கவோ கலகக்காரர்களை காபிர்கள் என்று அழைக்கவோ இல்லை.

4. ஒரு மத்ஹபின் அல்லது தனிமனிதனின் கருத்துக்களில் பிடிவாதப் போக்கை தவிர்த்தல்.

- ஆதாரமற்ற யாருக்குப் பின்னாலும் செல்லாத மனப்பாங்கை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஸைத் (ரழி) அவர்களின் கூற்று இதற்கு நல்லதோர் சாரன்றாகும். ''இன்னார் சொன்னார் என்பதற்காக அல்லது இமாமின் கருத்து என்பதற்காக நாம் அல்லாஹ்வை வழிப்படவில்லை. அல்லாஹ்வின் வேதத்தில் வந்திருக்கிறது; அவரது தூதர் கூறியிருக்கிறார் என்பதற்காகவே வழிப்படுகிறோம்'' அதே நேரம் இமாம்களின் தகுதியை மறந்து அவர்களைக் கீழ்த்தரமாக விமர்சிக்கின்ற தீவிரவாத நிலைக்குச் சென்றுவிடக் கூடாது. ஒவ்வொருவரும் தவறை ஒத்துக் கொள்ளும் மனோநிலையை வளர்த்துக் கொள்ள வேண்டும். விமர்சனங்களை வரவேற்க வேண்டும். அது தம்மை நெறிப்படுத்தக்கூடியது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.
- இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் கூறினார்கள் '' உண்மை என் நாவிலிருந்து வருகிறதா அல்லது என்னுடன் விவாதம் புரிபவர் நாவிலிருந்து வருகிறதா என்பதைக் குறித்து எனக்குக் கவலை இல்லை. உண்மை வெளிவர வேண்டும். அவ்வளவுதான்''

5. அடுத்தவர் பற்றிய நல்லெண்ணத்தை வளர்த்துக் கொள்ளல்.

- அடுத்தவர் பற்றிய நல்லெண்ணம் கொள்ளும் பண்பை வளர்த்துக் கொள்ள வேண்டும். கறுப்புக் கண்ணாடி அணிந்து அடுத்தவரை அவதானிக்கும் முறையை கைவிட்டுவிட வேண்டும். நான் தூய்மையானவன் பரிசுத்தமானவன் என்ற மனோபாவம் ஒரு மு.். மினிடம் வந்துவிடக் கூடாது. ''நீங்கள் உங்களைத் தூய்மையானவர் என்று சொல்லாதீர்கள். யார் தக்வா உடையவர் என்பதை அல்லாஹ்வே மிகவும் நன்கறிவான். (53:52)
- ஈமானின் சிறந்த அடையாளமே ''அல்லாஹ்வைக் குறித்தும், மக்களைக் குறித்தும் நல்லெண்ணம் கொள்ளல். ஈமானின் மோசமான அடையாளம் அல்லாஹ்வைக் குறித்தும் மக்களைக் குறித்தும் கெட்ட எண்ணம் கொள்ளல்'' என்பது ஸலபுகளின் கூற்றாகும்.

எப்போதும் ஒரு முஸ்லிம் எப்படி இருக்க வெண்டுமெனில் பிறரைக் குறித்து ஏதாவது ஒரு செய்தி தன் காதில் விழுந்தால் உடனே கற்பனை செய்வதை நிறுத்த வேண்டும். அல்லது அப்படி இருக்காது என்று நல்லெண்ணம் கொள்ள வேண்டும்.

- சந்தேகம் கொள்வதிலிருந்து யாரும் தப்பிக்கவே முடியாது. ஏனெனில் சைத்தான் அதனைத் தூண்டுகிறான். நபி (ஸல்) அவர்கள் தன் மனைவி ஸபிய்யா (ரழி) அவர்களுடன் கதைத்துக் கொண்டிருந்தபோது அவ்விடத்தால் சென்ற இரண்டு ஸஹாபாக்களுக்கும் நபி (ஸல்) அவர்கள் இது என் மனைவி ஸபிய்யா என்று சொல்லிக் காட்டிய நிகழ்வு அவர்களைச் சந்தேகக் கண்கொண்டு நோக்காதிருக்க வேண்டும் என்பதற்காகும். எனவே மார்க்க விவகாரங்களை வைத்துக் கொண்டு முஸ்லிம்கள் ஒருவர் அடுத்தவரை சந்தேகக் கண்கொண்டு நோக்குவது மிகப் பெரிய தவறாகும். நபி (ஸல்) அவர்களுக்கு அதிக கோபம் தருவதும் மறுமை நாளில் நபி (ஸல்) அவர்கள் தம் அருகிலேயே வர அனுமதிக்காதவர்களும் யார் எனில் .... மக்களின் குறைகளைத் தேடி வெளிப்படுத்துபவர்களே (அஹ்மத்)

6. விவாதங்களை முடிந்தளவு தவிர்த்துக் கொள்ளல்.

- கருத்து வேறுபாட்டின் போது விவாத மேடைகள் அமைத்து ஒருவரையொருவர் தம் திறமையால் வீழ்த்திட வேண்டும், தம் பேச்சுத் திறமையால் மட்டம் தட்ட வேண்டும் என முனைந்திடக் கூடாது.

- இஸ்லாம் விவாதத்தை முற்றாகத் தடுக்கவில்லை. ஆயினும் அழகிய முறையில் விவாதிக்கும் படி வேண்டுகிறது. விவாதம் என்றாலே அங்கு மென்மையைக் கடைப்பிடிப்பது சிரமம். எனவேதான் அல்லாஹ் 16:125 இல் விவாதத்தின் போது மென்மையைக் கடைப்பிடிக்க உத்தரவிடுகிறான்.

- இதே நேரம் விவாதங்களைத் தவிர்த்துக் கொள்ளுவதை வரவேற்றுப் பல நபிமொழிகள் வந்திருக்கின்றன. ''சத்தியத்தில் தான் இருக்கிறோம் என்று தெரிந்த பின்பும் விவாதத்தை விட்டவருக்குச் சுவனத்தின்நடுவே ஒரு வீட்டிற்கான உத்தரவாதத்தை நான் தருகிறேன். பிறரைச் சிரிக்க வைப்பதற்கே என்றாலும் பொய் சொல்வதை யார் விட்டுவிடுகிறாரோ அவருக்குச் சுவனத்தின் நடுவே ஒரு வீட்டிற்கான உத்தரவாதத்தை நான் தருகிறேன். யாரிடத்தில் நற்பண்புகள் நிரம்ப இருக்கிறதோ அவருக்கு உயர்ந்த சுவனத்தில் ஒரு வீட்டிற்கான உத்தரவாதத்தை நான் தருகிறேன். (அபூதாவூத்)

- மேலும் நபி (ஸல்) கூறினார்கள் : ''நேர்வழியை அடைந்ததன் பின்னால் ஒரு கூட்டம் எப்போது வழிகெடும் என்றால் விவாதங்களில் ஈடுபடும் போதுதான் அப்துல்லாஹ் அம்ரு இப்னு ஹுஜப் (ரழி) அறிவிக்கிறார்கள். நானும் எனது சகோதரரும் ஒரு தடவை மஜ்லிஸில் கலந்து கொள்வதற்காக பள்ளி வாசலுக்குச் சென்றோம். அப்போது மூத்த நபித் தோழர்கள் வாசலில் அமர்ந்து இருந்தனர். அவர்களைக் கடந்து உள்ளே செல்வது மரியாதையாக இருக்காது என்று ஓர் ஓரத்தில் அமர்ந்தோம். அப்போது அவர்கள் அல்குர்ஆனின் ஒரு வசனத்தை எடுத்து விவாதிக்கத் தொடங்கினர். விவாதம் சூடுபிடித்து அவர்களுடைய சப்தம் பள்ளிவாசலில் உயரத் தொடங்கியது. கடைசியில் நபி (ஸல்) அவர்கள் கோபமாக முகம் சிவக்க அவர்களை நோக்கி வந்தார்கள். சிறிது மண்ணை எடுத்து அவர்களை நோக்கி வீசிவிட்டுச் சொன்னார்கள். நிறுத்துங்கள்! உங்களுக்கு முன் சென்ற கூட்டம் இப்படித்தான் அழிந்தது. நபிமார்களுக்கிடையே சிலரைச் சிலரைவிட உயர்த்தி, வேத வரிகளில் சிலவற்றை சிலவற்றுக்கு முரணாக விவாதித்துத்தான் அழிந்து போயினர். அல்குர்ஆனின் வசனங்கள் சிலவற்றைக் கொண்டு சிலவற்றைப் பொய்யாக்குவதற்காகவா இறக்கப்பட்டிருக்கின்றன... ? எதைக் கற்றீர்களோ அதைச்

செயற்படுத்துங்கள். எது தெரியவில்லையோ அதை அறிந்தவரிடம் கேளுங்கள் .. (முஸ்னத் அஹ்மத்)

- சிலர் சட்டங்களின் கிளைப் பிரச்சினைகளை மையப்படுத்தி அனைத்தையுமே விவாத மேடைக்கு இழுக்கின்றனர். தங்களின் கருத்துக்களை எந்த விதத்திலும் திருத்திக் கொள்ளத் தயார் இல்லாத சிலர், தாங்கள் சொல்வதை பிறர் கேட்கவேண்டும். ஆனால் நாங்கள் யார் சொல்வதையும் கேட்க மாட்டோம் என்ற நிலையில் சிலர், நாங்களே எப்போதும் சத்தியத்தில் இருப்பவர்கள். மற்றவர்கள் எல்லாம் எப்போதும் அசத்தியத்தில் இருப்பவர்கள் என்று எண்ணும் சிலர், என விவாதிப்போரில் காணலாம்.
- இத்தகு விவாதங்கள் சத்தியத்தைத் தெளிவுபடுத்துவதைவிட குரோதங்களையும், பகைமைகளையும் வளர்த்துவிடுவதாகவே அமைகின்றது.
- தவிர்க்கமுடியாத நேரங்களில் மாற்றுக் கருத்துக் கொண்டோருடன் எவ்வாறு விவாதிக்க வேண்டும் என்பதற்கான வழிகாட்டலை குர்ஆன் தெளிவாக முன்வைக்கின்றது.

7. மார்க்கத்தைப் பின்பற்றுவதில் நடுநிலைப் போக்கைப் பின்பற்றல்.

- எந்த விடயத்திலும் அளவுக்கு மீறிய கடுமையான போக்கை விட்டுவிட்டு நடுநிலையாக இருத்தலே சிறப்பு. ஏனெனில் எம்மை நடுநிலைச் சமூகம் என குர்ஆன் புகழ்ந்துரைக்கின்றது.
- எனவே மார்க்கத்தைப் பின்பற்றுவதில் வரம்பு கடந்த போக்கைக் கடைப்பிடிக்கக் கூடாது. அதில் சமநிலை பேணும் பண்பு உருவாக வேண்டும் அப்போது தான் கருத்து வேறுபாடு, இல்லாமல் போக வாய்ப்பிருக்கிறது.
- இப்னு மஸ்ஊத் (ரழி) அறிவிக்கிறார்கள் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்; ''தீவிர போக்கை கையாள்பவர்களுக்கு நாசம் உண்டாகட்டும்'' என்று மூன்று முறை கூறினார்கள். (முஸ்லிம்)
- இங்கு தீவிர போக்கென்பது ''தங்களுடைய செயல்களிலும் சொற்களிலும் எல்லை கடந்து செயற்படுபவர்கள்'' என இமாம் நவவி (ரஹ்) விளக்கமளித்தார்கள்.

  ''மார்க்கத்தில் அளவு கடந்த போக்கை நான் உங்களுக்கு எச்சரிக்கிறேன். உங்களுக்கு முன் சென்ற சமூகம் அழிந்து போனதெல்லாம் மார்க்கத்தில் அளவு கடந்த போக்கைக் கடைப்பிடித்ததால் தான்'' (அஹ்மத்)

- தீவிர போக்குப் பிரிவினையைத் தோற்றுவிக்கும். இலகுவைக் கையாள்வது நெருக்கத்தையும் இணக்கத்தையும் கொண்டுவரும். ஸலபுகளைப் பொறுத்தமட்டில் அவர்கள் எப்போதும் எளிதான விடயங்களைக் கையாள்பவர்களாக இருந்தார்கள். தமக்கிடையே எத்தனையோ விடயங்களில் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் யாரும் தங்களுக்கிடையே முரண்பட்டுக் கொள்ளவில்லை. மாறாக ஒருவர் தீவிர போக்கைக் கையாண்டால் அதைக் கண்டித்திருக்கிறார்கள்.
- குறித்த ஒரு விடயம் குறித்து அதிகம் கேள்வி கேட்பது கடுமையின் பக்கமே இட்டுச் செல்லும் என்பதை நபி (ஸல்) அவர்கள் உணர்த்தினார்கள். ''முஸ்லிம்களுக்குச் செய்யும் அநீதி என்னவென்றால் ஹராம் அல்லாத ஒரு

விடயத்தில் மீண்டும் மீண்டும் ஒருவர் கேள்விகள் கேட்டு இவர் கேட்ட காரணத்தினாலேயே அது ஹராமாகிவிட்டால் அதுதான் முஸ்லிம்களுக்குச் செய்யும் அநீதி ஆகும். (புகாரி)

8. கலைச் சொற்களின் கருத்துக்களை அறிந்து பயன்படுத்துதல்.

- குர்ஆன் ஸுன்னாவில் இடம்பெற்றுள்ள கலைச் சொற்களைக் கருத்தறிந்து பயன்படுத்தாவிட்டால் அது சமூகத் தகராறுக்கும் பிரச்சினைகளுக்கும் வழிவகுக்கலாம். உதாரணமாக குப்ர், ஷிர்க், நிபாக், ஜாஹிலிய்யத் போன்ற சொற்களைப் பயன்படுத்தும் போது அவற்றில் நூற்றுக்கணக்கான அர்த்தங்களை அறிந்து பயன்படுத்த வேண்டும். ஏனெனில் ஷரிஅத் சட்டத்தில் ஒரு வார்த்தை எந்த வழக்குச் சொல்லில் வருகிறது. அந்த வார்த்தை தரும் உண்மையான பொருள் என்ன என்பதைப் புரியாமல் பேசமுற்படும் போது வீண் விவாதங்களும் மோதல்களும் ஏற்படுவது மட்டுமன்றி தாமும் வழிகெட்டுப் பிறரையும் வழிகெடுத்திடும் நிலைதான் தோன்றும்.

- ஷிர்க் என்ற வார்த்தையை எடுத்து நோக்கினால் அது இணைவைத்தல் என்ற கருத்தைத் தருகிறது. ஷிர்க்கில் பெரியது, சிறியது என்று தராதரம் உள்ளது அனைத்தையும் ஒரே தரத்தில் வைத்து உடனே தீர்ப்பு வழங்கக் கூடாது. அல்லாஹ்வுக்கு இணைவைத்தல் பெரிய ஷிர்க்காகும். அதேநேரம் சில பாவங்களை ஷிர்க் என்ற பெயரில் நபி மொழி குறிப்பிட்டுக் காட்டுகின்றது. '' குறிபார்த்தலும், தாயத்துக் கட்டுதலும் மந்திரித்தலும் இணைவைப்பாகும்'' (அஹ்மத்)

- எனவே அல்லாஹ்வுக்கு இணைவைத்தல் என்ற பெரிய ஷிர்க்கின் தரத்தில் நபிமொழியில் குறிப்பிட்ட செயற்பாடுகளைச் சமப்படுத்தி நோக்க முடியாது.

9. இஜ்திஹாதுக்குரிய விடயங்களை அடித்துச் சொல்வதைத் தவிர்த்தல்.

ஒரு முஜ்தஹிதின் கருத்தை அடுத்த முஜ்தஹித் மதித்து நடக்க வேண்டும். தனது கருத்தில் தனது மத்ஹபில் உள்ளதை வலுக்கட்டாயமாக பிடித்துக் கொண்டு அடித்துச் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

- அன்றைய அறிஞர்கள் பிறரின் கருத்தை மதித்து நடந்தார்கள். தங்களின் கருத்துக்கு மாற்றமான கருத்தைச் சிலசமயம் செயல்வடிவில் கொண்டுவரும் நிலை வந்தபோது எந்தவித மனக்கஷ்டமும் இன்றி அதைச் செய்தார்கள். ''இந்தக் கருத்துப் பாதுகாப்பானது, இது சிறந்த கருத்து'' எனக் கூறினார்களேயன்றி ''இதுவே சிறந்தது, இதைத்தவிர மற்ற எல்லாக் கருத்துக்களும் முரணானது என்று எவரும் கூறவில்லை. நபித்தோழர்களுள் அந்நியப் பெண்களைத் தொட்டால் வுழு செய்தவர்களும் இருந்தனர்.

- இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் ஒருமுறை பக்தாதில் ஸுபஹ் தொழுகையை நிறைவேற்றினார்கள். அவர் தொழுத அந்தப் பள்ளிவாசல் இமாம் அபூஹனிபா (ரஹ்) அவர்களின் அடக்கஸ்தலத்திற்குப் பக்கத்தில் இருந்தது. அப்போது இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் குனூத்தும் ஓதவில்லை. ருகுவிலிருந்து நிமிரும் போது கைகளை உயர்த்தவும் இல்லை. ஏன் என்று கேட்டதற்கு இமாம் அபூஹனீபாவின் கருத்துக்கு நாம் கண்ணியம் கொடுக்கிறோம் என்று கூறினார்கள்.

**தேர்ச்சி 4.0 : இஸ்லாமிய நாகரிகத்தை வளர்ப்பதில் பங்காற்றிய கலைகளையும், ஐரோப்பிய மறுமலர்ச்சியில் இஸ்லாமிய நாகரிகம் ஏற்படுத்திய தாக்கத்தையும் விளக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 4.4 : முஸ்லிம்கள் வளர்த்த அறிவியற் கலைகளையும் அவற்றில் பிரபலம் பெற்ற தனிநபர்களின் பங்களிப்பையும் இனம் கண்டு விபரிப்பார்.**

**பாடவேளைகள் : 14**

**கற்றல் பேறுகள் :**

- முஸ்லிம்கள் அறிவியற் கலைகளில் ஈடுபடுவதற்கு ஏதுவாக அமைந்த காரணிகளை விளக்கிக் கூறுவார்.
- முஸ்லிம்கள் வளர்த்த அறிவியற் கலைகள் பற்றி விளக்கிக் கூறுவார்.
- அறிவியற் கலைகளுக்கான முஸ்லிம்களின் பங்களிப்புக்களைப் பட்டியற்படுத்தவார்.
- முஸ்லிம்களால் வளர்க்கப்பட்ட அறிவியற் கலைகள், கண்டுபிடிப்புக்கள், தொழிநுட்பம் போன்றன ஐரோப்பிய அறிவியல் கலைகளில் ஏற்படுத்திய தாக்கத்தினை அடையாளப்படுத்திக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

- உலக வரலாற்றில் மனித நாகரிகத்தினதும் பண்பாட்டினதும் வளர்ச்சிக்கு முஸ்லிம்கள் ஆற்றியுள்ள பங்கு மகத்தானது. அவர்களது இந்தப் பங்களிப்பே ஐரோப்பிய அறிவியல் மறுமலர்ச்சிக்கும் வித்திட்டது. அதனூடாக நவீன அறிவியல் வளர்ச்சிக்கும் வழிகாட்டியது. இத்தகு மகத்தான கல்வி கலாசார வளர்ச்சிக்கும் அறிவியல் கண்டுபிடிப்புக்களுக்கும் பங்காற்றிய நம் முன்னோர் பற்றிய அறிமுகமும் பரீட்சயமும் முக்கியமானதாகும்.

- ஒரு சமூகம் கடந்த வரலாற்றின் சாதனைகள் பற்றிய அறிவைப் பெற்றிருப்பதன் மூலமே அதன் எதிர்காலத்தை நம்பிக்கையோடு நகர்த்த முடியும். வரலாற்றில் நம் முன்னோர்கள் அறிவியல் துறைகளில் முன்னோடிகளாகத் திகழ்ந்துள்ளனர். அவர்கள் கை வைக்காத துறைகள் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாதளவிற்கு சகல துறைகளிலும் ஈடுபாடு காட்டிக் காத்திரமான அறிவுக் கருவூலங்களை உலகிற்கு அள்ளித் தந்துள்ளனர்.

- குவாரிஸ்மியின் கணிதத் துறைப் பங்களிப்பு, இப்னு ஸீனாவின் மருத்துவத் துறைப் பங்களிப்பு, அல் பத்தானியின் வானியல் துறைப் பங்களிப்பு, இப்னு கல்தூனின் சமூகவியல் துறைப் பங்களிப்பு, அபூ உபைதாவின் விலங்கியல் துறைப் பங்களிப்பு, அபூஹனீபா அல் தீனாவாரியின் தாவரவியல் துறைப் பங்களிப்பு எனப் பட்டியல் நீண்டு செல்கிறது.

- உலக நாரிகத்தின் அறிவியல் ஊற்றுக் கண்ணாக அல்குர்ஆன் திகழ்ந்துள்ளது. அதுவே நம் முன்னோரது பங்களிப்பு பல்துறைகளிலும் பரந்து விரிந்து காணப்படுவதற்குக் காரணமாக அமைந்தது . அல்குர்ஆன் அவர்களைச் சிந்திக்கத் தூண்டியது. ஆராய்ச்சிகளில் ஈடுபட வழிகாட்டியது. கண்டு பிடிப்புக்களை

மேற்கொள்ள உந்து சக்தியளித்தது. அவர்களை விழித்துப் பல்வேறு வடிவங்களிலும் பேசி அவர்களது சிந்தனைகளைக் கிளறியது.

– நீங்கள் அறிந்து கொள்ள வேண்டாமா?

– நீங்கள் சிந்திக்கவில்லையா?

– அவர்கள் உற்று நோக்க வேண்டாமா?

– அவர்கள் சிந்திக்கக் கூடாதா?

என அல்குர்ஆன் கேட்டதன் மூலம் அறிவு, ஆராய்ச்சி, சிந்தனை, கண்டுபிடிப்பு என்பவற்றில் அவர்கள் ஈடுபட வழிகாட்டியது.

அல்வாறே அல்குர்ஆன் பல்வேறு இடங்களில்

– அறிந்து கொள்ளும் சமூகத்தினருக்கு

– அறிந்துணர்ந்து கொள்ளக் கூடிய சமூகத்தினருக்கு

– சிந்தித்து உணரக் கூடிய மக்களுக்கு என்றெல்லாம் கேட்பதன் மூலம் அறிவு ஆராய்ச்சிக் கண்களைத் திறந்துவிட்டது.

- 6666 வசனங்களைக் கொண்ட அல்குர்ஆனில் சுமார் 73 வசனங்கள் ஆராயுமாறு நேரடியாகத் தூண்டுகின்றன.
- ‘‘அவை (பூத்துக்) காய்ப்பதையும், பின்னர் கனிந்து பழமாகும் விதத்தையும் (மக்களே!) உற்று நோக்குங்கள். நம்பிக்கை கொள்ளும் மக்களுக்கு நிச்சயமாக இதில் பல அத்தாட்சிகள் இருக்கின்றன’’(6:99)
- இவ்வசனத்தின் மூலம் விவசாயத் துறை சார்ந்த மற்றும் தாவரவியல் ஆய்வுகளுக்கு அல்குர்ஆன் தூண்டுகோல் வழங்கியுள்ளது.
- பூமியில் நீங்கள் சுற்றித் திரிந்து (ஆரம்பத்தில்) சிருஷ்டிகள் எவ்வாறு தோன்றின என்பதைப் (ஆராய்ந்து) பாருங்கள் எனக் கேட்டதன் மூலம் தொல்பொருளியல் மற்றும் உயிரியல் சார்ந்த ஆய்வுகளில் ஈடுபட அல்குர்ஆன் தூண்டியுள்ளது.
- இவை தவிர இயற்கை விஞ்ஞானத்தைக் கற்குமாறும் அதனை ஆராயுமாறும் பணிக்கின்ற வசனங்களையும் அல்குர்ஆனில் ஏராளமாகக் காணலாம்.
- வானங்களிலும் பூமியிலும் எத்தனையோ அத்தாட்சிகள் இருக்கின்றன. அவற்றின் முன் அவர்கள் அனுதினமும் செல்கின்றனர். எனினும் அவர்கள் அவற்றை சிந்திக்காது புறக்கணித்தே வருகின்றனர். (12:105)
- அவன் வானங்களையும் பூமியையும் படைத்திருப்பதிலும் இரவும் பகலும் மாறி மாறி வருவதிலும் மனிதர்களுக்குப் பயன்தருவதை (ஏற்றி)க் கொண்டு சமுத்திரத்தில் செல்லும் கப்பலிலும் (வரண்டு) இறந்த பூமியை உயிர்ப்பித்துச் செழிப்பாக்கி வைக்கும் வானத்திலிருந்து அல்லாஹ் பொழியச் செய்யும் மழையிலும் எல்லாவிதமான கால் நடைகளையும் பூமியில் பரவ விட்டிருப்பதிலும் காற்றுகளை (ப் பல கோணங்களில் திருப்பி)த் திருப்பி விடுவதிலும் வானத்திற்கும் பூமிக்கும்

இடையில் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும் கரு மேகத்திலும் (மனிதர்களுக்கு பிரயோஜனங்களை ஆராய்ந்து) சிந்திக்கும் மக்களுக்கு (அவனுடைய அருளையும் அன்பையும் அறிவிக்கக்கூடிய அனேக) சான்றுகள் நிச்சயமாக இருக்கின்றன. (2.164)

- இவ்வாறான அல்குர்ஆன் வசனங்களால் தூண்டப் பெற்ற அறபு முஸ்லிம்கள் பல்வேறு ஆய்வுத் துறைகளிலும் கண்டுபிடிப்புக்களிலும் ஈடுபாடு காட்டினர்.

- இன்றைய நவீன உலகில் காணப்படும் ஒவ்வோர் அறிவியல் துறைக்குமான அடிப்படைகளை அன்றைய முஸ்லிம் அறிஞர்கள், விஞ்ஞானிகள் வழங்கினர். குறிப்பாக கி.பி 8 ஆம் நூற்றாண்டுக்கும் 14 ஆம் நூற்றண்டுக்கும் இடையில் தோன்றிய முஸ்லிம் அறிஞர்களின் சாதனைகளுக்குப் பின்னால் அல்குர்ஆனின் தூண்டுதலே காணப்பட்டன.

- கிரேக்க நாட்டில் சோக்ரடீஸ் என்ற அறிஞன் எதன்ஸ் நகர இளைஞர்களுக்கு ஆய்வுரிமையில் ஆர்வத்தை ஊட்டியதற்காக நஞ்சூட்டப்பட்டுத் தண்டிக்கப்பட்டார்.

- கி. மு. 212 ஆம் ஆண்டளவில் ஆக்கிரமிடிஸ் Geometrical Problems வடிவியல் சார்ந்த புதிர்களை மண் தரையில் எழுதி ஆய்வு செய்து கொண்டிருந்த போது ரோமப் படை வீரரொருவால் தாக்கப்பட்டார்.

- கிரேக்க நாட்டில் ஜனநாயகம் நிலவிய ஏதன்ஸ் நகரில் கலைகளும் பல்வேறு சித்தாந்தங்களும் முன்னேறியிருந்தன என்பதை மறுப்பதற்கில்லை. ஆயினும் அ∴ஸ்கிலஸ் aeschyles யுரிப்பிடிஸ் (Euripidies) பிடியஸ் (Phidies) ஸாக்ரடீஸ் (socretes) அரிஸ்டாட்டில் (Aristatle) போன்ற தத்துவ ஞானிகளும் கலைஞர்களும் அங்குதான் இம்சிக்கப்பட்டனர். அவர்கள் சிறையில் அடைக்கடப்பட்டனர். சிலபோது தூக்கில் ஏற்றபட்டனர். இவ்வித கொடுமைகளுக்குப் பயந்து அவர்கள் ஓடி ஒழிந்தனர்.

- பாப்பாண்டவர் இரண்டாம் சில்வெஸ்டர் ஸ்பைனில் சில காலம் தங்கியிருந்தார். அப்போது அறபு முஸ்லிம்களால் எழுதப்பட்ட நூல்களை வாசித்து அதனால் ஈர்க்கப்ட்டார். அவற்றை ஆர்வத்துடன் கற்றுக்கொண்டார். அவர் ஸ்பைனிலிருந்து திரும்பி செல்லும்போது தாம் கற்ற நூல்களின் மொழி பெயர்ப்பையும் அஸ்ரோலப் எனும் (Artrolable) விண்ணையும் கோள்களையும் ஆராய்ந்து அவை பற்றிய போதிய தரவுகளைப் பெற்றுக்கொள்ள உதவும் கருவி ஒன்றையும் தம்மோடு எடுத்துச் சென்றார். நாடு திரும்பிய அவர் அராபிய அறிவியலையும் தர்க்கவியல், கணிதம், வானியல் ஆகியவற்றையும் கற்பிக்கத் தொடங்கினார். அதன்போது பெரும் எதிர்ப்புக்கள் கிளம்பின. ஸ்பைனிலிருந்து மாயக் கலைகளையும் பிசாசுகளின் போதனைகளையும் எடுத்து வந்துள்ளார் என இரண்டாம் சில்வெஸ்டரை மக்கள் சாடினர். அவரை எதிர்த்துச் சமூகத்திலிருந்து ஒதுக்கி விட்டனர்.

- இவ்வாறு உலகம் அறிவு ஆராய்சி கண்டுபிடிப்புக்ளுக்கு எதிராகச் செயற்பட்டுக் கொண்டிருந்த வேளை, அல்குர்ஆன் அறிவு ஆராய்ச்சி கண்டுபிடிப்புக்களுக்கு மகத்தான இடத்தை வழங்கி அப்பணியை இபாதத்தாகக் கருதித் தூண்டிக் கொண்டிருந்ததது.

**மருத்துவத் துறை**

- ஏனைய துறைகளை விடவும் மிகவும் காத்திரமான பங்களிப்பு மருத்துவத் துறைக்கு முஸ்லிம்களால் கிட்டியுள்ளது என்பதே பேருண்மையாகும்.

- இஸ்லாத்தின் தோற்றத்திற்கு முந்தைய கால - ஜாஹிலிய்யாக் காலப்பிரிவில் மருத்துவம் - அறிவியலோடு தொடர்பான ஒரு தனிக் கலையாக வளரவில்லை. அது பெரும்பாலும் மாந்திரிகம் (witchcreft) சூனியம் முதலியவற்றோடு இணைந்த ஓரம்சமாகவே விளங்கியது. சுகாதாரம், உடல் நலம் ஆகியவற்றைப் பேணுவதில் கூட அச்சமூகம் அக்கறை கொள்ளவில்லை. ஆனால், இஸ்லாம் அவர்களது சுகாதார, உடல் நலவியல் துறையிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியது. அல்குர்ஆனும் ஸுன்னாவும் அவர்கள் தங்களது உடல் நலவியல் துறையில் கவனம் செலுத்தத் தூண்டின. உடல், உள்ளம் இரண்டுக்கும் இடையிலான தொடர்பு பற்றி அல் குர்ஆன் வசனங்களும் ஹதீஸ்களும் சுட்டிக்காட்டின.
- உடல் நோயுற்றிருப்பது வறுமையை விட மோசமனாது. உடல் நோயை விட உள்ளம் நோயுறுவது மோசமானதாகும் முதலான மேற்கோள்கள் உடல் நலவியல் துறையில் கவனம் செலுத்தத் தூண்டின.

- ஒருவரது வாழ்க்கைச் செயற்பாட்டில் உடலுக்கும் உள்ளத்திற்குமிடையிலான சார்பு நிலையைக் காண்கிறோம். ஒருவன் அதிர்ச்சிக்குள்ளானால் அவனது நுரையீரல் தொகுதியிலும் அடி வயிற்றிலும் மாறுதல்கள் ஏற்படுகின்றன. அவன் பயத்துக்குள்ளானால் முகம் வெளுத்து விடுகின்றது. மூச்செடுக்கக் கஷ்டப்படுகின்றான். பசி குறைந்து விடுகின்றது. இதயத் துடிப்பு அதிகரிக்கின்றது. கை, கால் சோர்வுறுகின்றன. பயத்திற்கான காரணம் நீங்கியதும் அவ்வறிகுறிகள் மறைந்து உடல் வழமையான நிலைக்குத் திரும்பிவிடுகிறது. இவ்வாறான அதிர்ச்சிகள் இயற்கையாக, உடல் இயக்கத்தில் பாரதூரமான சீர்கேட்டைக் கொண்டு வருவதில்லை. கலவரப்படுதல் தொடருமானால் உடலில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும். இவ்வுடல் நிலைக் கோளாறு சிந்தனையும் உடலும் சார்ந்த நோய் என அர்ராஸி குறிப்பிடுகிறார்.

- ஒரு முஸ்லிம் நிறைவேற்றும் அடிப்பயையான வணக்கங்கள் யாவும் உள்ளத்தோடு தொடர்புடையனவாகும். அவற்றின் நிறைவுத் தன்மை சுத்தத்திலே தங்கியுள்ளது. வணக்க வழிபாடுகளில் பெரும்பாலானவை அல்லாஹ்விடம் அங்கீகாரம் பெற வேண்டுமானால், அதற்கு முன் நிபந்தனையாக சுத்தம் அல்லது தூய்மை காணப்படுகிறது. "சுத்தம் ஈமானின் பகுதியென" நபிகளார் போதித்தார்கள். சட்ட அறிஞர்கள் இவ் விடயத்தில் அதிக அக்கறை செலுத்தியமையால் எல்லாச் சட்ட நூல்களிலும் பெரும்பாலும் ஆரம்பத் தலைப்பு அத்தஹாறா எனும் சுத்தம் பற்றிய பாடமாக அமைந்துள்ளமையைக் காணலாம்.

- கிரேக்க நாகரிகத்தின் செழிப்பின் போது மருத்துவமும் கணிசமான அளவிற்கு முன்னேற்றம் கண்டிருந்தது. வெறும் அனுபவத் திட்டமாக இருந்த மருத்துக் கலை கிரேக்கர்களின் எழுச்சிக் காலத்தில் சித்தாந்த ரீதியிலேயே வளர்ச்சியடையலாயிற்று. ஹிப்போகிரெடிஸ் (Hippocrtess) கல்லன் (Galan) போன்ற மருத்துவ மேதைகள் அதன் வளர்ச்சிக்குக் காரணமாய் அமைந்தனர்.

- ஆனால் கிரேக்க நாகரிகத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி மருத்துவக் கலையையும் பாதிக்கத் தவறவில்லை. எனவே முஸ்லிம்கள் கிரேக்க, பாரசீக மருத்துவக் கலைகளை

அழிவில் நின்றும் காப்பாற்றியதோடு கிரேக்க மருத்துவர்களின் தவறுகளை விமர்சித்தும், மருத்துவத் துறையில் பரிசோதனை முறையை அறிமுகப்படுத்தியும் பல புதிய மருத்துவச் சித்தாந்தங்களையும் கோட்பாடுகளையும் நிறுவியும் மருத்துவத் துறை வளர்ச்சிக்குச் சிறந்த பங்களிப்புச் செய்தார்கள்.

- நிச்சயமாக (ஆரம்பத்தில், முதல்) மனிதனைக் களிமண்ணின் சத்திலிருந்து சிருஷ்டித்தோம். பின்னர் அதனை இந்திரியமாக்கி ஒரு பத்திரமான இடத்தில் வைத்தோம். பின்னர் அந்த இந்திரியத்தை இரத்தக் கட்டியாக்கினோம். பின்னர் அந்த இரத்தக் கட்டியை மாமிசப் பிண்டமாக்கச் செய்தோம். பின்னர் அந்த மாமிசப் பிண்டத்திலிருந்து எலும்பை உற்பத்தி செய்து அந்த எலும்புக்கு மாமிசத்தை அணிவித்தோம். பின்னர் அதனை மனித சிருஷ்டியாக அமைத்தோம். (23:12-14)

- இதுபற்றி ஹார்விக் ஹேர்க்பெல்ட் என்பவர் "மருத்துவ ஆராய்ச்சிகளுக்கு அல்குர்ஆனே தூண்டு விசை அளித்ததோடு பொதுவாக இயற்கையைப் பற்றி சிந்தித்து ஆராயுமாறும் அது எடுத்துரைக்கின்றது" என்று குறிப்பிடுகிறார்.

- நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் போதனைகளும் முஸ்லிம்களை மருத்துவத் துறையில் ஈடுபடுவதற்கு ஆர்வத்தை தூண்டியது. "எந்தவொரு நோயையும் அதற்குரிய மருந்தையும் ஏற்படுத்தாமல் அல்லாஹ் இறக்கவில்லை" ஒவ்வொரு நோய்க்கும் ஒரு மருந்துண்டு, அந்த நோய்க்கு மருந்து பிரயோகிக்கப்படும் போது அல்லாஹ்வின் அனுமதியோடு அது குணமாகிவிடுகிறது'' என்றும் கூறினார்கள்.

- நபி (ஸல்) அவர்களே ஒரு பெரும் மருத்துவராக விளங்கினார்கள். பல நூற்றுக் கணக்கான நோய்களுக்கு அவர்கள் சிகிச்சை அளித்தார்கள். இன்னும் பலருக்கு நோய்க்குரிய பரிகாரங்களைக் கற்றுக் கொடுத்தார்கள். "நீங்கள் மருத்துவம் செய்து கொள்வதில் மிக மேலானவை மூக்கினுள் மருந்திடுதலும் இரத்தம் குத்தி வெளியேற்றுதலும் தொண்டையினுள் மருந்து ஊற்றுதலும், பேதிக்கு மருந்து குடித்தலும் ஆகும். (திர்மிதி) என்றார்கள். "கருஞ்சீரகம் மரணத்தைத் தவிர மற்றெல்லா நோய்களுக்கும் அரிய மருந்தாகும்" (புகாரி, முஸ்லிம் )

  "நீங்கள் செய்யும் மருத்துவ சிகிச்சைகளுள் மிகச் சிறந்தவை இரத்தம் குத்தி வெளியேற்றுதலும் கடலிலுள்ள "குத்ஸ்" எனும் தாவரமுமாகும். (புகாரி)

- இவ்வாறு நபி (ஸல்) அவர்கள் விளக்கிய நோய் நிவாரணம், பரிகாரம் பற்றிய பல்வேறு ஹதீஸ்களும் "அத்திப்பந் நபவிய்யா" எனும் தலைப்பின் கீழ் அறிஞர்களால் தொகுக்கப்பட்டுள்ளன.

- இது, முஹம்மத் (ஸல்) அவர்கள் மருத்துவத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருப்பதை அங்கிகரித்து அதற்கு முதன்மையிடம் வழங்கியிருக்கிறார்கள் என்பதையும் எடுத்துக் காட்டுகிறது. பிறிதொரு சமயம் "வைத்தியம் பற்றித் தெரியாத ஒருவர் மருத்துவம் பார்த்தால் அதற்கு அவரே வகை கூற வேண்டும்" எனவும் குறிப்பிட்டார்கள். எனவே மருத்துவம் பற்றித் தெரியாதோர் சிகிச்சையளிக்க முற்படக் கூடாது. அது தவறான ஒரு காரியம் என நபிகளார் எச்சரித்துள்ளார்கள்.

- இவ்வாறு நபி (ஸல்) அவர்கள் மருத்துவம் பற்றிக் கற்றுக் கொடுத்த போதனைகளும் வழிகாட்டல் முறைகளும் முஸ்லிம்களை மருத்துவத் துறையில் ஈடுபடத் தூண்டின.

அல்குர்ஆனின் கருத்துக்களாலும் ஸுன்னாவின் போதனைகளாலும் தூண்டப்பட்ட அரேபிய முஸ்லிம்கள் மருத்துவத் துறையில் முனைப்போடு ஈடுபடத் தொடங்கினார்கள்.

- முஸ்லிம்களின் விரிவான மருத்துவ ஆராய்ச்சிகள் கிரேக்க மருத்துவ நூல்களை அறபு மொழியில் பெயர்க்கும் முயற்சியிலிருந்தே தொடங்கியன. கிரேக்கரின் மருத்துவ நூல்களை மொழிபெயர்த்ததோடு மட்டும் முஸ்லிம்கள் தமது மருத்துவப் பணியைச் சுருக்கிக் கொள்ளவில்லை. தமது ஆராய்ச்சிகள் மூலம் அந்நூல்களில் காணப்பட்ட தவறான கருத்துக்களைச் சுட்டிக்காட்டிச் சரியான விளக்கங்களையும் வழங்கினார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக தாம் பெற்ற அறிவையும் அனுபவங்களையும் அடிப்படையாக வைத்துப் புதிய உண்மைகளையும் கருத்துக்களையும் வெளியிட்டார்கள். இது பற்றி C.G. COSMSTON (கம்ஸ்டன்) An Introduction of History of Medicne என்ற நூலில் "அரேபியர்கள் மருத்துவத் துறையின் வளர்ச்சிப் பாதையில் சுமாராக நின்று கொண்டு கிரேக்கரின் நூல்களையும் கருத்துக்களையும் கண்மூடித்தனமாகப் பின்பற்றினார்கள் என்று மிக நீண்டகாலமாகவே கருதப்பட்டுவருகிறது. ஆனால் இது ஒரு தவறான கருத்தாகும். ஏனெனில் அரேபியர் களத்திற்கு வந்தபோது, கிரேக்க மருத்துவம் முற்றாக அழிந்து போயிருந்தது. எல்லா இடங்களிலும் மாந்திரீகமும் வசியமுமே வழக்கிலிருந்தன. அந்தச் சமயத்திலே அரேபியர்கள் கிரேக்க அறிவுச் செல்வத்தை அழிவிலிருந்து காப்பாற்றியதோடு மட்டும் நில்லாமல், கிரேக்க மருத்துவத்திற்கு விரிவுரைகள் எழுதியதன் மூலமும், அதில் திருத்தங்கள் செய்ததன் மூலமே ஐரோப்பாவிலே விஞ்ஞானத்தின்பால் ஒரு சுவையைத் தோற்றுவித்ததன் மூலமும் அதனை ஜனரஞ்சகப்படுத்தி வைத்தார்கள். அரேபியர் கிரேக்க மருத்துவ நூல்களைச் சேகரித்து, அவற்றை அறபு மொழியில் மொழி பெயர்த்ததோடு மட்டும் தங்கள் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு, இந்த அறிவை அவர்கள் மீண்டும் ஐரோப்பாவுக்குக் கடத்தியிருந்தால் கூட அது ஒரு தாழ்ந்த சாதனையாகிவிடாது. ஆனால் அதற்கு மேலும் சென்று, மூல நூல்களை எழுதினார்கள் என்று குறிப்பிடுகிறார்.
- குறிப்பாக அப்பாஸியர் ஆட்சிக் காலத்திலேயே, முஸ்லிம்களின் அரவணைப்பில் வளர ஆரம்பித்த மருத்துவ விஞ்ஞானம் பழைய சிறப்பையும் புதிய மெருகையும் பெற்றது. இக்காலத்திலேயே புகழ்பெற்ற மருத்துவ மேதைகள் பலர் தோன்றி மருத்துவ ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுப் புதிய உண்மைகளையும் கருத்துக்களையும் கண்டுபிடித்தனர். மருத்துவத்தின் சிறப்புத் துறைகள் தனித்தனி விஞ்ஞானமாக வளர ஆரம்பித்தன. மருத்துவக் கல்லூரிகளும் பல்வேறு வசதிகளைக் கொண்ட மருத்துவமனைகளும் முஸ்லிம் பேரரசு எங்கும் நிறுவப்பட்டன. அப்பாஸிய ஆட்சியின் பிற்கூறில் முஸ்லிம்களால் பாதுகாக்கப்பட்ட கிரேக்க மருத்துவ அறிவையும் அரேபிய மருத்துவ முறையையும் ஐரோப்பாவினுள் கடத்தும் பணி ஆரம்பமானது. கிரேக்க மருத்துவமும் அறேபிய மருத்துவமும் இணைந்ததன் மூலம் தோன்றிய யூனானி மருத்துவ முறையை உலகுக்கு அளித்த பெருமை முஸ்லிம்களையே சாரும். அவர்களே இக்கால மருத்துவ விஞ்ஞானத்தின் தந்தையர்களாகவும் இருந்தனர்.

- H.G.Wells, The outline & History எனும் நூலில் "முஸ்லிம்கள் மருத்துவத்துறையில் பெரும் அபிவிருத்தியை ஏற்படுத்தினார்கள். அவர்களது சிகிச்சை முறைகளுள் பல இன்னும் புழக்கத்தில் இருக்கின்றன. சத்திரசிகிச்சையின் போது மயக்க மருந்தை இவர்களே பாவித்தனர். ஐரோப்பிய உலகில், சமய சடங்குகளாலேயே நோய்களைக் குணப்படுத்த முடியும் என்று நம்பிச் செயலாற்றிய மதபீடத்தால் மருத்துவத் தொழில் தடைசெய்யப்பட்டிருந்த காலத்திலேயே அரேபியர் உண்மையான மருத்துவ

முறையைப் பின்பற்றினர் என்கிறார்.

- மத்தியகால முஸ்லிம் மருத்துவமேதைகள் ஐரோப்பியருக்கு முன்னரே பல நோய்த்தடுப்பு முறைகளைக் கண்டறிந்து உலகுக்கு அறிமுகம் செய்து வைத்தனர். Inoculation என்று அழைக்கப்படும் கிருமி புகுத்தல், அம்மை குத்தும் Vaccication முறையை கி.பி. 1679 இல் துருக்கிய முஸ்லிம்களே முதலில் கண்டுபிடித்தனர்.

- ஆனால் இன்றைய மருந்து உலகம் எட்வர்ட் ஜென்னரே என்ற ஆங்கில நாட்டு மருத்துவரே 1796 இல் அம்மை குத்தும் முறையை கண்டு பிடித்ததாக கொண்டாடுகின்றனர். உண்மை யாதெனில் எட்வர்ட் ஜென்னருக்கு சுமார் 115 வருடங்களுக்கு முன்னமே முஸ்லிம்கள் அதைக் கண்டுபிடித்துப் பயன்படுத்தி வந்தனர்.

- சத்திர சிகிச்சைத் துறையைப் பொறுத்தமட்டில் அறபு முஸ்லிம் மருத்துவர்கள் சீஸர் வெட்டு (Caesarean) முதல் கண் அறுவைச் சிகிச்சை வரை மிகச் சிக்கலான சத்திர சிகிச்சை முறைகள் அனைத்தையும் அறிந்து வைத்திருந்தனர். பெருந்தொகையான சத்திர சிகிச்சைக் கருவிகள், குறிப்பாக பல்வேறு வகையான ஆய் கத்திகள், Scalpels அவர்களால் விருத்தி செய்யப்பட்டன. அவற்றுள் சில மிகச் சிறிய மாற்றங்களுடன் இன்றும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

- இவ்வாறு பல்வேறு வழிகளிலும் மருத்துவத் துறைக்குப் பெரும் பங்களிப்புச் செய்த அறபு முஸ்லிம்களின் பங்களிப்பு பற்றி -தாரீக் தமத்துன் அல்இஸ்லாமி- என்ற நூலில் ஜுர்ஜி ஸைதான் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

- “சத்திர சிகிச்சை வைத்தியத்தில் சுடு கருவிகளை (Cauterizing Agents) முதன் முதலாகப் பயன்படுத்த ஆரம்பித்தவர்கள் முஸ்லிம்களே, சயரோகத்தினால் பீடிக்கப்பட்ட நோயாளரில் காணப்படும் நகங்களின் நிலை பற்றி அவர்களே விவரித்தனர். பரவும் நோயான செங்கண்மாரி நோய்க்குரிய சிகிச்சையை அவர்களே கண்டுபிடித்தனர். மூக்கிலிருந்து குருதி வடிதலுக்கு தலையில் குளிர்ந்த நீரை ஊற்ற அவர்களே ஆலோசனை கூறினர். கட்காசம் Catrac இற்காக அறுவைச் சிகிச்சை முறை அரேபிய முஸ்லிம்களாலேயே விவரிக்கப்பட்டது. கல்லகற்றும் (Lithoromc) சிகிச்சை முறை கூட அவர்களது கண்டுபிடிப்பாகும்.

- இவை மட்டுமன்றி கண்களில் உண்டாகும் cataract கட்சாகம், கண் வில்லைகளின் ஒளி புகா இயல்பு (Opacity) காரணமாகவே ஏற்படுகிறது என்பதை அறபு மருத்துவர்கள் அறிந்திருந்தனர். பார்வைக் குறைவுக்கு பல்வேறு வலுக்களைக் கொண்ட Power lenses பொருத்தப்பட்ட மூக்குக் கண்ணாடி பயன்படுத்தவும் அறபு முஸ்லிம்களே அறிந்து வைத்திருந்தனர். சத்திர சிகிச்சையின் போது நோயாளிக்கு உணர்ச்சியற்ற நிலையை உண்டாக்குவதற்காக மயக்க மருந்துகளைப் பாவிக்கும் முறையைக் கண்டறிந்தமை, பெரிய சத்திர சிகிச்சைகளின் போது ஒரு வாரத்திற்குக் கூட நோயாளிகளை அவர்கள் மயக்க நிலையில் வைத்திருந்தனர்.

- இவ்வாறு பங்களிப்புச் செய்த முஸ்லிம்களுள் அபூபக்கர் ஸகரிய்யா அர்ராஸி குறிப்பிடத்தக்க ஒருவராவார். மருத்துவக் கலை பற்றி 117 இற்கு மேல்பட்ட நூல்களை எழுதியவராகக் கருதப்படுகிறார். இவரது 12 பாகங்கள் கொண்ட ”அல்ஹாவி” எனும் நூல் புகழ்பெற்ற ஒரு மருத்துவ நூலாகும். இவரது “கிதாபுல் ஜுதரி வல்ஹஸ்பாஹ்” எனும் நூல் பெரியம்மை சின்னம்மை பற்றி விளக்குகிறது.

பெரியம்மை கடவுளின் தண்டனை எனக் கருதப்பட்டு வந்த மக்களிடையே அதனை ஒரு நோய் என்ற வகையில் விளக்கும் முதல் நூலாகவும் பெரியம்மைக்கும் சின்னமைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை விளக்கும் முதல் நூலாகவும் இது காணப்படுகிறது.

- William Harvey இற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே Capillary Circulation எனும் இரத்தோட்ட முறை பற்றி "கிதாபுல் மாலிகி" எனும் நூலில் அலி இப்னு அப்பாஸ் அல் மஜூஸி எனும் அறபு மருத்துவர் விளக்கியுள்ளார். முஸ்லிம் மருத்துவ மேதைகளுள் அபுல் காஸிம் அப்பாஸ் அஸ்ஸஹ்ராவி என்பவர் surgery எனும் அறுவைச் சிகிச்சைத் துறையில் சிறப்புற்று விளங்கினார். இவர் "அத்தப்ஸீர்" எனும் 30 பாகங்கள் கொண்ட பெரும் மருத்துவக் கலைக் களஞ்சியமொன்றையே எழுதினார். கண், காது, பற்களோடு தொடர்புடைய அறுவைச் சிகிச்சை முறைகளை இந்நூலில் விளக்கும் அவர் பல சிகிச்சை உபகரணங்கள் பற்றியும் பல விளக்கங்களை அளித்துள்ளார். கி.பி. 15 முதல் 18 ஆம் நூற்றாண்டு வரை இவரது இந்நூல் ஐரோப்பிய பல்கலைக்கழகங்களில் பயன்படுத்தப்பட்டு வந்தது.

- நம் முன்னோர்களுள் அலி இப்னு ஸீனா மருத்துவ விஞ்ஞான வளர்ச்சியின் உச்ச நிலைக்குக் காரணமாயிருந்தவராவார். "அவிசென்னா" அல்லது அவென்ஸீனா போன்ற பெயர்களால் ஐரோப்பியர் மத்தியில் பிரபல்யம் அடைந்திருந்தார். இவரது "கானூன்" எனும் நூல் மருத்துவத் துறையின் பைபிளாக மதிக்கப்பட்டது என Osler எனும் மேற்கத்தேய அறிஞர் குறிப்பிடுகிறார். 17ஆம் நூற்றாண்டின் இறுதிவரை மேலைத்தேய மருத்துவர்களாலும் மருத்துவ மாணவர்களாலும் விரும்பி வாசிக்கப்பட்ட இந்நூலை யூனானி மருத்துவம் பயில்வோர் இன்று பயன்படுத்தி வருகின்றனர்.

- முஸ்லிம் மருத்துவ அறிஞர்கள் துவங்கிவைத்த ஆராய்ச்சிகள் கண்டுபிடிப்புக்கள் மூலம் மருத்துவத் துறை வளர்ந்து ஓங்கலாயிற்று. உமையாக்களது ஆட்சிக்காலத்தில் குருடர்களுக்காகவும் குஷ்டரோகிகளுக்காகவும் ஆங்காங்கு மருத்துவ மனைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் அப்பாஸியக் காலத்திலேயே ஒழுங்குபடுத்தப்பட்ட மருத்துவமனைகள் தோன்ற ஆரம்பித்தன. பக்தாத், டமஸ்கஸ், கெய்ரோ ஆகிய பகுதிகளில் எண்ணற்ற மருத்துவ மனைகள் தோன்றியதோடு சிறைச்சாலைகளில் கூட கைதிகளுக்கான மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. அத்தோடு பள்ளிவாசல்களுக்கு அண்மையில் முதலுதவி நிலையங்களும் நிறுவப்பட்டன. இம்மருத்துவ மனைகளோடு இணைந்து மருத்துவக் கல்லூரிகள் செயல்பட்டன. பக்தாத், டமஸ்கஸ், கெய்ரோ, மக்கா, ஜெரூஸலம், ஹர்ரான் ஆகிய பகுதிகளில் எண்ணற்ற மருத்துவக் கலா நிலையங்கள் இந்த அடிப்படையில் நிறுவப்பட்டன. இக்கலா நிலையங்களில் விரிவுரையாளர்கள் Galen, அர்ராஸி, அல் மஜூஸி ஆகியோரது நூல்களின் அடிப்படையில் விரிவுரைகளை நிகழ்த்தினர்.

- முஸ்லிம் மருத்துவ அறிஞர்கள் கிரேக்க மருத்துவ நூல்களை வெறுமனே மொழிபெயர்த்து, அவற்றைக் குருட்டுத் தனமாகக் கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றவில்லை. தலைசிறந்த கிரேக்க மருத்துவ நூல்களை அறபு மொழிக்கு மொழி பெயர்த்ததோடு அவற்றை அழிவின் நின்றும் காப்பாற்றினர். இது மட்டுமன்றி அவற்றை விமர்சன ரீதியாக ஆராய்ந்து Galen, Hippocrotas போன்ற கிரேக்க மருத்துவர்களின் தவறுகளைத் திருத்தி இத்துறையில் பல புதிய சித்தாத்தங்களையும் வழங்கினர். இச்சிந்தனைகள் ஸ்பைனுக்கும் ஸிஸிலிக்குமூடாக ஐரோப்பாவுக்குள் நுழைந்து ஐரோப்பிய மருத்துவக் கலை வரலாற்றின் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தின.

### புவியியல் துறைப் பங்களிப்பு

- உலகில் மிகவும் தொன்மைவாய்ந்த ஒரு விஞ்ஞானங்களில் ஒன்றாக புவியியல் துறை கருதப்படுகிறது. மனிதன் இப்புவியில் தோன்றியது முதலே இக்கலையின் தொடக்கமும் ஆரம்பிக்கிறது. பபிலோனியர், கிரேக்கர், ரோமர் எனப் பலரும் இத்துறையில் பங்களிப்புச் செய்துள்ளனர். மத்திய காலப்பிரிவில் புவியியல் துறைக்கு அறபிகளின் பங்களிப்பு மகத்தானது. இஸ்லாத்தின் தோற்றத்திற்கு முன்னரே அறபிகள் கடல் கடந்த வர்த்தகத்தில் ஈடுபட்டனர். நாடுகள், பௌதிக சூழ்நிலைகள், மானிட சமூகங்கள், போக்குவரத்துப் பாதைகள் பற்றிய அறிவைப் பெற்றிருந்தனர். இது அவர்களது வர்த்தக நடவடிக்கை காரணமாக புவியியலோடு பரீட்சயம் பெற வாய்ப்பேற்படுத்தியது.

- இஸ்லாத்தின் தோற்றத்தை அடுத்து அறபு முஸ்லிம்கள் புவியியல் துறையில் ஈடுபாடு காட்டுவதற்குப் பெரும் உந்து சக்தியாக அல்குர்ஆனின் பல வசனங்கள் காணப்பட்டன.

- அல்குர்ஆன் புவியில் வாழ்ந்து சென்ற பல சமூகங்கள் பற்றிக் குறிப்பிடுகிறது. புவி பற்றியும் அதன் தோற்றம், அதன் வடிவமைப்பு, புவியில் உள்ள படைப்புக்கள், பற்றியெல்லாம் பேசி, அவை குறித்துச் சிந்திக்கத் தூண்டுகிறது.

- வரலாற்றில் முக்கிய நிகழ்வுகள் இடம் பெற்ற தலங்களை அல்குர்ஆன் சுட்டிக்காட்டுகிறது. சூறா கஹ்பில் குகைவாசிகள்'' தங்கியிருந்த குகை பற்றிக் கூறியுள்ளது. நூஹ் (அலை) அவர்களின் கப்பல் தூபான் வெள்ளத்தில் ஒதுங்கிய ஜுதி மலை பற்றி, மூஸா அலை) அவர்களின் இறையடியார் ஒருவரைச் சந்திப்பதற்காகச் சென்ற இரு கடல்கள் சங்கமிக்கும் இடம் போன்றன பற்றி அல்குர்ஆன் குறிப்பிடுகிறது.

- அவ்வாறே துல்கர்னைன் சென்றடைந்த சூரிய அஸ்தமன திசை பற்றியும் ஆத், சமூத் சமூகங்கள் வாழ்ந்த இடங்கள் பற்றியும் அல்குர்ஆன் குறிப்பிடுகிறது.

- உலகின் நாலா திக்குகளில் இருந்தும் கஃபாவை நோக்கிவரும் முஸ்லிம்கள் தாம் பயன்படுத்தும் பாதைகள், ஊடறுத்துச் செல்லும் பாலை நிலங்கள், கடல்கள், நதிகள், சமவெளிகள் இவை பற்றித் தெரிந்து கொள்வதற்கும் தாம் செல்லும் இடங்களின் தட்ப வெப்ப நிலைகளை அறிந்து கொள்வதற்கும் மேலும் தமது கடமையான தொழுகையை நிறைவேற்றுவதற்கு திசையை அறிந்து கொள்வதற்கும் புவியியல் பற்றிய அறிவு முஸ்லிம்களுக்கு அவசியமாகியது. இதனால் அவர்கள் இத்துறையில் அதிக ஈடுபாடு காட்டினர்.

- இஸ்லாமிய வரலாற்றில் அப்பாசியர் காலத்தில் ஏற்பட்ட விஞ்ஞான அறிவியல் ஆர்வம் பல்வேறு நூல்களையும் கிரேக்க மொழியிலிருந்து அறபுக்கு மொழிபெயர்க்க வழிவகை செய்தது. இது முன்னைய நாகரிகங்கள் பெற்றிருந்த புவியியல் அறிவு பற்றித் தெரிந்து கொள்வதற்கும் அக்கலையை மேலும் வளர்ப்பதற்கும் புதிய கண்டு பிடிப்புக்களை மேற்கொள்ளவும் கிரேக்கர் விட்டுச் சென்ற இடத்திலிருந்து அதனை மேலும் வளர்த்துச் செல்வதற்கும் முஸ்லிம்களுக்கு உந்து சக்தியாய் அமைந்தது. இது தவிர கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் எல்லை வட ஆபிரிக்க, செஸ்னியா, ஸ்பைன், சிந்து என மிகவும் விசாலமடைந்தது.

இந்நாடுகளை ஆட்சி செய்த முஸ்லிம்கள் அங்குள்ள மக்கள் தொகை, அவர்களது தொழில், அப்பிரதேசங்ளில் அடங்கியுள்ள இயற்கை வளங்கள், பிரதேசத்தின் நிருவாக எல்லைகள், அயல் நாடுகள், தரை மற்றும் நீர் மார்க்கமாக பயணம் செய்யக் கூடிய வழிகள், பருவப் பெயர்ச்சிக் காற்றுகள், துறை முகங்கள் பற்றியெல்லாம் தெரிய வேண்டியேற்பட்டமையால் அவர்கள் புவியியல் துறையோடு தம்மை இரண்டறப் பிணைத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது எனலாம்.

- அப்பாசியர் மொழி பெயர்ப்புக்களில் இதன் விளைவாக, ஏனைய சமூகங்களும், நாகரிகங்களும் பெற்றிருந்த அறிவை முஸ்லிம்கள் பெறவும் அவற்றைப் பரீட்சித்துப் பார்க்கவும் அவற்றில் காணப்பட்ட பிழைகளைத் திருத்தி அமைக்கவும் அவர்கள் விட்டுச் சென்ற இடத்திலிருந்து இக்கலையை மேலும் வளர்த்துச் செல்லவும் வாய்பேற்றட்டது.

- விஞ்ஞானக் கலைகள் பயனற்றவை என்று மட்டுமன்றி அவை கேடு விளைவிக்கக் கூடியன என கிறிஸ்தவ மதக் குரவர்கள் போதித்து வந்த கால கட்டத்தில் வானவியல், புவியியல் கலைகள் ஏளனத்துக்குட்பட்டன. விஞ்ஞானிகள் துன்புறுத்தல்களுக்கு உள்ளானார்கள். உலகம் இத்தகு பின்னடைவுக்குட்பட்டிருந்த காலத்தில் கி. பி. 7 ஆம் நூற்றாண்டு முதல் புவியியல் மற்றும் விஞ்ஞானக் கலைகளை முஸ்லிம்களே அழிவிலிருந்து பாதுகாத்து வளர்த்துச் சென்றனர்.

- உலக வரலாற்றில் கிறிஸ்தவ படையெடுப்பாளர்கள் அலக்சாந்திரியாவிலிருந்த நூல் நிலையத்தை அழித்தனர். சிலுவை வீரர்களும் மங்கோலியப் படையெடுப்பாளர்களும் இஸ்லாமிய நாகரிகம் வழங்கிய விஞ்ஞான அறிவியல் பொக்கிஷங்களை அழித்தனர்.

- ஆனால், முஸ்லிம்களோ தாம் கைப்பற்றிய நாடுகளில் கிடைத்த அறிவுக் கருவூலங்களையும் கலைப் பொக்கிஷங்களையும் பேணிப் பாதுகாத்து, விருத்தி செய்து வளர்த்தனர்.

- முஸ்லிம் வரலாற்றில் அப்பாசிய கலீபா மாமூன் 70 விஞ்ஞானிகள் கொண்ட ஒரு குழுவை நியமித்து புவியின் சுற்றளவைக் கணிக்கவும் சின்ஜார் சமவெளியில் ஒரு பாகையின் தூர அளவு எவ்வளவு என அளவிடவும் முயற்சித்தார். இக்காலத்தில் உலகம் உருண்டையானது என்பதை முஸ்லிம் விஞ்ஞானிகள் கண்டறிந்திருந்ததனாலேயே உலகின் சுற்றளவைக் கணக்கிட கலீபா ம∴மூன் துணிந்தார். கலிலியோவுக்கு முன்னதாகவே உலகம் உருண்டை என்பதைக் கண்டறிந்த முஸ்லிம் அறிஞர் அல்பிரூனி உலகின் சுற்றளவை அளப்பதற்கு வியக்கத்தக்க எளியதோர் வாய்ப்பாட்டையும் முதன் முதலில் வகுத்தளித்தார். இதனை அடிப்படையாகக் கொண்டு புவியின் சுற்றளவை ஏறத்தாள 25009 மைல் என அவர்கள் கண்டறிந்தனர்.

- பூமி கோளவடிவானது என்ற கருத்தை முஸ்லிம் புவியியலாளர்கள் உறுதியாக எடுத்தியம்பினர். மத்திய காலப் பகுதியில் பூமி ஓர் இடத்தில் நிலையாக இருக்கிறது என ஐரோப்பியர் நம்பினர். இதற்கு மாற்றமாக பூமி தன் அச்சில் சுழன்று வருகின்றது என்ற கருத்தை முஸ்லிம் புவியியலாளர்கள் நிறுவி வந்தனர்.

- சூரியன் பூமியைச் சுற்றிவருகிற தென ஆரம்ப கால விஞ்ஞானிகள் நம்பினர். அபூ ஸஈத் ஸன்ஜரி என்பவர் பூமி சூரியனைச் சுற்றிவருகிறது என்ற கருத்தை முதலில்

முன்வைத்தார். முஸ்லிம் புவியியலாளர்கள் முன்வைத்த இக்கருத்துக்களை அடியாகக் கொண்டே ஐரோப்பிய விஞ்ஞானி கொப்பனிகஸ் தன் கருத்துக்களை நிறுவி வந்தார்.

- உலகில் புராதன தேசப் படத்தைக் கிரேக்கர்களே வரைந்தனர். அதனைத் திருத்திச் சிறந்த தேசப்படங்களை உருவாக்குவதற்கான புவியியல், வானவியல், கணிதவியல் அறிவை முஸ்லிம்கள் பெற்றிருந்ததன் விளைவாக பல புதிய தேசப்படங்கள் அவர்களால் வரையப்பட்டன. பல்வேறு , முஸ்லிம் தேச வரைபட கலைஞர்களால் புவியியல் படங்கள் வரையப்பட்டாலும் அல்முகத்தஸி எனும் அறிஞர் காலத்தால் பிற்பட்ட தேசப்பட வரைகலைஞராவார். இவர் முஸ்லிம் உலகினை 14 பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொன்றையும் தனித்தனியாக வரைந்தார். அவர் உருவாக்கிய தேசப் படத்தின் விசேட அம்சம் யாதெனில் அதில் பல்வேறு நிறங்கள் பயன்படுத்தப்பட்டன. பரிச்சயமான பாதைகள் சிவப்பாலும், மணற் பிரதேசங்கள் மஞ்சள் நிறத்தாலும் உவர் நிறக் கடல்கள் பச்சை நிறத்தாலும் முக்கியமான ஆறுகள் நீல நிறத்தாலும் பிரதான மலைகள் வெளிர் சாம்பல் நிறத்தாலும் அடையாளமிடப்பட்டிருந்தன. அல் மக்திஸிற்குப் பின்னர் அல் இத்ரீஸின் படங்கள் முக்கியமானவை. அவர், தான் வகுத்த 7 காலநிலைப் பிரிவுகளையும் காட்டும் விதமாக பூகோளத்தில் அடையாளப்படுத்தினார். அவரால் வரையப்பட்ட படங்கள் கிழக்கத்தேய முஸ்லிம் உலகை விட மேற்கத்தேய இஸ்லாமிய உலகினைச் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றன.

- கடல் வழிப் பயணத்தின் முன்னோடிகளாகவும் முஸ்லிம்கள் திகழ்ந்துள்ளனர். வஸ்கொடகாமாவுக்கு மலிந்தி எனும் ஆபிரிக்காவில் உள்ள ஓர் இடத்திலிருந்து கலிகட்ட எனும் கேரளாவில் உள்ள ஓர் இடம் வரை இப்னு மாஜித் என்பவரே கடற்பயணத்தின் வழிகாட்டியாகத் திகழ்ந்துள்ளார். இது மட்டுமன்றி கொலம்பஸ் அமெரிக்காவைச் சென்றடைய முயற்சிப்பதற்கு 500 ஆண்டுகளுக்கு முன்பே முஸ்லிம்கள் அமெரிக்காவைச் சென்றடைந்திருந்தனர் என தற்கால ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

**வானவியல் கலை**

- இஸ்லாத்திற்கு முற்பட்ட காலம் தொட்டே அரேபியர் வாழ்வு வானவியலுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. பாலை வனங்களினூடாகச் சென்ற வர்த்தகப் பாதைகளை அடையாளங்காண நட்சத்திரங்களே அவர்களுக்குப் பெரிதும் உதவின. நட்சத்திரங்களுடன் காணப்பட்ட நெருக்கமான உறவின் காரணமாக சிலர் நட்சத்திரங்களை வணங்கினர்.

- இஸ்லாத்தின் தோற்றத்தோடு தொழுகைக்காக நேரத்தை அறிதல், ரமழான், ஹஜ் முதலானவற்றுக்காக மாதங்களை கணக்கிடல் முதலானவற்றிற்காக வானவியல் பற்றிய அறிவு கட்டாயமாக்கியது. பிரதேசத்திற்குப் பிரதேசம் நேரம், மற்றும் பிறையின் தோற்றம் என்பன வேறுபடுவதை துல்லியமாக கணிப்பிடுவதற்காகவும் வேறு பல்வேறு தேவைகளின் பொருட்டும் புவியின் நகர்வு, மற்றும் பூ மத்திய ரேகை, பூமத்திய ரேகைக்கும் பிரதேசங்களுக்கிடையேயும் உள்ள தூரம் முதலானவற்றை அறிய வேண்டியிருந்தது. அவ்வாறே முஸ்லிம்கள் கடல் கடந்த வர்த்தக நடவடிக்கைக்காகவும் நட்சத்திரங்களின் அமைவிடம் பற்றிய வரைபடங்களை வரைந்து அவற்றை அடிப்படையாகக் கொண்ட கபற்றியும் ஆராயுமாறு தூண்டுகிறது.

- தங்களுக்கு மேலிருக்கும் வானத்தை அவர்கள் கவனித்துப் பார்க்கவில்லையா?

நாம் அதனை எவ்வாறு (ஒரு கட்டுக் கோப்பாக) அமைத்து அதனை எவ்வாறு (நட்சத்திரங்களைக் கொண்டு) அலங்காரமாக்கி வைத்திருக்கின்றோம். அதில் எத்தகைய வெடிப்புக்களும் இல்லை. (50:6)

அவனே (பொழுதை) விடியச் செய்பவன். அவனே (நித்திரை செய்து நீங்கள்) சுகமடைவதற்காக இரவை ஆக்கினான். (நீங்கள் காலத்தின் கணக்கை அறிவதற்காக சூரியனையும் சந்திரனையும் (ஆக்கினான்) (6:97)

- குலபாக்கள் காலத்திலும் உமையாக்கள் காலத்திலும் நாட்டின் நிர்வாகம் சமூக வாழ்வு போன்ற துறைகளில் அதிக ஈடுபாடு காட்ட வேண்டியேற்பட்டதால் விரல் விட்டு எண்ணக் கூடிய மிகச் சில முஸ்லிம்களே விஞ்ஞானக் கலைகளில் ஈடுபாடுகாட்டினர்.

- உமையா ஆட்சியின் இறுதிப் பகுதிகளில் அறிவு, ஆராய்ச்சித் துறைகளில் அதிக கவனம் செலுத்திய முஸ்லிம்கள் அப்பாசியக் காலத்தில் நிறுவப்பட்ட பைதுல் ஹிக்மாவின் துணையுடன் துரித வேகத்தில் முன்னேறினர். பிற மொழி நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டதால் பாரசீக, கிரேக்க, இந்திய வானவியற் கருத்துக்கள் அவர்களுக்குக் கிடைத்தன. அத்துடன் அப்பாசிய கலீபாக்களும் வானவியல் துறைக்கு அவசியமான வசதிகளைச் செய்து கொடுத்தனர்.

- கி.பி. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் குறிப்பாக அப்பாசியக் கலீபா ஹாரூன், மாமூன் ஆகியோரது காலப்பிரிவில் வானவியற் கலை வளர்ச்சிக்கு பெருமளவில் உதவிகள் வழங்கப்பட்டன. அப்பாசிய கலீபா அபூ ஜ∴பர் அல் மன்ஸூர் தனது அரசவைக்கு பக்தாத் விஞ்ஞானியான யாகூப் இப்னு தாரிக் உடன் சமூகமளித்த இந்திய தேச விஞ்ஞானி மன்காவை வரவேற்று உபசரித்தார். மன்கா கொண்டுவந்திருந்த சமஸ்கிரத மொழியிலான "சிந்தாந்த" எனும் வானவியல் நூலில் பிரதியை அறபு மொழிக்குப் பெயர்க்கும் பணியை முஹம்மத் இப்னு இப்ராஹிம் அல் பஸாரியிடம் ஒப்படைத்தார். யாகூப் பின் இப்ராஹீம் என்பவரது உதவியுடன் பஸாரி இந்நூலை மொழி பெயர்த்தார். இம் மொழிபெயர்ப்பு வானியல் துறையின் வளர்ச்சிக்கு உதவியது.

- கலீபா ம∴மூன் காலத்தில் பைதுல் ஹிக்மாவில் மொழிபெயர்ப்புக்காகவும் வானிலை அவதானத்திற்காகவும் தனியான ஏற்பாடுகள் காணப்பட்டன. தனிநபர்கள் சிலரும் மொழிபெயர்ப்பில் ஆர்வம் காட்டினர். அவ்வாறே பக்தாத் டமஸ்கஸ் இஸ்பகான் முதலான நகரங்களில் கலீபாவும் வேறு செல்வம் படைத்த தனிநபர்களும் வானிலை அவதான நிலையங்களை நிறுவினர். இதன் விளைவாக பிரசித்தி பெற்ற வானவியற் கலை அறிஞர்கள் நூற்றுக்கணக்கில் கி.பி. 10-14 ஆம் நூற்றாண்டுகளுக்கிடையில் தோன்றினர்.

- சுமார் 12 ஆய்வு நிலையங்கள் வானியல் ஆய்வுக்கென முஸ்லிம்களால் நிறுவப்பட்டிருந்தன. வானியல் தொடர்பான மிகச் சரியான முடிவுகளை எடுப்பதற்காக முஸ்லிம்கள் நீண்டகால அவதானங்களை மேற்கொண்டனர். சில அவதானங்கள் 40 வருடங்கள் வரை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. இதனால் கிரேக்க அறிஞர்களின் பல்வேறு அவதானங்கள் மீள் பரிசீலனைக்கு உட்பட்டன. தொலமியின் வானவியல் அட்டவணையை திருத்தி அமைத்தனர்.

- பைதுல் ஹிக்மாவின் வானிலை அவதான நிலையத்தின் சூரிய கிரகணத்தின் சரிவு, சூரிய வட்டத்தின் மொத்த நாட்கள், சூரியன் பூமத்திய ரேகையைத் தாண்டும் நாள் போன்றன அவதானிக்கப்பட்டன.

- கலீபா ம.்.மூன் தனது அரச சபையின் பிரதான விஞ்ஞானிகளான அஹ்மத், முஹம்மத் ஹஸன் ஆகிய இருவரையும் பூமியின் சுற்றளவைக் கணிக்குமாறு பணித்தார். ஒரு பாகையின் தூரத்தை 56 2.்.3 அறபு மைல் எனக் கணித்து பூமியின் சுற்றளவு 204000 மைல் என்றும் பூமியின் விட்டம் 6500 மைல் எனவும் கணித்தனர்.

- இப்ராஹிம் அல் பஸாரி மொழிபெயர்த்த நூலைத் தழுவி சிந்துஹிந்து அல் கபிர் என்ற ஒரு நூலை எழுதினார். கிதாப் அல் மிக்யாஸ், கிதாப் அல் ஸிஜ், கிதாப் அல் அமல் பில் உஸ்துர்லாப், கிதாப் அல் காஸிதா பி உலூல் அல் நுஜூம் ஆகிய நூல்களை அவர் எழுதினார்.

- முஸ்லிம்களின் முதன்முதலான உஸ்தர்லோப் (Astrolabe) ஒன்றை செய்த பெருமை இப்ராஹிம் அல் பஸாரியையே சாரும். இதனைப் பயன்படுத்துவது தொடர்பாக கிதாப் பின் அமல் அல் உஸ்துரலாப் என்ற நூல் விளக்குகிறது. ஸிஜ் எனப்படுகின்ற வானவியல் அட்டவணையொன்றையும் அவர் எழுதினார்.

- கலீபா அபூ ஜ.்.பர் அல் மன்ஸூர் காலத்தில் வாழ்ந்த அஹ்மத் பின் முஹம்மத் அல் நாகாவந்தி இக்கலையின் காலத்தால் முந்தியவராவார். அல் முஸ்த.்.மல் என்று பெயரிடப்பட்ட ஒரு வானவியல் அட்டவணையைத் தனது சொந்த அவதான நிலையத்தில் அவதானித்த விடயங்களை மையமாக வைத்துத் தயார் செய்தார்.

- ம.்.மூனின் காலத்தில் வாழ்ந்த அஹ்மத் அல் பர்கான் என்ற புகழ் பெற்ற வானவியலாளர் ஹரகாத் அஸ்ஸமாவிய்யா வஜவாமி இல்ம் அந்நுஜூம் எனும் நூலை எழுதினார். இது நட்சத்திரங்களின் நகர்வுகள் பற்றி விளக்குகின்றது. பூமியின் விட்டம் 6500 மைல் என்று கணித்த அவர் கோள்களின் விட்டங்களையும் கணித்துள்ளார். கிரிமோனாவில் வாழ்ந்த ஜர்ஹர்ட் என்பவர் இதனை இலத்தின் மொழிக்குப் பெயர்த்தார். இதன் அறபு மொழிப் பிரதி ஒக்போர்ட், பாரிஸ், எகிப்து முதலான நூல்நிலையங்களில் காணப்படுகின்றன.

- பனூ ஸகிர் என்றழைக்கப்பட்ட மூஸா பின் ஸகூர் என்பவரின் பிள்ளைகளான முஹம்மத், அஹ்மத், ஹஸன் ஆகியோர் புகழ்பெற்ற வானவியல் கலைஞர்களாவர். தமது சொந்த வானிலை அவதான நிலையத்தைப் பயன்படுத்தி கடல் மட்டத்திலிருந்து சந்திரன் உள்ள தூரம் கிரகணத்தின் சாய்வு பூமத்திய ரேகையை சூரியன் கடக்கும் தினம் என்பவற்றைச் சரியாகக் கணித்தார்.

- கின்தியின் சமகாலத்தவரான அபூ மஹ்ஷர் (யுட டிரஅயளயச) எழுதிய ஸிஜ் அபீ மஹ்ஷர் எனும் வானவியல் அட்டவணை பிரசித்தமானது. கிதாப் மத்கல் அல் கபீர், கிதாப் அல் உலூம் மவாலிது ரிஜால், கிதாபுல் கிரானாத் என்பன அவர் எழுதிய நூல்களாகும். சந்திரன் பற்றி ஆய்வு செய்த இவர் கடலலைகளில் ஏற்படும் உயர்வு தாழ்வுகளுக்கு ஏற்ப சந்திரனின் ஈர்ப்பு சக்தி வேறுபடுகின்றது என்ற கருத்தை முன்வைத்தார்.

- அபுல் ஹஸன் அப்துர் ரஹ்மான அஸ்ஸூபி (கி.பி 903-986) என்ற புகழ் பெற்ற வானவியலாளர் கிதாப் அல் கவாகிப் அல் ஸாபித் அல் முஸவ்வர் என்ற நூலை எழுதினார். இதன் அறபு மொழி நூலும் பிரான்சிய மொழி பெயர்ப்பும் இன்றும் கிடைக்கின்றன. அவரது வானவியல் அட்டவணையில் நட்சத்திரங்களின் பெயர், அவற்றின் பருமன், அவற்றின் நகர்வு, நிறமாற்றம் முதலானவற்றோடு நட்சத்திரங்களின் அமைவிடங்களைப் படங்களின் உதவியுடன் விளக்கியுள்ளார். குறிப்பாக 48 நட்சத்திரங்களின் அமைவிடங்களை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலத்தீன், பிரன்ச், பாரசீகம் முதலான மொழிகளுக்கு இது மொழி பெயர்க்கப்பட்டள்ளது. இஸ்பானிய மொழியில் இந்நூலுக்கு ஒரு விளக்கவுரை எழுதப்பட்டள்ளது. ஐரோப்பிய வானவியலாளர்களின் ஆய்வுளுக்கு இந்நூல் அடித்தளமாக அமைந்தது.

- கி.பி. 858 இல் பிறந்த அப்துல்லாஹ் முஹம்மத் இப்னு ஜாபிர் அல் பதானி (கி.பி 858-929) தொலைநோக்கிக் கருவி மூலம் விண்ணை ஆராய்ந்து நட்சத்திரங்களின் விபரத் தொகுப்பொன்றை வெளியிட்டார். கிதாப் ம∴ரிபாத் மதாலி அல் புரூஜ் பி மா பைன அறப் அல் பலக், ரிஸாலா பி தஹ்கீக் மிக்தாரில் இக்திஸாலா எனும் நூல்கள் பிரசித்தமானவை. தனது வானவியல் அட்டவணையில் நிலையான நட்சத்திரங்கள், கிரகணங்களின் சரிவு , பருவ மாற்றங்கள், சூரியனின் சுற்றுப்பாதை, கோள்களின் சுற்றுப்பாதை, புதுப்பிறை கண்களுக்குத் தெரியக்கூடிய நேரத்தை அறிவதற்காக அறிவுரை, சூரிய, சந்திரக் கிரகணங்கள் பற்றி விளக்கியுள்ளார்.

- வானவியலின் உஸ்தாத் என்று போற்றப்படும் அபூ ரய்ஹான் முஹம்மத் அல் பெரூனி கி.பி 973-1048 கானூன் அல் மஸுஊதி பில் ஹயா வன் நுஜூம் என்ற நூலை எழுதினார். அக்காலத்தில் கருத்து முரண்பாட்டைத் தோற்றுவித்திருந்த புவி தனது அச்சில் சுழலுகின்றது என்ற கருத்தை விளக்கினார். பல்வேறு துறைசார்ந்த சுமார் 180 புத்தகங்களை எழுதியுள்ளார்.

- இந்தியாவில் மெகலாயர் ஆட்சியில் முஸ்லிம்கள் வானவியல் துறையை வளர்க்க பாடுபட்டனர். மெகலாய மன்னன் ஹுமாயூன் ஒரு வானவியலாளராவார். கி.பி. 1724 இல் டெல்லியில் ஒரு வானிலை அவதான நிலையம் தோற்றுவிக்கப்பட்டது. ஹைதராபாத் டெக்கானிலும் அவதான நிலையமொன்று அமைக்கப்பட்டது.

**வானிலை அவதான நிலையங்கள்.**

- கி.பி 3ஆம் நூற்றாண்டுக்கு பிற்பட்ட காலத்தில் கிரேக்கர்களே வானியல் ஆராய்ச்சியில் முக்கியம் பெற்றிருந்தனர். ஸ்கந்தரிய்யாவில் அமைக்கப்பட்டிருந்த வானியல் அவதான நிலையமே உலகம் முழுவதற்குமான ஒரே நிலையமாக கணிக்கப்பட்டது.

- பைதுல் ஹிக்மாவில் காணப்பட்ட வானவியல் ஆராய்ச்சி நிலையம் அக்காலத்தில் இருந்த அனைத்து நிலையங்களையும் விட சிறந்த தரத்தில் காணப்பட்டது. தொலமியின் அல் மஜஸ்திமா என்ற நூலில் விளக்கப்பட்டிருந்த வானவியல் கருவிகளை உற்பத்தி செய்யுமாறு ம∴மூன் அறிஞர்களைப் பணித்திருந்தார். அதற்கேற்ப பல புதிய கருவிகள் உற்பத்தி செய்யப்பட்டன.

- ஹிஜ்ரி 214 இல் டமஸ்கஸில் உள்ள கைஸூன் மலையில் ஓர் ஆய்வு நிலையம் நிறுவப்பட்டது. இது அர்ரஸம் ம∴மூனி என அழைக்கப்பட்டது.

- அல் பெரூனி கட்டிய குவாரஸ்மி அவதான நிலையம், இப்னு ஸீனாவின் அவதான நிலையம், தகிய்யுத் தீன் அவதான நிலையம், கஷ்மீர் அவதான நிலையம், ஹுஸ்ஜான் அவதான நிலையம் என்பனவும் சுட்டிக்காட்டத் தக்கன.

- கி.பி 829 இல் பக்தாதில் உள்ள தத்மீர் வெளியில் அஷ்ஷம்ஷிய்யா என்ற வானியல் ஆய்வு நிலையம் கலீபா ம.்.மூனினால் கட்டப்பட்டது. அக்காலத்திலிருந்த மிக முக்கியமானவர்களாகக் கருதப்படும் யஹ்யா பின் மன்ஸுர், அப்பாஸ் பின் ஸஈத், காலித் பின் அல் மரூஸி முதலானோர் அதில் பணிபுரிந்தனர்.

- வானவியலோடு தொடர்பான அறபு மொழிப் பதங்கள் இன்றும் திரிபடைந்த நிலையில் ஐரோப்பிய வானவியல் கலையில் பயன்படுத்தப்படுகின்றன. அஸ்ஸமித், அல் பழ்ல், ஆகிருந் நகார் முதலான பதங்களைச் சுட்டிக்காட்டலாம்.

- நட்சத்திரங்களைக் குறிக்கும் அறபுப் பதங்கள் இன்றும் வழக்கில் உள்ளன. Akrab, Altair, Nadir முதலானவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம்

## மொழிபெயர்ப்புக் கலை

- இஸ்லாம் அறிவுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற மார்க்கம் என்ற வகையில் ஆரா்ய்சியைத் தூண்டுகின்றது. ‘‘(பின்னும் மனிதர்களை நோக்கிக் கூறும்படி இப்ராஹீமுக்கு கட்டளையிட்டோம்.) பூமியில் நீங்கள் சுற்றித் திரிந்து பாருங்கள். ஆரம்பத்தில் படைப்புக்களை எவ்வாறு உற்பத்தி செய்கிறான். (அவ்வாறே மரணித்த) பின்னரும் அல்லாஹ் (மறுமையில்) மறுமுறையும் உற்பத்தி செய்வான். நிச்சயமாக அல்லாஹ் அனைத்தின் மீதும் மிக்க ஆற்றலுள்ளவன்.” (29:20)

  ”வானங்களையும் பூமியையும் படைத்திருப்பதிலும் இரவு பகல் மாறி மாறி வருவதிலும் அறிவுடையவர்களுக்கு நிச்சயாமாக பல அத்தாட்சிகள் இருக்கின்றன. (3:190)

- இவை போன்ற அல்குர்ஆனிய வசனங்கள் மற்றும் அறிவைத் தூண்டும் ஸுன்னாவின் போதனைகளாலும் கவரப்பட்ட அன்றைய முஸ்லிம்கள் அறிவு பெறுவதில் அதீத அக்கறை செலுத்தினர். இஸ்லாமிய நாகரிகத்தில் சிந்தனா இயக்கங்கள் விருத்தியடைவதற்கு அப்போதனைகள் தூண்டுகோலாய் அமைந்தன. அதனடியாகவே பிற மொழிகளில் காணப்பட்ட அறிவுக் கருவூலங்களே முஸ்லிம்கள் விளங்கிக் கொள்வதற்காக தமது மொழிக்குப் பெயர்த்தனர். தமது மொழியில் இருந்தவற்றைப் பிற மொழிக்கு மாற்றம் செய்தனர். இதனால் விருத்தியடைந்த மொழிபெயர்ப்பு பணி மற்றும் அறிவை இடம்பெயர்க்கும் பணியினூடாக அவர்கள் புத்தாக்கங்களை மேற்கொண்டனர். பிற மொழி நூல்களில் காணப்பட்ட பிழைகளை அவர்கள் திருத்தினர். ஆதாரபூர்வமாக அவற்றை விமர்சித்தனர். நிறைந்த இந்திய, கிரேக்க, பாரசீக தத்துவக் கருத்துக்களை தர்க்க ரீதியாகவும் ஆதாரபூர்வமாகவும் எதிர்த்துத் தமது கருத்துக்களை முன்வைத்தனர். மத்திய காலத்தில் இமாம் கஸ்ஸாலி, இப்னு ருஷ்த், இப்னு கல்தூன், இப்னு துபைல் போன்றோர் இங்கு குறிப்பிடத்தக்கவர்களாவர். மொழி பெயர்ப்புப் பணியின் ஆரம்பம் அப்துல் மலிக் பின் மர்வானின் காலத்திலேயே ஆரம்பித்தது. கலாநிதி உமர் பர்ரூஹ் மொழிபெயர்ப்புக்கு ஏதுவாகிய காரணங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுகிறார்.

1. அறபிகள் பிற சமூகங்களோடு ஒன்று கலந்த வேளைகளை அவர்களது புதிய

அறிவுப் பாரம்பரியங்களைக் கண்டு அவற்றினூடாகத் தங்களது அறிவையும் கலாசாரத்தையும் சிந்தனா ஆற்றலையும் விருத்தி செய்து கொள்வதற்கு நாடினர். இதுவே மொழிபெயர்ப்புக்கான முதன்மைக் காரணமாக அமையலாம்.

2. அறபிகள் தங்களிடம் அரிதாகக் காணப்பட்ட பிறரிடம் பரவலாகக் காணப்பட்ட மருத்துவம் கணிதம் காலக்கணிப்பு போன்றன பற்றிய அறிவுகளைப் பிறரிடமிருந்து பெற்றுக் கொள்ள நாடினர்.

3. அறிவைத் தேடுவதற்கும் சிந்திப்பதற்குமான அல்குர்ஆனின் தூண்டுதல்

4. நாகரிகத்தின் அடையாளமாக அறிவைக் கருதியமை

5. ஒரு நாடு அவசியம் பொருளாதார ரீதியாக விருத்தி அடைகின்ற போது அங்கே ஆடம்பரம், பெரிய குடியிருப்புக்கள், கட்டடங்கள் போன்றன தோன்றும் அவ்வேளையில் மனித உள்ளங்கள் அறிவை விருத்தி செய்து கொள்வதற்கும் சிந்தனா ரீதியான வாழ்வைக் கட்டியெழுப்புவதற்கும் விரும்பும்.

6. கலீபாக்கள் மொழிபெயர்ப்பில் காட்டிய அக்கறை. அவர்கள் ஒரு புத்தகத்தை மொழிபெயர்த்தால் அதன் பாரத்தின் அளவுக்கு தங்கத்தை வெகுமதியாக மொழிபெயர்ப்பாளனுக்கு வழங்கினர். மேலும் ஹிஜ்ரி 218இல் மரணித்த கலீபா ம.்.மூன் பைதுல் ஹிக்மாவை ஸ்தாபித்து மொழிபெயர்பாளர்களை அங்கு ஒன்று சேர்த்தார். நாட்டு அரசியலின் ஒரு பகுதியாக நூல்களை மொழிபெயர்க்கின்ற பணி காணப்பட்டது. நூல்களைப் பெறுவதற்கும் மொழிபெயர்ப்பதற்கும் அதிகமாக செலவிட்டனர். ஆலு முனஜ்ஜம் என்ற குடும்பத்தினர் புத்தகங்களை மொழிபெயர்ப்பதற்காக மாதாந்தம் 500 தீனார்களை செலவிட்டனர்.

- மொழி பெயர்ப்பு பணி இரண்டு வழிகளில் இடம்பெற்றது.

1. நூல்களைப் பிறமொழியிலிருந்து அறபிக்கு மொழிபெயர்ததல்

2. பிற மொழிகளிலிருந்து வேறு பிற மொழிகளுக்கு நூல்களை மொழிபெயர்த்தல்

- உமையாக் காலத்தில் ஹாலித் இப்னு யஸீத் அவர்களை முதலாவது மொழிபெயர்ப்புப் பணியை ஆரம்பித்தவராகக் கருதப்படுகிறார். அதாவது மொழிபெயர்ப்புப் பணி ஹிஜ்ரி முதலாம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் ஆரம்பமானது. ஹிஜ்ரி 85 இல் காலம்சென்ற ஹாலித் கலீபாப் பதவியின் நம்பிக்கை இழந்த அவர் அறிவுத் துறையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். மரியானூஸ் என்பவரிடம் இரசாயனவியலைக் கற்றார். பின்னர் இரசாயன வியல் நூல்களை அறபுக்கு மொழிபெயர்க்கும்படி பணித்தார். கலீபா அப்துல் மலிக்குடைய காலத்திலே மருத்துவத்தின் கலைக்கலஞ்சியம் எனக் கருதப்பட்ட அஹரோன் இப்னு அப்பா எழுதிய மருத்துவ நூல் முதலில் மொழிபெயர்க்கப்பட்டது.

- அப்பாஸியக் காலப்பகுதியில் கலீபா ம.்.மூனுக்கு முன்னர் அப்துல்லாஹ் இப்னு முகப்ப.். (மரணம் ஹி-142) பல நூல்களை அறபுக்கு மொழிபெயர்த்தார். பாரசீக, இந்திய கதைகளை அடிப்படையாகக் கொண்டு கலீலா வதிம்னா என்ற நூலை அவர் எழுதினார். கலீபா அபூ ஜ.்.பர் அல் மன்ஸூரின் காலத்தில் மொழிபெயர்ப்பு

அரச கண்காணிப்பில் இடம்பெற்றது. ஹாரூன் ரஷீதின் காலத்தில் மொழிபெயர்ப்புப் பணி ஒரு ஒழுங்கமைப்பிற்குக் கொண்டுவரப்பட்டது. யோகனா இப்னு மாஸவைகி, ஹஜ்ஜாஜ் இப்னு மதர் போன்றோர் இப்பணியில் ஈடுபட்டனர்.

- கலீபா ம∴மூனின் காலம் அறிவெழுச்சியின் பொற்காலம் எனக் கருதப்படுகின்றது. மத்திய காலப்பகுதியில் அறிவினதும் ஞானத்தினதும் கலங்கரை விளக்காக பக்தாத் காணப்பட்டது. ஒவ்வொரு மொழியிலிருந்தும் நூல்களை அறபுக்குப் பெயர்க்கும் பணி அங்கு இடம்பெற்றது. மொழிபெயர்ப்பாளர்களுக்கு வெகுமதியாக நூலின் பாரத்திற்குத் தங்கம் சன்மானமாக வழங்கப்பட்டது. கலீபா ம∴மூன் ஹிஜ்ரி 215 இல் உரோம மன்னன் தோபீல் வெற்றி கொண்டபோது அங்கு கிருஸ்தவம் பரவியபோது மறைத்து வைக்கப்பட்டிருந்த கிரேக்க தத்துவ நூல்களைத் தனக்குத் தண்டப்பணமாகத் தரும்படி கலீபா ம∴மூன் தோபலிடம் வேண்டிக் கொண்டார். அதற்கு உடன்பட்ட அவர் நூல்களை ம∴மூனுக்கு வழங்கினார். கலீபா ம∴மூனோ அவற்றைத் தனக்குக் கிடைத்த பெரும் அருட்பொக்கிஷமாகக் கருதி ஏற்றுக் கொண்டார். இக்காலத்தில் மொழிபெயர்ப்பாளர்களாக பலர் இருந்தனர். அவர்களின் பிரதானமானவர்களாக ஹுனைன் இஸ்ஹாக், ஸாபித் இன்னு குர்ரா, ஹுஜ்ஜாஜ் இப்னு மதர் போன்றோர் காணப்பட்டனர்.

**இராணுவ தளபாடங்கள்**

- இஸ்லாம் ஒரு முஸ்லிமின் உடல் ஆரோக்கியத்திலும் பாதுகாப்பிலும் கூடிய கரிசனை செலுத்துகின்றது. பலமான ஒரு மு∴மின் பலவீனமான ஒரு மு∴மினைவிட அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானவன் என்று கூறிய நபி (ஸல்) அவர்கள் நீந்துதல், அம்பெறிதல், குதிரையில் சவாரி செய்தல் போன்றவற்றைத் தூண்டினார்கள். அம்பெறிவதற்குப் பயின்ற ஒருவர் அதனை விட்டுவிடுவதானது இறைவன் வழங்கிய அருட்கொடை ஒன்றை நிராகரிப்பதற்குச் சமன் என்று கூறுகிறது. எனவே அவன் எப்போதும் இறைபாதையில் போராடுகின்ற ஒரு போராளியின் இயக்கப்பாடு கொண்ட சுறுசுறுப்பானவனாக இருக்க வேண்டும். அவன் ஒழுங்கையும் கீழ்படிதலையும் என்றும் விரும்புகின்றவனாக இருக்க வேண்டும். ஷாம் படைத்தளபதியாக இருந்த ஹாலித் இப்னு வலீத் பதவியிலிருந்து நீக்கப்பட்டதும் கீழ்வருமாறு குறிப்பிட்டார்கள். அமீருல் மு∴மினீனின் கட்டளையை செவியேற்று நான் கீழ்படிந்து விட்டேன். அல்லாஹ் மீது ஆணையாக உமர் (ரழி) அவர்கள் என்மீது ஒரு பெண்ணைத்தான் பொறுப்பாளராக நியமித்தாலும் நான் செவிமடுத்து கீழ்படிந்திருப்பேன். இப்பெரு போராட்ட உணர்வும் கீழ்படியும் பண்புகளும் அன்றை முஸ்லிம்கள் ஆயுதங்களைப் பயன்படுத்தவும் பின்நிற்கவில்லை. பிற்காலத்தில் அவர்களாகவே இராணுவத் தளபாடங்களை நிர்மாணித்துக் கொள்கின்ற அளவுக்கு முன்னேறினர்.
- அறபிய முஸ்லிம்கள் ஆரம்பத்தில் அத்திர்உ என்ற இரும்பாலான தட்டை வடிவினால் அமைந்த கவசத்தைப் பயன்படுத்தினர். போராட்டத்தின் போது கவ்ஸா என்ற முட்டை வடிவில் அமைந்த இரும்பினாலான தலைக்கவசத்தையும் பயன்படுத்தினர். வாள்வெட்டிலிருந்து தம்மைக் காப்பதற்கு அத்துர்ஸ் என்ற வகையிலான கேடயத்தையும் பயன்படுத்தினர். வாள், அம்பு, ஈட்டி, கோடாரி வடிவில் அமைந்த ஆயுதம், கோடாரி, வில்லு, கத்தி போன்றவற்றை தனிநபர் ஆயுதங்களாக போராட்டங்களில் அவர்கள் பயன்படுத்தினர். கூட்டாக அவர்கள் மன்ஞனிக், கவச வாகனம், கோட்டை மதில்களைக் கடப்பதற்கான ஏணிகள் போன்ற சமூக ஆயுதங்களையும் அவர்கள் பயன்படுத்தினர். யுத்த தாக்குதல்களுக்குப்

பயன்படுத்துகின்ற பெரிய ஆயுதமாக மஞ்சனிக் காணப்பட்டது. நவீன காலத்தில் ஏவுகணைகளை ஒத்ததாக அவை காணப்பட்டன. அவற்றினூடாக கற்களை வைத்து தூர இடத்திற்கு எறிந்தனர். ஸல்மான் அல் பாரிஸ் (ரழி) அவர்கள் தாயிபை முற்றுகையிட்ட போது மஞ்சனிக் கருவி ஒன்றை செய்து பயன்படுத்தினார். உமர் (ரழி) அவர்கள் இக்கருவிகளைச் செய்வதில் மிகவும் கரிசனை கொண்டிருந்தார் பாரசீகத்தை இஸ்லாமியப் படையினர் வெற்றி கொள்கின்ற போது அவர்களிடம் சுமார் 20 மஞ்சனிக் கருவிகள் காணப்பட்டன. அவ்வாறே ஷாம் தேசத்தை வெற்றி கொள்வதற்குப் படையெடுத்த அபூ உபைதா, ஹாலித் போன்றோர்களது படையணியினர் ஏராளமான மஞ்சனிக் கருவிகளைப் பயன்படுத்தினர். அம்ரிப்னு ஆஸ் (ரழி) அவர்கள் எகிப்தில் புஸ்தாக் நகரில் தங்கியிருந்த போது மஞ்சனிக் கருவிகளை உற்பத்தி செய்தார்கள்.

- உமையாக்கள் மஞ்சனிக் கருவிகளை உற்பத்தி செய்வது அதிக கவனம் செலுத்தினர். ஹஜ்ஜாஜ் இப்னு யூசுப் அவர்கள் மஞ்சனிக் கருவி ஒன்றை உற்பத்தி செய்து அதற்கு அல் அரூஸ் எனப் பெயரிட்டார். அக்கருவியைப் பயன்படுத்துவதற்கு 500 பணியாளர்கள் தேவைப்படுகின்ற அளவு அது பிரமாண்டமானதாகக் காணப்பட்டது. முஹம்மத் பின் காஸிம் கராச்சியில் ஹிஜ்ரி 89 இல் டேபள் நகரின் சிந்தின் பல நகரங்களையும் கைப்பற்றுவதற்கு ஏராளமான மஞ்சனிக் கருவிகளைப் பயன்படுத்தியுள்ளார். ஹிஜ்ரி இரண்டாம் நூற்றாண்டில் முஸ்லிம்களிடையே போராட்டங்களிலே நகரங்களை முற்றுகையிடுவதற்கும் சர்வசாதாரணமாகப் பயன்படுத்தப்படும் ஒரு ஆயுதமாக மஞ்சனிக் கருவிகள் காணப்பட்டன. அதனைத் தொடர்ந்து அப்பாஸியர்களே அக்கருவிகள் மிகச் சாதரணமாக புழக்கத்தில் காணப்பட்டன. அநேக போராட்டங்களில் அதனை அவர்கள் பயன்படுத்தினர். ஹி 223இல் அம்மூரிய்யா போரில் இதன் பயன்பாடு விசேடமாகக் காணப்பட்டது. முஸ்லிம் போராளிகள் இக்கருவிகளைப் பயன்படுத்தும் போது இறைவனைப் பெருமைப்படுத்தி தக்பீர் முழங்கியவர்களாகவும் பின்வருவன போன்ற இறைவசனங்களை ஓதியவர்களாகவும் அதனைப் பயன்படுத்தும் மரபைக் கொண்டிருந்தனர்.

  (எறியப்பட்ட செங்கல் ஒவ்வொன்றிலும்) உங்கள் இறைவனால் அடையாளமிடப்பட்டிருந்தது. (புரட்டப்பட்ட) அவ்வூர் இவ்வக்கிரமக்காரர்களுக்கு வெகு தூரமுமல்ல. (விரும்பினால் அதனை இவர்கள் நேரில் சென்று பார்த்துக் கொள்ளலாம்) (86:83)

- முஸ்லிம்கள் கண்டுபிடித்து விருத்தி செய்த ஆயுதம் மஞ்சனிக் மட்டுமல்ல. தப்பாபா எனும் கவச வாகனங்களையும் அவர்கள் கண்டுபிடித்துப் பயன்படுத்தினர். அந்த வாகனம் வைரமுள்ள பலகையிலாலான கோபுர வடிவம் கொண்டதாக காணப்படும். அதற்கு மேலால் பாதுகாப்புக்காக வினாக்கிரி பதப்படுத்தப்பட்ட தோல்களால் ஒட்டி வைக்கப்பட்டிருந்தது. ஏனெனில் அவை தீயினால் எரிவதைத் தடுப்பதற்காகவே அவ்வாறு செய்யப்பட்டிருந்தது.மேலும் அவ்வாகனத்தை நகர்த்துவதற்கு வசதியாகச் சக்கரங்களும் பொருத்தப்பட்டிருந்தன. யுத்தங்களின் போது எதிரிகளின் அம்பு கற்கள் போன்றவற்றிலிருந்து தம்மைத் தற்காத்துக் கொள்வதற்காக இதனைப் பயன்படுத்தினர். சிலபோது அக்கவச வாகனத்திற்கு உள்ளே மறைந்திருந்து கோட்டைகளை நோக்கிய எதிரிகளைக் குறிவைத்துத் தாக்குதல்களை நடாத்தினர்.

- இதுவானது பத்து மனிதர்கள் இருந்து எதிர்த் தாக்குதல் நடாத்தக்கூடிய அளவு

விசாலமாக இருந்தது. அதன் கூரைப்பகுதியையும் ஏனைய நான்கு பகுதிகளையும் தாக்குதலில் இருந்து எதிர்கொள்வதற்குப் பயன்படுத்தினர். எதிரிகளின் அம்பு, கற்களில் இருந்து பாதுகாப்பதற்காக கனமான பலகைகளையும், இரும்புகளையும் பயன்படுதினர். மேலும் கோட்டைகளை வெற்றி கொண்ட போது அதனை ஊடறுத்துச் செல்வதற்குப் பாலமாகவும் இதனைப் பயன்படுத்தினர்.

- மேலும் அல் அப்ராஜ் வ ஸலாலிமுல் ஹிஸான் மேலும் மகாஹின் போன்ற இராணுவ தளபாடங்களையும் உருவாக்கிப் பயன்படுத்தினர். வெடிபொருட்களை குழாய் ஒன்றில் நிரப்பி தூர எறிவதற்குப் பயன்படுத்துகின்ற கருவியே மகாஹில் என்பதாகும்.

**கப்பல் கட்டுதல்**

- யமன் தேசத்து அறபிகள் கடற்பயணத்தில் கரிசனை கொண்டிருந்தனர். அவர்களது கப்பல்கள் கிழக்காசிய மற்றும் கிழக்காபிரிக்க தரைகள் வரை சென்று வந்தன. இஸ்லாத்தின் தோற்றத்தின் பின்னர் அறபு முஸ்லிம்கள் கடற் பயணத்தில் ஈடுபடுவதற்கு உந்து சக்தியாக அல் குர்ஆன் அமைந்தது.

- அல்குர்ஆனின் ” (நபியே) நீங்கள் பார்க்க வில்லையா? நிச்சயமாக அல்லாஹ் பூமியிலுள்ள அனைத்தையும் உங்களுக்கு வசப்படுத்திக் கொடுக்கிறான். கப்பல் அவனுடைய கட்டளைப்படி கடலில் செல்கிறது. தன்னுடைய அனுமதியின்றி பூமியின் மீது வானம் விழாது அவன் தடுத்துக் கொண்டிருக்கிறான். நிச்சயமாக அல்லாஹ் மனிதர்கள் மீது மிக்க அன்பும் கிருபையும் உடையவான இருக்கிறான்.” (22:65)

  ”அல்லாஹ் கடலை உங்களுக்கு வசதியாக அமைத்திருக்கின்றான். அவன் கட்டளையைக் கொண்டு (பல தீவுகளுக்குத்) கப்பலில் சென்று (அதன் மூலம்) அவனுடைய அருளை நீங்கள் தேடிக்கொள்கின்றீர்கள். (அதற்காக அவனுக்கு) நீங்கள் நன்றி செலுத்துவீர்காளாக. (45:12)

- போன்ற வசனங்கள் கடற்பயணத்தில் ஈடுபடுவதற்குத் தூண்டுகோலாய் அமைந்தன. முஆவியா (ரழி) அவர்கள் ஷாம் தேசத்து கவர்னராக இருந்த சந்தர்ப்பத்தில் ரோம் தேசத்தின் மீது படையெடுப்பதற்கு உமர் (ரழி) அவர்களை வலியுறுத்தினார். உமர் (ரழி) அவர்கள் எகிப்தின் கவர்னராக இருந்த அம்ர் இப்னு ஆஸ் அவர்களிடம் கடல் நிலவரம் பற்றித் தனக்கு விளக்கி எழுதும்படி கடிதம் எழுதினார். உஸ்மான் (ரழி)அவர்களது ஆட்சிக்காலத்தில் முஆவியா (ரழி) கடற்படையெடுப்பு நடாத்த அனுமதி கேட்ட போது உஸ்மான் (ரழி) அவர்கள் அதற்கு உடன்பட்டார்கள். முஆவியா (ரழி) அவர்கள் ஹி 27 இல் கடற்படையெடுப்பு நடத்தி சைப்பரஸ் தீவை கைப்பற்றிக் கொண்டார். அதனைத் தொடர்ந்து பல்வேறு கடற் படையெடுப்புக்கள் இடம் பெற்றன. இக்கடல் படையெடுப்புக்களோடு இணைந்ததாகக் கப்பல் கட்டற்தொழினுட்பமும் முஸ்லிம்களிடையே வளர்ச்சியுற்றன. கலீபா அப்துல் மலிக் பின் மர்வான் ஆபிரிக்காவில் தனது கவர்னராக இருந்த ஹஸ்ஸான் இப்னு ஸாபித்திடம் டியூனீசியாவில் கப்பற்கட்டல் தொழிற்சாலையொன்றை நிறுவும்படி வேண்டினார். இதுவே இஸ்லாமிய வரலாற்றில் விசேடமான கப்பல் கட்டும் முதலாவது தொழிற்சாலையாக கருதப்படுகிறது.

- உமையாக்கள் அறபுலகின் பல்வேறு இடங்களில் கப்பல் கட்டும் தொழிற்சாலைகளை

நிறுவினர். அவற்றுள் ஹி 54 இல் எகிப்தில் ஜதீரதுல் ரௌளா எனுமிடத்தில் கட்டப்பட்ட கப்பல் கட்டும் தளம் மிக முக்கியமாகும்.

- அப்பாஸியரும் இந்து சமுத்திரத்திலும் மத்திய தரைக்கடல் பிரதேசத்திலும் கப்பற் கட்டும் நிர்மாணத் தொழிலில் கவனம் செலுத்தினர். பாத்திமியர் ஆட்சிகாலத்தில் புராதன கப்பல் கட்டும் தளங்கள் அதிகமாக நிறுவப்பட்டன. எகிப்தின் பல்வேறு பகுதிகளிலும் அவை உருவாக்கப்பட்டன. கெய்ரோ, திம்மியாத், இஸ்கந்திரிய்யாத், தராபல்ஸ் போன்ற குறிப்பிடத்தக்க இடங்களாகும். ஸ்பெய்னில் உமையாக்கள் கப்பல் கட்டும் தளங்கள் பலவற்றை உருவாக்கினர். இதனூடாக இஸ்பைனிய கடற்படை குறிப்பிடத்தக்களவு பலம் பெற்றதாய் விளங்கியது. கலீபா அப்துர் ரஹ்மான் நாஸிர் (ஹி 300-350) காலத்தில் இருநூற்றுக்கும் அதிகமான கப்பல்கள் காணப்பட்டன. இஸ்பெய்னிய கடற் படையின் தலைவராக அஹ்மத் ஸித்தில்லி பிரசித்தி பெற்றிருந்தார்.

- ஸலாஹுதீன் அய்யூபி அவர்கள் சிலுவைப் போராளிகளை எதிர்த்து நிற்க பெரும் கடற்படையொன்றை உருவாக்கினான். அறபு முஸ்லிம்கள் மத்திய தரைக்கடலில் நிர்மாணித்த கப்பல்கள் மிகப் பிரமாண்டமானவைகளாக காணப்பட்டன. லெபனான் மலைகளிலிருந்து சுமந்து வரக்கூடிய மரப்பலகைகளினாலும் ஆணிகளினாலும் செய்யப்பட்டவைகளாக அவை காணப்பட்டன. செங்கடலில், இந்து சமுத்திரத்தில் பயணிப்பதற்கு விசேடமான கப்பல்களை நிருமாணித்தனர். அவை மத்திய தரைக்கடலில் பயன்படுத்தப்படும் கப்பல்களைவிடப் பருமனில் சிறியதாக இருந்ததோடு அவற்றை நிர்மாணிப்பதற்கான பலகைகள் எகிப்திலிருந்து பெறப்பட்டன. அவர்கள் நிர்மாணித்த கப்பல்கள் 30 வகைகளைவிட அதிகமாக இருந்தன. தங்களது தேவைகள் மற்றும் பயன்பாட்டிற்கு ஏற்ப அவை வித்தியாசமான பருமன்களில் அமைந்ததோடு வித்தியாசமான பெயர் கொண்டும் அழைக்கப்பட்டன. அல் மிஸ்தஹ் என்று அழைக்கப்பட்ட கப்பலே இஸ்லாமிய கடற்படை வரலாற்றில் மிகப் பிரமாண்டமானதாகக் கருதப்படுகின்றது.

- ஒவ்வொரு யுத்தக் கப்பலுக்கும் ஒரு தலைவர் காணப்பட்டார். கடற்படை முழுவதற்கும் வழிநடாத்துகின்ற தலைவராக காணப்பட்டவர் அமீருல் பஹ்ர் என அழைக்கப்பட்டார். அந்தச் சொல்லிலிருந்து பிரிந்து வந்ததாக எட்மிரல் என்ற சொல் கருதப்படுகிறது.

**தேர்ச்சி 5.0 : இஸ்லாமிய நாகரிகத்தை வளர்ப்பதில் பங்காற்றிய கலைகளையும், ஐரோப்பிய மறுமலர்ச்சியில் இஸ்லாமிய நாகரிகம் ஏற்படுத்திய தாக்கத்தையும் விளக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 5.1: முஸ்லிம்கள் வளர்த்த அழகியற் கலையின் தனித்துவத்தையும் சிறப்பம்சங்களையும் விளக்குவார்.**

**பாடவேளைகள் : 20**

**கற்றல் பேறுகள்:**

- முஸ்லிம்கள் அழகியற் கலைகளில் ஈடுபடுவதற்கு ஏதுவாக அமைந்த காரணிகளை விளக்கிக் கூறுவார்.
- முஸ்லிம்கள் வளர்த்த அழகியற் கலைகள் பற்றி விளக்கிக் கூறுவார்.
- அழகியற் கலைகளுக்கான முஸ்லிம்களின் பங்களிப்புக்களை பட்டியற்படுத்துவார்.
- முஸ்லிம்களால் முன்னெடுக்கப்பட்ட அழகியற் கலைகளில் ஏனைய கலாசாரங்களின் தாக்கங்களை வேறுபடுத்தி இனங்காண்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

- மனித வாழ்வுடன் தொடர்புடைய அனைத்தும் கலைகளாகும். இக்கலைகளை அழகியற் கலை, அறிவியற் கலை என இரண்டாக நோக்கலாம். கலைஞர்களின் அழகுணர்ச்சியினூடாக வெளிப்படுகின்ற கலையே அழகியற் கலையாகும். மனிதனது உள்ளத்திற்கு இன்பத்தையும் அமைதியையும் வழங்கும் பண்பு அழகியற் கலைக்குண்டு. இதன் காரணமாகவே கலையம்சம் கொண்ட படைப்புக்களை முஸ்லிம்கள் உட்பட அனைத்து சமூகங்களும் பேணிப் பாதுகாத்து வந்துள்ளனர்.

- இஸ்லாம் அழகையும், தூய்மையையும் விரும்பும் மார்க்கமாகும். இஸ்லாம் அழகுக்கும் தூய்மைக்கும் வழங்கிய முக்கியத்துவத்தை வேறு எந்த மார்க்கமும் வழங்கவில்லை. இஸ்லாம் அழகியலை ஆன்மீக நோக்கில் நோக்குகின்றது. ஒரு நபித்தோழர் அழகான ஆடை பாதணிகள் அணிவது பற்றி நபி (ஸல்) அவர்களிடம் கேட்ட போது ''நிச்சயமாக அல்லாஹ் அழகானவன். அழகையே அவன் விரும்புகிறான்.'' (முஸ்லிம்) எனக் குறிப்பிட்டார்கள்.

- அல்குர்ஆன் பல இடங்களில் அழகியலைப் பாராட்டியுள்ளது. அழகைக் குறிக்க 'ஹுஸ்ன், ஜமால், ஸீனத்' போன்ற சொற்களைப் பயன்படுத்தியுள்ளது. அஹ்ஸனுல் அமல் (அழகிய செயல்) ஸப்றுன் ஜமீல் (அழகிய பொறுமை), குதூஸீனதகும் (உங்களை அலங்கரித்துக் கொள்ளுங்கள்) போன்ற பல வசனங்களை அல்குர்ஆன் கையாண்டுள்ளது.

- இஸ்லாம் கூறும் அழகுணர்ச்சி தொட்டுணரக் கூடிய சடப்பொருட்களில் மட்டுமன்றி மனித உணர்வுகள், பண்புகள், உரையாடல்கள் இலக்கியப் படைப்புக்கள் போன்ற அனைத்துத் துறைகளிலும் இடம் பெற வேண்டும். மனிதனின் அழகுணர்வு நன்மை, உண்மை, பயன்பாடு உடையதாக இருப்பதுடன் மனிதனை நல்வழிப்படுத்தக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.

- அழகுணர்வு இணைவைப்புக்கு இட்டுச் செல்லாததாகவும் இஸ்லாத்தின் அடிப்படைக்

கோட்பாடுகளுக்கு முரண்படாததாகவும் பாவங்களை விட்டுத் தடுப்பதாகவும் இருக்க வேண்டும். இதன் காரணமாகவே சிலை வடிவத்தில் சிற்பங்களை செதுக்குதல், காம உணர்வைத் தூண்டக்கூடிய உருவங்களை வரைதல் போன்றவற்றை இஸ்லாம் தடை செய்துள்ளது.

**கட்டடக் கலை**

- இஸ்லாத்தின் தோற்றத்திற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே உலகில் கட்டிடக் கலை தோன்றி வளர்ச்சியடைந்தது. இருந்த போதிலும் அரேபியாவில் அதன் வளர்ச்சி மிகக் குறைவாகவே இருந்தது. அரேபியக் குடிமக்களில் அதிகமானவர்கள் நாடோடிகளாக வாழ்ந்ததனால் அவர்களுக்கு நிரந்தர வீடுகள் காணப்படவில்லை. மிகச் சிலர் மாத்திரமே வீடுகளில் நிலையாக வாழ்ந்தனர். அன்றைய முக்கிய கட்டிடங்களாக க.்.பா, தாருந் நத்வா எனும் ஆலோசனை மண்டபம், மதாஇன் ஸாலிஹ் போன்றன காணப்பட்டன.

- இஸ்லாத்தின் தோற்றத்தைத் தொடர்ந்த நபி(ஸல்) அவர்களது ஹிஜ்ரத்தின் பின்னர் மதீனாவில் கட்டிய மஸ்ஜிதுந் நபவியே முதல் கட்டிடமாகக் கணிக்கப்படுகிறது. இது கூட கட்டிடக் கலை நுட்பங்கள் இன்றி மிக எளிமையாகவே இருந்தது. மண்சுவரைக் கொண்ட திறந்த வெளியாகவே இருந்தது, பின்னர் ஈச்சோலைகளால் கூரையிடப்பட்டது.

- குலபாஉர் ராஷிதீன்கள் காலத்தில் இஸ்லாம் அரபு நாட்டுக்கு வெளியே சென்றதால் அங்குள்ள மக்கள் தமது தேவைகளுக்கேற்ப மஸ்ஜித்களை நிர்மாணித்துக் கொண்டனர். குறிப்பாக உமர் (ரழி) அவர்களின் காலத்தில் கூபா, பஸரா, புஸ்தாத் போன்ற நகர்கள் நிர்மாணிக்கப்பட்டதனால் அங்கு மஸ்ஜித்களும் நிர்மாணிக்கப்பட்டன. தளபதி உக்பா பஸராவிலும் தளபதி ஸ.்.த் இப்னு அபீ வக்காஸ் கூபாவிலும் தளபதி அம்ர் இப்னு ஆஸ் புஸ்தாத்திலும் மஸ்ஜித்களை அமைத்தனர். கட்டிடத்திற்குத் தேவையான உறுப்புக்கள் வேறு கட்டிடங்களிலிருந்து பெறப் பட்டதனால் பிரதேச சிற்ப முறைகள் முஸ்லிம்களின் கட்டிடங்களிலும் பிரதிபலிக்க ஆரம்பித்தன. இதே போல் முஸ்லிமல்லாதவர்களின் கட்டிடங்கள் விலை கொடுத்து வாங்கப்பட்டு அவை மஸ்ஜித்களாக மாற்றப்பட்டதனால் பிறசமயத்தாரின் கலை அம்சங்களும் அதில் நுழைந்தன.

- இஸ்லாமிய கட்டிடக் கலை பல்வேறு செல்வாக்கின் கீழ் தோற்றம் பெற்ற போதிலும் ஏனைய நாகரிகங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் வகையில் தனக்கேயுரிய சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளது. இச்சிறப்பியல்புகள் இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாட்டைப் பிரதிபலித்து வளர்ச்சியுற்றது. கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்ட பிரதேசங்களின் தேசிய மரபை அடியொட்டி இஸ்லாமிய கருத்துக்களால் அவை புனர்நிர்மாணம் செய்யப்பட்டிருந்தன. இத்தகைய மாற்றங்களை மஸ்ஜித் கட்டடக்கலையில் சிறப்பாகக் கண்டுகொள்ள முடியும். மஸ்ஜித் கட்டிடக்கலைக் கூறுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

| | | |
|---|---|---|
| மிம்பர் | மிஹ்ராப் | மினாரா |
| குப்பா | மாடவில் | ஹவ்ழ் |

**பிரதேசங்களைத் தழுவிய கட்டிடக்கலை வளர்ச்சி**

**எகிப்திய, சிரிய, ஆபிரிக்க கட்டிடக்கலை**

- முஸ்லிம்கள் ஆபிரிக்க பிரதேசங்களை வெற்றி கொண்ட பின் தமது சமய, நிர்வாக தேவைகளுக்காக அங்கு கட்டிடங்களை நிர்மாணித்தனர். நபித்தோழர் அம்ர் இப்னு ஆஸ் (ரழி) அவர்கள் கி.பி.640 இல் எகிப்தை கைப்பற்றிய போது அங்கு இஸ்லாமிய கட்டிடக்கலை வளர்ச்சியடைய ஆரம்பித்தது. தற்போது கைரோ நகர் அமைந்துள்ள இடத்தில் ஒரு மஸ்ஜிதை நிறுவினார். கி.பி. 634 இல் இம்மஸ்ஜித் நிர்மாணிக்கப்பட்டது. அரை வட்ட, குதிரைலாட, கூரான மாடவில்களை இம்மஸ்ஜித் கொண்டிருந்தது. இப்பிரதேச கட்டிடக் கலை பிரதிபலிப்பாக பின்வரும் கட்டிடங்கள் காணப்படுகின்றன.

  - கி. பி 685 -691 – குப்பததுஸ் ஸ.்ரா

    கி.பி. 879 - அஹமத் தூலூன் மஸ்ஜித்

    கி.பி. 670 - உக்பா பின் நாபி.். நிறுவிய ஹைரவான் மஸ்ஜித்

-    இமாம் ஷாபியின் கல்லறை மண்டபம்

**ஸ்பெய்ன் கட்டிடக் கலை**

- முஸ்லிம்கள் கி.பி. 711 இல் ஸ்பெய்னைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து சிரியாவைச் சேர்ந்த அரேபியர் அங்கு குடியேறினர். அவர்கள் தமக்குரிய வீடுகளையும் மஸ்ஜித்களையும் அமைத்துக் கொண்டனர். முதலாம் அப்துர் ரஹ்மான் கி.பி. 756இல் தனது ஆட்சியை ஆரம்பித்தது முதல் கி.பி. 1492ல் கிரனடாவில் நஸ்ரைட் ஆட்சி வீழ்ச்சி அடையும் வரையிலான ஸ்பெயின் காலம் கட்டிடக் கலையின் குறிப்பிடத்தக்க காலமாக காணப்படுகிறது. அரேபிய, ஸ்பானிய கட்டிடக்கலையைத் தழுவிய மூரிஷ்'' கட்டிடக் கலை அங்கு வளர்ச்சியடைந்தது. ஸ்பெயின் கட்டிடக் கலையில் பின்வரும் கட்டிடங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

- மஸ்ஜிதுன் குர்துபா :- 2ம் அப்துர் ரஹ்மானால் ஆரம்பிக்கப்பட்டு 2ம் ஹிஷாமினால் பூரணப்படுத்தப்பட்டது.

- முன்னியத் அல் ருஸாபா : 1ம் அப்துர் ரஹ்மான்.

- அல்ஹம்ரா மாளிகை : 1248இல் அஹ்மர் என்பவர் இம்மாளிகையை நிர்மாணித்தார். இம்மாளிகை 1314இல் பூரணப்படுத்தப்பட்டது.

- அல்ஹம்ரா மாளிகை மேற்கின் தாஜ்மஹால் என வர்ணிக்கப்படுகிறது. கிரானடாவில் கவர்ச்சிமிகு மலைச்சாரலொன்றில் பாய்ந்தோடும் அருவியொன்றிற்கருகில் இயற்கை வனப்புடன் இயைந்ததாக இது நிர்மாணிக்கப்பட்டுள்ளது. பல்வேறு கூறுகளைக் கொண்டதாகவும் இது காணப்படுகிறது.

**மத்திய ஆசிய, பாரசீக, துருக்கிய, இந்தியக் கட்டிடக்கலை :**

- பாரசீகத்தில் தோன்றிய சிற்றரசுகள் தமக்குமத்தியில் போரிட்டுக் கொண்டிருந்ததனால் அங்கு வாழ்ந்த பல்வேறு துறைக் கலைஞர்கள் சின்னாசியா, துருக்கி, இந்தியா போன்ற பல்வேறு பிரதேசங்களில் குடியேறி வாழ்ந்தனர். இதனால் இப்பிரதேசங்களைத்

தழுவி கட்டிடக்கலை வளர்ச்சியடைந்தது. பாரசீக கட்டிடங்களுள் பின்வரும் கட்டிடங்கள் முக்கியமானவை.

- இஸ்பஹான் மஸ்ஜித் - கி.பி. 760 இல் செல்ஜுக்கிய ஆட்சியில் நிர்மாணிக்கப்பட்டது.
- சீராஸ் மஸ்ஜித் - கி.பி 875 இல் நிர்மாணிக்கப்பட்டது.
- பாரசிக மஸ்ஜித்களில் ஈவான்கள் விராந்தைகள் குமிழ்வடிவ கும்மட்டங்கள் சுவர்களில் கண்ணாடி பதித்தல் அரபஸ்கியூ அலங்காரங்கள் சிறப்பிடம் வகித்தன.

கி.பி. 762 இல் பக்தாதில் கலீபா மன்ஸுர் வட்டவடிவிலான நகர் ஒன்றை நிர்மாணித்தார். இதைத் தொடர்ந்து மஸ்ஜித்களும், மாளிகைகளும் அமைக்கப்பட்டன. இமாம் அபூ ஹனீபா, அப்துர் காதர் ஜீலானி, இமாம் அபூ யூஸுப், இமாம் ஹுஸைன் ஆகியோரின் கல்லறைகளும் கலைத்திறன் மிக்கதாகக் காணப்பட்டன. ஸபவியர் காலத்தில், ஈரானில் கட்டடக்கலை மிகை வளர்ச்சி கண்டது.

- மத்திய ஆசியாவில் சமனைட் ஆட்சியைத் தோற்றுவித்த சுல்தான் இஸ்மாயில் (கி.பி. 892-907) குப்பாவுடன் கூடிய ஒரு சமாதியை நிறுவியுள்ளார். செங்கற்களால் இதன் அலங்கார வேலைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. பர்ஹானா நகருக்கு கிழக்கே உஸ்கண்ட் எனுமிடத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மூன்று சமாதிகளும் கலை வடிவம் கொண்டவை. இவற்றில் அமைக்கப்பட்டுள்ள மினாராக்கள் உயரம் செல்லச் செல்ல சிறிதாகிச் செல்லும் உருளை வடிவமானது.
- துருக்கியில் கி.பி. 11ம் நூற்றாண்டில் செல்ஜுக்கியர் காலப் பகுதியில் இஸ்லாமிய கட்டிடக் கலை மரபுகள் அறிமுகமாகின. பள்ளி வாசல்கள், சமாதிகள், மாளிகைகள், கோட்டைகள்,மருந்துவமனைகள், நினைவு மண்டபங்கள், குளியலறைகள் என்பன கலைத்திறன் மிக்கதாக நிர்மாணிக்கப்பட்டன. மஸ்ஜித்களின் ''உலூகமி மஸ்ஜித்'', ''அலாவுதீன் மஸ்ஜித்'' என்பனவும் மத்ரஸாக்களில் ''மத்ரஸா அஷ்ஷிஹாம்'' கல்லூரிகளில் ''ஸர் செல்லி'' கல்லூரியும் முக்கியமானவை. துருக்கியர் தமது கட்டிடங்களை ஏனைய இஸ்லாமிய நாடுகளின் கட்டிடக்கலைப் பண்புகளையும் சேர்த்து நிர்மாணித்தனர்.
- இஸ்லாமிய கட்டிடக்கலை அம்சங்களில் இந்திய கட்டிடக் கலை அம்சங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இந்தியாவில் முஸ்லிம்களின் ஆரம்ப கட்டிடங்கள் அழிவுகளுக்குட்பட்டன. இன்று இந்தியாவில் காணப்படும் மிகப் பழைய கட்டிடம் குதூபுத்தீன் ஐபக் என்பவர் நிர்மாணித்த ''குவ்வதுல் இஸ்லாம்'' பள்ளிவாசலாகும். அதன் மேற்கு புறத்தில் ''ஈவான்'' மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இப்பள்ளிவாசலுக்கு அருகாமையில் ''குதுப் மினார்'' எனும் கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. இது 288 அடி உயரமானது. மேலே செல்லச் செல்ல அளவிலும் அமைப்பிலும் சிறிதாகிச் செல்கிறது. உலகில் உள்ள அழகிய கட்டிடங்களில் ஒன்றாக இன்னும் இது காட்சி தருகின்றது.
- மங்கோலியர் பக்தாதைக் கைப்பற்றிய போது பாரசிக அறிஞர்கள் கலைஞர்கள், அறிஞர்கள், தொழிநுட்பவியலாளர்கள் இந்தியாவிலும் குடியேறியதன் மூலம் இந்தியாவில் கட்டிடக்கலை வளர்ச்சியடைந்தது. துக்லக் ஆட்சியில் கோட்டைகள், மாளிகைகள் சமாதிகள் அமைக்கப்பட்டன. பைரூஸ் ஷாஹ் 10,000 பேர் தொழக்கூடிய விசாலமான மஸ்ஜிதை அமைத்தார்.

- இந்தியக் கட்டிடக் கலையில் மொகலாயர் காலம் முக்கியத்துவம் பெறுகின்றது. ஒவ்வொரு ஆட்சியாளரும் மஸ்ஜித்களையும், மாளிகைகளையும், கல்லூரிகளையும், நினைவுச் சின்னங்களையும் அமைத்தனர். மன்னன் அக்பர் கட்டிடக்கலையை கலைநுட்பங்களோடு வளர்த்துள்ளார். ஆக்ராவிலிருந்து 26 மைல் தொலைவில் ‘‘பத்புர் சிக்ரி’’ நகரத்தை அமைத்தார். தனது தந்தை ஹுமாயூன் என்பவருக்கு அமைத்த சமாதி சலவைக்கல் அலங்காரத்தைப் பெற்றிருந்தது.

- மொகலாயரின் கட்டிடக்கலை வரலாற்றில் ஷாஜஹானின் காலம் மிகவும் வளர்ச்சியுற்றது. இவர் கட்டிய மஸ்ஜித்களில் ‘‘மோட்டி மஸ்ஜித்’’ ‘‘நகீனா மஸ்ஜித்’’ புகழ் மிக்கவை. டில்லி ‘‘ஜாமியா மஸ்ஜித்’’ மிகவும் கலை நுட்பத்துடன் கட்டப்பட்டது. மாளிகைகளில் ‘‘தாஜ் மஹால்’’ ‘கலஸ் மஹால்’ என்பனவும் முக்கியமானவை. ஷாஜஹானின் கட்டிடங்களுள் அவருக்கு மாத்திரமின்றி இந்தியாவிற்கே புகழைத் தேடிக் கொடுத்ததாக தாஜ்மஹால் காணப்படுகிறது. தனது மனைவி மும்தாஜ் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்டது. 22 வருடங்கள் 20000 பணியாட்கள் மூலம் இதன் பணிகள் பூர்த்தியாக்கப்பட்டன. இன்றும் உலக அதிசியங்களில் ஒன்றாக இது கணிக்கப்படுகிறது. செங்கோட்டை இவரது கட்டிடக் கலையில் முக்கியத்துவம் பெறுகிறது.

**இசைக் கலை**

- இசை என்பது மனிதனுக்கு மிகவும் நெருக்கமான ஒன்றாகும். இஸ்லாமிய நாகரிக வரலாற்றில் ஏனைய கலைகளைப் போன்று இசைக் கலையும் வளர்ச்சி பெற்றது. நபிகளாரினதும் ஸஹாபக்களினதும் காலத்தில் இசைக் கலை பெரிதும் வளர்ச்சியடையாவிட்டாலும் உமையா அப்பாஸிய காலங்களிலும் சிற்றரசுகளின் காலங்களிலும் இக்கலை வளர்ச்சியடைந்துள்ளது.

- இஸ்லாமிய அறிஞர்கள் மத்தியில் இசை பற்றி வித்தியாசமான கருத்துக்கள் நிலவுகின்றன. சிலர் முற்றாக மறுக்கப்பட்டுள்ளது என்னும் கருத்தினையும் மற்றும் சிலர் சில வரையறைகளுடன் அனுமதிக்கப்பட்டுள்ளது என்ற நிலைப்பாட்டையும் கொண்டுள்ளனர்.

- ‘‘கவிஞர்களை வழிகேடர்கள் பின்பற்றுகின்றனர்’’ (2:224) எனும் அல்குர்ஆன் வசனத்தையும், நபி (ஸல்) அவர்கள் ஹதீஸ்களான ‘‘இசைக் கருவிகள் ஷைத்தானின் கருவிகள்’’ ‘‘இசைக் கருவிகள் உடைத்தெறிவதற்கே நான் அனுப்பப்பட்டேன்’’ போன்ற ஹதீஸ்களையும் இசை கூடாது என்பதற்கு ஆதாரமாகக் கொள்கின்றனர்.

- வரையறைகளுடன் அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதற்கு ஆதாரமாக ‘நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்ற போது மதீனத்து பெண்கள் சிலர் ‘‘தலஅல் பத்ரு அலைனா’’ பாடி வரவேற்றதையும்,

- குரல் நயத்திற்காக பிலால் (ரழி) அவர்களை அதான் கூற நியமித்ததையும்

- ஒவ்வொன்றுக்கும் ஓர் ஆபரணம் உண்டு. அல்குர்ஆனின் ஆபரணம் அழகிய குரலாகும்.

- ‘பனாத் ஸுஆத்’ எனும் பாடலைப் பாடிய கவிஞர் சுஹைலை, நபி (ஸல்) அவர்கள் தனது மேனிப் போர்வையைப் போர்த்தி வரவேற்றல் போன்ற விடயங்களைத் தமது கருத்துக்கு ஆதாரமாக முன்வைக்கின்றனர்.

இமாம்களான ஷாபிஈ (ரஹ்), அபூஹனீபா (ரஹ்) போன்றோர் இசை ஆகுமானதல்ல எனக்கூற இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் சில வரையறைகளுடன் அங்கீகரிக்கின்றார். இசை பற்றி இமாம் கஸ்ஸாலி(ரஹ்) அவர்கள் ''அஸ்ஸிமா'' எனும் பெயரில் ஒரு தனி நூலை எழுதியுள்ளார்.

- பெருநாள் தினங்கள், மங்கள வைபவங்கள் போன்ற முக்கிய நிகழ்வுகளில் குறித்த சில இசைக்கருவிகளோடு இருப்பது அங்கீகரிக்கப்படுகிறது.

- விரசமற்ற ஆபாசமில்லாத இஸ்லாமிய உணர்வுகளுக்கு மாறுபடாத, எளிமையான, இஸ்லாமிய வணக்க வழிபாடுகளுக்கு இடைஞ்சலாக அமையாத இசை சில வரையறைகளோடு அனுமதிக்கப்படுகிறது என்பது அதிகமான அறிஞர்களின் கருத்தாகும்.

- இசை அடிப்படையில் ஹராமாகும். விதி விலக்கான சில சந்தர்ப்பங்களில் அனுமதிக்கப்பட்டுள்ளது என்கின்றனர் சில நவீன கால அறிஞர்கள்.

- இஸ்லாத்தின் தோற்றத்திற்கு முன்னரே அரேபியாவில் இசை அறிமுகமாகி இருந்தது. மந்தை மேய்க்கச் செல்லும் நாடோடி அரபிகள் மந்தைகளை மேய்க்கும் போதே பாடல்களைப் பாடி மகிழ்ச்சியடைந்தனர். நகர்ப்புற அரபிகளும் மக்காவில் ஒன்றுகூடும் இடங்களில் இசையுடன் பாட்டுப்பாடி மகிழ்ந்தனர். இஸ்லாத்திற்கு முன்பு மக்கா நகரில் மதுவும் மாதுவும், இசையும், நடனமும் ஒருங்கே கிடைத்தன. ஆண்களுக்காகப் பாட்டுப்பாடி இசை வழங்கி நடனமாடும் பெண்கள் காம உணர்ச்சியையும் சேர்த்து வழங்கினர். இவ்வாறு இசை இழிவான நிலையில் இருந்ததால் நன்மக்கள் அதனை வெறுத்த போதிலும், அதனை ஆதரிக்கும் கூட்டமும் கணிசமாக இருக்கவே செய்தனர்.

- அபீஸீனியா, எகிப்து, உரோம, பாரசிக பகுதியிலிருந்து பாடகர்களும் நாட்டிய நங்கைகளும் மக்காவுக்கு வருகை தந்தனர். பெருநாள் தினங்களிலும் திருமண வைபவங்களிலும் இசைப் பாடல்கள் என்பன முக்கியத்துவம் பெற்றன. இசைக் கச்சேரிகளும் நடத்தப்பட்டன. ஜாஹிலிய்யா கால இசைஅமைப்பு ஒழுக்க வீழ்ச்சிக்கும், பாவத்திற்கும் இட்டுச் செல்லக் கூடியதாக இருந்ததனால் இஸ்லாம் அதனை வெறுத்தது. இதனால் தான் ''கவிஞர்களைப் பின்பற்றுபவர்கள் வழி கேடர்கள்'' (26:224) என அல்குர்ஆன் குறிப்பிட்டது. நபி (ஸல்) அவர்களின் காலத்திலும், ஸஹாபாக்களின் காலத்திலும் அல்குர்ஆன், ஸுன்னாவின் வாழ்வுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதனால் இசையில் முஸ்லிம்கள் ஆர்வம் காட்டவில்லை. இருப்பினும் பின்வந்த உமையா, அப்பாஸிய காலங்களில் ஏற்பட்ட ஏனைய நாகரிகங்களுடனான தொடர்பினாலும், ஆட்சியாளர்களினதும் பொது மக்களினதும் ஆடம்பர மோகத்தினாலும் இசைக்கலை முஸ்லிம்கள் மத்தியில் செல்வாக்குப் பெறத் தொடங்கியது.

- உமையாக்கள் ஆட்சியின் போது இஸ்லாமிய கிலாபத்தின் எளிமையான பண்புகள் படிப்படியாக நலிவடைய ஆரம்பித்தது. சில உமையா ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் உயர்தர வகுப்பினரும் ஆடம்பர சுகபோக வாழ்வில் நாட்டம் கொள்ள ஆரம்பித்தனர். உரோமர்களினதும் பாரசீகர்களினதும் கட்டுப்பாட்டில் இருந்து பல பிரதேசங்கள் இவர்களின் கட்டுப்பாட்டில் வந்ததனால் அவர்களைத் தழுவி ஆட்சியாளர்கள், பொதுமக்கள் பலரும் இசைப் பிரியர்களாக மாறிவிட்டனர். வசதி படைத்தவர்கள் பாடகிகளை விலை கொடுத்து வாங்கி தத்தமது வீடுகளில் வைத்துக்

கொண்டனர். இதன் விளைவாக உமையாக்களிடம் இசைக்கலை செல்வாக்குப் பெறலாயிற்று. உமையா கலீபா இரண்டாம் யஸீத் இரு இளம் பாடகிகளை வைத்திருந்தார். ஸலாமா, ஹபாலா (ஸுல்லாமா, ஹுப்பா) எனும் இவ்விரு பாடகிகளும் கலீபாவிடம் மிகுந்த செல்வாக்கைப் பெற்றிருந்தார்கள்.

- உமையா அரசவையில் உரோம, பாரசீக இசைக் கலைஞர்கள் வாழ்ந்துள்ளனர். இவர்களுள் இப்னு முஹ்ரிஸ், இப்னு ஜுரைஜ், அல் கரீழ், மஃபத் ஆகிய நால்வரும் முக்கியமானவர்கள். உமையா கால பாடகிகளுள் மதீனாவைச் சேர்ந்த ஜமீலாவும், மக்காவில் வாழ்ந்த அஸாத் அல் மாஇலாவும் பிரபல்யம் பெற்றவர்கள்.

- அப்பாஸிய காலத்தில் இசைக்கலை மிக வேகமாக வளர்ச்சியடைந்தது. ஆட்சியாளர் வழங்கிய ஆதரவும், நூல் மொழி பெயர்ப்பும் பல்நாட்டு கலைஞர்கள் வரவேற்கப்பட்டமையும் இக்கலை வளர்ச்சியடைய காரணமாகியன. அரச சபையில் இசை கலைஞராக இருந்த யஹ்யா அல் மக்கி இசைக் கலை வளர்ச்சிக்கு பங்காற்றினார். ''கிதாபுல் அஃகானி'' எனும் நூலை இவர் எழுதினார். சுமார் 3000 பாடல்களை இந்நூல் கொண்டிருந்தது.

- இப்றாஹிம் அல் மௌசிலி புகழ்மிக்கவர். இவர் 900 பாடல்களை யாத்துள்ளார். இவர் பாடகிகளைப் பயிற்றுவிப்பதற்கான ஓர் இசைக் கல்லூரியையும் நிறுவியிருந்தார்.

- கலீபா ஹாரூனின் காலத்தில் புலைஹ் இப்னு அபில் அவ்ரா, இப்றாஹிம் மௌசுலி, இப்னு ஜாமில் ஆகிய மூவரும் இணைந்து கலீபாவை கண்ணியப்படுத்துவதற்காக 100 பாடல்களைத் தொகுத்து ''அல்மிஆ அஸ்ஸவ்துல் முஃழரா'' எனப் பெயரிட்டனர். அப்பாஸிய கலீபாக்களான மஃமூன், வாஸிக், முதவக்கில் போன்றவர்களும் இசை கலை வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தனர்.

- அப்பாஸியர் காலத்தில் கிரேக்க இசை நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டதுடன், முஸ்லிம் அறிஞர்கள் இசைக் கலைக் கோட்பாடுகளை விளக்கும் வகையில் சுயமாக நூல்களையும் எழுதினர். அத்துடன் இசைக் கல்லூரிகளை நிறுவியதுடன் பல இசைக் கருவிகளையும் அறிமுகம் செய்தனர்.

- முஸ்லிம் ஸ்பெய்னிலும் இசைக் கலை வளர்ச்சி கண்டது. இஸ்ஹாக் மௌசூவியின் மாணவர் ஸிர்பா என்பவர் கொர்டோவா சென்று அங்கு இசைக் கல்லூரி ஒன்றையும் அமைத்து மாணவர்களுக்குப் பயிற்சி வழங்கினார். ஸ்பெயின் ஆட்சியாளர் முஃ. தமித் இசையார்வம் மிக்க ஒரு கலைஞராக இருந்ததனால் அவரது ஆதரவினால் இசைக் கலை அங்கு வளர்ச்சி கண்டது.

- இசைக் கலை வளர்ச்சிக்கு இசைக் கலையில் ஈடுபட்டோர் மாத்திரமன்றி ஏனைய அறிவியற் துறைகளுக்குப் பங்களிப்புச் செலுத்தியவர்களும் பங்களிப்புச் செய்துள்ளனர். இசைக் கலைக்குப் பங்களிப்புச் செய்த அறிஞர்களுள் பின்வருவோர் முக்கியமானவர்கள்.

- யூனுஸ் அல் காதிப் - பாரசீகத்தை சேர்ந்த இவர் அறபுப் பாடல்களைத் தொகுத்த முதலாமவர்.

- அல் கலீல் - அரபு யாப்பு இலக்கணத்தை முதன் முதலில் ஒழுங்குபடுத்தியவர். இவர் ஓசை (ஸவ்த்) லயம் (சகாவு) பற்றியும் எழுதியுள்ளார்.

- அல் கிந்தி - தத்துவ அறிஞரான இவர் இசைக் கலை பற்றி 12 கட்டுரைகளை எழுதியுள்ளார். சங்கீதத்தின் அடிப்படை பற்றியும் இவர் குறிப்பிட்டுள்ளார்.
- இப்னு அப்து றப்பிஹி - இக்துல் பரீத் எனும் நூலை எழுதினார். இதில் இசைக் கலை வல்லுனர்களின் வரலாற்றைக் குறிப்பிட்டுள்ளார்.
- அல் யிராபி - இவரது நூல் கிதாப் அல் மூளிக்கா அல் கபீர். கிரேக்க எழுத்தாளர்கள் விட்டுள்ள குறைகளை இதில் சுட்டிக் காட்டியுள்ளனர்.
- அல் இஸ்பஹான் - கிதாப் 'அல் அகானி' இந்நூலின் பிறப்பு முதல் இறப்பு வரை மனித வாழ்வில் ஏற்படுகின்ற இன்பதுன்பங்களுக்கான கவிதை முறைகளைக் குறிப்பிட்டுள்ளார்.
- இமாம் கஸ்ஸாலி - பிரபல மெய்ஞ்ஞானியும், தத்துவ ஞானியுமான இவர், இசைக் கலை இஸ்லாத்திற்கு முரணானது என்று ஒதுக்கிவிட இருந்த வேளை, ஆன்மீக நலனுக்காக இசையைப் பயன்படுத்த முடிவது பற்றியும் இசை தரும் நலன்களை பற்றியும் விளக்கியுள்ளார். இசை பற்றி இவர் எழுதிய நூல்களுள் ''கிதாபுஸ் ஸமா'' எனும் நூல் முக்கியமானது.

**இசைக் கருவிகள்**

- உத் (UD) யாழை ஒத்த இசைக் கருவி. இது தான் அரபிகளிடம் ஆரம்பத்தில் அறிமுகமாகியிருந்தது. பின்னர் இது வளர்ச்சியடைந்து, பழைய கருவி 'உத் கதீம்' என்றும் பின்னர் வளர்ச்சியடைந்தது. 'உத் காபில்' என்றுமழைக்கப்பட்டது.
- மிஸ்மார் (mizmar) மூங்கிலினால் செய்யப்பட்டது. புல்லாங்குழலை ஒத்தது. 'ஸுனமி' என்பவர் கண்டுபித்த கருவி ஸினமி எனப்பட்டது. இதுவும் புல்லாங்குழலை ஒத்தது.
- தப் (Duff) - நபி (ஸல்) அவர்களின் காலத்திலும் இது பயன்படுத்தப்பட்டது. இது ரபானை ஒத்ததாகும்.
- தப்ல் (tabl) - இது தப்லை ஒத்ததாகும்.

**அறபு எழுத்தணிக் கலை**

- இஸ்லாமிய ஷரீஆவை அடியொட்டி வளர்ந்த கலைகளில் பிரதான இடத்தை அறபு எழுத்தணிக்கலை வகிக்கின்றது. அறபு எழுத்தணிக்கலை வடிவமாகவும் கவர்ச்சியாகவும், ஓவிய அம்சங்களோடு வடித்துக் காட்டுவதாகவும் அமைந்துள்ளது.
- அறபு எழுத்தணிக்கலை வளர்ச்சி காண்பதற்கு பல காரணங்கள் வழிவகுத்துள்ளன. இஸ்லாம் பல தெய்வக் கோட்பாட்டை தடை செய்துள்ளதனால் தௌஹீதுக்கு முரணான ஓவியம், சிற்பம் என்பவற்றை தடை செய்ததால் இவ்வாறான ஆர்வமுள்ள கலையுணர்ச்சியை வெளிப்படுத்தும் ஒரு கலையாக அறபு எழுத்தணிக்கலை வளர்ச்சியுற்றது.
- இஸ்லாத்தின் தோற்றத்திற்கு முன்னே அறபு எழுத்துக்கள் ''லகமைட்ஸ்'' ஆட்சியில் ஹிராவில் அன்பார் எனும் இடத்தில் அறிமுகமாகி இருந்தது. இதனை 'முராமிர்' என்பவர் அறிமுகப்படுத்தினார் எனக்கூறுவர். இவ்வெழுத்துக்களை

குறைஷித்தலைவர்களில் ஒருவரான ஹர்ப் இப்னு உமையா என்பவர் மக்காவில் அறிமுகம் செய்ததாக இப்னு கல்தூன் குறிப்பிடுகிறார்.

- இஸ்லாத்தின் தோற்றத்திற்கு முன்பு அரேபியாவில் இக்கலை பெரிய அளவில் வளர்ச்சி அடைந்து இருக்கவில்லை. இதன் காரணமாகவே அன்றைய சமூகத்தை ''உம்மிய்யூன்'' எழுத வாசிக்கத் தெரியாதவர்கள் என அழைத்தது. இருப்பினும் இஸ்லாத்தின் வளர்ச்சியின் பின் அறபு எழுத்தணிக்கலை படிப்படியாக வளர்ச்சியடைய ஆரம்பித்தது. இவ்வாறான வளர்ச்சி அடைவதற்கு பல காரணங்கள் வழிவகுத்தன.

- அல்குர்ஆன், அஸ்ஸுன்னாவில் தூண்டுதல். ''நூன் - எழுது கோலின் மீதும் அதனைக் கொண்டு அவர்கள் எழுதியவற்றின் மீது சத்தியமாக'' (68:1)

  ''வாசிப்பீராக! எழுதுகோலைக் கொண்டு கற்பித்த உமது இறைவன் கண்ணியமானவன்'' (96:3,4)

  '' அழகிய எழுத்துக்களில் எழுதுங்கள். அது உங்களுக்குப் பரகத்தைத் தரும்'' (அல் ஹதீஸ்)

  '' நல்ல எழுத்தை முயன்று அடைந்து கொள்வது உங்கள் கடமையாகும். ஏனெனில் இதுவே உங்களது சீவனோபாயத்தின் திறவுகோலாகும்'' (அல் ஹதீஸ்)

- அல்குர்ஆன் வசனங்களை அழகாக எழுதுவதை ஒரு பரகத்துக்குரிய தொழிலாகக் கருதி சிலர் அல்குர்ஆன் வசனங்களை அழகாக எழுத முயற்சித்தமை

- நபி (ஸல்) அவர்கள் குத்தாபுல் வஹிகளை நியமிக்கும் போது அழகான எழுத்தில் எழுதக் கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டமை.

- இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்னர் சிற்பம், சிலை வடித்தல் போன்றவற்றைத் தொழிலாகக் கொண்டிருந்தவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதால் தமது பொருளாதார நடவடிக்கையை இழந்ததனால் அவர்களுக்கு மாற்றீடாக அரபு எழுத்தணிக்கலை அமைந்தமை.

- ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் வழங்கிய ஆதரவும், இஸ்லாமிய சாம்ராஜ்ய விரிவாக்கமும்.

- அறபு எழுத்துக்களின் இயல்பான போக்கு. அறபு எழுத்துக்கள் வளைத்து, நெழிந்து கொடுக்கும் தன்மையைக் கொண்டதாக காணப்படுவதால் அறபு எழுத்துக்கலை வளர்ச்சியடைவதற்கு ஏதுவாக அமைந்தமை.

**எழுத்தணி வளர்ச்சி**

- நபி (ஸல்) அவர்களினதும், குலபாஉர் ராஷிதீன்களினதும் காலத்தில் அறபு எழுத்துக்கள் அறிமுகமாகி இருந்தாலும் பெரியளவில் எழுத்து வடிவங்கள் வளர்ச்சியடைந்திருக்கவில்லை. அன்றைய அல்குர்ஆன் வசனங்களை எழுதுவதற்கு முதலில் அதிகமாக கூபி எழுத்து வடிவம்தான் பயன்படுத்தப்பட்டது. பின்னர் நஸ்கி முறையும் அறிமுகப்படுத்தப்பட்டது.

- உமையாக்கள் காலத்தில் அறபு மொழி அரச மொழியாக பிரகடனப்படுத்தப்பட்டதனால் அறபு அல்லதவர்களும் அறபு எழுத்தணிக் கலையில் ஆர்வம் செலுத்தினர். குறிப்பாக பாரசீகர்கள் இதில் ஆர்வம் காட்டினர்.

- உமையாக்கால கலைஞரான உத்துயா இப்னு உபைதுல்லாஹ் கூபி எழுத்தமைப்பில் நான்கு பாணிகளை அறிமுகம் செய்தார். காலித் இப்னு ஹஜ்ஜாஜ் எனும் கலைஞரும் இதன் முன்னேற்றத்துக்கு உழைத்தார். மஸ்ஜிதுன் நபவியின் தங்க எழுத்தில் அல்குர்ஆன் வசனங்களை இவர் பொறித்துள்ளார்.

- அப்பாஸிய காலத்தில் அறபெழுத்தணிக்கலை மிக வேகமாக வளர்ச்சி கண்டது. இக்கலையின் வளர்ச்சிக்கு 'இஸ்ஹாக் பின் ஹம்மாத்', அவர் சகோதரன் 'வஹ்ஹாப்' மற்றும் 'இப்றாஹிம்' போன்றவர்கள் பங்களிப்பு செலுத்தினர். இக்காலத்தில் புதிய எழுத்து வடிவங்கள் தோன்றின. 'அலி இப்னு உபைதா அர்றைஹானி' என்பவர் 'றைஹானி' எழுத்து வடிவத்தை அறிமுகம் செய்தார். 'அப்துல்லாஹ் அல் ஹஸன், இப்னு பவ்வாப்' போன்றோர் இக்காலத்தில் அறபெழுத்தணி வளர்ச்சிக்கு பங்காற்றினர்.

- அப்பாஸிய ஆட்சியைத் தொடர்ந்து தோன்றிய சிற்றரசுகளும் எழுத்தணிக்கலை வளர்ச்சிக்குப் பங்காற்றினர். துருக்கிய மன்னர்களால் சுல்தான் ஸாலிஹ், சுலைமான், முராத் ஆகியோர் இதன் வளர்ச்சிக்குப் பங்காற்றினர். சிரியா, ஈராக் கலைஞர்கள் வரவழைக்கப்பட்டு அவர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொண்டனர்.

- இந்தியாவில் முகலாய ஆட்சிகாலத்தில் எழுத்தணிக்கலை வளர்ச்சி கண்டது. மன்னர் பாபர், ''ஹத்து பாபூரி'' எனும் எழுத்து வடிவத்தை அறிமுகம் செய்தார். மன்னர் அக்பரின் காலத்தில் எட்டு வகையான எழுத்து வடிவங்கள் அறிமுகமாகியிருந்தன. மன்னர் அவ்ரன்கஸீப் சித்திர, சிற்பக்கலையை வெறுத்த போதிலும் அறபெழுத்துக் கலையினை ஆதரித்தார். அதன் வளர்ச்சிக்கு தன்னாலான பங்களிப்பை வழங்கினார். இவர் தனது சொந்தக் கரத்தினால் அல்குர்ஆனை பிரதிபண்ணி விற்றதாக வரலாறு கூறுகிறது.

- இவ்வாறான அறபு எழுத்தணிக்கலை காலத்திற்குக் காலம் பல கட்டங்களைத் தாண்டி வளர்ச்சி கண்டு இன்னும் முஸ்லிம்கள் மத்தியில் மிகவும் செல்வாக்குப் பெற்ற ஒரு துறையாகக் காணப்படுகிறது. முக்கிய கலைகலாசார போட்டி நிகழ்ச்சிகளில் ஓர் அங்கமாகவும் அறபு எழுத்தணிக்கலை காணப்படுகிறது.

**அறபு எழுத்தணி வகைகள் :**

1. கூபி

- அறபு எழுத்து வடிவங்களில் முதலில் தோன்றிய எழுத்து வடிவமாக இது காணப்படுகிறது. உயிர்க்குறிகளோ, ஒற்றை இரட்டைப் புள்ளிகளோ இல்லாத இவ்வெழுத்து வடிவம் வாசிப்பதற்கு சற்றுச் சிரமமானதாகும். இது எட்டு வகையான பிரிவுகளையுடையது. நேர்க்கோடுகள், கோணங்கள் என்பவற்றை கொண்டது. உமையா, அப்பாஸிய கால முஸ்ஹப்கள், மார்க்க நூல்கள் இவ்வெழுத்து வடிவிலேயே எழுதப்பட்டன.

2. நஸ்கு :

- இவை வட்ட எழுத்துக்கள். புள்ளிகளையும் உயிர்க்குறிகளையும் கொண்டவை. இலகுவாக வாசிக்க முடியுமானவை. கி.பி 7ம் நூற்றாண்டில் அப்துல்லாஹ் என்பவரால் இது அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வெழுத்து நடை மூன்றிலொரு பங்கு நேர்கோடுகளைக் கொண்டது. இவை தடிப்பற்ற எழுத்துக்கள். இவ்வெழுத்து நடை பரவலாக அதிகமானவர்களால் உபயோகிக்கப்படுகிறது. பிற்பட்ட கால முஸ்ஹப்கள், மார்க்க நூல்கள், நாணயங்கள் என்பவற்றில் பயன்படுத்தப்பட்டது.

3. அஸ்ஸுலுஸ்

- இவ்வெழுத்தமைப்பு உமையாக்கள் காலத்திலேயே அறிமுகமாகியது. இது தடித்த அமைப்பைக் கொண்டது. முக்கோண வடிவுடையது. இவ்வெழுத்து நடையில் மூன்றில் ஒரு பகுதி நேர் கோடுகளைக் கொண்டது. அலங்கார வேலைப்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டது. கட்டுரைகளுக்குத் தலைப்பு, உப தலைப்புகளுக்கு இவ்வெழுத்தமைப்பே பயன்படுத்தப்பட்டது.

4. அப்பாஸிய காலத்தில் துருக்கிய ஈரானிய செல்வாக்கின் காரணமாக பல எழுத்து வடிவங்கள் அறிமுகமாயின. இவ்வாறு அறிமுகமான எழுத்து வடிவங்களில் ஒன்றாக 'அர்ரைஹானி' முறை காணப்படுகிறது. இதனை கலீபா ம.்.மூனின் காலத்தில் அலி பின் உபைதா அர்ரைஹானி என்பவர் அறிமுகம் செய்தார். இது தடிப்பற்ற மெல்லிய எழுத்துக்கள். கட்டுரையின் உள்ளடக்கத்தை எழுத இவ்வெழுத்து நடையைக் கையாண்டனர்.

5. அல் முஹக்கிக் :

- இவ்வெழுத்து முறையை ஈரானைச் சேர்ந்த அபுல் ஹஸன் என்பவர் அறிமுகம் செய்தார். இவ்வெழுத்து நடையில் நான்கில் ஒரு பகுதி வளைகோடுகளையும் எஞ்சிய பகுதி நேர் கோடுகளையும் கொண்டது. இவை தடித்த அழகான எழுத்துக்கள். அரச ஆவணங்கள் இவ்வெழுத்து வடிவிலே எழுதப்பட்டன.

6. தவ்கி :

- வளை கோடுகளைக் கொண்ட தடித்த எழுத்து வடிவமே இதுவாகும். இவ்வெழுத்து நடையில் நான்கில் மூன்று பங்கு வளைகோடுகளைக் கொண்டவை. அரச நிருபங்களின் தலைப்புக்களை எழுத இம்முறையை பயன்படுத்தினர்.

7. அர்ரிகா :

- இவ்வெழுத்து நடையில் நான்கின் மூன்று பகுதி பங்கு வளைகோடுகளைக் கொண்டது. தவ்கி எழுத்துக்களை விட சிறியது. தடிப்பற்ற அழகான எழுத்துக்களாகும்.

8. நஸ்தலிக் :

- அலி பின் தப்ரீஸ் என்பவர் இதனை அறிமுகம் செய்தார். இம்முறை நஸ்கி எழுத்து முறையின் பண்புகளைக் கொண்டமைந்தது. அத்துடன் டெலிக் எழுத்து முறையையும் தழுவியதாக காணப்பட்டது.

9. தீவானி :

- உஸ்மானிய காலப்பிரிவில் இம்முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அரச கரும உபயோகத்திற்கு இது பயன்படுத்தப்பட்டது. உயர்ந்த பல வழிமுறைகளை இது கொண்டிருந்ததால் இலகுவாக வாசிப்பதற்குச் சற்றுக் கடினமானது.

10. மஃரிப் :

- ஸ்பெயினில் அறிமுகமான எழுத்து வடிவமாகும். கூபி எழுத்தை தழுவியதாக இது காணப்பட்டது.

  120 உப பிரிவுகளை கொண்டு எழுத்து வடிவங்கள் வளர்ச்சியடைந்தாலும் இன்றுவரை சில எழுத்து வடிவங்கள் மாத்திரமே எஞ்சியிருக்கின்றன. அவற்றுள் 'அல்கூபி, அந்நஸ்கி, அஸ்ஸுலுஸ், அர்ரிகா, அத்தீவானி, அல் பாரிஸி' ஆகிய 6 பரிவுகள் மாத்திரமே இன்றுவரை பாதுகாக்கப்பட்டுள்ளன.

- முரபபா - இது ஐரோப்பியரிடம் கிதாப் எனும் பெயரில் அறிமுகமாகியது.

**தேர்ச்சி 5.0 : இஸ்லாமிய நாகரிகத்தை வளர்ப்பதில் பங்காற்றிய கலைகளையும், ஐரோப்பிய மறுமலர்ச்சியில் இஸ்லாமிய நாகரிகம் ஏற்படுத்திய தாக்கத்தையும் விளக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 5.2 : இஸ்லாமிய நாகரீகத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகள் எவ்வாறு இருந்தன என்பதை விளக்குவார்**

**பாடவேளைகள் : 14**

**கற்றல் பேறுகள் :**

- முஸ்லிம்கள் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு ஏதுவாக அமைந்த காரணிகளை விளக்கிக் கூறுவார்.
- முஸ்லிம்களால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றி விளக்கிக் கூறுவார்.
- முஸ்லிம்களால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளைப் பட்டியற்படுத்துவார

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**நகர் நிர்மானம்**

- அறபு முஸ்லிம்கள் பல நகர்களை நிர்மாணித்துள்ளனர். அவர்கள் ஒரு நாட்டை வெற்றி கொண்டதும் ஆரம்பமாக தலைநகருக்கான ஒரு இடத்தைத் தெரிவு செய்வார்கள். அங்கு பள்ளிவாசல், நிர்வாகப் பணிமனைகள் போன்றவற்றுக்கான வரைபடத்தைத் தயாரித்துக் கொள்வார்கள். அவற்றைச் சூழ ஒவ்வொரு கோத்திரத்திற்கும் ஒரு பகுதியை ஒதுக்கி விடுவார்கள். அது அல் கதீஆ எனப்படும். ஒவ்வொரு கதீஆவிற்கும் மஸ்ஜித், சந்தை, வாழ்வதற்கான இருப்பிடங்கள் என்பவற்றை நிர்மாணிப்பர். அறபு முஸ்லிம்கள் நிர்மாணித்த நகர்கள் பல உண்டு. அவற்றுள்

1. பஸரா

ஸஃத் இப்னு அபீ வக்காஸ் (ரழி) அவர்கள் ஹைரா பிரதேசத்தை வெற்றி கொண்டதும் நிர்மாணித்த நகராக பஸரா காணப்படுகிறது.

2. கூபா

பஸராவிற்குப் பின்னர் கூபா ஹிஜ்ரி 17 இல் நகராக நிர்மாணம் பெற்றது. பஸராவிற்கும் கூபாவிற்கும் இடையில் ஹிஜ்ரி 83 இல் ஹஜ்ஜாஜ் இப்னு யூஸுப் இன்னொரு நகரை நிர்மாணித்தார்.

3. புஸ்தாத்

அம்ரிப்னு ஆஸ் (ரழி) அவர்கள் ஹிஜ்ரி 20 இல் எகிப்தை வெற்றி கொண்டதும் நிர்மாணித்த நகராகும்.

4. கைரவான்

அகபத் இப்னு நாபி∴ ஹிஜ்ரி 50 இல் இதனை நிர்மாணித்தார். நகரின் மத்தியில் ஜும்ஆ மஸ்ஜிதும், நிர்வாகப் பணிமனையும் தொடர்ந்து படையணியினர்களுக்கான வீடுகளும் அங்கு நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

4. குர்துபா

- உமையாக்களின் இஸ்பெய்ன் தலைநகரமாக குர்துபா காணப்பட்டது. அப்துர் ரஹ்மான் தாகில் பிரபல்யமான ஒரு மஸ்ஜிதை அங்கு நிர்மாணித்தார். மேலும் 28 இற்கும் அதிகமான மாளிகைகள் அங்கு நிர்மாணிக்கப்பட்டிருந்தன. அப்பிரதேசத்திற்குத் தேவையான நீர் சூழ இருந்த மலைகளில் இருந்து எடுத்துவரப்பட்டது. 300 இற்கும் அதிகமான குளியளறைகள் அங்கு நிர்மாணிக்கப்பட்டிருந்தன. அந்நகரில் அதிகரித்துக் காணப்பட்ட பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், நூலகங்கள் என்பவற்றின் காரணத்தினால் அது ஜவ்ஹரதுல் ஆலம் (உலகின் இரத்தினம்) என்று அழைக்கப்பட்டது. அந்நகரம் அதன் பிரமாண்டத்தால் பங்தாத் நகரை ஒத்திருந்தது. அதற்குப் பக்கத்திலே அப்துர் ரஹ்மான் நாஸிர் ஸஹ்ரா என்ற இராசதாணி நகரை ஹிஜ்ரி 325 இல் நிர்மாணித்தார்.

5. பக்தாத்

மதீனதுஸ் ஸலாம் என இது அழைக்கப்பட்டது. ஹிஜ்ரி 145 இல் அபூ ஜ∴பர் அல் மன்ஸூர் தைகிரீஸ் நதிக் கரையில் இதனை நிர்மாணித்தார். கிலாபத் நிர்வாக நகராக அது அமைந்திருந்தது.

6. கெய்ரோ

புஸ்தாதுக்குப் பக்கத்திலே ஜவ்ஹர் அஸ்ஸிகில்லி ஹிஜ்ரி 358 இல் இதனை நிர்மாணிக்க ஆரம்பித்தார். ஹிஜ்ரி 362 இல் பாதிமிகள் அங்கு சென்ற போது கலீபா முஇஸ்ஸிற்கு பிரமாண்டமான ஒரு மாளிகை அங்கு நிர்மாணிக்கப்பட்டது. ஜாமிஉல் அஸ்ஹரும் அங்கு நிர்மாணிக்கப்பட்டது.

- **கோட்டைகள்**

- அறபு முஸ்லிம்கள் நாடுகளை வெற்றி கொண்டதன் பின்னர் அங்கு கோட்டைகளை நிர்மாணித்தனர். குறிப்பாக ஷாம், ஈராக், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம். அங்கு சென்ற அவர்கள் ஆடம்பரமாக பகட்டு வாழ்க்கை வாழ ஆரம்பித்தனர். குலபாஉர் ராஷிதூன்கள் காலத்தில் ஹிஜாஸில் இரண்டு அல்லது மூன்று மாடிகள் கொண்ட மாளிகைகள் காணப்பட்டன. ஷாம் நாட்டில் முதலாவது கோட்டை நிர்மாணித்தவராக முஆவியா (ரழி) அவர்கள் காணப்படுகிறார். அவர் கட்டிய கோட்டை பசுமைக் கோட்டை என அழைக்கப்பட்டது. பின்னர் அது தாருல் இமாரா என அழைக்கப்பட்டது. உமையக் கால கலீபாக்கள் தொடர்ந்து அதனைப் பயன்படுத்தி வந்தனர். பாதிமிய்ய ஆட்சியின் இறுதிக் காலகட்டத்தில் அக்கோட்டை தீ மூட்டி எரிக்கப்பட்டது. கி.பி. 1749 இல் அக்கோட்டையின் ஒரு பகுதி புனர்நிர்மாணிக்கப்பட்டு இன்று வரை திமிஷ்கின் பாரம்பரிய நூதனசாலையாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.
- ஷாம் தேசத்தில் பல்கா பிரதேசத்தின் நிர்மாணிக்கப்பட்ட புராதன இஸ்லாமய இஸ்லாமிய சின்னங்களில் முக்கியமானது கஸ்ருல் முஷ்தாக் கோட்டையாகும்.

பல்வேறுபட்ட பளிங்குக் கற்களாலும் வேலைப்பாடுகள் செய்யப்பட்ட இக்கோட்டையில் மிருகங்களின், பறவைகளின் மற்றும் மனித உருவங்கள் அப்பளிங்குகளில் காணப்படுவது சிறப்பம்சமாகும்.

- கலீபா வலீத் இப்னு அப்துல் மலிக்கினால் ஜோர்தானில் நிர்மாணிக்கப்பட்ட குஸைர் ஹம்ரா என்ற கோட்டையின் சுவர்கள் தொல்பொருள் ஆய்வின் போது கி.பி 1898 இல் கண்டுபிடிக்கப்பட்டது. அவ்வாறே உமையாக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட கோட்டைகள் குத்ஸிலும் - பலஸ்தீனில் கண்டுபிடிக்கப்பட்டது. பொதுவாக உமையாக் காலக் கோட்டைகள் ஏறத்தாள ஒன்றை ஒன்று ஒத்த தோற்றத்திலேயே காணப்பட்டன. அவற்றைச் சூழ வேலிகள், உள்ளே பெரிய விராந்தைகளையும் கொண்டமைந்திருந்தன. பெரும்பாலும் அவை ஒன்று அல்லது இரண்டு மாடிகளைக் கொண்டமைந்தன. அக்கோட்டைகளைச் சூழ வெளியே காணப்பட்ட வேலிகளே அவற்றுக்குப் பாதுகாப்பு அரண்களாக இருந்தன. அவை அமைந்திருந்த பிரதேசம் பாதுகாப்பானதாகவும் சூழ வாழ்ந்தோர் உமையாக்களின் ஆதரவாளர்களாக இருந்தமையினால் பாரிய அளவு பாதுகாப்பு அரண்கள் அமைப்பதற்கு அவசியப்படவில்லை.

- அப்பாஸிய காலக் கோட்டைகளைப் பொறுத்தமட்டில் அவை மிகவும் பெரியவைகளாகவும் பல மாடிகளைக் கொண்டமைந்தனவாகவும் அமைந்தன. பெரிய தோட்டத்தின் நடுவே மர நிழல்கள் சூழ அவை அமைக்கப்பட்டிருந்தன. குப்பா அக்கோட்டைகளின் சிறப்பம்சமாகும். பக்தாதின் மத்தியிலே அபூ ஜ.ஃபர் அல் மன்ஸூர் கட்டிய கஸ்ருத் தகப் (தங்க மாளிகை) மற்றும் மேற்கு யூப்ரடீஸ் நதிக்கரையில் கட்டப்பட்ட கஸ்ருல் ஹுல்த் மற்றும் வாசிக், ஸாமிர்ரா நகரில் கட்டிய கஸ்ருல் ஹாரூனி கோட்டைகள் பிரபல்யமானவைகளாகும். ஸ்பெயினில் உமையாக்கள் நிர்மாணித்த கோட்டைகள் கிழக்கில் அப்பாஸிய கோட்டைகளைவிட எந்த வகையிலும் அழகிலும் கவர்ச்சியிலும் குறைந்தவைகள் அல்ல. ஸ்பெயினில் குர்துபா நகரம் பிரமாண்டக் கோட்டைகளுக்குப் பிரசித்தி பெற்றனவாயிருந்தது. நாஸிர் ஸ்பெயினில் தாருல் ரவ்ழா என்ற பிரமாண்டமான கோட்டையொன்றை நிர்மாணித்தார். அல் ஹம்ரா கோட்டை அழகுக்கும் கவர்ச்சிக்கும் உலகப் புகழ் பெற்றதாகும். அதன் பிரமாண்டமான வாசல்கள், கறுப்பு வாசல், நீதிகாண் வாசல் போன்றவைகள் அக்கோட்டையின் சிறப்பம்சமாகும்.

- பாதிமிக்கள் கெய்ரோவிலே அல் கஸ்ருஸ் ஷர்கியை நிர்மாணித்தனர். தனது தலைவர் அல் முஇஸ் லிதீனில்லாவை வரவேற்பதற்காக ஜ.ஃபருச் சிதில்லி அதனை நிர்மாணித்தார். ஈரானில் சபவிய்யீன்கள் நிர்மாணித்த கோட்டைகள் மிகவும் விசாலமானவைகளாக இருந்தன. அவற்றுள் கஸ்ர் ஸஹ்ல் ஸித்தூன், கஸ்ர் ஆனியா ஹானா குறிப்பிடத்தக்கவைகளாகும். பெரும்பாலான கோட்டைகள் மஸ்ஜித்கள் காணப்பட்டன. பல நிறங்கள் கொண்ட பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்ட குளியலறைகள் காணப்பட்டன.

**தேர்ச்சி 5.0 : இஸ்லாமிய நாகரிகத்தை வளர்ப்பதில் பங்காற்றிய கலைகளையும், ஐரோப்பிய மறுமலர்ச்சியில் இஸ்லாமிய நாகரிகம் ஏற்படுத்திய தாக்கத்தையும் விளக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 5.3 : இஸ்லாமிய நாகரீகத்தில் பல்வேறு சிந்தனைப் பிரிவுகள் தோன்றுவதற்கான காரணத்தையும் அவற்றின் சாதக பாதகங்களையும் ஒப்பு நோக்குவார்**

**பாடவேளைகள் : 14**

**கற்றல் பேறுகள் :**

- முஸ்லிம்களிடையே சிந்தனைப் பிரிவுகள் தோற்றம் பெறுவதற்கு வழிகோலிய காரணிகளை இனங்கண்டு விளக்கிக் கூறுவார்.
- முஸ்லிம்களிடையே தோற்றம்பெற்ற சிந்தனைப்பிரிவுகளின் தாக்கம் பற்றி விளக்கிக் கூறுவார்.
- முஸ்லிம்களில் தோன்றிய சிந்தனைப் பிரிவுகளிடையே காணப்பட்ட வேறுபாடுகளை இனங்கண்டு பட்டியற்படுத்துவார்.
- முஸ்லிம்களிடையே தோற்றம்பெற்ற சிந்தனைப்பிரிவுகளில் ஏற்பட்ட பிற கலாசாரங்களின் தாக்கங்களை வேறுபடுத்தி இனங்காண்பார்.
- அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ வழிமுறையை அறிந்து அதனை வாழ்வில் எடுத்து நடப்பார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

### மு.ஃ.தஸிலாக்கள்

- மு.ஃ.தஸிலா என்பதன் மொழிக்கருத்து பிரிந்து சென்றவர்கள் என்பதாகும். இஸ்லாமிய மரபில் "அகீதா சார்ந்த விடயங்களைப் பகுத்தறிவு ரீதியாக சிந்தித்ததனால் எழுந்த கருத்து வேறுபாடு காரணமாகப் பெரும்பான்மை முஸ்லிம் சமூகத்தை விட்டும் பிரிந்து சென்ற ஒரு தத்துவ இயக்கம" மு.ஃ.தஸிலா என அறியப்படுகிறது.

### தோற்றம்

- இமாம் ஹஸனுல் பஸரி(ரஹ்) பஸராப் பள்ளி வாசலில் இஸ்லாமிய வகுப்புக்களை நடாத்திக் கொணிடிருந்த போது அவர்களது மாணவர்களில் ஒருவனாயிருந்த வாஸில் பின் அதாவினாலேயே இவ்வியக்கம் உருவாக்கப்பட்டது. இமாம் அவர்களுடன் பெரும் பாவம் செய்தவனின் நிலைப்பாடு பற்றித் தர்க்கித்து முரண்பாடு கொண்ட வாஸில், அவன் குப்ருக்கும் ஈமானுக்கும் இடையில் இருக்கிறான் எனக்கூறி இமாம் அவர்களது சபையில் இருந்து விலகிச் சென்றான். அப்போது இமாமவர்கள் அவர் எங்களைப் பிரிந்து சென்றார் என்று கூறினார். இந்நிகழ்வைத் தொடர்ந்து இவர்கள் மு.ஃ.தஸிலாக்கள்(பிரிந்து சென்றவர்கள்) என வரலாற்றில் அடையாளப்படுத்தப் படுகின்றனர்.

- இமாமை விட்டுப் பிரிந்த வாஸில் பகுத்தறிவு ரீதியாகச் சிந்திக்கத் தொடங்கி தனது கருத்துக்குச் சார்பாக மாணவர்களைத் திரட்டிக் கொண்டார். அவர்களது செயற்பாட்டால் இவ்வியக்கம் மேலும் வளர்ச்சி பெற்றது.

- அல்குர்ஆன் படைக்கப்பட்டது என்பது இவர்களது பிரதான கொள்கைகளில் ஒன்றாகும். அல்லாஹ்வின் தாத் ஸிபாத் பற்றிய விடயத்திலும் இவர்கள் முரண்பட்ட சிந்தனையைக் கொண்டிருந்தனர். மனிதன் பூரண செயற் சுதந்திரம் மிக்கவன் எனப் பகுததறிவு ரீதியாக விளக்கினர். மறுமையில் அல்லாஹ்வைக் காண முடியாது எனவும் பெரும் பாவம் செய்தவர்கள் நிராகரிப்புக்கும் விசுவாசத்துக்கும் இடைப்பட்ட நிலையில் இருக்கின்றனர் என்றும் குறிப்பிடுகின்றனர்.

**மு.ஃ.தஸிலாக்களின் அகீதா**

- தொடக்கத்தில் பெரும் பாவம் செய்தவனின் விடயத்தில் முரண்பட்ட மு.ஃ. தஸிலாக்கள், பின்னர் வேறு பல விடயங்களிலும் முரண்பட்டனர். அதனால் அவர்களிடம் பல நம்பிக்கைகள் உருவாகின. அவற்றுள் ஐந்து அடிப்படைகள் மிக முக்கியமானவை. அவற்றைப் பொதுவாக அனைத்து மு.ஃ.தஸிலாக்களும் ஏற்றுக்கொள்கின்றனர். அவை வருமாறு.

1. **தவ்ஹீத்:** இவர்களிடத்தில் தவ்ஹீத் என்பது அல்லாஹ்வின் தாத்தும் ஸிபத்தும் ஒன்றே என்பதாகும். இவை இரண்டையும் பிரித்து தனியாக நோக்கினால் இறைவனின் ஒருமைத் தன்மை நீங்கி விடும் என்கின்றனர். இவர்கள் அல்லாஹ்வை எதிர்மறையிலேயே வர்ணிப்பார்கள். உதாரணமாக. அவன் நீளமானவனுமல்ல. அகலமானவனுமல்ல. நிறமுடையவனுமல்ல. சுவையுடையவனுமல்ல. மணமுடையவனுமல்ல. வெப்பமானவனுமல்ல. குளிரானவனுமல்ல....

2. **நீதி:** இதன் மூலம் இவர்கள் நாடுவது. மனிதர்களது செயற்பாடுகள் அனைத்தும் அவர்களாகவே செய்து கொள்வதுதான். அவர்களது எந்த செயற்பாட்டிலும் அல்லாஹ்வின் நாட்டத்திற்கு எந்தப்பங்கும் கிடையாது. அது நன்மையாயினும் சரி தீமையாயினும் சரியே. ஒருவனது தீயசெயற்பாட்டுக்கு அல்லாஹ்வின் நாட்டம் காரணமாக இருப்பின் அது நீதிக்கு முரணானது என்பது இவர்களது வாதமாகும்

3. **இரு நிலைகளுக்கு இடைப்பட்ட நிலை:** உலகில் பெரும் பாவம் செய்பவன் எவ்விதத்திலும் மு.ஃ.மின் என்று அழைக்கப்பட முடியாது. அவன் மு.ஃ.மினுக்கும் காபிருக்கும் இடைப்பட்ட நிலையில் இருப்பான். அவன் தவ்பா செய்தால் ஈமானின் பக்கம் மீள்வான். தவ்பாச் செய்யாத நிலையில் மரணித்தால் நரகில் நிரந்தரமாகத் தங்குவான்.

4. **வாக்குறுதியும் தண்டனையும்:** இதன் மூலம் இவர்கள் நம்புவது. மு.ஃ.மின் தவ்பா செய்தவனாகவும் கட்டுப்பட்டவனாகவும் உலகை விட்டுச் சென்றால் பிரதிபலன்களுக்கும் நன்மைகளுக்கும் உரித்துடையவனாவான். தான் செய்த பெரும் பாவத்துக்காக தவ்பா செய்யாத நிலையில் மரணித்தால் அவன் நரகில் நிரந்தரமாகாகத் தங்குவான். எனினும் அவனுக்குரிய தண்டனை காபிருக்குரிய தண்டனையை விடக் குறைவானதாக இருக்கும். மறுமையில் பாவிகளுக்குத் தண்டனை வழங்கப்படாமல் மன்னிப்பு வழங்கப்படும் என்ற கூற்றானது அல்லாஹ்வுடைய தண்டனையை அர்தமற்றதாக்கி விடுகிறது. இந்தக் கொள்கையின் காரணமாகவே மு.ஃ.தஸிலாக்கள் மறுமையில் ஷபாஅத் மூலமாகப் பாவிகள் பயன் பெறுவதை நிராகரிக்கின்றனர்.

5. **நன்மையை ஏவித் தீமையைத் தடுத்தல்:** நாவினாலோ கையினாலோ ஆயுதத்தினாலோ சக்தி பெறும் போது அதற்கேற்ப நன்மையை ஏவித் தீமையைத் தடுப்பது அனைவர் மீதினதும் கடமையானதாகும்

இவை அல்லாத இன்னும் பல நம்பிக்கைகளும் மு∴தஸிலாக்களிடம் காணப்படுகின்றன. அவற்றுள் சில அவர்களிடம் கருத்துவேறுபாடானவை. இன்னும் சில கருத்தொற்றுமையானவை. அவை வருமாறு

1. மறுமையில் எவருக்கும் அல்லாஹ்வைக் காண முடியாது
2. அல்குர்ஆன் படைக்கப்பட்டது
3. அல்லாஹ் அர்ஷில் அமர்ந்துள்ளான் என்பதை மறுத்தல்
4. பெரும் பாவம் செய்த எவருக்கும் நபியவர்களின் ஷபாஅத்தை பெறமுடியாது.
5. அவ்லியாக்களின் கராமத்தை மறுத்தல்

**மு∴தஸிலாக்களின் உட்பிரிவுகள்**

பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்ட மு∴தஸிலாக்கள் தமக்குள்ளும் கருத்து வேறுபாடுபட்டு ஈமான் சார்ந்த விடயங்களில் பல உட்பிரிவுகளாகப் பிரிந்தனர். அவற்றுள் சில

1. வாஸிலிய்யா
2. ஹுதைலிய்யா
3. நிலாமிய்யா
4. ஹாதிபிய்யா
5. பஷரிய்யா
6. முர்தாரிய்யா
7. ஸமாமிய்யா
8. ஹிஷாமிய்யா

- இது மட்டுமல்லாது முஸ்லிம் உம்மத்தில் ஜஹமிய்யா, கதரரிய்யா. ஜபரிய்யா. முஅத்திலா போன்ற பிரிவுகள் தோன்றுவதற்கும் மு∴தஸிலாக்கள் உருவாக்கிய பகுத்தறிவுவாத சிந்தனைப் போக்கே காரணமாக அமைந்தது. ஈமான் சார்ந்த விடயங்களில் பகுத்தறிவுக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் உண்மையைக் கண்டறிய முடியாது என்பதற்கு மேற்குறிப்பிட்ட பிரிவுகள் சிறந்த எடுத்துக்காட்டாகும்.
- அப்பாஸிய ஆட்சியாளரான ம∴மூனின் காலத்தில் மு∴தஸிலாக் கொள்கை அரச கொள்கையாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இக்கொள்கையை ஏற்காதோர் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டனர். இதனால் இக்கொள்கை அரச ஆதரவோடு வளரத் தொடங்கியது. பின்வந்த ஆட்சியாளர்கள் இக்கொள்கைக்கு ஆதரவு வழங்காமையினாலும் அறிஞர்களின் தெளிவான இஸ்லாமிய அகீதாப் பிரசாரத்தாலும் அது இல்லாதொழிந்தது. எனினும் அதன் சிந்தனைத் தாக்கம் இன்றும் சில முஸ்லிம் பகுத்தறிவாளர்ளிடையே செல்வாக்குச் செலுத்துவதை அவதானிக்க முடிகிறது.

### அஷ்அரிய்யா

- இஸ்லாமிய சமூகத்தில் தோன்றிய அஹ்லுஸ்ஸுன்னா அல்ஜமாஅத் சிந்தனைக்கு உட்பட்ட அகீதா ரீதியான இயக்கமாக அஷ்அரிய்யா இயக்கம் காணப்படுகிறது.
- இது மு.்.தஸிலாக்களின் தீவிர பகுத்தறிவாத சிந்தனையினால் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த பிழையான சிந்தனைகளை களைந்து மக்களைச் சரியான அகீதாவின் பக்கம் வழி நடாத்துவதற்காக இமாம் அபுல் ஹஸன் அஷ்அரி (ரஹ்) அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட இயக்கம்.
- மு.்.தஸிலாக்கள் பகுத்தறிவையும், தத்துவ ஞானத்தையும அடிப்படையாகக் கொண்டு இஸ்லாமிய அகீதாவைப் பிழையாக விளக்கிய போது அல்குர்ஆன், அல் ஹதீஸ் ஆதாரங்களின் அடிப்படையிலும் பகுத்தறிவு ரீதியாகவும், வாதங்களினூடாகவும் தகர்த்தெறிந்தவராக இமாம் அபுல் ஹஸன் அஷ்அரி (ரஹ்) அவர்கள் காணப்படுகிறார்கள்.

**தோற்றம் வளர்ச்சி :**

- ஹிஜ்ரி 260 பஸராவில் பிறந்த அபுல் ஹஸன் இப்னு இஸ்மாயீல் அல் அஷ்அரி என்பவரால் இவ்வியக்கம் தோற்றம் பெற்றது.
- இவரது தந்தை இஸ்மாயில் இறந்ததன் பின்னர் தாய் அபூ அலி ஜுபாஈ என்பவரை திருமணம் செய்து கொண்டார். இதனால் அல் ஜுபாஈயின் அரவணைப்பில் வளர்ந்தார். இதனால் ஆரம்பத்தில் இருந்தே மு.்.தஸிலா கொள்கைக்குச் சார்ப்பானவராக வளர்ந்து வந்தார்.
- அவர் அபூ மூஸா அஷ்அரி (ரழி) அவர்களின் பரம்பரையைச் சேர்ந்தவர்.
- அபூ இஸ்ஹாக் அல் முர்ஸி என்பவரிடமும் இவர் கற்றுக் கொண்டார்.
- ஆரம்பத்தில் மு.்.தஸிலாக்களுக்கு சார்பாக பல விவாதங்களில் ஈடுபட்டார். இதன் பின்னர் மு.்.தஸிலாக் கொள்கையைத் தனிமையில் இருந்து ஆழமாக ஆராய்ந்ததார் அதில் பல குறைகளைக் கண்டு மு.்.தஸிலாக்களுக்கு எதிரான தனது சிந்தனைகளை முன்வைத்தார்.
- அபுல் ஹஸன் தத்துவரீதியாகவும், பகுத்தறிவு ரீதியாகவும் அல்குர்ஆன், ஸுன்னாவின் ஆதாரங்களைக் கொண்டு தனது கருத்துக்களை முன்வைத்ததனால் இவரது கருத்துக்கள் மக்கள் மத்தியில் மிக வேகமாக செல்வாக்குப் பெற்று வளர்ச்சியுற்றன.
- இமாம் அபுல் ஹஸன் நடுநிலைச் சிந்தனையோடு அகீதா ரீதியாக ''அல் இபானா அன் உஸுலித் தியானா'' எனும் நூலை இமாம் அபூஹனீபாவின் வழிமுறையைப் பின்பற்றி எழுதி வெளியிட்டார்.
- இமாம் அபுல் ஹஸன் ஹி 324ல் மரணித்த போது ''நாஸிருஸ் ஸுன்னா'' என மக்கள் இவரைப் புகழ்ந்தனர்.
- அஷ்அரிய்யா சிந்தனையை முக்கியமான அறிஞர்கள் ஏற்றுக் கொண்டதனாலும் அதற்கு அரசியல் ஆதரவு கிடைக்கப் பெற்றதனாலும் அது மிக வேகமாக வளர்ச்சியுற்றது.

- இமாம் கஸ்ஸாலி, அல் பாகிலானி, ஹனபி, மாலிக், ஷாபிஈ மதுஹபை சேர்ந்த அறிஞர்கள் இக்கொள்கையை ஆதரித்தனர்.
- செல்ஜுக்கிய ஆட்சியாளர் நிழாமுல் முல்க், பத்தாத் நிழாமிய்யா பல்கலைக்கழகத்தில் இக்கொள்கையை போதிக்க ஏற்பாடு செய்தார்.
- பின்வந்த ஆட்சியாளர்களான நூருத்தீன் ஸன்கீ, ஸலாஹுத்தீன் அய்யூபி போன்றவர்களும் இக்கொள்கைக்குச் சார்பாக செயற்பட்டதனால் இக் கொள்கை வளர்ச்சியுற்றது. இன்றுவரை பல நாடுகளின் பின்பற்றப்படுவதோடு பல பல்கலைக்கழகங்களில் போதிக்கப்பட்டும் வருகின்றது.

**அஷ்அரிய்யாக்களின் பிரதான கோட்பாடுகள்**

1. அல்லாஹ் பிரபஞ்சத்தை ‘‘குன்’’ (ஆகுக) என்ற வார்த்தை மூலம் படைத்தான்.
2. நல்லடியார்கள் மறுமையில் அல்லாஹ்வை வெற்றுக் கண்களால் பார்ப்பார்கள்.
3. அல்லாஹ்வின் ஸாத்தும், ஸிபாத்தும் வெவ்வேறானவையாகும்.
4. அல்லாஹ்வுக்கு அறிவு, ஞானம், சக்தி போன்ற பண்புகள் உண்டு.
5. அல்லாஹ்வின் பேச்சு படைக்கப்பட்டதன்று. ஆகவே அல்குர்ஆன் படைக்கப்பட்டதன்று.
6. தௌஹீதை ஏற்றுக் கொண்டவர் முஸ்லிமாவார். அவர் பெரும்பாவம் செய்தால் பாவியாகக் கருதப்படுகிறார். அவர் பற்றிய முடிவு அல்லாஹ்விடமே உள்ளது.
7. அல்லாஹ்வின் உதவியின்றி மனிதனால் சுயமாகச் செயற்பட முடியாது.
8. சுவர்க்கமும், நரகமும் படைக்கப்பட்டுள்ளன.
9. மறுமையில் அல்லாஹ்வின் ஷபாஅத் உண்டு.
10. கப்ரில் முன்கர், நகீர் என்ற இரு மலக்குகளின் விசாரணை உண்டு.
11. நபி (ஸல்) அவர்கள் உடலுடன் மிஃராஜ் சென்றார்கள்.
12. பகுத்தறிவை விட வஹிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

**அகீதா ரீதியான பிரிவுகள் தோன்றியதால் ஏற்பட்ட விளைவுகள்.**

1. முஸ்லிம் சமூகத்தில் ஐக்கியம் சீர்குலைந்தமை.
2. அர்த்தமற்ற வாதப்பிரதிவாதங்கள் அதிகரித்தமை.
3. அகீதா கோட்பாடுகள் சர்ச்சைகள் நிறைந்த ஒரு துறையாக நோக்கப்பட்டமை.
4. பகுத்தறிவு வாத சிந்தனை செல்வாக்கிற்கு முஸ்லிம் சமூகம் உட்பட்டமை.
5. இஸ்லாமிய கிலாபத் வலுவிழந்து சென்றமை.

6. அர்த்தமற்ற வாதப்பிரதிவாதங்களில் நேரம், பணம், அறிவு, அதிகாரம் போன்றன துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை.

7. ஏகத்துவத்திற்கு முரணான கொள்கைகள் தோன்றியமை.

8. இஸ்லாமிய அகீதா என்ற தோரணையில் பிற சமூக, கலாசார கருத்துக்கள் முஸ்லிம்களிடையே செல்வாக்குப் பெற்றமை.

9. இஸ்லாம் பற்றிய தப்பபிப்பிராயங்கள் பிறரிடம் உருவாகியமை.

10. கலீபாக்களும், முக்கிய தலைவர்களும் படுகொலை செய்யப்பட்டமை.

**ஷீஆ**

- ஷீஆ என்ற சொல் மொழி ரீதியாக ''பிரிவு'' ''கூட்டம்'' என்றும் ''ஆதரவு அணி'' என்றும் பொருள் தருகிறது. இவ்வர்த்தத்தில் அல்குர்ஆனும் சில இடங்களில் இச் சொல்லை உபயோகித்துள்ளது. (உ-ம்) (28:15, 37:83)

- இஸ்லாமிய மரபில் ''அலி(ரழி) அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தவர் மீதும் அளவு கடந்த அன்பை வெளிப்படுத்துவதுடன் அவர்களுக்கே நபியவர்களின் பின் அரசியல், ஆன்மிக தலைமைத்துவம் வாரிசு அடிப்படையில் சென்றிருக்கவேண்டும் எனக்கூறி முந்திய மூன்று கலீபாக்கள் மீதும் அவர்களுக்கு ஆதரவான ஸஹாபாக்கள் மீதும் தப்பபிப்பிராயத்தைப் பரப்பும் ஒரு சிந்தனைப் பிரிவு ஷீஆ என்று அழைக்கப்படுகிறது.

- முஸ்லிம்கள் மத்தியில் தோன்றிய முரண்பட்ட சிந்தனைப் பிரிவுகளுள் ''ஷீஆ''என்ற பிரிவு நீண்ட வரலாற்றையும் ஒன்றுக் கொன்று முரணான பல உட்பிரிவுகளையும் உடைய சிறுபான்மை முஸ்லிம் அணியினராவர். கலீபா அலி (ரழி) அவர்களது காலத்தில் எழுந்த அரசியல் ரீதியான கருத்து முரண்பாடுகளின் பின்னணியில் தோன்றிய இப்பிரிவின் தோற்றம் குறித்து பெரும்பான்மை முஸ்லிம் அறிஞர்களிடையேயும் ஷீஆ அறிஞர்களிடையேயும் மாறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன.

**தோற்றம்**

- ஷீஆக்களின் தோற்றம் குறித்துக் கூறப்படும் கருத்துக்கள்

- ''எனது ஆன்மா எவன் கைவசம் இருக்கின்றதோ அவன் மீது சத்தியமாக இவரும் இவரைப் பின்பற்றும் பிரிவினருமே (ஷீஆ) மறுமையில் வெற்றி பெற்றோராவர்'' என நபியவர்கள் அலி (ரழி) யைப் பார்த்து கூறினார் என்று ஜாபிரிப்னு அப்துல்லாஹ் (ரழி) அவர்களின் பெயரில் ஷீயா சார்பு கிரந்தங்களில் ரிவாயத்து செய்யப்பட்டுள்ளது. ஹதீஸை ஆதாரமாக வைத்து நபியவர்களது வபாத்தைத் தொடர்ந்து அபூபக்ர் (ரழி) அவர்கள் கலீபாவாக தெரிவு செய்யப்பட்ட சமயத்தில், அலி (ரழி) தானே அதற்குத் தகுதிபெற்றவர் எனக் கருதியபோது சில ஸஹாபாக்கள் அவருக்கு ஆதரவளித்ததன் மூலம் இப்பிரிவு தோற்றம் பெற்று விட்டது என சீயாக்களில் பெரும்பாலானோர் கருதுகின்றனர்.

- கலீபா உஸ்மான்(ரழி) அவர்களது ஆட்சியின் இறுதிக் காலப்பகுதியில் அமைதியற்ற சூழ்நிலை உருவாகி பெரும் குழப்பங்களும் சர்ச்சைகளும் அதிகரித்தன. கலீபா உஸ்மான் (றழி) அவர்கள் கொலை செய்யப்படுமளவுக்கு மேசமடைந்தது.

  கலீபா உஸ்மான் (ரழி) அவர்கள் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த கலீபா அலி (ரழி) அவர்களிடம் அநீதியான முறையில் கொலை செய்யப்பட்ட கலீபா உஸ்மான் (றழி) அவர்களுக்காக பழி தீர்க்கப்பட வேண்டும் என ஒரு குழு கோரிக்கையை முன்வைத்தது.

  புதிய கலீபாவினால் உடனடியாக இந்தக் கோரிக்கையை நிறைவேற்ற முடியாமல் போனதால் ஏற்பட்ட முரண்பாடுகள் கலீபாவுக்கும் ஷாம் தேச கவர்னர் முஆவியா (ரழி) அவர்களுக்கும் இடையே இரு அணியையும் அந்த அணியையும் சாராத குழுவாக முஸ்லிம்கள் மூன்று அணிகளாகப் பிரிந்தனர். கலீபாவின் மூன்றாவது அணி ஷீஅது அலி என்றும் முஆவியாவின் அணி ஷீஅது முஆவியா என்றும் அழைக்கப்பட்டது. இதன் தொடராக அலி (ரழி) அவர்களது ஆதரவாளர் அணி தொடர்ந்தும் ஷீஆ என்ற பெயரில் அழைக்கப்படலாயிற்று.

- ஷீயா சிந்தனைப் பிரிவின் வளர்ச்சிக்கு மூன்றாம் கலீபா உஸ்மான் (ரழி) அவர்களது காலத்தில் நிலவிய அமைதியற்ற சூழ்நிலையை, சில தீய சக்திகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டனர். அப்துல்லாஹ் இப்னு ஸபா என்ற யூதன் முஸ்லிம் சமுதாயத்தின் ஒரு அங்கமாக இருந்து கொண்டே ஸஹாபாக்களுக்கு மத்தியில் குழப்பத்தை உண்டுபண்ணும் கைங்கரியத்தில் ஈடுபட்டான். ஸஹாபாக்களுக்கிடையே உஸ்மான் (ரழி) அவர்களுக்கு எதிராகவும் அலி (ரழி) அவர்களுக்கு ஆதரவாகவும் மக்களைத் தூண்டிவிட்டான். சமாதான முயற்சிகளைச் சீர்குலைப்பதற்கும் முஸ்லிம் சமுதாயத்தில் தொடர்ந்தும் பிளவுகளை ஏறபடுத்துவதற்கும் மிகத் தீவிரமாக முயற்சிகளை மேற்கொண்டான். இவன் அறிமுகப்படுத்திய கோட்பாடுகளாலும் இவனது பிரச்சார முயற்சியாலும் ஷீயாப் பிரிவு வளர்ச்சியுற்று தீவிர சக்தியாக மாறியதாக அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாத்தைச் சேர்ந்த பெரும்பாலானோர் கருதுகின்றனர்.

- உஸ்மான் (ரழி) அவர்களது ஆட்சிக் காலத்தில் ஷீஆ என்ற சொற்பிரயோகம் முதற்தடவையான குறிப்பிட்டதொரு அணியைக் குறிக்க பயன்படுத்தப்பட்டுள்ளது. உஸ்மான் (ரழி) அவர்களை விட அலி (ரழி) அவர்கள் கிலாபதுக்கு முற்படுத்தப்பட்டிருக்கு வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தவர்களே ஷீஆக்கள் என முதற்தடவையாக அடையாளப்படுத்தப்பட்டனர்.

- யஸீதுடைய காலத்தில் அலி (ரழி) அவர்களது மகன் ஹுஸைன் (ரழி) அவர்கள் ஈராக் மக்களின் அழைப்பை ஏற்று அங்கே செல்லும்போது கர்பலா என்ற இடத்தில் அரச படையினரால் மிகத் துக்ககரமான முறையில் கொலை செய்யப்பட்டார்கள். இதனால் ஆத்திரமடைந்த அவரது ஆதரவாளர்கள் ஹுஸைன் (ரழி) அவர்களுக்காக தம்உயிரையும் அர்ப்பணித்து உமையாக் கிலாபத்துக் கெதிராகப் போராட சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர். அன்றிலிருந்து ஷீஆ என்ற ஒரு பிரிவு முஸ்லிம்கள் மத்தியில் வலுப்பெற்றது எனலாம்.

- மேற்கூறப்பட்ட கருத்துக்கள் ஒவ்வொன்றையும் ஷீயாக்களின் உணர்வு பூர்வமான செயற்பாடுகளுடன் ஒப்புநோக்கிப் பார்க்கின்றபோது கர்பலாவுடன் தொடர்புபடுத்திக்

கூறப்படும் கருத்தே சரியானதாகத் தோன்றுகிறது. ஏனெனில் ஷீஆக்களின் உணர்வுபூர்வமான வெளிப்பாடுகள் அனைத்துக்கும் கர்பலா நிகழ்வே காரணமாக அமைந்துள்ளது.

**ஷீயா ஒரு கொள்கையாக வளர்ச்சிபெறல்**

- ஷீஆ இயக்கத்தின் இமாம்களில் ஒருவரான ஜ:ஃபர் ஸாதிக் (ரஹ்) (ஹி.80-148) மற்றும் ஷீஆ சிந்தனையாளரான ஹிஷாம் பின் ஹகம் (ஹி.190மரணம்) போன்றோர் ஷீஆக் கொள்கைகளை வகுத்ததில் முன்னணி வகித்தார்கள். நபி (ஸல்) அவர்கள் தமக்குப் பின்னர் முஸ்லிம் உம்மத்தின் தலைவராக அலி (ரழி) அவர்களை நியமித்து விட்டுச் சென்றார் என்ற கருத்தை முதன் முதலாக ஹி. 2 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஹிஷாம் பின் ஹகம் ஆவார். ஷீஆ சிந்தனையின் வரலாற்றில் அல்குர்அன், ஹதீஸின் மூலம் அலி (ரழி) அவர்களது தலைமைத்துவத்திற்கு ஆதாரங்கள் முன்வைக்கும் மரபு ஹிஷாம் பின் ஹகமுக்குப் பின்பே தோற்றம் பெற்றது. இவ்வாறு அல்குர்ஆன் வசனங்களுக்கூடாகவும் நபி (ஸல்) அவர்களது நபி மொழிக்கூடாகவும் அலி (ரழி) அவர்களது தலைமைத்துவத்திற்கு ஆதாரம் முன் வைக்கும் ஷீஆக் கொள்கை வரலாற்றில் அகீததுந் நஸ் வல் வஸிய்யா எனப்படுகிறது.

- இக்கொள்கையை முதன் முதலாக ஹிஷாம் பின் ஹகம் முன்வைக்க அவர்களோடு சமகாலத்தில் வாழ்ந்தவர்களும், பின்னால் வாழ்ந்தவர்களும் அதனைப் பிரசாரம் செய்தார்கள். இந்த வகையில் ஹத்தாத், அபூ ஸஈத் வராக், இப்னு ராவன்தி போன்றோர் இக்கொள்கையைப் பிரச்சாரம் செய்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

- இக்கொள்கை முன்வைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஷீயா(க் கட்சி) தனியான சிந்தனைப் பிரிவாக மாறியது. இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய ஏனைய சிந்தனைப் பிரிவுகளிலிருந்து ஷீயா இயக்கத்தை வேறுபடுத்தும் அடிப்படைக் கொள்கையாகவும் இது கருதப்படுகிறது. ஷீயது அலி - அலியின் கட்சியினர் என்ற அரசியல் நிலைப்பாடாக மாத்திரம் இருந்த நிலை மாறி ஷீயா என்பது ஒரு கொள்கையாக வளர்ச்சி கண்டது.

- எனினும், அஹ்லுல் பைத் எனப்படும் நபியவர்களது குடும்பத்தினரை நேசிப்பதன் மூலம் ஒருவர் ஷீயாக் கொள்கையைச் சார்ந்தவராக ஆகிவிட முடியாது. அலி(ரழி) அவர்களது தலைமைத்துவத்திற்கு ஆதாரமாக முன்வைக்கப்படும் இக்கொள்கையை நம்புபவரே ஷீஆக் கொள்கையின் அங்கத்தவனாக ஷீஆ சமூகத்தினால் கருதப்படுவர். இந்த வகையில்தான் அலி (ரழி) அவர்களின் ஆதரவாளர்களாகவோ அல்லது அவரது அணியைச் சார்ந்தவர்களாகவோ இருப்பவர்கள் ஷீஆக்களாக கருதப்படுவதில்லை.

- அலி (ரழி) அவர்கள் ஷீஆக் கொள்கையின் ஸ்தாபகரோ ஷீஆவோ அல்லர். மாறாக ஷீஆக்களின் வழிதவறிய கொள்கைகளிலிருந்து முற்றிலும் நிரபராதியானவர்கள். இந்நிலையில் அலி(ரழி) அவர்களையும் அவர்களது குடும்பத்தவர்களையும் ஷீஆக்கள் என நம்பிக்கை கொள்வது வழிதவறிய நிலைப்பாடாகும்.

## ஷீயாக்களின் உட்பிரிவுகள்

- நபி (ஸல்) அவர்களுக்குப்பின் அலி(ரழி) அவர்களுக்கே அரசியல் ஆன்மிகத் தலைமைத்துவம் செல்ல வேண்டும் என்ற தீவிர நம்பிக்கைக் கோட்பாடு காரணமாக பெரும்பான்மை முஸ்லிம் சமூகத்தை விட்டும் பிரிந்து சென்ற ஷீயாக்கள் ஹுஸைன்(ரழி) அவர்களுக்குப்பின் அடுத்த இமாம் யார் என்ற விடயத்தில் ஒவ்வொரு இமாமின் மரணத்தைத் தொடர்ந்தும் தமக்கு மத்தியில் எழுந்த கருத்து வேறுபாடுகள் காரணமாக தமக்குள் இன்னும் பல பிரிவுகளாகப் பிரிந்து சென்றனர். ஷீயாக்கள் எவ்வாறு பிரிந்து சென்றார்கள் என்பது பற்றி ஷீயாக்களின் பேரறிஞர்களில் ஒருவரான அல்லாமா தபதபாயி பின்வருமாறு விளக்குகிறார்.

- ''இமாம் ஹுஸைனின் உயிர்த் தியாகத்தின் பின் ஷீயாக்களில் பெரும் பான்மையினர் அலி இப்னு ஹுஸைன் அஸ்ஸஜ்ஜாதினுடைய இமாமத்தை ஏற்றுக் கொண்ட அதேவேளை, கிஸானிய்யா என்று அறியப்பட்ட ஒரு குழுவினர் அலியின் மூன்றாவது புதல்வாரன முஹம்மத் இப்னு ஹனபிய்யாவை நான்காவது இமாம் என்றும் வாக்களிக்கப்பட்ட மஹ்தி அவரே என்றும் நம்பினர். இமாம் ஸஜ்ஜாதின் மறைவிற்குப்பின் ஷீயாக்களில் பெரும் பான்மையினர் அவரது புதல்வர் முஹம்மத் பின் பாக்கிரை இமாமாக ஏற்றுக் கொண்டனர். இமாம் அல் ஸஜ்ஜாதின் இன்னொரு புதல்வாரன ஸைத் அல் ஷஹீதைப் பின்பற்றிய சிறுபான்மையினர் ஸைதிகள் என அறியவரப்பட்டனர்.

- இமாம் முஹம்மத் அல்பாகிரைத் தொடர்ந்து ஷீயாக்கள் அவரது புதல்வர் ஜ∴பர் அல் ஸாதிகை இமாமாக ஏற்றுக் கொண்டனர். இமாம் ஜ∴பரின் மறைவுக்குப்பின் பெரும்பான்மையினர் அவரது புதல்வர் மூஸா அல் காழிமைப் பின்பற்றினர். எனினும் ஒரு கூட்டத்தினர் ஆறாம் இமாமின் மூத்த புதல்வர் இஸ்மாயீலைப் பின்பற்றத் தொடங்கினர். இஸ்மாயீல் தந்தையார் உயிருடன் இருக்கும் போதே காலமானார். இவரைப் பின்பற்றிய கூட்டத்தார் பெரும்பான்மை ஷீயாக்களிடமிருந்து பிரிந்ததும் இஸ்மாயிலிகள் எனப்பட்டனர். ஏனையோர் ஆறாவது இமாமின் ஒரு புதல்வாரன அப்துல்லாஹ் அல் அப்தாவையோ அல்லது மற்றொரு புதல்வாரன முஹம்மதையோ இமாமாக ஏற்றுக் கொண்டனர். இறுதியாக இன்னொரு கோஷ்டியினர் ஆறாம் இமாமைக் கடைசி இமாமாகக் கருதி அவருடன் நிறுத்திக் கொண்டனர். அதே போன்று இமாம் மூஸா காழிமின் உயிர்த் தியாகத்தின் பின் பெரும்பான்மையினர் அவரது புதல்வர் அலி அர்ரிழாவை எட்டாவது இமாமாகப் பின்பற்றினர். எனினும் ஒரு சிலர் ஏழாவது இமாமுடன் நிறுத்திக் கொண்டனர். அவர்கள் வாகிபிய்யா எனப்பட்டனர்.

- பத்தாவது இமாமின் புதல்வர் ஜ∴பர் தம் சகோதரரான பதினோராவது இமாமின் மறைவிற்குப்பின் தாமே இமாமென உரிமை கொண்டாடினார். ஒரு கோஷ்டியினர் அவரைப் பின்பற்றிய போதிலும் சில நாட்களில் அவர்கள் சிதறிப் போயினர். அதன் பின் ஜ∴பரும் இமாமென உரிமை கோருவதை விட்டுவிட்டார்''.

- ஷீயாக்கள் பற்றி ஆய்வு செய்தவர்கள் அவர்களுக்கு மத்தியில் எழுபதுக்கும் மேற்பட்ட பிரிவுகள் காணப்படுவதாக் கூறுகின்றனர். அவற்றுள் மிக முக்கியமானவைகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. இஸ்னாஅஷ்அரிய்யா
2. கைஸானிய்யா
3. பத்ஹிய்யா
4. வாகிபிய்யா
5. நுஸைரிய்யா
6. ஸைதிய்யா
7. இஸ்மாஈலிய்யா

**இஸ்னாஅஷ்அரிய்யா**

- இஸ்னாஅஷரிய்யா என்றால் பன்னிருவரைச் சார்ந்தோர் எனப் பொருள்படும். இப்பிரிவினர் இவ்வாறு அழைக்கப்படக் காரணம் இவர்கள் இமாம்களின் மொத்த எண்ணிக்கை பன்னிரண்டு என்று நம்புவதனாலாகும். அத்துடன் இவர்கள் இமாமிய்யா என்றும் அழைக்கப்படுகின்றனர். இஸ்னாஅஷ்அரிகளே இன்று உலகில் மிகக்கூடிய எண்ணிக்கையும் செல்வாக்கும் கொண்ட ஷீஆப் பிரிவினராவர்.

**இஸ்மாஈலிய்யா**

- இமாம் ஜ.்.பர் ஸாதிகின் மூத்த பிள்ளையாகிய இஸ்மாஈல் என்பவரைப் பின்பற்றுபவர்களே இஸ்மாஈலிய்யா எனப்படுகின்றனர். இவர்கள் வாக்களிக்கப்பட்ட மஹ்தி இஸ்மாஈல் என்றும் அவர் மரணிக்கவில்லை மீண்டும் வருவார் என்றும் நம்புகின்றனர். ஆனால் தந்தை உயிருடன் இருக்கும் போதே இஸ்மாஈல் மரணித்து விட்டார் என்றே பெரும்பாலான ஷீயாக்கள் நம்புகின்றனர். இஸ்மாஈலின் இமாமத்துடன் தொடர்பான விடயத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டினால் உருவாகிய இப்பிரினர் காலப்போக்கில் இன்னும் பல பிரிவுகளாகப் பிரிந்தனர்.

**பாத்தினிகள்**

- இஸ்மாயிலிய இலட்சியப்பணிக்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்ட, இரவு முழுதும் நின்று வணங்கக் கூடிய பகல் முழுதும் நோன்பு நோற்கக் கூடிய அனாமேதய மனிதர் ஒருவர் கூபாவில் மேற்கொண்ட பிரசாரத்தின் பயனாக தோற்றம் பெற்ற அமைப்பே பாதினிகளாவர். இவர்கள் வரலாற்றில் தோன்றிய மிகமோசமான பிரிவினராவர். இவர்கள் மதுவை ஹலாலாக்கிக் கொண்டனர். தொழுகையை இருநேரமாக்கினர். தமது கொள்கை சாராத ஏனைய முஸ்லிம்களைக் கொலை செய்வதை ஹலாலாக்கிக் கொண்டனர். இவர்கள் மக்காவுக்குச் சென்று பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்களைக் கொலை செய்து ஹஜருல் அஸ்வத் கல்லை யெமனுக்கு எடுத்துச் சென்றனர். இவர்கள் இஸ்லாத்தின் புறஅம்சங்களை அந்தரங்கமான முறையில் அர்த்தப்படுத்துவதன் காரணமாக பாதினிகள் எனப்படுகின்றனர். இடைப்பட்ட ஒரு காலத்தில் கராமைத் என்பவரால் வழிநடாத்தப்பட்டதனால் இவர்கள் கராமிதாக்கள் என்றும் அழைக்கப்படுன்றனர்.

**நிஸாரிகள்**

- இஸ்மாயிலிய வழியில் வந்த எகிப்தை ஆட்சி செய்த பாத்திமீக்களின் ஏழாவது தலைமுறை இமாமின் மறைவுக்குப்பின் முஸ்தாலிக், நிஸார் என்ற அவரது இரு புதல்வர்களுக்கிடையே ஏற்பட்ட அதிகாரப் போட்டியின் விளைவாக பாத்திமீக்கள் இரு பிரிவினராகப் பிரிந்தனர். அவர்களுள் நிஸாரை ஆதரித்தவர்கள் நிஸாரிகள் எனப்படுகின்றனர். ஆரம்பத்தில் இவர்கள் இஸ்மாயிலியப் பிரிவின்பால் மக்களை அழைத்தனர். பிற்காலத்தில் பாரசீகத்தில் பிறந்த ஆகாகான் என்ற நிஸாரி பிரிவைச் சேர்ந்தவர் பம்பாய்க்குத் தப்பிச் சென்று அங்கு பாதினிய சிந்தனையுடன் கலந்த ஒரு நம்பிக்கையினைப் பிரச்சாரம் செய்தார். இதனால் இன்று நிஸாரிகள் ஆகாகானிகள் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

**முஸ்தாலிகள்**

- அல்முஸ்தாலியைப் பின்பற்றியோர் முஸ்தாலிகள் எனப்படுகின்றனர். பாதிமிய ஆட்சி வீழ்ச்சியுறும் வரை எகிப்தில் இவர்கள் செல்வாக்குடன் திகழ்ந்தனர். முஸ்தலிக்குகளின் சிந்தனையை முழுமையாகத் தத்தெடுத்தவர்களே இன்று போராக்கள் (நுஸைரிகள்) எனப்படுகின்றனர்.

**துரூஸ்கள்**

- ஸிரியாவின் துரூஸ் மலைப்பிரதேசத்தில் வாழ்ந்த பாதிமி கொள்கை வழியில் வந்தவர்களே துரூஸ்களாவர். பின்னர் நஷ்தாகின் என்பவரது மதப்பிரச்சாரப் பணி காரணமாக பாத்தினிப்பிரிவில் சேர்ந்தனர். இவர்களது பிரதான நம்பிக்கை ஆறாவது பாத்திமி கலீபா அல்ஹக்கீம் பில்லாஹ் மரணிக்கவில்லை, அவர் விண்ணுலகம் சென்றுள்ளார், மீண்டும் அவர் வருவார் என்பதாகும்.

**முகன்னாஹ்**

- குராசானைச் சேர்ந்த மறுபிறவிக் கொள்கையில் நம்பிக்கை வைத்த முகன்னா என்பவரைப் பின்பற்றும் ஷீயாக்களே முகன்னாப் பிரிவினர் எனப்படுகின்றனர். ஆரம்பத்தில் தன்னை நபியென்று வாதிட்ட முகன்னா பின்னர் தான் தெய்வத்தன்மை பொருந்தியவர் என்றும் கூறிக்கொண்டார். இவரும் இவரது சீடர்களும் எதிரிகளால் சுற்றிவளைக்கப்பட்டபோது தீயில் குதித்து தற்கொலை செய்து கொண்டனர். ஏனையோர் இஸ்மாயீலியத்தை தழுவி பாத்தினி வழியைப் பின்பற்றினர்.

**ஸைதிக்கள்**

- ஹுஸைன்(ரழி) அவர்களின் மகன் அலி அவர்களின் இரண்டாவது புதல்வர் ஸைத்(ரஹ்) அவர்களைப் பின்பற்றியவர்களே ஸைதிகள் எனப்படுகின்றனர். இவர்கள் அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத்தினருக்கு மிகவும் நெருக்கமான ஷீஆப்பிரிவினராவர். இவர்களிடம் ஏனைய ஷீயாக்களிடம் இருப்பது போன்று அகீதாவுக்கு முரணான எந்த நம்பிக்கையும் இருக்கவில்லை. இமாம் ஸைத்(ரஹ்) அவர்களிடம் காணப்பட்ட ஒரே ஒரு மாற்றுக் கருத்து நபியவர்களுக்குப்பின் கிலாபத்துக்கு மிகவும் தகுதிபெற்றவர் அலி (ரழி) அவர்கள் என்பதாகும். என்றாலும் இமாம் ஸைத் அவர்கள் ஒருபோதும் முதல் மூன்று கலீபாக்கள் பற்றி குறைகூறியதில்லை.

## நுஸைரிகள்

- முஹம்மத் பின் நுஸைர் என்பவரினால் உருவாக்கப்பட்ட ஷீஆப்பிரிவினரே நுஸைரிகள் எனப்படுகின்றனர். இவர்கள் அலவிய்யூன்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர். ஷீயாக்களில் மிகவும் மோசமான பிரிவினர்களாகவே இவர்கள் வரலாற்றில் அடையாளப் படுத்தப்பட்டுள்ளனர். அலி (ரழி) அவர்களுக்கு தெய்வீக அந்தஸ்த்து இருப்பதாக வாதிடும் இவர்கள், அலி (ரழி) அவர்களைக் கொலை செய்த இப்னு முல்ஜிமையும் நேசிக்கின்றனர். அத்துடன் இஸ்லாம் ஹராமாக்கிய பல விடயங்களை தமக்கு ஹலாலாக்கிக் கொண்டுள்ளனர். இவர்கள் பற்றி இமாம் இப்னு தைமியா (ரஹ்) பின்வருமாறு கூறுகிறார்கள். “பாதினிப் பிரிவைச் சேர்ந்த இவர்கள் யூதர்களையும் கிறிஸ்த்தவர்களையும் விட நிராகரிப்பில் கூடியவர்கள். முஸ்லிம்களுக்கு எதிராக யுத்தம் செய்த தாத்தாரிகளைவிடவும் இவர்கள் ஆபத்தானவர்கள். தாத்தாரியர்கள் இவர்களது உதவியுடனேயே முஸ்லிம் நாடுகளுக்குள் நுழைந்து கலீபாவையும் அதிகமான முஸ்லிம்களையும் கொலை செய்தனர்”
- நுஸைரிப் பிரிவைச் சேர்ந்த ஷீயாக்கள் இன்று சிரியாவிலும் துருக்கியிலும் வாழ்கின்றனர். சிரியாவில் நீண்ட காலமாக ஆட்சி செய்து கொண்டிருக்கும் அஸாத் குடும்பத்தினரும் நுஸைரிப்பிரிவைச் சேர்ந்த ஷீயாக்களே ஆவர்.

## ஷீயாக்கள் பற்றிய அ.்.லுஸ்ஸுன்னாக்களின் நோக்கு

- அஹ்லுஸ்ஸுன்னாவைச் சேர்ந்தவர்கள் ஷீயாக்களின் உட்பிரிவுகளுக்கு ஏற்ப அவர்கள் பற்றிய மூன்று வகையான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர்.

1. **நேர்வழியில் செல்வோர்:** அகீதா ரீதியில் அல்லாமல் மேலோட்டமான சில விடயங்களில் மாத்திரம் கருத்து வேறுபாடு கொண்டவர்கள்.
2. **வழிகேடர்கள்:** அகீதாவில் சில புதிய விடயங்களை இணைத்துக் கொண்டாலும் ஈமானின் அடிப்படையான விடயங்களில் அல்குர்ஆனுக்கும் ஸுன்னாவுக்கும் அமைய விசுவாசம் கொள்பவர்கள்.
3. **காபிர்கள்:** ஈமானின் அடிப்படை அம்சங்களில் அல்குர்ஆனுக்கும் ஸுன்னாவுக்கும் முரணாக விசுவாசம் கொள்பவர்கள்.இஸ்லாமிய வரலாற்றில் அரசியல் ரீதியாக தோற்றம் பெற்ற மிகவும் பழமை வாய்ந்த பிரிவுகளில் ஷீயாக்கள் மிகவும் முக்கியமானவர்கள். ‘‘ஷீயது அலி’’ அலியின் கட்சி என்ற சொல்லிலிருந்தே ஷீயாக்கள் என்ற சொல் தோற்றம் பெற்றது.